விக்தர்
ஷெவ்த்சோவ்

# தேசிய சர்வசுதந்திரமும் சோவியத் அரசும்

விக்தர்
ஷெவ்த்சோவ்

# தேசிய சர்வசுதந்திரமும் சோவியத் அரசும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ · 1978

மொழிபெயர்ப்பாளர்: கே. ராமநாதன்

**Виктор Шевцов**

НАЦИОНАЛЬНЫЙ СУВЕРЕНИТЕТ
И СОВЕТСКОЕ ГОСУДАРСТВО

*На тамильском языке*

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1978

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$\text{Ш}\ \frac{11001-414}{014(01)-78}\ 684-78$

CONNEMARA LIBRARY
-5 MAR 1985
MADRAS

# பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . 5

அத்தியாயம் 1. தேசிய சர்வசுதந்திரமும் தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய லெனினது கோட்பாடும் . . . . . . . . . 9

அத்தியாயம் 2. தேசிய சர்வசுதந்திரமும் சோவியத் தேசிய அரசும் . . . . . 35

அத்தியாயம் 3. சோவியத் தேசங்கள் மற்றும் தேசியக் குழுக்களின் சர்வசுதந்திர சித்தத்தின் உருவகம் என்ற முறையில் சோவியத் ஒன்றியத்தின் நிறுவதலும் வளர்ச்சியும். 58

அத்தியாயம் 4. சோஷலிச தேசங்களின் மற்றும் அனைத்து சோவியத் மக்களின் சித்தத்தின் வெளியீடு என்ற முறையில் அரசுரிமை. . . . . . . . . . 96

அத்தியாயம் 5. சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமைக்குரிய சட்ட மற்றும் சமூக-அரசியல் அடிப்படைகள் . . . . . 110

அத்தியாயம் 6. சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமைக்கும் ஒன்றியக் குடியரசுகளின்

அரசுரிமைக்கும் இடையிலான தொடர்பாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படை . . . . . . . . . 126

அத்தியாயம் 7. சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்ட அதிகாரத் தகமை . 136

அத்தியாயம் 8. வளர்ச்சியடைந்த சோஷலிச சமூகத்தில் சோவியத் தேசங்கள், தேசியக் குழுக்களின் செழுமையும் அவை நெருங்கிச் சேர்தலும் . . . . . 164

அத்தியாயம் 9. அரசுரிமையும் சோஷலிச நாடுகளின் இடையிலான உறவுகளில்சோஷலிச சர்வதேசியக் கோட்பாடும் . . . . . 183

அத்தியாயம் 10. அரசுரிமையும் சோஷலிசப் பொருளாதார இணைப்பாக்கமும் . . . 204

-5 MAR 1985
MADRAS

## முன்னுரை

பல்தேசிய சோஷலிச அரசு நிறுவப் பெற்றதும் அது வளர்ச்சியடைந்ததும் மகத்தான வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாகும். தேசியப் பிரச்சினை குறித்த மார்ச்சிய-லெனினியத் தத்துவமும் லெனினிய தேசியக் கொள்கையினை இடையருது பின்பற்றியதும் சோவியத் ஒன்றியத்தை நிறுவு வதற்கு வகை செய்தன.

சோவியத் ஒன்றியம் நிறுவப்,பெற்றதானது, சமுதாயத்தில் சோஷலிச மாற்றங்களைக் கொண்டுவருவதற்கும், அனைத்து சோவியத் குடியரசுகளின் பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சிக்கும், நாட்டின் தற்காப்பு ஆற்றலும் அதன் சர்வதேச அந்தஸ்தும் வலுப்படுவதற்கும் சாதகமான நிலைமைகளை உருவாக்கிய மிகவும் முக்கியமான காரணிகளில் ஒன்ருகும்.

வெற்றிவாகை சூடிய சோஷலிசப் புரட்சியும் மக்கள் ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக் கொண்டதும் தேசிய ஒடுக்கு முறையினை அகற்றுவதற்கும் சுதந்திரமான சமத்துவமான மக்கள் தம் சுயவிருப்பப்படி தனி ஒரு ஒன்றிய அரசாக ஒன்றிணைவதற்கும் பாதை சமைத்தது.

''புராதன ரோமாபுரியின் கடுமையான சட்ட முறையைப் பின்பற்றிப் பிரிவினை செய்தல் மூலம் நாம் ஆட்சி அதிகாரத்தைச் செயல்படுத்தவில்லை. அனைத்து உழைக்கும் மக்களையும் உயிரோட்டமுள்ள நலன்கள் மற்றும் ஒரு வர்க்க உணர்வு என்ற தகர்க்கவொண்ணுத பந்தங்களால் ஒன்றிணைத்ததன் மூலமே நாம் ஆட்சி அதிகாரத்தைச் செலுத்துகிருேம். எமது ஒன்றியம், எமது புதிய அரசு வன்முறையினை அடிப்படையாக்கி, ஏகாதிபத்தியவாதிகள் விருப்பப்படி பொய்களாலும்

துப்பாக்கிகளாலும் இணைக்கப்பட்ட செயற்கையான அரசு அமைப்புகளை விடவும் உறுதியானதாகவே இருக்கிறது.... இந்தக் கூட்டாட்சி வெல்லற்கரியது, பொய்கள், துப்பாக்கிகளின் உதவியின்றி இது முற்றிலும் சுதந்திரமாக வளர்ந்து வரும். இங்கு நாம் உருவாக்கி வரும் சட்டங்களும் அரசாட்சியின் முறையும் இதன் வெல்லற்கரிய தன்மைக்கு ஆகச் சிறந்த உத்தரவாதம்''[1].

ஒரே ஒரு ஒன்றிய அரசுக்குள் சோவியத் மக்கள் இனங்கள் ஒன்றிணைக்கப் பெற்றிருப்பதானது சோவியத் ஆட்சி வலுப்பட உதவியுள்ளது. இந்த ஒன்றியம் மட்டுமே, அழிவினால் அச்சுறுத்தப் பெற்ற, முன்னாள் பிற்பட்ட எழுத்தறிவற்றவர்கள் பலர் அடங்கிய மக்கள் இனங்கள், முன்னேற்றத்தின் சிகரங்களை அடைவதற்கு வகை செய்துள்ளது.

கம்யூனிச நிர்மாணமானது, நெருக்கமான பல்துறைப் பொருளாதார, கலாசார ஒத்துழைப்பினாலும், மேலும் வலுவான நட்புறவுப் பிணைப்புகள், ஒற்றுமை, தோழமை ஆகியவற்றாலும் சிறப்பித்துக் காட்டப் பெறும் சோவியத் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் ஒரு கட்டமாகும். சோவியத் அரசில் கம்யூனிச நிர்மாணத்தின் பொழுது எழும் தேசிய உறவு பிரச்சினைகள் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் மற்றும் லெனினது தேசியக் கொள்கையின் அடிப்படையில் தீர்வு காணப்படுகின்றன. இந்தக் கொள்கையின்படி சோவியத் தேசங்களின்[2] முன்னேற்றம், அவற்றின் சொந்தமான படைப்பாற்றல் சக்திகளின் ஆக முழுமையான வளர்ச்சியாலும் மட்டுமன்றி, பரஸ்பர உதவியாலும் அனுபவப் பரிமாற்றத்தாலும் சாதனையாகும்.

---

[1] வி. இ. லெனின், ''காங்கிரஸ் முடிவு பெறுவதற்கு முன் ஆற்றிய முடிவுரை'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 26, pp. 480-481).

[2] தேசம் [nation] என்பது வரலாற்று வழியில் தோன்றியுள்ள மக்களிடையே உறுதியான பொதுமையாகும். இது நான்கு அறிகுறிகளினால் வரையறுக்கப்படும்: (1) பொருளாதாரப் பொதுமை, (2) பிரதேசப் பொதுமை, (3) மொழிப் பொதுமை, (4) தேசிய உணர்வு மற்றும் கலாசாரத்தின் தனி இயல்புகளில் வெளியிடப்படும் மனப்பாங்குப் பொதுமை. இந்த நான்கு அறிகுறிகள் யாவும் முழுமையாகக் கிடைக்கும் பொழுதுதான் தேசம் உருப் பெறலாம். நவீன காலத்தில்,

ஓர் ஒற்றுமையான, எனினும் பல்தேசிய சமூக அமைப்பில் சேர்ந்து பாடுபடும் சோவியத் மக்கள் ஒரு ஆழமான சர்வதேசிய உணர்வு, நாட்டுப்பற்று, தோழமை, நட்புறவு உணர்வு, தேசிய கவுரவத்தின் பால் மதிப்பு ஆகியவற்றைக் கொண்டு விளங்குகின்றனர்.

சோவியத் ஒன்றியத்தில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதானது உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் உத்வேகமூட்டும் உதாரணமாகும். சமுதாயம் சோஷலிசக் கோட்பாடுகளின் மீது மாற்றமடைவதன் மூலம் மட்டும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது சாத்தியம் என்பதை

---

முதலாளித்துவ உறவுகளும், நாடு தழுவிய தேசியச் சந்தையும், ஒருமுகப்படுத்தப்பட்ட அரசும் உருவாகத் தொடங்கிய பொழுதுதான் தேசங்கள் தோன்றுகின்றன. முதலாளித்துவத்தின் கீழ் தேசங்கள் மற்றும் தேசிய உறவுகளின் வளர்ச்சியில் இரண்டு போக்குகள் நிலவும் என்று லெனின் சுட்டிக் காட்டினார்: ''முதலாவது, தேசிய வாழ்வும் தேசிய இயக்கங்களும் விழிப்புற்று எழுதல், தேசிய ஒடுக்கல் முறை அனைத்தையும் எதிர்த்துப் போராடுதல், தேசிய அரசுகளைத் தோற்றுவித்தல் ஆகியவை. இரண்டாவது, சர்வதேசத் தொடர்புகள் அபிவிருத்தியடைந்து மேலும் அடிக்கடி ஏற்படுவது, தேசியத் தடைகள் தகர்ந்து போவது, மூலதனம், பொதுவாகப் பொருளாதார வாழ்வு, அரசியல், விஞ்ஞானம் முதலியப் பல துறைகளிலும் சர்வதேச ரீதியில் ஒற்றுமை உருவாதல் ஆகியவை'' (வி. இ. லெனின், **தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள்,** மாஸ்கோ, பக்கம் 32). சோஷலிசத்திலுங்கூட தேசங்களின் வளர்ச்சியில் இரண்டு போக்குகள் செயல்படுகின்றன. ஆனால் இவை முதலாளித்துவத்தில் உள்ளவற்றிலிருந்து வேறுபடுகின்றன. முதலாவது போக்கு: தேசங்கள் மற்றும் தேசியக் குழுக்கள் மறுமலர்ச்சியடைதல், தேசியப் பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தின் முன்னேற்றம், உணர்வு மற்றும் மனப்பாங்கில் மாறுதல், பழைய தேசங்கள் உருமாற்றம் அடைந்து புதிய தேசங்கள் உருவாதல்; இரண்டாவது போக்கு: தேசங்களின் முழுமையான சமத்துவம், அவற்றிற்கிடையில் விருப்பப்படியான கூட்டணி, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவியினை நிலவுதல் மற்றும் உறுதிப்படுத்தல், சர்வதேசியம் என்ற அடிப்படையில் தேசங்களின் ஒன்றிணைவு, சாராம்சத் தேசிய வேறுபாடுகளை அகற்றல், முதிர்ச்சி பெற்ற கம்யூனிசத்தின் பொழுது இவற்றின் முழுமையான இணைவு.

சோவியத் பல்தேசிய அரசின் வளர்ச்சியில் அடைந்த அனுபவம் தெளிவாகக் காட்டுகின்றது. அனைத்து தேசிய இனங்களின் உழைக்கும் மக்களிடையே நட்புறவு, தோழமை, அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமை ஆகியவற்றுக்கு சோஷலிசம் மட்டுமே ஏக அடித்தளமாகும். சம்பிரதாய முதலாளித்துவ ஜனநாயகத்தைப் போலன்றி (இது தேசிய சமத்துவத்தைப் பிரகடனம் செய்கிறது, ஆனால் நிலைநாட்டாது), சோஷலிச ஜனநாயகம் மக்களினங்களுக்குச் சம உரிமைகளையும் வாய்ப்புகளையும் உண்மையில் வழங்குகிறது; பரஸ்பர சுயவிருப்ப இணக்கத்தின் அடிப்படையில் எல்லாத் தேசியப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுவதை சாத்தியமாக்குகிறது. சோவியத் பல்தேசிய அரசின் நடைமுறை அனுபவம் வரலாற்று ரீதியாக முக்கியமானதாகும்; காரணம், பிற்பட்ட நாடுகள், வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள பாட்டாளிகளின் உதவியுடன் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தைத் தாண்டிக் கடந்து சோஷலிசத்தை நோக்கி மாற்றமடைந்து செல்ல முடியும் என்ற லெனினது கருத்துரையை இது ஊர்ஜிதம் செய்கிறது.

சோவியத் பல்தேசிய அரசின் வளர்ச்சியில் அடைந்த அனுபவம் சோஷலிச தேசங்களின் ஒன்றியம், அரசுக் கட்டமைப்பின் ஆக நிலையான வடிவமாகும் என்பதையும், இது சமுதாயம் முழுவதன் நலன்களை தேசிய மக்கள் நலன்களுடன் சாத்தியமான அளவு மிகச் சிறந்த வழியில் இணைக்கிறது; தேசங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை அகற்றவும் தேசங்களை நெருக்கமாக ஒன்றுசேர்க்கவும் உதவுகிறது என்பதையும் காட்டுகிறது.

சோவியத் பல்தேசிய அரசில் தேசங்களும் தேசியக் குழுக்களும் சர்வசுதந்திரத்தை அனுபவிக்கின்றன. எனவே சோவியத் ஒன்றியத்தில் தேசிய அரசுரிமையின் சாரமும் தேசிய சர்வசுதந்திரத்துக்கும் அரசுரிமைக்கும் இடையிலான உயிருள்ள இடைத்தொடர்பும் மிகவும் முக்கியமானவை. ஒருபுறம் தேசிய சர்வசுதந்திரமும் அரசுரிமையும், மறுபுறம் சோஷலிசப் பொருளாதார இணைப்பாக்கம், சோஷலிச நாடுகளிடையிலான சட்டபூர்வ உறவுகளிலுள்ள சோஷலிச சர்வதேசியக் கோட்பாடு ஆகியவற்றுக்கும் இடையேயான தொடர்பு இன்று மாபெரும் முக்கியத்துவமுடையது.

அத்தியாயம் 1

# தேசிய சர்வசுதந்திரமும் தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய லெனினது கோட்பாடும்

ஒரு தேசத்தின் சர்வசுதந்திரம் எல்லா விஷயங்களிலுமான அதன் மேலதிகாரத்தினை, அதன் அரசியல் விடுதலை, பிரிந்து போவது ஒரு சுதந்திரமான அரசினை நிறுவுவது உள்ளிட்ட தனது சொந்த எதிர்காலத்தை (எல்லாவற்றுக்கும் மேலாக அதன் அரசியல் எதிர்காலத்தை) சுதந்திரமாக நிர்ணயிப்பதற்கு உரிய அதன் ஆற்றல் ஆகியவற்றைக் குறிக்கிறது.

ஒரு தேசத்தின் அரசுரிமையானது அதன் தேசிய சுதந்திரம், அதன் அரசு மற்றும் சட்ட அமைப்பு, இதரத் தேசங்களுடனான அதன் உறவுகள், தேசிய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களின் வளர்ச்சி ஆகியவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மீது முடிவு எடுக்கும் உரிமையில் வெளியாகிறது.

ஒவ்வொரு தேசமும் தனது சொந்த எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள இயல வேண்டும், அதன் மீது வெளியிலிருந்து எந்த முடிவுகளையும் திணித்தல் கூடாது.

ஒவ்வொரு தேசமும் தனது சொந்த தேசிய மற்றும் அரசுக் கட்டமைப்பினை நிர்ணயிக்கிறது, குறிப்பிட்ட ஓர் அரசுக்குள் இருக்க வேண்டுமா அல்லது அதிலிருந்து பிரிந்து ஒரு சுதந்திரமான தேசிய அரசை நிறுவ வேண்டுமா என்பதை முடிவு செய்கிறது. ஒரு குறிப்பிட்ட அரசுடன் இணைந்து கொள்ளலாம், இதரத் தேசங்களுடன் ஏதாவது ஒரு வடிவிலான ஒன்றியத்தில் சேரலாம்.

ஒவ்வொரு தேசமும் தனது சொந்த மொழி, வழக்கங்கள், வாழ்க்கை முறை, இவற்றுக்கு இணையான தேசிய அமைப்புகள் ஆகியவற்றை வைத்திருந்து வளர்க்கலாம். தேசிய சர்வசுதந்திரம், ஒரு தேசத்தின் உத்தரவாதம் செய்யப் பெற்ற

அடிப்படை சமூக-அரசியல் உரிமைகளில் மிகவும் தெளிவாக வெளிப்படுகிறது. இவ்வுரிமைகள் எல்லாம் தேசத்திற்குப் பிரதான ஆதாரமாக இருக்கும் போது சமூக மற்றும் அரசியல் கட்டமைப்பின் பிரதான ஜனநாயகக் கோட்பாடு களோடு அடிப்படையான உள்ளார்ந்த தொடர்பும் ஆதாரமும் கொண்டனவாக இருக்கின்றன. தேசங்களின் சமத்துவத்திற்கு லெனின் மாபெரும் முக்கியத்துவம் அளித்தார். தேசியத் தனி அனுகூலங்களையும் சலுகைகளையும் அகற்ற வேண்டும் என்று கோரினர். தேசிய சமத்துவம் இன்றி தேசிய சர்வசுதந்திரம் நிலவுவதில்லை.

எனவே, தேசிய சர்வசுதந்திரம் ஒரு தேசம் அல்லது தேசியக் குழுவின் அரசியல், பிரதேச, கலாசார மற்றும் மொழித் துறைகளிலான சுதந்திரமாகும். இந்தச் சுதந்திரம் இத்துறைகளிலான சர்வசுதந்திர உரிமைகளில் வெளியாகிறது, இவ்வாருக அவற்றை முழுமையாகச் செயல்படுத்துவதைச் சாத்தியமாக்குகிறது.

தேசிய சர்வசுதந்திரம் சமூக-பொருளாதார நடவடிக்கைகளாலும், அரசியல் மற்றும் அரசு அமைப்பாலும் நிர்ணயிக்கப் பெற்று உத்தரவாதம் செய்யப்படுகிறது.

தேசிய சர்வசுதந்திரமும் தேசத்திற்குரிய உள்ளார்ந்த தன்மை என்ற தவருன கருத்தைப் பலர் கொண்டிருக்கிருர்கள். இது தேசிய சர்வசுதந்திரத்தின் உண்மையான சமூக இயல்பினைச் சிதைத்துக் காட்டும் கருத்தாகும். ஏனெனில் இதன்படி ஒரு தேசம் அதன் பிரத்தியேகமான சமூக மற்றும் வரலாற்று நிலைமைகள் எதுவாக இருந்த போதிலும் சர்வசுதந்திரத்தை எப்பொழுதும் அனுபவித்து வருகிறது என்று கருதப்படும். **தேசியப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்** என்ற நூலில் லெனின், தேசிய இனங்கள் பற்றிய கோட்பாடு, அதாவது தேசிய சர்வசுதந்திரம் பற்றிய கோட்பாடு, தவிர்க்கவொண்ணுத வகையில் முதலாளித்துவ சமூக அமைப்பில் எழுகிறது; சாரத்திலே இது மிகவும் முற்போக்கானது. காரணம், ''நிலப்பிரபுத்துவ உறக்கத்திலிருந்து வெகுஜனங்கள் விழிப்புறுவதும், எல்லா தேசிய ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து அந்த தேசத்தின், மக்களின் அரசுரிமைக்காக நடைபெறும் அவர்களது போராட்டமும் முற்போக்கானவை'' என்று எழுதினர். அவரது கூற்றுப்படி தேசிய

இயக்கங்களின் வரலாற்று ரீதியான சட்டபூர்வத் தன்மையினை மார்க்சியவாதிகள் அங்கீகாரம் செய்வதற்கு இது அடிப்படையாகும்.

''ஆனால் இந்த ஏற்பு தேசியவாதத்தை ஆதரித்துப் பேசுவது ஆகிவிடாமல் இருக்கும் பொருட்டு, அத்தகைய இயக்கங்களில் எது முற்போக்கானதோ அதைமட்டுமே ஏற்றுக் கொள்வதுடன் அது கண்டிப்பாக நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும். பூர்ஷ்வா சித்தாந்தமானது பாட்டாளி வர்க்க உணர்வை மங்கச் செய்வதில் இந்த ஏற்பு கொண்டுபோய் விடாதபடி இருப்பதற்காக அவ்வாறு கண்டிப்பான வுரையறையில் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும்.''[1]

லெனின் மேலே குறிப்பிட்ட கருத்துக்களை முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிகள், மற்றும் அவற்றை ஒட்டிய தேசிய இயக்கங்களின் காலகட்டம் சம்பந்தமாகவே முன் வைத்தார். ஆனால் இந்தக் கருத்துக்களின் கோட்பாடு ரீதியான முக்கியத்துவமும் இந்தப் பிரச்சினையை முன்வைப்பதற்கான, அதற்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் அணுகுமுறையும் இன்று வரையிலுங்கூட அவற்றின் தகுதியை இழந்து விடவில்லை. தேசிய சர்வசுதந்திரத்தை, அதன் தோற்றம் மற்றும் பிரதான அம்சங்களை, ஆழமான பல சமூக நிகழ்வு போக்குகளினால் ஏற்படுத்தப்பட்டதான ஒரு ஸ்தூலமான வரலாற்று நிகழ்வாகவே லெனின் கருதினார்.

எனவே, ''இயற்கைச்'' சட்ட முறை என்று அழைக்கப் படுவதன் ஆதரவாளர்கள் வாதிப்பது போன்று தேசிய சர்வசுதந்திரம் தேசத்தில் உள்ளார்ந்து கிடப்பதல்ல; இந்த போக்கை நீண்ட காலமாகவே மார்க்சியம் இடித்துரைத்து விட்டது. தேசிய சர்வசுதந்திரம் என்பது எல்லாத் தேசங்கள், தேசியக் குழுக்களுக்கும் நிபந்தனை இன்றி பிரயோகிக்கக் கூடியதான ஒரு ஜனநாயகக் கோட்பாடேயாகும்.

எனவே, தேசங்களின் சர்வசுதந்திரம் பற்றிய லெனினது கருத்து ஜனநாயகத்தின் மிகவும் முரண்பாடற்ற அம்சமான

---

[1] வி. இ. லெனின், ''தேசியப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்'' (வி. இ. லெனின், தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள், மாஸ்கோ, பக்கம் 43).

தேசிய விடுதலையை அடிப்படையாக்கியதாகும். தேசங்களின் சர்வசுதந்திரத்தின் சாரமான ஜனநாயகம், தேசங்கள் வளர்ச்சியடைந்து வரும் நிலைமைகளையே எல்லாவற்றுக்கும் மேலாகச் சார்ந்து நிற்கிறது, தேசங்களின் தன்மைகளை அன்று. தமது அரசு வடிவங்கள் ஜனநாயகத் தன்மையற்றதாக இருக்கும் தேசங்கள் சர்வசுதந்திரத்தை அனுபவிப்பதில்லை.

பகைமைத் தன்மை கொண்ட ஒரு வர்க்க சமுதாயத்தில் தேசிய சுதந்திரம், சமத்துவம், சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளுக்கு, அதாவது தேசங்களின் சர்வசுதந்திரத்திற்குரிய அனைத்திற்கும், ஒரு பிற்போக்கு அம்சமும் ஒரு முற்போக்கு அம்சமும் உண்டு; இதுவே முதலாளித்துவ தேசியவாதம் என்று லெனின் கூறினார். வர்க்கத் தன்மை அற்ற ஜனநாயகம் என்பது எவ்வாறு கிடையாதோ, அதே போன்று எல்லா வர்க்கங்களும் பொதுவாக விரும்பும் தேசியக் கோரிக்கைகளையும் சுதந்திரங்களையும் பற்றி ஒரே மதிப்பீடு செய்வதும் சாத்தியமல்ல. எனவே லெனின், தேசியக் கோரிக்கைகளில் முற்போக்கானதும் ஜனநாயகத்தன்மை கொண்டதுமான அனைத்தையும் மார்க்சியவாதிகள் நிபந்தனை இன்றி அங்கீகரித்துப் பாதுகாக்க வேண்டும் என்றும், இந்தக் கறாராய்க் கட்டுப்படுத்தப்பட்ட வரலாற்று வரம்புகளுக்கு வெளியே முதலாளித்துவ தேசியவாதத்தை அவர்கள் ஆதரிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

இறுதியாக, பொருளாதார அமைப்பினால் நிர்ணயிக்கப்படும் அரசியல் ஜனநாயகத்தின் பிரிக்க முடியாத அம்சம் என்ற முறையில் தேசிய சர்வசுதந்திரம் சமுதாயத்தின் மேல் கட்டுமானத்தின் ஒரு பாகமாகும். ஜனநாயகம் மற்றும் தேசிய சர்வசுதந்திரத்தின் தேவைகளையும் நிபந்தனைகளையும் செயல்படுத்துவதே சுயநிர்ணய உரிமையாகும், அதாவது ஒரு தேசம் தனது சொந்த தேசிய அரசினை நிறுவிக் கொள்ளும் உரிமையாகும்.

ஒரு தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதானது, அதிகப்பட்ச ஜனநாயகத்தின் மற்றும் குறைந்தபட்ச தேசியவாதத்தின் வெளியீடாகும்; முதலாளித்துவம் நிலவும் வரை ஒரு தேசத்தின்சுயநிர்ணயஉரிமை உள்ளிட்ட பாட்டாளி வர்க்கத்தின் ஜனநாயகக் கோரிக்கைகள் விதிவிலக்கான முறை

யில், பூர்த்தியடையாத சிதைந்த வடிவில் மட்டுமே நிறைவேற்றப்படும் என்று லெனின் கூறினார்[1].

ஒரு தேசத்தின் சுயநிர்ணய உரிமை தேசிய சர்வசுதந்திரத்தின் ஓர் அடிப்படையான உள்ளடக்கக் கூறுகும்; இது அரசியல், அரசு மற்றும் சட்டத் துறை சுயநிர்ணயத்தைத் தழுவியதாகும், தேசிய உறவுகள் அமைப்பில் இது ஆக முக்கியமான பங்கு வகிக்கிறது. இவ்வாருக மார்க்சிய-லெனினிய நிலையிலிருந்து அர்த்தப்படுத்தப் பெறும் இந்த சுயநிர்ணய உரிமை கம்யூனிஸ்டுக் கட்சியும் சோஷலிச அரசும் பின்பற்றி வரும் தேசியக் கொள்கையின் வேலைத்திட்டக் கோட்பாடாகும். தேசியப் பிரச்சினை பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் ஆக முக்கியமான பகுதியாகும் இது. தமது நூல்களில் லெனின் தேசியப் பிரச்சினையில் கட்சி பின்பற்றி வரும் கொள்கையைத் தத்துவ ரீதியாக ஆதாரப்படுத்திக் காட்டினார். தேசிய சர்வசுதந்திரம், அரசின் சட்ட முறை வடிவிலான அதன் உருவகம் ஆகிய இரண்டின் ஆகக் கடினமான பிரச்சினைகளை ஆய்வு செய்து தீர்வு கண்டார் அவர். இந்த விஷயத்தில் தேச விடுதலை இயக்கத்தின் பிரத்தியேகமான வரலாற்று வழி, பொருளாதார நிலைமைகளைக் கவனத்திற் கொண்டும், அவற்ருேடு கண்டிப்பான உடன்பாடு கொண்டும் செயல்பட்டார். அவர் மிகவும் சிக்கலான சமூக நிகழ்ச்சிப் போக்குகளையும் அவற்றின் இயக்கவியல் தன்மையையும் செம்மையாகப் புரிந்து கொண்டிருந்தார் என்பதை அவரது ஆழமான முடிவுகள் காட்டுகின்றன. அவரது முடிவுகளில் உருவகம் பெற்றுள்ள புரட்சிகர வேலைத்திட்டக் கோரிக்கைகள், நோக்கங்கள், கடமைகளைப் பாட்டாளி வர்க்கத்திற்கு ஆயுதமாக வழங்கியிருந்தார். தேசிய சுயநிர்ணயம் என்ற தத்துவத்தை மையமாகக் கொண்ட தேசியப் பிரச்சினை பற்றிய லெனினது போதனை, சுதந்திரமான, அதாவது அரசுரிமை பெற்ற சோஷலிச அரசுகள் தோன்றுவதற்கான அரசியல் மற்றும் வரலாற்று-பொருளாதார முன்நிபந்தனைகளையும் அவ்வரசுகளின் வளர்ச்சிக்கான விதிகளையும் புரிந்து கொள்ள வகை செய்கிறது.

[1] வி. இ. லெனின், ''புரட்சிகரப் பாட்டாளி வர்க்கமும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும்'' (V. I. Lenin, *Collected Works*, Moscow, Vol. 21, p. 408).

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்னுல், லெனின் தேசிய சுயநிர்ணயம் பற்றிய தத்துவத்தை வகுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொழுது, அவர் முதலாளித்துவ வளர்ச்சியின் இரண்டு வரலாற்று ரீதியான எதார்த்தப் போக்குகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும் என்று கூறினுர். அவையாவன: தேசிய இனங்களை விழிப்படையச் செய்து தேசிய ஒடுக்கு முறையினை எதிர்த்த போராட்டத்தை வேகப்படுத்துவதற்கான போக்கு, மற்றும் தேசியத் தடைவேலிகளைத் தகர்த்து சர்வதேசப் பொருளாதாரப் பந்தங்களை நிறுவிக் கொள்ளும் போக்கு. ஏகாதிபத்திய சகாப்தத்தில் இப்பொருளாதாரப் பந்தங்கள் வன்முறைகள், காலனி ஆதிக்க நாடுபிடித்தல், இதர நாடுகளின் மக்களை அடிமைப்படுத்தல் போன்ற வழிகளால் நிலைநாட்டப்படுகின்றன. அவரது கூற்றுப்படி முதலாவது போக்கு முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் மேலோங்கி நிற்கிறது, இரண்டாவது போக்கு சோஷலிச சமூக அமைப்பை நோக்கி மாறிச் செல்லும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமூக அமைப்பைக் காட்டுகிறது[1]. கட்சியின் தேசியப் பிரச்சினை பற்றிய வேலைத்திட்டம் இரு போக்குகளையும் கவனத்திற் கொண்டு, (1) தேசிய வளர்ச்சியின் சுதந்திரத்திற்கான ஜனநாயகக் கோரிக்கைகளை (தேசங்களின் சமத்துவம், இந்த விஷயத்தில் எல்லாத் தனிச் சலுகைகளும் அனுமதிக்கப்படாமை) ஆதரிப்பது, மற்றும் (2) சர்வதேசியக் கோட்பாட்டையும், ஆகப் பண்பட்ட வகையான முதலாளித்துவ தேசியவாதங்கூடப் பாட்டாளி வர்க்கத்தினரைக் கறைப்படுத்துவதை எதிர்த்து சமரசமற்ற போராட்டம் நடத்துவதையும் ஆதாரப்படுத்திக் காட்டியது என்று லெனின் கூறினுர்[2].

முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிகளின் சகாப்தத்தில் ஏற்பட்ட தேசிய அரசுகளின் தோற்றத்தை லெனின் முதலாவது வரலாற்றுப் போக்குடன் இணைத்தார். உலகில் பிரபுத்துவ அமைப்பின் மீது இறுதி வெற்றி ஈட்டிய முதலா

---

[1] வி. இ. லெனின், ''தேசியப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்'' (வி.இ. லெனின், தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள், மாஸ்கோ, பக்கம் 32).

[2] அதே நூல், பக்கம் 32.

ளித்துவ சகாப்தம் தேசிய இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்தது. அவை உள்நாட்டுச் சந்தை மீது முதலாளித்துவக் கட்டுப்பாட்டை நிறுவுவதன் தேவை, ஒரே மொழியினைப் பேசி வந்த மக்களைக் கொண்ட பிரதேசத்தின் ஒன்றிணைப்பு, பண்ட உற்பத்தி முறை நிலைநாட்டப் பெறுவதை முழுமைப் படுத்தும் நோக்கத்துடன் இந்த மொழியின் வளர்ச்சிக்குப் பாதகமான தடைகளை அகற்றல் ஆகியவற்றைப் பொருளாதார ரீதியில் அடிப்படையாகக் கொண்டிருந்தன. லெனின் கூறினர்: ''ஆகவே ஒவ்வொரு தேசிய இயக்கத்தின் போக்கும் நவீன முதலாளித்துவத்தின் தேவைகள் மிக நன்றாகப் பூர்த்தி செய்யப்பட வாய்ப்புள்ள தேசிய அரசுகள் அமைப்பதற்கான வழியிலானது. மிகமிகத் தீர்க்கமான பொருளாதாரக் காரணிகள் இந்த இலக்கை நோக்கி இட்டுச் செல்லுகின்றன; எனவே மேற்கு ஐரோப்பா முழுவதிற்கும், ஏன் நாகரிக உலக முழுவதுக்கும், தேசிய அரசு என்பது முதலாளித்துவக் காலகட்டத்தில் மாதிரிப்படிவமானது, வழக்கமானது''[1]. தேசங்களின் சுயநிர்ணய உரிமையானது, ஒரு ஜனநாயகக் கோரிக்கை என்ற முறையில், இந்த இரு வரலாற்றுப் போக்குகளைக் கவனத்திற் கொண்டுள்ள புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் தேசியப் பிரச்சினைப் பற்றிய வேலைத்திட்டத்திலிருந்து நேரடியாகக் கிளைத்ததாகும். இந்த உரிமையின் சாரத்தையும் அரசியல் பாத்திரத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்தால் இது தேசியப் பிரச்சினையில் உள்ள மேலே குறிப்பிடப்பட்ட போக்குகளின் செல்வாக்குடன் தொடர்புடைய பாட்டாளி வர்க்கத்தினது அரசியல் கடமைகளால் நெறியாக்கம் செய்யப்பட்டது என்பது தெளிவாகத் தெரியும்.

தேசிய சுயநிர்ணய உரிமையின் சாரத்தையும் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்திய பொழுது, தேசிய அசமத்துவம், தனி உரிமைகள், ஒதுங்கி வாழ்வது போன்றவற்றை அகற்றி, ஜனநாயகத்தை அடைவதற்கும், சம்பந்தப்பட்ட நாட்டின் பாட்டாளி வர்க்கப் பகுதிகளிடையே நெருக்க

[1] வி. இ. லெனின், ''தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை'' (வி. இ. லெனின், தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள், மாஸ்கோ, பக்கம் 73).

மான நேச அணியினை நிறுவுவதற்குமான ஓர் அரசியல் கோரிக்கை இது என்று லெனின் எடுத்துக் காட்டினார்.

புரட்சிகரப் பாட்டாளி வர்க்கமும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும் என்ற அவரது நூலில் ருஷ்யாவிலுள்ள பாட்டாளி வர்க்கம் ஜார் ஆதிக்கத்தால் ஒடுக்கப்பட்ட தேசங்கள் அனைத்தும் ருஷ்யாவிலிருந்து பிரிந்து செல்லும் உரிமை பெற்றிருக்க வேண்டும் என்று நிபந்தனை இன்றிக் கோரினால் ஒழிய தமது உடனடிக் கடமைகளை (அதாவது, வெற்றிகரமான ஒரு ஜனநாயகப் புரட்சியில் நாட்டு மக்களுக்குத் தலைமை தாங்கிச் செல்வதை) நிறைவேற்ற முடியாது என்று லெனின் வலியுறுத்தினார்[1].

மார்க்சிய-லெனினியத்தின் மூலவர்கள் தேசிய சமத்துவமும் சர்வசுதந்திரமும் தத்துவம், நடைமுறை இரண்டிலுமான உண்மையான சர்வதேசியத்தின் இன்றியமையாத நிபந்தனை என்று எப்பொழுதும் கருதி வந்திருக்கிறார்கள். ''ஒரு சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கம் சுதந்திரமான தேசங்களிடையில் மட்டுமே சாத்தியம்'', ''சர்வதேச ஒத்துழைப்பு சமமாக இருப்போரிடையில் மட்டுமே சாத்தியம்'' என்று எங்கெல்ஸ் கூறினார்.[2]

தேசிய சுயநிர்ணயம் பற்றிய லெனினது கோட்பாடு, கட்சியின் மற்றும் சோஷலிச அரசின் செயல்பாடுகளில் சர்வதேசிய, தேசிய தன்மைகள் எவ்வாறு இணைக்கப்பட முடியும் என்பதைக் காட்டுகிறது. தேசிய அம்சங்களைப் புறக்கணிக்கக் கூடாது, தேசியக் கடமைகளைத் தவறாக அர்த்தப்படுத்தக் கூடாது, அவற்றின் முக்கியத்துவத்தை மிகையாக வலியுறுத்தக் கூடாது, அதோடு அவற்றை உலகத் தொழிலாளர்களின் பொதுவான சர்வதேச நலன்களுக்கு எதிராகவும் வைத்தல் கூடாது. இதெல்லாம் ஜனநாயகம் மற்றும் சோஷலிசத்தின் லட்சியத்தைப் பாதிக்கும்.

தேசிய சுயநிர்ணயக் கோட்பாடு சோஷலிசப் புரட்சிகளின், சோஷலிச நிர்மாணத்தின் சகாப்தத்திற்கும் பிரயோகிக்

---

[1] V. I. Lenin, *Collected Works*, Vol. 21, Moscow, p. 413.

[2] பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம் குறித்து கா. மார்க்ஸ், ஃபி. எங்கெல்ஸ், வி. இ. லெனின், மாஸ்கோ, 1957, பக்கம் 169 (ருஷ்யன்).

கப்படலாம் என்று லெனின் எடுத்துக் காட்டினுர். காரணம் ''வெற்றி பெற்ற சோஷலிசம் முழுமையான ஜனநாயகத்தைக் கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்; ஆகவே தேசங்களிடையில் முழுச் சமத்துவத்தை ஏற்படுத்துவதோடு நில்லாமல் ஒடுக்கப்பட்ட தேசங்களின் சுயநிர்ணய உரிமை, அதாவது தடையேதுமில்லாமல் சுதந்திரமாக அரசியல் வழியில் பிரியும் உரிமை நிலவும்படியும் செய்ய வேண்டும்''[1].

தேசியப் பிரச்சினை குறித்த மார்க்சியத் தத்துவம் ஒரு தேசத்தை நிறுவுதல், அதன் வளர்ச்சி ஆகியவற்றில் அரசுத்துவத்திற்கு மாபெரும் முக்கியத்துவம் அளிக்கிறது. அரசுத்துவம் ஒரு சோஷலிச தேசத்திற்குங்கூட உள்ளார்ந்த அம்சமாக இல்லை என்ற போதிலும், ஒரு தேசத்தின் அரசியல்-பிரதேச உருவாக்கம், சம்பந்தப்பட்ட மக்கள் ஒரு தேசமாக உருவாகும் நிகழ்வுப் போக்கில் உள்ளனரா அல்லது ஏற்கெனவே தேசமாக உருவாகிவிட்டார்களா என்பதை நிர்ணயிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கிறது. தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய லெனினது கோட்பாடு, தேசங்களின், தேசிய இயக்கங்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியில் அரசுத்துவம் வகித்துள்ள பங்கினை உருவகப்படுத்தியுள்ளது.

நிறுவப்பெற்ற நாள் முதலாக, கம்யூனிஸ்டுக் கட்சியானது பல்தேசிய சோஷலிச அரசின் கட்டமைப்பின் வடிவங்கள் மற்றும் கோட்பாடுகளை விளக்குவதற்கு மாபெரும் முக்கியத்துவம் அளித்துள்ளது, தேசங்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டை இடையருது ஆதரித்து வந்துள்ளது. வரலாற்று பொருளாதார நிலையிலிருந்து பார்க்கும் பொழுதில் தேசங்களின் சுயநிர்ணயம், அரசியல் சுயநிர்ணயம், அரசு சுதந்திரம் மற்றும் தேசிய அரசின் உருவாக்கம் மட்டுமே என்று லெனின் கருதினுர்[2].

எல்லா வகையான சந்தர்ப்பவாதிகளையும் எதிர்த்து அவர் நடத்திய போராட்டத்தில் லெனின், தேசங்கள் தமது

---

[1] வி. இ. லெனின், நூல் திரட்டு, பாகம் 1, மாஸ்கோ, பக்கம் 302.

[2] வி.இ. லெனின், ''தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை'' (வி. இ. லெனின், தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள், மாஸ்கோ, பக்கம் 79).

சொந்த அரசினை உருவாக்கிக் கொள்ளும் உரிமையை—தேசிய சுயநிர்ணயத்தின் சாரத்தை—ஆதரித்தார். 1917ல் நடைபெற்ற ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் (போல்ஷிவிக்) கட்சியின் அகில ருஷ்யாவின் மாநாட்டில் (ஏப்ரல்) பியாத்தக்கோவ் (ஒரு டிராட்ஸ்கியவாதி) ருஷ்யாவின் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் இனங்கள் தமது சொந்த அரசினை நிறுவிக் கொள்ள அனுமதிக்கும் கருத்தினைப் பலமாக எதிர்த்தார். பாட்டாளி வர்க்க அரசில் தேசிய ஒடுக்கு முறை இருக்காது, எனவே தேசங்களுக்கு சுதந்திரம் தேவையில்லை என்று அவர் வாதம் செய்தார். மாநாட்டில் ஆற்றிய தமது உரையில் இடதுசாரிச் சொல்லடுக்குகளை ஒரு திரையாகப் பயன்படுத்தினார். ''தேசங்கள் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது, அதற்குத் தேவையும் இல்லை'' என்று வாதிட்டார்.[1]

பியாத்தக்கோவின் சந்தர்ப்பவாத நிலையினை லெனின் வன்மையாகக் கண்டித்தார்; அது கட்சியின் சர்வதேசியக் கொள்கைக்கு நேர் எதிரானது என்று எடுத்துக் காட்டினார். தேசங்களின் விடுதலைப் போராட்டத்தினைக் கைவிடுவது மூலமும் ஒரு சுதந்திரமான தேசிய அரசினை அடைவதற்கான அவற்றின் உரிமையை எதிர்ப்பது மூலமும் ருஷ்ய மார்க்சியவாதிகள் ருஷ்ய மக்கள் இனத்து மஹாவல்லரசு தேசியவெறியினை நேரடியாக ஆதரித்தவர்களாவர் என்று அவர் கூறினார்.

வர்க்கங்களாகப் பிரிந்துள்ள ஒரு சமூக அமைப்பில், ஜனநாயகத்தின் சாரத்தைப் பற்றிய தமது ஆய்வில், அரசே அரசியல் ஜனநாயகத்தின் பிரதான கோட்பாடுகளையும் அதன் அமைப்புகளையும் வெளிப்படுத்தி, உருவாக்கிச் செயல்படுத்தும் ஆக முக்கியமான சாதனம் என்ற உண்மைக்கு லெனின் மிகப் பெரும் முக்கியத்துவம் அளித்தார். அரசியல் ஜனநாயகத்தின் தேவைகளில் ஒன்முன தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் வர்க்க இயல்பு குறித்த அவரது பரிசீலனையின் விளைவாக லெனின், ''ஜனநாயகம் என்பதும் அரசின் ஒருவித வடிவம்தான். அரசு மறையும் பொழுது இதுவும் மறைந்து போகத்தான் வேண்டும். ஆனல் இறுதி வெற்றி பெற்ற,

[1] ரு. ச. ஜ. தொ. (போல்ஷிவிக்) கட்சியின் எழாவது (ஏப்ரல்) அகில ருஷ்யாவின் மாநாடு, ஆவணங்கள், மாஸ்கோ, 1958, பக்கம் 215 (ருஷ்யன்).

திடமாக அமைக்கப்பட்ட சோஷலிசத்திலிருந்து முழுநிறைவான கம்யூனிசத்துக்கு மாற்றம் நிகழும் பொழுதுதான் இது நடைபெறும்''[1].

எனவே லெனினது கருத்துப்படி கம்யூனிசம் கட்டப்பெற்று அரசியல் ஜனநாயகமும் அரசும் மறையும் வரையில் தேசங்களின் சுயநிர்ணயக் கோட்பாடு சோஷலிச சமூக அமைப்புக்கும் பொருந்துவதாகும். அரசு நிலவும் வரையில் இந்தக் கோட்பாடு பிரயோகிக்கப்படும். ஆனால் இதற்கிடையில் சோஷலிச அரசு நிலவும் பொழுது அரசின் எல்லைகள் ஜனநாயக முறையில், அதாவது மக்களின் விருப்பத்திற்கு ஏற்ற முறையில் நிர்ணயம் செய்யப்படும்.

ஜனநாயகத்தின் இதரக் கோட்பாடுகளைப் போலவே தேசங்களின் சுயநிர்ணய உரிமையும் வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று ரீதியான வெளியீடே. தேசியப் பிரச்சினையின் பல்வேறு அம்சங்கள் உட்பட சமூக நிகழ்வினை ஒரு வர்க்க நிலையிலிருந்து மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியம் பற்றிய லெனினது கருத்துரை இங்கு முற்றிலும் பொருத்தமுடையது. தேசியப் பிரச்சினை பற்றிய கட்சியின் வேலைத்திட்டத்தை அணுகுவதில் ஜெர்மன் இடதுசாரிச் சமூக-ஜனநாயகத் தலைவர்களில் ஒருவரான ரோஸா லக்சம்பர்க் இயக்க மறுப்பியல், கருத்தியல் தன்மை, தராதரமற்ற போக்கு ஆகியவை கொண்டிருந்ததாக லெனின் விமர்சித்தார். ''எதார்த்தமாக உள்ளது எது என்பதிலிருந்து நாம் தொடங்க வேண்டும்; இந்த விஷயத்தில் வர்க்கங்களிடையிலான உறவுகளை நாம் பரிசீலிக்க வேண்டும்'' என்று லெனின் கூறினார்[2]. தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பிரச்சினை மீது ஜாராட்சி ருஷ்யாவில் பல்வேறு வர்க்கங்கள் மேற்கொண்ட நிலைகள் பற்றி லெனின் ஓர் அருமையான மார்க்சிய ஆய்வினை நடத்தி, இது சம்பந்தமான பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கோரிக்கைகளை உருவாக்கினார். இதர ஜனநாயகக் கோட்பாடு

---

[1] வி. இ. லெனின், நூல் திரட்டு, பாகம் 1, மாஸ்கோ, பக்கம் 303.

[2] வி.இ. லெனின், ''தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை'' (வி. இ. லெனின், தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள், மாஸ்கோ, பக்கம் 102).

எதையும் போலவே தேசங்களின் சுயநிர்ணய உரிமை ஒரு அரசியல் வகை இனமாகும், இது என்றென்றைக்குமான உண்மைகளை வெளிப்படுத்தவில்லை, மாறாக சமுதாய வளர்ச்சியின் திட்டவட்டமான வரலாற்று விளைவையும், திட்டவட்டமான வர்க்க நிலையிலிருந்து இந்த வளர்ச்சியைப் பார்த்து அறிந்து மதிப்பீடு செய்வதையும் சாத்தியமாக்கி உள்ளது. ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக இருப்பதால் தேசிய சுயநிர்ணயம் ''சார்பற்ற முழுமையல்ல, உலகப் பொது-ஜனநாயக (இப்பொழுது: பொது-சோஷலிச) இயக்கத்தின் ஒரு சிறு பகுதியே. ஒரு தனிப்பட்ட யதார்த்த சம்பவத்தில் பகுதி முழுமைக்கு முரணானதாக இருக்கலாம்; அப்போது அதை நிராகரித்து விட வேண்டும்'' என்று லெனின் கூறினார்.[1]

மார்க்சியக் கட்சி, குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளில் குறிப்பிட்ட தேசத்தின் சுயநிர்ணயம் குறித்து சுதந்திரமான அணுகுமுறையினை ஏற்கிறது, அதற்கேற்ப தேசிய சுயநிர்ணயக் கோரிக்கையினை முன்வைத்து ஆதரிக்கிறது. புரட்சி இயக்கத்தின் மற்றும் சோஷலிசத்தின் நலன்களோடு அது மோதும் பொழுதில் கட்சி சுயநிர்ணயத்தை ஆதரிக்க முடியாது.

எனினும், தேசியக் கொள்கையின் ஒரு கோட்பாடு என்ற முறையில் சுயநிர்ணய உரிமை நிபந்தனைக்குட்பட்டது என்று இதனால் அர்த்தமல்ல (இந்த உரிமையிலிருந்து எழும் கோரிக்கைகளின் நிபந்தனைத் தன்மையுடன் இதைக் குழப்பக் கூடாது). தேசியப் பிரச்சினையின் எல்லா அம்சங்களிலும் மிகவும் முரணில்லாத ஜனநாயகத்தை மார்க்சியவாதிகள் நிபந்தனை இன்றி ஆதரிக்க வேண்டும் என்று லெனின் வலியுறுத்தினார். ஆனால் ஒரு கோட்பாடு, வேலைத்திட்டத்தின் ஒரு பிரிவு என்ற முறையில் தேசிய சுயநிர்ணய உரிமையினை நிபந்தனை இன்றி அங்கீகரிப்பதால் மார்க்சிய-லெனினியக் கட்சி தேசிய சுயநிர்ணயத்தின் கோரிக்கைகள் அனைத்தையும் ஆதரிக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. 1913 ஜூனில் எழுதிய அவரது தேசியப் பிரச்சினை பற்றிய குறிப்

[1] வி. இ. லெனின், ''சுயநிர்ணயம் பற்றிய விவாதத்தின் தொகுப்பு'', (வி. இ. லெனின், தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள், மாஸ்கோ, பக்கம் 228).

புரையில் லெனின் எல்லாத் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிப்பது என்பதால் கட்சி ''ஒவ்வொரு தனிப்பட்ட சம்பவத்திலும் எந்த ஒரு தேசமும் அரசு ரீதியில் தனியாகப் பிரிந்து செல்வது சம்பந்தமான செயல் சரியா தவறு என்பது குறித்த சுதந்திரமான மதிப்பீட்டை நிராகரித்து விடும்'' என்று அர்த்தமல்ல எனக் குறிப்பிட்டார்[1]. சில சந்தர்ப்பங்களில் தேசங்களின் சுயநிர்ணயம் தனி அரசாகப் பிரிந்து போவதை விடவும் மற்றொரு அரசுடன் சுயாட்சி அடிப்படையில் இணைப்பு என்ற வடிவத்தில் செயல் படுத்தப்படலாம் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

மார்க்சியவாதிகள் தமது அரசியல் கோரிக்கைகளை, கருத்தியலான முறையிலோ அல்லது ''நிபந்தனைக்கு இடமற்ற'' முறையிலோ, அதாவது ''அனைத்து மக்களின்'' நலன்கள், அல்லது ஒழுக்க நெறிக்குரிய நிரந்தர ''தனிமநிலைக் கோட்பாடு'' என்ற நிலையிலிருந்து வைத்தல் முடியாது. அல்லாவிட்டால் அவர்களும் முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் மற்றும் அவர்களது அடிச்சுவடினைப் பின்பற்றும் சோஷலிஸ்டுச் சந்தர்ப்பவாதிகளைப் போலவே இருப்பார்கள்; இந்த இருசாராரும் ஜனநாயகம் வர்க்கப் போராட்டத்தை அகற்றி விடும் என்று நம்புகிறார்கள். இந்த முதலாளித்துவ பிரமையினை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்துவதுதான் மார்ச்சியவாதிகள் செய்ய வேண்டிய கடமையாகும்.

தேசங்களின் சுயநிர்ணயம் குறித்த லெனினுடைய ஆழமான இயக்கவியல் அணுகுமுறைக்கும், இயக்க மறுப்பு இயல் முறையில் பிரிந்து செல்வதை முற்றமுழுமையாக்குவதற்கும் இடையே பொதுவான அம்சங்கள் எதுவும் கிடையாது. உண்மையான தேசிய நோக்கங்களையும் நலன்களையும் பிரிக்க முடியாததாய் உள்ளடக்கியுள்ள தொழிலாளர்களின் சர்வதேசியக் கடமைகளே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய நிபந்தனையாகும்.

லெனின் கூறியுள்ளது: ''ஒவ்வொரு தேசம் சம்பந்தமாயும் பிரிந்து செல்லும் பிரச்சினைக்கு 'சரி' அல்லது 'இல்லை' என்ற பதிலைக் கோருவது மிகவும் 'பயனுடையது' போலத் தோன்றலாம். உண்மையில் இது அபத்தமானது; இது தத்துவ

[1] V. I. Lenin, *Collected Works*, Vol. 19, p. 244.

முறையில் இயக்க மறுப்பியலாகும், நடைமுறையில் பாட்டாளி வர்க்கத்தை முதலாளி வர்க்கத்தின் கொள்கைக்குக் கீழடக்குவதாகும். முதலாளி வர்க்கம் எப்பொழுதுமே தனது தேசியக் கோரிக்கைகளை முன்னணியில் வைக்கிறது, நிபந்தனை இன்றி முன்வைக்கிறது. பாட்டாளி வர்க்கத்தைப் பொருத்த வரை இந்தக் கோரிக்கைகள் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்குக் கீழடங்கியவை.... இதனால்தான் பாட்டாளி வர்க்கம் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்ற எதிர் மறைக் கோரிக்கையோடு நின்று விடுகிறது, எந்த ஒரு தேசத்திற்கும் உத்தரவாதம் அளிப்பதில்லை, இன்னொரு தேசத்துக்குப் பிரதிகூலமான எதையும் இதற்கு அளிப்பதாக வாக்குறுதி கொடுப்பதும் இல்லை''[1].

ஒடுக்கப்பட்ட, ஒடுக்கும் தேசங்களின் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்த வேண்டிய பல்வேறு போர்த்தந்திரங்கள் பற்றிய லெனினது விளக்கம், தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் சாரத்தை ஒரு வேலைத்திட்டக் கோட்பாடாகப் புரிந்து கொள்ளத் துணை செய்வதில் மாபெரும் முக்கியத்துவம் வகிக்கிறது. உதாரணமாக மகா-ருஷ்யத் தேசிய இனத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளுக்கு ஒடுக்கப்பட்ட தனி தேசங்களின் பிரிந்து போகும் சுதந்திரத்தைக் கோர வேண்டிய அவசியம் இருந்தது; இல்லையேல் தேசங்களின் சமத்துவத்தையும் தொழிலாளர் சர்வதேச ஒருமைப்பாட்டையும் அங்கீகரிப்பதென்பது வெறும் பாசாங்கே. அதே சமயம் ருஷ்யாவின் எல்லைப்புறத் தேசிய இனங்களைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் ஒடுக்கப்பட்ட தேசங்களின் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கும் தேசங்களின் தொழிலாளர்களுக்கும் இடையிலான ஒற்றுமையை வலியுறுத்த வேண்டும். இல்லாவிடில் இவர்கள் ''தமது சொந்த தேசிய முதலாளி வர்க்கத்தின் கூட்டாளிகள் ஆகிவிடுவர், அந்த வர்க்கம் மக்களின் நலன்களுக்கும் ஜனநாயகத்திற்கும் எப்பொழுதும் துரோகம் விளைத்து வருகிறது, இதரத் தேசங்களின் நிலப்பரப்பைப் பிடித்துச் சேர்த்துக் கொண்டு அவற்றை ஒடுக்கவும் எப்பொழுதும் தயாராக இருக்கிறது''[2].

---

[1] V. I. Lenin, *Collected Works*, Vol. 20, p. 410.

[2] வி. இ. லெனின், ''புரட்சிகரப் பாட்டாளி வர்க்கமும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும்'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 21, p. 409).

பல்வேறு வகைப்பட்ட திருத்தல்வாதிகள் மற்றும் சந்தர்ப்பவாதிகளைப் போல லெனின் சுயநிர்ணய உரிமையை ''நாகரிக'' நாடுகளுக்கு மட்டும் என்று வரம்பு கட்டி வைக்கவில்லை, அதை அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையோடு சேர்த்து இணைத்திருந்தார். ''தொழிலாளர்களே இல்லாத நாடுகளிலுங்கூட 'சுயநிர்ணயத்திற்கான' கோரிக்கை எவ்வகையிலும் அபத்தமானதல்ல, மாருக ஒவ்வொரு மார்க்சியவாதியும் கட்டாயமாக ஏற்க வேண்டியதாகும்''[1] என்று கூறினர்.

முற்றிலும் உருப்பெருத ஒரு தேசத்தை, ஒரு தேசியக் குழுவை சுயநிர்ணயத்திற்குரியவையாகக் கருதினர் லெனின்.

உள்நாட்டு நிலைமைகள், உலக நிலவரம், ஒரு தேசத்தின் முதிர்ச்சி மற்றும் ஒருமைப்பாடு ஆகியவை அது பிரிந்து போய்ச் சுதந்திர அரசாக அமைய வேண்டுமா வேண்டாமா என்ற முடிவின் மீது பலமான தாக்கம் செலுத்துகின்றன. முதலாவது உலகப் போர் வெடித்ததற்கு முன்னால், ஹங்கேரியரும் பின்னால் செக் மக்களும் மேற்கொண்ட நிலையின் தனிச்சிறப்பை லெனின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். மேலும் வலுவுள்ள கொள்ளைக்கார அண்டை நாடுகளால் அழிக்கப்படவிருந்த தமது தேசிய சுதந்திரத்தின் நலன்களுக்காக அவர்கள் ஆஸ்திரோ-ஹங்கேரியா பேரரசு பாதுகாக்கப்படுவதை ஆதரித்தார்கள். குவாடலோபே கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டின் சுதந்திரத்தைக் கோருவதற்குப் பதில் சுயாட்சியை நாடுகிறது. காரணம், தேசம் அப்பொழுது தான் உருவாகிக் கொண்டிருந்தது, போதிய அளவுக்கு சுயவிழிப்பை எட்டியிருக்கவில்லை, பிரான்சிடமிருந்து பிரிந்து செல்ல நாடவில்லை (இந்த உண்மையைக் கம்யூனிஸ்டுக் கட்சி தனது கொள்கையில் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்).

சோவியத் அரசு தேசிய ஒடுக்குமுறையையும் எல்லா வடிவங்களிலுமான காலனி ஆதிக்கத்தையும் இடையருது எதிர்த்து வந்திருப்பதால் தமது சுதந்திர அரசினை வென்று பெற்றிராத தேசங்கள் உள்ளிட்டு தேசங்களின் சர்வசுதந்

---

[1] வி. இ. லெனின், ''மார்க்சியத்தின் மீதான கேலிச்சித்திரம் குறித்து'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 23, p.64).

திரத்துக்கு சர்வதேச சட்ட அங்கீகாரம் பெறுவதற்காக எப்பொழுதும் பாடுபட்டு வந்திருக்கிறது.

1917 நவம்பர் 20ந் தேதி சோவியத் அரசாங்கம் விடுத்த ''ருஷ்யாவிலுள்ள உழைக்கும் முஸ்லிம்களுக்கும் கீழ்த்திசை மக்களுக்குமான வேண்டுகோ''ளில் முன்னுள் ருஷ்ய பேரரசின் காலனிகளையும் ஜார் அரசாங்கத்தின் தனி உரிமைகளையும் துறந்து விட்டதாக அறிவித்தது.

ஈரானையும் ஆப்கானிஸ்தானத்தையும் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்து 1907ல் ஜாராட்சி ருஷ்யாவும் பிரிட்டனும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை சோவியத் அரசாங்கம் ரத்துச் செய்தது. 1916ல் ஜார் அரசாங்கமும் ஜப்பானும் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தையும் ரத்தாக்கியது. இந்த ஒப்பந்தத்தின்படி இரு அரசுகளும் சீனுவில் தனி உரிமைகளை அனுபவித்தன, சீனுவில் சரணுகதி நிலையையும் ஏற்படுத்தின. துருக்கியின் சரணுகதி நிலையினை சோவியத் அரசு நீக்கிவிட்டது.

தேசங்களின் சுயநிர்ணயம் என்ற கோட்பாடு சோவியத் ருஷ்யா ஆப்கானிஸ்தானம், துருக்கி, சீனு மற்றும் மங்கோலியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் சர்வதேசச் சட்ட அங்கீகாரத்தினைப் பெற்றது.

1935 செப்டம்பரில் சோவியத் ஒன்றியத்தின் அயல் துறை மக்கள் கமிசாரான மக்சீம் லித்வீனவ் சோவியத் அரசு காலனி அமைப்பையும், செல்வாக்கு மண்டலங்களைப் பிரித்துக் கொள்ளும் கொள்கையையும், உரிமைக் கட்டளைகளையும், ஏகாதிபத்திய நோக்கங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்தையும் வன்மையாக எதிர்ப்பதாக சர்வதேச சங்கத்தில் வலியுறுத்தினுர். 1934 முதல் 1939 வரை சர்வதேச சங்கத்தில் பங்குபற்றிய கால கட்டத்தில் சோவியத் ஒன்றியம் அபிசீனியாவை எதிர்த்த இத்தாலியின் ஆக்கிரமிப்பை, ஸ்பெயினில் ஜெர்மன்-இத்தாலியத் தலையீட்டை, சீனுவில் ஜப்பானிய ஆக்கிரமிப்பை, பாசிச ஜெர்மனி ஆஸ்திரியா மற்றும் செக்கோஸ்லோவாக்கியாவைப் பிடித்தடக்கியதை வன்மையாகக் கண்டித்தது. மங்கோலியப் பிரதேசத்திலிருந்து ஜப்பானியப் படைகளை சோவியத் சேனை விரட்டியடித்து மங்கோலிய மக்கள் குடியரசின் அரசுரிமையை ராணுவ வெறி ஜப்பான் அங்கீகரிக்குமாறு கட்டாயப்படுத்தியது.

அட்லாண்டிக் சாசனத்தை ஆதரித்துக் கையொப்பமிட்ட சந்தர்ப்பத்தில் 1941 செப்டம்பர் 24ஆம் நாள் லண்டனில் நடைபெற்ற ஒரு சர்வதேச மாநாட்டில் பகிரங்கப்படுத்திய ஒரு பிரகடனத்தில், சோவியத் ஒன்றியம், தனது அயல் துறைக் கொள்கைக்கு வழிகாட்டியாக தேசங்களின் சுய நிர்ணயக் கோட்பாட்டினைத் தொடர்ந்து பயன்படுத்தும் எனவும், அனைத்து மக்களுக்கும் சுதந்திரமான அரசு, பிரதேச உரிமை, நாட்டின் பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமான, அவசியமான சமூக அமைப்பையும் ஆட்சி அதிகாரத்தின் வடிவத்தையும் தமது விருப்பப்படி நிறுவிக் கொள்ளும் உரிமை ஆகியவற்றை ஆதரிக்கும் எனவும் கூறியது.

பாசிசத்தின் காலடியின் கீழ் மிதிக்கப்பட்டுக் கிடந்த கிழக்கு ஐரோப்பிய மக்களின் சர்வசுதந்திரமும், அவர்களது சொந்த வருங்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளும் நியாய உரிமையும் இரண்டாம் உலகப் போரில் பாசிச நாடுகளை எதிர்த்து சோவியத் ஒன்றியம் வெற்றியடைந்த பிறகு மீட்டளிக்கப்பட்டன.

சோவியத் ஒன்றியத்தின் ஆதரவுடன், பல நாடுகள் சர்வதேச நிறுவனங்களில், குறிப்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பில், தமது செயல்பாடுகள் ஊடே சர்வதேசச் சட்டத்தில் தேசங்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டினை நிலைநாட்டி விட்டன. இந்த விளைவு பற்றிய பிரதான சர்வதேச தஸ்தாவேஜுகள் பின்வருமாறு:

(1) ஐ. நா. சாசனத்தின் விதிகள் 1, 13, 55 மற்றும் 76;

(2) 1960 டிசம்பர் 14ம் நாள் பொதுச் சபையின் 15ஆவது கூட்டத் தொடரில் அங்கீகரிக்கப் பெற்ற ''காலனி நாடுகள் மற்றும் மக்களினங்களுக்கும் சுதந்திரம் வழங்குவது பற்றிய பிரகடனம்'';

(3) 1965 டிசம்பர் 20ந் தேதிய தீர்மானம்—இதன் மூலம் காலனி மக்கள் நடத்தி வரும் போராட்டத்தின் சட்டரீதியான தன்மையினை பொதுச் சபை அங்கீகரித்தது;

(4) 1965 டிசம்பர் 21ந் தேதி பொதுச் சபையின் 20 ஆவது கூட்டத் தொடரில் அங்கீகரிக்கப் பெற்ற எல்லா வடிவிலுமான இனவெறிப் பாகுபாடுகளையும் காலனி-இனவெறி

ஆட்சி அமைப்புகளையும் அகற்றுவது பற்றிய சர்வதேச உடன்படிக்கை;

(5) 1966 டிசம்பர் 16ந் தேதி பொதுச் சபையின் 21 ஆவது கூட்டத் தொடர் அங்கீகரித்த மனித உரிமைகள் பற்றிய ஒப்பந்தங்கள்;

(6) 1970 அக்டோபர் 24ந் தேதி நடைபெற்ற பொதுச் சபையின் 25ஆவது சிறப்புக் கூட்டத்தில் அங்கீகரிக்கப் பெற்ற சர்வதேசச் சட்டங்கள் பற்றிய கோட்பாடுகளின் பிரகடனம்.

இந்த சர்வதேச தஸ்தாவேஜுகள் காலனி ஆதிக்கத்தை யும் நவீன காலனி ஆதிக்கத்தையும் மனித குலத்திற்கு எதி ரான குற்றம் என்று கருதுகின்றன. அவை தேசங்களின் சுய நிர்ணயக் கோட்பாட்டை சட்டமாகத் தொகுத்து, அனைத்து ஐ. நா. உறுப்பு நாடுகளும் தார்மிக ரீதியிலும் நிதி உதவியும் ஆதரிக்க வேண்டிய தேச விடுதலை இயக்கங்களின் சட்ட பூர்வத் தன்மையினை அங்கீகரிக்கின்றன. இந்தக் கோட் பாட்டை அனுசரிக்காத நாடுகளை எதிர்த்து தண்டனை நட வடிக்கை எடுக்குமாறு கோருகின்றன.

ஐ. நா. அமைப்பில் இதர முற்போக்கு நாடுகளின் ஆதர வுடன் சோஷலிச நாடுகள் எடுத்து வரும் நடவடிக்கைகள் ஐ.நா. பொதுச் சபை 1958 டிசம்பர் 5ல் பொறுப்பாட்சிக்கு விடப்பட்ட பிரதேசங்கள் சுயாட்சி அல்லது சுதந்திரம் அடை வது பற்றியதான தீர்மானம் உள்ளிட்டு பல தீர்மானங் களில் தேசங்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டை நிலைநாட்டு மாறு தூண்டின. 1960 டிசம்பரில் ''காலனி நாடுகள் மற்றும் மக்களினங்களுக்கு சுதந்திரம் வழங்குவது பற்றிய பிரகடனத் தைப்'' பொதுச் சபை அங்கீகரித்தது. இது எல்லா வடிவங் களிலும் வேறுபாடுகளிலுமான காலனி ஆதிக்கத்தை விரை வாகவும் எவ்வித நிபந்தனை இன்றியும் முடிவுக்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தைப் பெருமிதத்துடன் பிரகட னம் செய்தது[1]. எல்லா மக்களினங்களுக்கும் சுயநிர்ணய உரிமை

---

[1] இரண்டு பிரபல அமெரிக்கச் சட்ட நிபுணர்களான வில்லியம் ஓபிராயன் மற்றும் உல்ஃப் கோபெல் கொண்டுள்ள கருத்து, முதலாளித்துவ சட்ட நிபுணர்கள் காலனியமைப்பு சீரழிந்து அரசுரிமை பெற்ற தேசிய அரசுகள் நிறுவப்பட்டு வரும் காலத்தில் சுயநிர்ணயக் கோட்பாட்டினை எவ்வாறு

உண்டு, இதன் காரணமாக அவை சுதந்திரமாகத் தமது அரசியல் அந்தஸ்தை நிர்ணயம் செய்து கொள்ளலாம் என்றும், தமது பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தியை மேம்படுத்திக் கொள்ளலாம் என்றும் அது கூறியது. பொறுப்பாட்சிக்கு விடப்பட்ட, சுயாட்சி பெருத மற்றும் இன்னும் சுதந்திரம் அடைந்திராத இதரப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு விடுதலையும் பூரண சுயாதீனமும் வழங்கப்படவேண்டும் என்றும் மக்களினங்கள் நலன்களுக்காகத் தமது இயற்கைச் செல்வத்தையும் மற்றும் மூலவளங்களையும் செலவழித்துக் கொள்ளலாம் என்றும் கூறியது.43 ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் பொதுச் சபைக்குச் சமர்ப்பித்த பிரகடனத்தின் நகலில் சோவியத் தூதுக்குழு முன்மொழிந்த அடிப்படைக் கோட்பாடுகள் இருந்தன. தேசங்களின் சுயநிர்ணயக் கோட்பாடு சம்பந்தமான சர்வதேசச் சட்ட நியதிகளின் வளர்ச்சிக்கு

---

அதிகார பூர்வமாக மதிப்பிடுகிருர்கள் என்பதைக் காட்டுகிறது. புதிய நாடுகளின் அரசுரிமையை அவர்கள் சந்தேகிக்கிருர்கள். ''அவற்றின் சுதந்திரத்திற்கும் குறைவான நிலை பெருமளவிலான வெளிநாட்டு உதவி இல்லாவிடில் முடிந்து போகும்'' என்கிருர்கள் (''The New Nations in International Law and Diplomacy'', *The Yearbook of World Policy*, Vol. III. Ed. by William O'Brien, Wash., NY, 1965, pp. 214-215). இன்று எல்லா வடிவங்களிலுமான காலனி ஆதிக்கத்தை ஆதரித்து வாதாடுவது முதலாளித்துவ சமூகவியலில் அடிக்கடி காணப்படுகிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் முன்னே உள்ள அரசியல் மற்றும் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகள் மீதான அடிப்படையான ஆராய்ச்சி நூல் ஒன்றில் ஸ்விடன் நாட்டு ஆராய்ச்சியாளரான கன்னர் மிர்தால் காலனி ஆதிக்கச் சார்பு நிலை பின் தங்கிய நாடுகள் அரசியல் வழியில் ஒன்றுசேரவும், அவை அரசுகள் தேசங்களாக உருவெடுக்கவும், நிர்வாகத்திற்காக ஓர் அரசாங்க யந்திரத்தைக் கட்டவும் உதவியுள்ளது என்கிருர். ஆனல் உலக சோஷலிச சக்திகள் இந்த மக்களின் விடுதலையில் கேந்திரமான பங்கு வகித்ததை அவர் புறக்கணிக்கிருர். அமெரிக்கா ஐக்கிய நாடு மேற்கொண்ட நிலையாலும் ஆதிக்கத் தேசங்களுக்குக் காலனிகளின் பொருளாதார முக்கியத்துவம் கடுமையாக வீழ்ச்சியடைந்தாலும் காலனியாதிக்கம் சரிந்தது என்று காட்ட முயல்கிருர். (G. Myrdal, *Asian Drama, An Inquiry into the Poverty of Nations*, Vol. I, New York, 1968, pp. 143, 189.)

இந்தப் பிரகடனம் மாபெரும் முக்கியத்துவமுடையது. 24 பேர்கள் கமிட்டியை (காலனி ஒழிப்புப் பற்றிய ஐ.நா. கமிட்டி) நிறுவுவதென்ற தீர்மானத்தைப் பொதுச் சபை அங்கீகரித்தது. இந்தக் கமிட்டி பிரகடனத்தின் விதிகள் சரியாக நிறைவேற்றப்படுவதை உத்தரவாதம் செய்யும்.

1967 டிசம்பர் 16ந் தேதி பொதுச் சபையின் 22ஆவது கூட்டத் தொடரில் ஏற்கப்பட்ட தீர்மானம் காலனி ஆதிக்க அமைப்புகளும் இனவெறி ஆட்சி முறைகளும் மனிதகுலத்தை எதிர்த்த குற்றம் என்றும் அவை நிலவுவது சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்புக்கும் ஓர் அச்சுறுத்தல் என்றும் பிரகடனம் செய்தது.

''காலனி நாடுகள் மற்றும் மக்களினங்களுக்கு சுதந்திரம் வழங்குவது பற்றிய பிரகடனத்''தின் ஒரு ஷரத்து, ''அரசியல், பொருளாதார, சமூக அல்லது கல்வித் துறையிலான தயார் நிலைகளின் பற்றுக்குறையை, சுதந்திரத்தைத் தாமதப் படுத்துவதற்கான ஒரு சாக்குப் போக்காக என்றுமே கருதக் கூடாது'' என்று கூறுகிறது. இந்த முக்கியமான ஷரத்து சுதந்திரத்திற்கான மக்களின் ''தயார் நிலை'' என்ற கருத்தை அதிகாரபூர்வமாகக் கண்டனம் செய்தது; இந்தக் கருத்தைக் காலனி ஆதிக்கவாதிகள் தமது ஒடுக்குமுறைக் கொள்கையை நியாயப்படுத்துவதற்கு எப்பொழுதும் பயன் படுத்தி வந்தார்கள். இந்தப் பிரகடனம் ''சுயாட்சி இல்லாத பிரதேசங்கள்'' மற்றும் ஐக்கிய நாடுகளின் ''பொறுப் பாட்சிக்கு விடப்பட்ட அமைப்புக்குரிய'' நிறுவனங்களின் மாற்றமடைந்து வரும் தன்மையினை ஊர்ஜிதம் செய்தது, அவற்றை அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கைகளைக் கோரியது. சுதந்திரத்திற்காகப் போராடி வரும் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை இது தடை செய்தது, அவர்களது தேசிய நிலப்பரப்பின் முழுமையை ஆக்கிரமிக்க நடத்தும் முயற்சிகளைத் தடை செய்தது. இது ஒரு முக்கியமான நடவடிக்கை, இது பின்னல் தேசவிடுதலை இயக்கத்தின் சட்ட பூர்வத் தன்மையினை அங்கீகரித்து அதற்கு உதவி புரிய வகை செய்தது. இந்த நிலையை சோவியத் ஒன்றியம் நிறுவப் பட்ட நாள் முதலாக மேற்கொண்டு வந்துள்ளது.

1970 அக்டோபரில் நடைபெற்ற ஐ. நா. பொதுச் சபையின் 25ஆவது கூட்டத் தொடர் நாடுகளிடையான நேச

உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு சம்பந்தமான சர்வதேசச் சட்டம் பற்றிய கோட்பாடுகளின் பிரகடனத்தை அங்கீகரித்தது. அது கூறுவதாவது: ''ஒரு காலனியின் பிரதேசம் அல்லது சுயாட்சி இல்லாத பிரதேசத்திற்கு அதை நிர்வாகம் செய்யும் அரசிலிருந்து வேறுபட்ட தனி அந்தஸ்து சாசனத்தின் கீழ் உண்டு; சாசனத்தின் கீழ் உள்ள அத்தகைய வேறுபட்ட தனி அந்தஸ்து இந்தக் காலனி அல்லது சுயாட்சி இல்லாத பிரதேசத்தின் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையினை அமுல் நடத்தும் வரையில் நிலவும்.''

இவ்வாறாக, சர்வதேசச் சட்டம் முக்கியமான முற்போக்கான நியதியைக் கொண்டிருக்கிறது; இதற்கு ஏற்ப தமது சுயநிர்ணய உரிமையினை வென்று பெறவிருக்கும் தேசங்கள் மற்றும் தேசியக் குழுக்களுக்குக்கூட உண்மையான சுதந்திர அந்தஸ்து உண்டு.

சோவியத் ஒன்றியம் தேசங்களின் சமத்துவம் பற்றிய தான லெனினது கோட்பாடுகளை இடையறாது ஆதரித்து வருகிறது, காலனி ஆதிக்கம், நவீன காலனி ஆதிக்கம், இனவெறி, எல்லா வடிவிலுமான தேசிய ஒடுக்குமுறை ஆகியவற்றை வன்மையாக எதிர்த்து வருகிறது. அக்டோபர் புரட்சி மற்றும் சோஷலிசத்தின் சாதனைகள் செலுத்திய செல்வாக்காலும் காலனி அமைப்பு வீழ்ச்சியடைந்தது; பல அடிமைப்பட்டிருந்த மக்கள் இனங்கள் சுதந்திர அரசுத்துவத்தை வென்று பெற்றன. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் இவை சோவியத் ஒன்றியம் மற்றும் சோஷலிசக் கூட்டமைப்பு முழுவதன் ஆதரவைத் தொடர்ந்து நம்பியிருந்தன.

சர்வதேசியக் கோட்பாடுகளின் பால் மெய்ப்பற்றுடன் விளங்கும் சோவியத் அரசு, தேச விடுதலைப் போராட்டங்களுக்கும், ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க மக்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த பொருளாதார சுதந்திரத்திற்கான புரட்சிகர இயக்கங்களுக்கும் ஆதரவு தருவது, ஏகாதிபத்தியத்திடமிருந்து தமது பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்துவதற்காக இளம் அரசுகள் நடத்தி வரும் போராட்டத்தில் அவற்றுக்கு உதவி புரிவது என்ற கொள்கையை இடையறாது பின்பற்றி வருகிறது.

இது முதலில் சர்வதேசச் சட்டத்தில் பொதுவாக ஒப்புக் கொண்ட கோட்பாடாக மக்களினங்களின் சுயநிர்ணய

உரிமையினை உலகம் முழுதிலும் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்கும் ஒரு நாட்டை இன்னொரு நாடு ஒடுக்குவதை எதிர்த்தும் மேற்கொண்ட போராட்டத்தில் சோவியத் அரசு வழங்கிய தார்மிக-அரசியல் உதவியாக விளங்கியது. இந்தக் கொள்கை அக்டோபர் புரட்சிக்கு மறுநாள் பிறப்பிக்கப் பெற்ற ''சமாதானம் பற்றிய அரசாணை''யிலும் மற்றும் ''ருஷ்யாவைச் சேர்ந்த மக்கள் இனங்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்''திலும் அறிவிக்கப்பட்டது; சோவியத் அரசும் அதன் கீழ்த்திசை அண்டை நாடுகளும் 1920ஆம் ஆண்டுகளில் செய்து கொண்ட பல ஒப்பந்தங்களால் உறுதிப்படுத்தப் பெற்றது; 1933ல் லண்டனில் நடைபெற்ற படைக் குறைப்பு மாநாட்டில் ஊர்ஜிதம் செய்யப்பெற்றது; சோவியத் யூனியன் சர்வதேச சங்கத்தில் சேர்ந்த பொழுது இது காலனி ஆதிக்கத்திற்குரிய வடிவத்தில் ஒன்றுன உரிமைக் கட்டளை அமைப்பையும் அங்கீகரிக்க மறுத்ததன் விளைவாக வெளியாயிற்று காலனிகள் பற்றிய பிரச்சினைகள் சம்பந்தமான சர்வதேச சங்கத்திலான சோவியத் அரசின் நடவடிக்கைகள் எல்லாம் இதற்கு எடுத்துக் காட்டாக இருந்தன; 1941ல் நேச நாடுகளுக்கிடையிலான லண்டன் மாநாட்டில் இது மீண்டும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது; மிகவும் நாச நஷ்டமும் இரத்தம் சிந்தலும் ஏற்பட்ட இரண்டாம் உலகப் போரின் போது இரு கோடி சோவியத் உயிர்கள் பலியிடப்பட்டு ஈட்டிய வெற்றியில் இது உத்தரவாதம் செய்யப்பட்டது. இவை யாவும் சோவியத் ஒன்றியத்தின் முன்முயற்சி மூலம் ஐ. நா. சாசனத்தில் பதிக்கப் பெற்றுள்ளன.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு சோவியத் ஒன்றியம் அதன் அதிகரித்த செல்வாக்கு மற்றும் வேகமாகப் பெருகி வரும் அதன் பொருளாதார-ராணுவ வலிமை காரணமாக ஒடுக்கப்பட்ட நாடுகளின் ஒரு நம்பகமான ஆதரவு சக்தியாக, தேசவிடுதலைப் புரட்சிகள் அடைந்த வெற்றிகளின் அரணாக விளங்கலாயிற்று. சாதகமான நிலைமைகள், அதாவது ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, நிதி, பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் ராணுவ உதவி விஷயத்தில் ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோக உரிமைக்கு முடிவு கட்டிவிட்ட ஒரு வலுவான சோஷலிச அரசு நிலவுவது, இந்தப் புரட்சிகள் வெற்றிவாகை சூடுவதற்கு வகை செய்தது. புதிய

சமுதாய அமைப்பு முதலாளித்துவத்தை விட மேலானது என்பதை மேலும் அதிகமாக எடுத்துக் காட்டும் உலக சோஷலிசக் கூட்டமைப்பு தோன்றியதுடன் சாதகமான நிலைமைகளின் செல்வாக்கு அதிகமாக அதிகரித்து விட்டது.

தமது விடுதலைக்காகப் போராடும் மக்களினங்களின் பால் சர்வதேச ஒருமைப்பாட்டுக் கோட்பாடுகளை ஆதரித்து நிற்கும் சோவியத் ஒன்றியமும் இதர சோஷலிச நாடுகளும், சோஷலிச உலகத்திற்கும் தேச விடுதலை இயக்கங்களுக்கும் இடையிலான நேச அணியினை வலுப்படுத்தி அதன் வழி மக்களை காலனி, நவீன காலனி ஆதிக்க அடிமைத் தனத்திலிருந்து முழுமையாக விடுதலை செய்வதற்கான தமது உறுதியை எடுத்துக் காட்டியுள்ளன.

''காலனி நாடுகள் மற்றும் மக்கள் இனங்களுக்குச் சுதந்திரம் வழங்குவது பற்றிய பிரகடனத்''தைத் துரிதமாகச் செயல்படுத்துவதை உறுதிப்படுத்தவும் காலனி ஆதிக்கத்தின் மீதமிச்சங்களை ஒழிக்கவும் கோரி சோவியத் ஒன்றியம் ஐக்கிய நாடுகளின் அமைப்பிலும் இதர சர்வதேச அமைப்புகளிலும் ஸ்தூலமான முடிவுகளை ஏற்கவும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவும் முயல்கிறது. மீதமுள்ள காலனி ஆட்சி முறைகளை அகற்றுவது பற்றிய ஐ. நா. முடிவுகள் முழுமையாக நிறைவேற்றப்பட அது சகல முயற்சிகளும் எடுத்து வருகிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரசில் சோவியத் ஒன்றியத்தின் அயல் துறைக் கொள்கையிலான இந்த முக்கியமான போக்கு உருவாக்கப் பெற்றது.

எல்லா மாகண்டங்களிலுமுள்ள லட்சோப லட்சம் மக்கள் தேசிய சுதந்திரத்திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் போராடி வருகிறார்கள். பிரிட்டிஷ் காலனி ஆதிக்கவாதிகளுக்கு வடக்கு அயர்லந்தில் மாபெரும் இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. வெகு அண்மைக் காலம் வரை ஏகாதிபத்தியவாதிகளால் நம்பகமானதாய்க் கருதப்பட்டு வந்த லத்தீன் அமெரிக்காவின் மக்கள் தேச விடுதலைப் போராட்டத்தில் மேலதிகமான பங்கு வகித்து வருகிறார்கள்.

அரபு நாடுகளின் மக்கள் மிகவும் இடர்ப்பாடான சூழ்நிலையில் தமது உரிமைகளைப் பாதுகாத்து வருகிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், அரபு பிரதேசத்தைக்

கைப்பற்றி வரும் இஸ்ரேல் ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குகிறார்கள். ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளை எதிர்ப்பதற்காக அரபு மக்கள் தமது அணிகளை உறுதிப்படுத்தி தமக்கிடையேயும் தமது உண்மையான நண்பர்களான சோவியத் ஒன்றியம் மற்றும் இதர சோஷலிச நாடுகளுடனும் ஒருமைப்பாட்டுப் பந்தங்களை வலுப்படுத்தி வருகிறார்கள். சோவியத் சமாதானக் கொள்கையானது ஏகாதிபத்தியம் மற்றும் பிற்போக்கின் ஆக்கிரமிப்புப் போர்த்தந்திரங்களை எதிர்க்கும் மிகவும் முக்கியமான காரணியாக இருக்கிறது. அது சமூக முன்னேற்றம், பல்வேறு நாட்டு மக்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்காகவும் ஆக்கிரமிப்புப் போர்களை எதிர்த்தும் நடைபெறும் தீவிரமான போராட்டத்துக்கு வகை செய்கிறது. சோவியத் ஒன்றியம் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளைப் பின்பற்றி உலகில் பதட்ட நிலையினைக் குறைப்பதற்குத் தன்னால் ஆனவரை முயல்கிறது. ஆக்கிரமிப்பு செய்யவும் எதிர்ப்புரட்சியை ஏற்றுமதி செய்யவும் ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொள்ளும் முயற்சிகளை எதிர்த்து சோவியத் ஒன்றியம் ஊக்கத்துடன் போராடுகிறது.

இளம் வளர்முக நாடுகளுடன் சேர்ந்து விடுத்த பிரகடனங்கள் மற்றும் அறிக்கைகளிலும் சோஷலிச நாடுகளுடனான ஒப்பந்தங்களிலும் சோவியத் ஒன்றியம் எல்லா வடிவங்களிலும் வெளியீடுகளிலுமான காலனி ஆதிக்கத்தினை எதிர்த்து சம்பந்தப்பட்ட நாடுகள் கட்டாயம் போராட வேண்டும் என்ற ஷரத்துக்களை உட்படுத்தியுள்ளது. சோஷலிச நாடுகளுடன் சோவியத் ஒன்றியம் செய்து கொண்ட நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி குறித்த உயர் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் ஒப்பந்தங்களில் இவற்றை உண்மையில் காணலாம்.

காலனி ஆதிக்கத்தை மிகவும் கோட்பாடு பூர்வமாகவும் முரணின்றியும் எதிர்த்து வரும் சோவியத் ஒன்றியம், இன்னும் சுதந்திரமான அரசுத்துவம் பெறாத தேசங்கள் உள்ளிட்டு தேசங்களின் சர்வசுதந்திரத்திற்கு சர்வதேச் சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக எப்பொழுதும் முயன்று வந்துள்ளது. சர்வதேசச் சட்ட உடன்பாடுகளை விரித்துரைத்து ஏற்படுத்திக் கொள்ளும் சோவியத் ஒன்றியத்

தின் நடைமுறை இந்த விஷயத்தில் மிகவும் முக்கியமானது. 1948 டிசம்பர் 9ல் இன-சங்காரக் குற்றச் செயலைத் தடை செய்யவும் அதற்குத் தண்டனை வழங்கவும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தது மூலம் சோவியத் ஒன்றியம் 12ஆவது விதி பற்றிய ஒரு விளக்கக் குறிப்பை செய்தது. இதற்கு ஏற்ப கையொப்பமிட்டுள்ள எந்த ஒரு நாடும், அது எந்தப் பிரதேசத்துடனான அயல்துறை உறவுகளுக்குப் பொறுப்போ அந்தப் பிரதேசத்தில் ஐ. நா. பொதுச் செயலாளருக்கு அறிவித்து விட்டு இந்த விதியினை அமுல் செய்யலாம். இந்த உடன்பாட்டின் விதிகள் யாவும் பொறுப்பாட்சிக்கு விடப்பட்ட பிரதேசங்கள் உள்ளிட்ட சுயாட்சி இல்லாத பிரதேசங்களுக்கும் பொருந்த வேண்டும் என்று வாதிட்டு இந்த விதி சம்பந்தமாகத் தனது வேறுபாட்டை வெளிப்படுத்தியது சோவியத் ஒன்றியம்[1].

சோவியத் ஒன்றியம் தேசவிடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு வழங்குவதோடு கூடவே இளம் அரசுகள் அவற்றின் அரசியல் சுதந்திரத்தை வலுப்படுத்திக் கொள்ளவும் பொருளாதாரத் துறையில் தற்சார்பு நிலையை அடையவும் உதவுகிறது.

தேசவிடுதலை இயக்கத்தின் வளர்ச்சி தற்பொழுது ஒரு வரலாற்று கட்டத்தை எட்டிவிட்டது, இன்று தேசிய சுதந்திரம் மேலும் வலுப்படுவது சமூக-பொருளாதார மாற்றங்களின் தன்மையையும் ஆழத்தையும் நேரடியாகச் சார்ந்திருக்கிறது. புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் சுதந்திரமான வளர்ச்சிப் பாதையில் முன்னேறும் பொழுதில் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்தின் சமூக அம்சங்கள் முன்னணிக்கு வருகின்றன. தமது நாட்டின் அரசுரிமையினை வலுப்படுத்த ஆழமான சமூக-பொருளாதார மாற்றங்கள் அவசியம் என்பதைப் புரட்சிகர-ஜனநாயக சக்திகள் மேலதிகமாக உணர்ந்து வருகின்றன.

இவ்வாறாக லெனினது தேசியக் கொள்கை பிரதானமாயும் பல்வேறு தேசிய இனங்களின் அபிலாஷைகளையும் விருப்பங்களையும் எதார்த்தமான சமுதாய நடைமுறையுடன்

---

[1] தஸ்தாவேஜுகளில் சர்வதேசச் சட்டம், மாஸ்கோ, 1969, பக்கங்கள் 187-188 (ருஷ்யன்).

ஒருங்கிணைக்கும் உத்தேசம் கொண்டதாகும். இந்தக் கொள்கையானது உண்மையில் தேசங்களின் சுயநிர்ணய உரிமையை விஞ்ஞான பூர்வமாக ஆதாரப்படுத்தப் பெற்ற ஒரு கோட்பாடாக்குகிறது. இந்தக் கோட்பாட்டின் செயற்பாடு பல் தேசிய சமுதாயத்தினுடைய சமூக-அரசியல் வளர்ச்சிக்குரிய தேவைகள், வர்க்கப் போராட்டத்தின் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகள், பாட்டாளி வர்க்கப் புரட்சி, சோஷலிச மற்றும் கம்யூனிச நிர்மாணம் ஆகியவற்றின் நலன்களையும் சார்ந்திருக்கிறது.

தேசங்களின் சுயநிர்ணய உரிமை, முரணற்ற ஜனநாயகத்தையும் சர்வதேசியத்தையும் வெளிப்படுத்தும் ஒரு கம்யூனிஸ்டுக் கட்சி பின்பற்றி வரும் தேசியக் கொள்கையின் கோட்பாடு (சோஷலிசத்தின் கீழ் அரசு மற்றும் சட்டத் துறை கோட்பாடும்) ஆகும்.

லெனின் கட்சியின் வேலைத்திட்டக் கோரிக்கைகளின் சர்வதேசத் தன்மையினை ஆதாரப்படுத்திக் காட்டும் பொழுது தேசியக் கொள்கையின் இறுதியான நோக்கத்தை, அதாவது தேசங்கள் நெருங்கி சென்று முடிவில் இரண்டறக் கலந்து விடுவது என்ற இறுதியான நோக்கத்தை, புறக்கணிக்கக் கூடாது என்று கூறினார். தேசிய சுயநிர்ணயக் கோட்பாட்டின் நோக்கம் இந்தக் கடமையினை நிறைவேற்றுவதற்கான ஜனநாயக முன்தேவைகளையும் நிலைமைகளையும் உருவாக்குவதேயாகும்.

சர்வதேசக் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் இயக்கத்தின் தத்துவம், நடைமுறையின் பொக்கிஷத்தில் தேசியப் பிரச்சினை பற்றிய லெனினது கட்சியின் வேலைத்திட்டம், மார்க்சிய-லெனினியத்தின் பொதுவான கருத்துரைகளை ஒரு பல்தேசிய நாட்டில் எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்கு ஒரு முன்மாதிரியாக எப்பொழுதும் நின்று நிலவும்.

## அத்தியாயம் 2

# தேசிய சர்வசுதந்திரமும் சோவியத் தேசிய அரசும்

ருஷ்யாவைச் சேர்ந்த மக்கள் இனங்களின் தேசிய சுய நிர்ணயம் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு மட்டுமே சாத்தியமாயிற்று. இன்றும்கூட முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் லெனினது தேசியக் கொள்கையையும் மக்கள் இனங்களினுடைய தேசிய சுயநிர்ணயத்தின் தத்துவம் மற்றும் நடைமுறையையும் கொடிய முறையில் தாக்கி வருகிறார்கள். வேறு பலவற்றோடு கூடவே தேசிய சுயநிர்ணயக் கோட்பாடு அதன் மார்க்சிய-லெனினிய விளக்கத்தில் செயல்படுத்தக் கூடியதல்ல, பயன்படத் தக்கதல்ல என்று நிரூபிக்க முயல்கிறார்கள். ஒரு பிரபல அமெரிக்க "சோவியத் இயலாளரான" ரிச்சார்டு பைப்ஸ் கூறுவதாவது: "சுயநிர்ணயம் பற்றிய லெனினது தத்துவம், ருஷ்யாவில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முற்றிலும் செயல்படுத்தக் கூடியதல்ல.... தேசியவாதத்தின் சக்தியைக் குறைத்து மதிப்பிட்டும், தேசியப் பற்றுறுதி மீது வர்க்கப் பற்றுறுதிகள் தவிர்க்கவொண்ணாத வகையில் வெற்றிவாகை சூடும் என்று சந்தேகத்திற்கிடமின்றி நம்பியதாலும் லெனின் தேசியப் பிரச்சினைகளை, தீர்வு காண்பதற்கானவை என்பதை விடப் பயன்படுத்தவே விரும்பினார். ஆனால் ஆட்சி அதிகாரத்திற்கான போராட்டத்தில் ஒரு உளவியல் ஆயுதம் என்ற முறையில் முதலில் ருஷ்யாவிலும் பிறகு வெளிநாடுகளிலும் லெனினது விளக்கப்படியான இந்த சுயநிர்ணய கோஷம் மிகப் பெருமளவு வெற்றிகரமாகியது"[1].

---

[1] R. Pipes, *The Formation of the Soviet Union. Communism and Nationalism 1917-1923*, Cambridge (Mass.), 1964, p. 49.

தேசிய அரசை நிறுவுவதிலான சோவியத் அனுபவம் சோவியத் ஒன்றியத்திடம் பகைமை கொண்ட நபர்கள் முன் வைக்கும் இத்தகைய வாதங்களின் ஆதாரமற்ற தன்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது. அவர்கள் லெனினது கருத்துக் கள் உலக தேச விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி மீது பலமான புரட்சிகரப்படுத்தும் செல்வாக்குச் செலுத்துகின்றன என் பதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது.

சோவியத் அரசு அதன் முதலாவது ஆணைகள் மூலம் ருஷ்யாவில் வாழும் தேசிய இனங்கள் மற்றும் இனக் குழுக் களின் சுயநிர்ணய உரிமையினைப் பிரகடனம் செய்து சட்ட பூர்வமாக நிலைநாட்டியது. 1917 அக்டோபர் 25ல் (நவம்பர் 7ல்)[1], சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யாவின் காங்கிரஸ் ''தொழிலாளர்கள், படைவீரர்கள் மற்றும் விவசாயிகளுக்கு'' என்னும் அதன் வேண்டுகோளில் ருஷ்யா வில் வாழும் தேசங்களுக்கு சோவியத் அரசு சுயநிர்ணய உரிமையினை உத்தரவாதம் செய்யும் என்று கூறியது. 1917 நவம்பர் 2ஆம் நாள் சோவியத் அரசாங்கம் அங்கீகரித்த ''ருஷ்யாவைச் சேர்ந்த மக்கள் இனங்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம்'' இந்த உரிமையினை உறுதிப்படுத்தியது. இந்தப் பிரகடனத்தில் சோவியத் அரசு தேசங்களின் சமத் துவத்தையும் அரசுரிமையையும், தேசியச் சிறுபான்மையினர் இனக் குழுக்களின் சுதந்திரமான வளர்ச்சியையும் பறைசாற் றியது, எல்லா தேசியத் தனியுரிமைகளையும் கட்டுப்பாடுகளை யும் ஒழித்தது, தேசியக் கொள்கையின் பிரதானக் கோட் பாடுகளை வரையறுத்தது, தேசங்கள் தமது எதிர்காலத்தை உண்மையிலேயே சுதந்திரமான வழியில் நிர்ணயம் செய்து கொள்வதற்கான நிலைமைகளை உருவாக்கியது.

''பிரிந்து போகும் சுதந்திரம் பற்றிய நமது பிரசாரத்திற் கும் நாமே அரசாங்கத்தில் இருக்கும் பொழுது அந்த சுதந்

---

[1] 1918ம் ஆண்டுக்கு முன்பு ருஷ்யாவில் ஜூலியன் காலண்டர் அமலில் இருந்தது. பெரும்பாலான நாடுகளில் தற்போது வழக்கில் உள்ள கிரிகரியன் காலண்டருக்கும் இதற்கும் 13 நாட்கள் வித்தியாசம் உண்டு. உதாரணமாக 1917 அக்டோபர் 25ல் நிகழ்ந்த மாபெரும் சோஷலிசப் புரட்சி கிரிகரியன் காலண்டரின்படி நவம்பர் 7ந் தேதி நடந்தது. இவ்வாறே பிறவும்.

திரத்தை அமுல் செய்வதற்கான நமது உறுதியான நிலைக்கும், தேசங்களின் இணைப்பு மற்றும் இரண்டறக் கலத்தல் பற்றிய பிரசாரத்திற்கும் இடையே 'முரண்பாடு' எதுவும் இல்லை, இருக்கவும் முடியாது'' என்று லெனின் கூறியது சரியே[1].

சோவியத் அரசு நிறுவப்பட்ட உடனேயே பல்வேறு மக்கள் இனங்களின் சுயநிர்ணய உரிமைக்குச் சட்ட அந்தஸ்தினை நல்கும் ஆணைகள் பிறப்பிக்கப் பெற்றன, இவை தமது சொந்த சுதந்திரமான தேசிய அரசுகளை அமைத்துக் கொண்டன.

1917 டிசம்பர் 3 (16)ந் தேதி வெளியிடப் பெற்ற ஆணையின்படி ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் மக்கள் கமிசாரவை உக்ரேனியாவின் சுதந்திரத்தை அங்கீகரித்தது.

1917 டிசம்பர் 18 (31) தேதி பின்லந்து குடியரசின் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் ஆணை பின்லந்து அரசாங்கத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

1917 டிசம்பர் 31ல் (1918 ஜனவரி 13) லெனின் கையொப்பமிட்ட பிறகு துருக்கிய ஆர்மீனியாவின் சுயநிர்ணயம் பற்றிய ஆணை பகிரங்கப்படுத்தப் பெற்றது.

1918 முதற் பாதியில் உரியான்ஹாய் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த துவினியர்கள் ஒரு காங்கிரஸ் நடத்தினார்கள். அதில் ருஷ்யாவிலிருந்து பிரிந்து செல்வதாகவும் சோஷலிச அமைப்புருவுள்ள அரசுக்கு மாறிச் செல்லும் ஒரு சுதந்திரமான மக்கள் அரசை நிறுவுவது என்றும் முடிவு செய்தார்கள்.

1918 ஆகஸ்ட் 29ல், ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் மக்கள் கமிசாரவை, முன்னாள் ருஷ்யாவின் பகுதியாக இருந்த பிரதேசங்களில் வாழ்ந்து வந்த போலந்து மக்களின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரித்தது.

1918 டிசம்பர் 7ல், ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் மக்கள் கமிசாரவை ''எஸ்டலந்து

---

[1] வி. இ. லெனின், ''மார்க்சியத்தின் மீதான கேலிச்சித்திரம் குறித்து'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 23, p. 68).

குடியரசின் சுதந்திரத்தை அங்கீகரிப்பது குறித்து'' என்ற ஆணையை உறுதிப்படுத்தியது.

டிசம்பர் 22ல், ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் மக்கள் கமிசாரவை ''லித்துவேனிய சோவியத் குடியரசின் சுதந்திரத்தை அங்கீகரிப்பது குறித்து'' என்ற ஆணையையும், ''லாத்விய சோவியத் குடியரசின் சுதந்திரத்தை அங்கீகரிப்பது குறித்து'' என்ற ஆணையையும் விடுத்தது.

1919 ஜனவரி, 31ல், அகில ருஷ்யாவின் மத்திய செயற்குழுவின் தலைமைக் குழு ''பைலோருஷ்ய சோவியத் சோஷலிசக் குடியரசின் சுதந்திரத்தை அங்கீகரிப்பது குறித்து'' என்னும் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.

1917 டிசம்பரிலேயே பைலோருஷ்ய சோவியத் சோஷலிசக் குடியரசினை நிறுவும் பிரச்சினையை போல்ஷிவிக் கட்சி எழுப்பியது. பைலோருஷ்யாவின் அரசு அமைப்பைப் பற்றி நிர்ணயம் செய்வதற்காக 1918 பிப்ரவரியில் வட-மேற்குப் பிராந்திய சோவியத்துகளின் காங்கிரஸ் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் ஜெர்மன் படையெடுப்பு, பைலோருஷ்யப் பிரதேசத்தில் பெரும் பகுதி கைப்பற்றப்பட்டது ஆகியவை காரணமாக இது கூட்டப்படவில்லை.

தேசங்களின் சுயநிர்ணய உரிமை முதல் தடவையாக சர்வதேசச் சட்டத்தின் ஜனநாயகக் கோட்பாடாக லெனினது சமாதான ஆணையில் உருவாக்கப் பெற்றது. இது அனைத்து மக்கள் இனங்களின் சுதந்திரம், சர்வசுதந்திர சமத்துவம் ஆகியவற்றை முன்னுணர்ந்திருந்தது, சர்வதேச உறவுகளில் நாடுபிடித்தல், நஷ்ட ஈடுகள், ஆகியவற்றைக் கைவிடக் கோரியது; கைப்பற்றிச் சேர்த்துக் கொள்ளல் மற்றும் வன்முறையைக் கண்டனம் செய்தது.

மக்களின் சமத்துவம், சுயநிர்ணயம் மற்றும் அரசுரிமை சம்பந்தமாக லெனினது சமாதான ஆணையில் காணப் பெற்ற கருத்துக்கள் சர்வதேசச் சட்டத்தின் வளர்ச்சியில் அடிப்படையான முக்கியத்துவமுடையனவாகும்.

1917ல் வெற்றிவாகை சூடிய சோஷலிசப் புரட்சி மட்டுமே தேசங்கள் தமது சுயநிர்ணய உரிமையினை சுதந்திரமாகச் செயல்படுத்துவதைச் சாத்தியமாக்கியுள்ளது. இந்த விஷயத்தில் பிரபல பின்லந்து அரசியல்வாதியும் அரசறிஞருமான

ஒரு சமூக-ஜனநாயகவாதி ரைன்ஹோல்டு ஸ்வெண்டோ விடுத்துள்ள அறிக்கை மிகவும் கவனத்திற்குரியதாகும். அவர் கூறினார்: ''லெனின் தலைமையிலான புரட்சிகர போல் ஷிவிக்குகள் மாத்திரமே எவ்வித நிபந்தனைகளும் இன்றி பின் லந்தின் அரசுரிமையை அங்கீகரித்தார்கள். கம்யூனிஸ்டுகளின் அக்டோபர் புரட்சி வெற்றியடைந்திரா விட்டால் ருஷ்யா வின் அரசியல் நிர்ணய சபை பின்லந்தை ருஷ்யாவிடமிருந்து ஒரு முழு சுதந்திரமும் உரிமையும் பெற்ற அரசாகப் பிரிந்து செல்வதற்கு அனுமதித்திருக்காது. அன்று எம்மை கம்யூனிஸ் டல்லாத ருஷ்யாவிடமிருந்து பாதுகாக்க எவரும் இருந்திருக்க மாட்டார்கள்''[1].

அக்டோபர் புரட்சி வெற்றி பெற்ற உடனேயே சோவியத் அரசு, முன்னாள் ருஷ்யப் பேரரசின் அனைத்து மக்களினங் களும் தேசிய சுதந்திர அரசை நிறுவத் தயாராக இருப்பதை அங்கீகரித்தது. பல்வேறு காரணங்களால் (அந்நியர் படை யெடுத்துப் பிரதேசங்களைக் கைப்பற்றுதல், உள்நாட்டுப் போர், பொருளாதாரச் சீர்குலைவு) எல்லா மக்களினங்களும் தமது சுயநிர்ணய உரிமையினை உடனடியாகச் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. உதாரணமாக, கரேலியாவில் சோவியத் ஆட்சியதிகாரம் 1918 ஜனவரியில் நிறுவப் பெற் றது. ஆனால் கரேலிய மக்களின் அரசுரிமையின் அரசியல் வடிவம் மீதான பொது கருத்து வாக்கெடுப்பு 1920 வரை யில் நடைபெறவில்லை.

சில மக்கள் இனங்கள் தமது சுயநிர்ணயத்தின் அரசியல் வடிவமாக ஒரு முழு உரிமை பெற்ற சுதந்திரமான அரசினைத் தேர்ந்தெடுத்ததை நாம் கண்டோம்.

அரசு சுயநிர்ணயத்தின் இந்த வடிவத்தைத் தேர்ந்தெடுப் பதில் பெரும் செல்வாக்கு செலுத்திய காரணிகளை ஒரு முடிவை ஏற்குமுன், பொருளாதார எதார்த்தம், அரசியல் சூழ் நிலை, இந்த முடிவிற்குரிய அரசியல் முக்கியத்துவம் பற்றிய சரியான ஆய்வு மேற்கொள்ளவேண்டியதன் அவசியம் பற்றிய லெனினது போதனையின் அடிப்படையில் பரிசீலிக்க

---

[1] ஆர். ஸ்வெண்டோ, உலகக் கொள்கையின் மையத்தில் சோவியத் ஒன்றியம், மாஸ்கோ, 1961, பக்கம் 141 (ருஷ் யன்).

வேண்டும்[1]. வரலாற்று ஆய்வு பற்றிய லெனினது வழிமுறை குறிப்பிட்ட சூழ்நிலையை அதன் எல்லா அம்சங்களிலிருந்தும் ஆராய்வதை அடிப்படையாக்கியது. ஆனால் ஒரு குறிப்பிட்ட முடிவு எடுப்பதற்குத் தேவையான வலுவும் கண்டிப்புமான நிலைமைகளையோ காரணிகளையோ இது வகுத்தளிப்பதில்லை.

ஓர் அரசியல் செயல்பாடான தேசங்களின் சுயநிர்ணயம், வர்க்க சக்திகளின் உறவுகள் மற்றும் குறிப்பிட்ட வர்க்க நோக்கங்களின் நிறைவேற்றம் ஆகியவற்றை அடிப்படையாக்கிய சர்வதேச மற்றும் தேசங்களிடையிலான உறவுகளுடன் சேர்ந்து நேரடியாகவும் அடிப்படையாகவும் ஆட்சி அதிகாரத்தோடு தொடர்பு கொண்டுள்ளது. முற்றிலும் அரசியல் தன்மையுள்ள தேசிய சுயநிர்ணயம் மற்றும் அதன் விளைவாக நிறுவப்படும் தேசிய அரசு சம்பந்தமாக ஒரு வர்க்க அணுகுமுறையினை ஏற்க வேண்டும் என்று மார்க்சிய-லெனினியம் வலியுறுத்துகிறது.

எல்லைப்புறப் பிரதேசங்கள் சோவியத் ருஷ்யாவிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கை உள்நாட்டு, வெளிநாட்டு எதிர்ப்புரட்சியை எதிர்த்து மூர்க்கமான போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்தில் முன்வைக்கப்பட்டது. இவ்வாறாக, இது சோவியத் ருஷ்யாவின் புரட்சிகர ஆட்சியை சீர்குலைக்கவும் பிரிந்து சென்ற பிரதேசங்களை சர்வதேச ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவும் சூழ்ச்சி செய்யும் ஒரு எதிர்ப்புரட்சிக் கோரிக்கையாகும்.

ருஷ்யாவின் எல்லைப்புறப் பகுதியைச் சேர்ந்த தேசியவாத முதலாளி வர்க்கத்தினரின் இடையிலான பிரிவினைப் போக்குகள் அக்டோபர் புரட்சியின் தருணத்திலேயே தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தன, புரட்சிக்குப் பிறகு இவை மேலும் முனைப்படைந்தன. இது 1917 ஏப்ரலில் உக்ரேனியாவில் மத்திய ராடாவும், ஆகஸ்டில் பைலோருஷ்ய ராடாவும், இதே ஆண்டு நவம்பரில் ''டிரான்ஸ் காக்கேசிய கமிசாரகமும்'' நிறுவப்பட்டதிலிருந்து தெளிவாகத் தெரிந்தது. புரட்சி இயக்கம் வளர வளர இந்த அரசாங்கங்கள் தமது

[1] வி. இ. லெனின், ''மார்க்சியத்தின் மீதான கேலிச்சித்திரம் குறித்து'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 23, p. 65).

''சுதந்திரம்'' பற்றி உரிமை கொண்டாடின. இடைக்கால அரசாங்கம் பின்பற்றி வந்த தேசியவெறிக் கொள்கையானது ருஷ்யாவின் மையப் பகுதிக்கும் எல்லைப் பிரதேசங்களுக்கும் இடையே இருந்த உறவுகளைப் பெருமளவு சேதப்படுத்தியது, இந்த விஷயத்தில் அது ஜாரின் கொள்கையையே தொடர்ந்து பின்பற்றியது. ருஷ்ய முதலாளி வர்க்கத்தினரும் எல்லைப் பிரதேசங்களில் இருந்த தேசியவாத முதலாளி வர்க்கத்தினரும் பாட்டாளி வர்க்கத்தையும் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த வெகுஜனங்களையும் பிளவுறுத்துவது, புரட்சிகர, தேச விடுதலை இயக்கத்தை ஒடுக்குவது என்ற ஒரே வர்க்க நோக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.

தேசியவாத முதலாளித்துவ வட்டங்களின் வர்க்க நலன்கள், அவை ஏகாதிபத்திய அரசுகளின் நேரடி ஆதரவுடன் உழைக்கும் மக்களுக்கு எதிராக ஓர் எதிர்ப்புரட்சிப் போராட்டத்தைத் தொடுத்தன என்ற உண்மையில் தெளிவாக வெளிப்பட்டன. தேசிய நலன்களைக் காட்டிக் கொடுப்பதில் அவர்களுக்கு சற்றும் தயக்கம் இருக்கவில்லை. அவர்களது பிரிவினைவாதக் கருத்துக்களுக்கும் உண்மையான தேசிய சுயநிர்ணயத்திற்கும் பொதுவான அம்சம் எதுவும் இல்லை என்பது இயல்பே.

சமுதாய விடுதலைக்கான அவர்களது இடைவிடாத வர்க்கப் போராட்டத்தில், ருஷ்யத் தொழிலாளர் அளித்த சோதர உதவிகளையே பிரதானமாகச் சார்ந்து நின்ற தேசிய எல்லைப் பிரதேசங்களிலிருந்த உழைக்கும் மக்கள், தமது தேசிய சுதந்திரம், சுயநிர்ணயம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார்கள்.

இந்தப் பிரதேசங்களிலிருந்த முதலாளி வர்க்கத்தினரின் தேசியவாத வட்டங்கள் சோவியத் ஆட்சியை எதிர்த்துக் கடும் போர் நடத்தின. காரணம், அவை நாட்டின் புரட்சிகரமான மையத்திலிருந்து பிரிந்து செல்ல விரும்பின. 1917 ஜூன் 17ந் தேதி வலீதவ் என்பவரின் தலைமையின்கீழ் நிறுவப்பெற்ற எதிர்ப்புரட்சி ''பஷ்கீர் ஷூரோ''வின் (மத்தியக் குழு) தலைவர்கள் 1917 நவம்பர் 11ல் சோவியத் அரசாங்கத்தை அங்கீகரிக்கவில்லை என்ற ''பிரகடனத்தை'' வெளியிட்டனர். நவம்பர் 16ல் தன்முனைப்பாகக் கிழக்கு பஷ்கீரியாவை ஒரு ''சுதந்திரக் குடியரசு'' என்று பிரகடனம் செய்தார்கள். ''ஸ்ஃபன்துல் செரியா''(பிரதேச அவை) என்பதைச்

சேர்ந்த மோல்தாவிய முதலாளித்துவத் தேசியவாதிகள் மோல்தாவியாவை ஒரு ''சுதந்திரக் குடியரசாகப்'' பிரகடனப்படுத்தி ருமேனியத் தலைமைட்டாளர்கள் மோல்தாவியாவைப் படையெடுத்து நாட்டைக் கைப்பற்ற ஒப்புதல் தந்து தேசத்தைக் காட்டிக் கொடுத்தார்கள். உள்நாட்டு எதிர்ப்புரட்சியும், ஏகாதிபத்தியத் தலைமைட்டாளர்களும் தேசியவாத முதலாளி வர்க்கத்தினரின் இந்தப் பிரிவினை அபிலாஷைகளைப் பலமாக ஆதரித்தார்கள்.

குறிப்பிட்ட சூழ்நிலைகளில் முதலாளி வர்க்கம் மக்களை ஏமாற்றுவதற்காக, தேசங்களின் சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட, ஜனநாயகக் கோரிக்கைகளைப் பயன்படுத்தும் என்ற முக்கியமான உண்மையை லெனின் தம் காலத்தில் கம்யூனிஸ்டுகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

சோவியத் அரசாங்கத்தோடு பிரெஸ்த்-லித்தோவ்ஸ்க் நகரில் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு வெகு முன்பாகவே, ஜெர்மன் ஏகாதிபத்தியம் ருஷ்யாவைத் துண்டாடும் நோக்கத்துடன் தேசங்களின் சுயநிர்ணய உரிமை கோஷத்தைப் பயன்படுத்தியது என்பதை வரலாற்று தஸ்தாவேஜுகள் காட்டுகின்றன. இந்த எண்ணத்தோடு ஜெர்மன் அரசுறவுத் துறையாளர், ஜெர்மன் இராணுவத்தின் கீழ் இருந்த பால்டிக் பிரதேசத்தில் நிறுவிய பொம்மை ''மக்கள் ஆட்சிகள்'' பற்றிய ''முடிவுகளை'' வெகுவிரைவாகத் தயாரித்தார்கள். இந்த ''முடிவுகளில்'' இந்தப் பிராந்தியத்து மக்கள் விரும்பிச் செய்தது போலத் தோற்றமளிக்கும் ருஷ்யாவிடமிருந்து பிரிந்து செல்லும் பிரகடனங்கள் இடம் பெற்றிருந்தன. கெய்சர் ஆட்சி ஜெர்மனியின் ஆளும் வட்டங்கள் முன்னாள் ருஷ்யாவுடன் சேர்ந்து இணைந்திருந்த மக்கள் இனங்களுக்கு சுதந்திரம் வழங்க உத்தேசித்திருக்கவில்லை, மாறாக அவற்றின் இயற்கை மற்றும் மனித மூலவளங்களைச் சுரண்டுவதற்காக பால்டிக் நாடுகளை ஜெர்மனியுடன் சேர்த்துக் கொள்வதற்கான வழிகளையும் தக்கதான வடிவங்களையுமே தேடிக் கொண்டிருந்தார்கள் என்பதையும் இந்த தஸ்தாவேஜுகள் காட்டுகின்றன.

ஆட்சியதிகாரம் மேற்கொண்ட பிறகு பாசிஸ்டுகள் தேசிய சுயநிர்ணயம் என்ற கோஷத்தைக் கடன்வாங்கி, தமது சொந்த விஸ்தரிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக

விரிவாகப் பயன்படுத்திஞர்கள். ஆஸ்திரியா, செக்கோஸ் லோவாக்கியா மற்றும் போலந்தை அவர்கள் கவர்ந்து பிடித் ததை மூடிமறைக்க இந்த கோஷத்தைப் பயன்படுத்தினர்.

முதலாளித்துவ தேசியவாதிகளின் பிரிவினைவாதம், ருஷ் யாவுடனும் ருஷ்யத் தொழிலாளர்களுடனும் ஓர் அரசியல் கூட்டணியையும் அதன்பின் ஓர் அரசு முறைக் கூட்டணியை யும் விழைந்த தேசிய இனங்களின் உழைக்கும் மக்களது ஜீவா தார நலன்களுடன் நேரடியாக மோதியது. ருஷ்யாவின் தேசிய எல்லைப் பிரதேசங்களின் உழைக்கும் மக்கள் இந்தத் தேசங்களின் விருப்பத்தை வெளியிட்டு தமது தேசிய சுய நிர்ணயப் பிரச்சினையைச் சுதந்திரமாகத் தீர்த்துக் கொண் டார்கள். அந்நியத் தலையீட்டாளர்களின் ஆதரவால் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு சிறிது காலம் நிலவிய தேசிய வாத முதலாளித்துவ ''அரசாங்கங்கள்'' ஜனவிரோத எதிர்ப் புரட்சித் தன்மை கொண்டிருந்தன; எனவே அவை புரட்சி கர வெகுஜனங்களால் முறியடிக்கப்பட்டு வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசி எறியப்பட்டன.

உக்ரேனிய மத்திய ராடா உக்ரேனிய மக்களுக்குப் பகிரங்கமாகத் துரோகம் விளைத்தது. அது தனது ''உனிவெர் சால்'' என்ற ஆணையில், உக்ரேனிய மக்கள் குடியரசு என்ற பெயரிலான அமைப்பின் சுதந்திரத்தைப் பறைசாற்றி ருஷ்யாவிலிருந்து பிரிந்து விட்டதாக அறிவித்தது. தனது ஆட்சிக்கு முட்டுக் கொடுப்பதற்காக அது உக்ரேனியாவுக்குள் ஜெர்மன் படைகளை அழைத்து, பின்னுல் 1918 பிப்ரவரி 9ல் ஜெர்மன் கூட்டணி நாடுகளுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு உண்மையில் தன் பிரதேசத்தைப் படையெடுத்துக் கைப்பற்ற அனுமதித்தது.

லித்துவேனியாவில் தேசியவாத ''தாரிபா'' (தேசியக் குழு) ஜெர்மன் ஆக்கிரமிப்பு அதிகாரிகளின் தீவிரமான ஆதர வுடன் 1917 செப்டம்பரில் நிறுவப்பட்டது. லித்துவேனிய நாடாளுமன்றத்தில் ஜெர்மன் ஆதரவு வட்டங்களின் நலன் களைப் பிரதிபலித்த ''ஜனநாயகக் கூட்டணி'' லித்துவேனி யாவை ஜெர்மனிக்குள் இணைத்து விடுவதற்கான ஒரு தீர் மானத்தைக்கூட 1917 ஜூலையில் ஏற்றுக் கொண்டது.

''சுதந்திரக் குடியரசுகள்'' என்ற போலி வேடத்தின் கீழ் டிரான்ஸ் காக்கேசியாவில் பொம்மை அரசுகள் நிறுவப்

பட்ட பொழுது மென்ஷிவிக்குகள், தாஷ்ஞுக்குகள், மற்றும் முசாவத்திஸ்துகள் ஜெர்மன்-துருக்கி மற்றும் ஆன்டான்டு ஒப்பந்த நாடுகளின் ஏகாதிபத்திய மற்றும் சோவியத்-எதிர்ப்புத் திட்டங்களுக்கு முற்றிலும் உடன்பாடாகச் செயல் பட்டார்கள். அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் ஆர்மீனியாவின் தாஷ்ஞுக்கு அரசாங்கத்துக்கும் இடையிலான ''உடன்பாடு'' தேசியவாத ஆட்சியாளர்கள் மக்களுக்குத் துரோகம் விளைத் திருப்பதைத் தெளிவாகக் காட்டியது. இந்த உடன்பாடு அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குச் சட்டங்கள், ஆணைகள், இதர அரசாங்க கட்டளைகளை நீக்கவோ அல்லது மாற்றுவதற்கோ உரிய முழுமையான அதிகாரம் அளித்தது. இந்த உடன்பாட் டின் 4ஆவது பிரிவு கூறுவதாவது: ''ஆர்மீனியாவிலுள்ள ஒவ்வொரு அமைச்சருக்கும் அமெரிக்க அரசாங்கம் ஆலோ சகர்களை நியமிக்கும். அந்த ஆலோசகருக்கு (அ) ஆர் மீனிய அமைச்சர்களிடம் மசோதாக்களைப் பிரேரேபிக்கவும், (ஆ) ஆணைகள் அல்லது நிர்வாக நடவடிக்கைகள் சம்பந்தமாக அமைச்சர்களிடம் ஆலோசனை வைக்கவும் உத்தரவுகள் போடவும் உரிமை உண்டு''. தாஷ்ஞுக்கு ஆட்சி முறை நீண்ட நாள் நீடிக்காது என்பதை உணர்ந்த பிறகு 1920 ஜூனில் அமெரிக்கக் காங்கிரஸ் ஆர்மீனியா மீதான ஆட்சிக் கட்டளை உரிமையை ரத்துச் செய்து விட்ட காரணத்தால் இந்த உடன் பாடு சம்பிரதாயமாக அமுல் நடத்தப்படா விட்டாலுங்கூட, இந்த உடன்பாட்டின் ஷரத்துக்கள் நடைமுறையில் விரிவாகச் செயல்படுத்தப் பெற்றன.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஜார்ஜிய மென்ஷிவிக் அர சாங்கம் (இது வீழ்த்தப்பட்ட பிறகு பாரிசுக்கு குடியேறியது) சமர்ப்பித்த அறிக்கை மேலே குறிப்பிட்ட ஆட்சி முறைகளின் ஆழமான ஜனவிரோத மற்றும் எதிர்ப்புரட்சித் தன்மையை யும் தேசிய நலன்களை ஏகாதிபத்தியவாதிகளுக்குக் காட்டிக் கொடுப்பதிலான அவற்றின் விருப்பத்தையும் தெளிவாகக் காட்டிற்று. அதன் தலைப்பு ''ஜார்ஜியாவும் பிரிட்டனும் காக்கசசில் ஒத்துழைப்பது மற்றும் பிரிட்டனுக்கும் காக்கசஸ் கூட்டரசுக்கும் இடையே நேச அணி அமைத்தலின் அவசியம் பற்றிய அறிக்கை.'' அது கூறியதாவது: ''அனைத்துக் காக்கேசிய மக்கள் இனங்களின் கூட்டரசு நிறுவுவது முற்றி லும் சாத்தியமே. ஜார்ஜியா இதன் இதயமாக இருத்தல்

வேண்டும்.... இந்தக் கூட்டரசு நிறுவப்படுவதில் ஜீவாதார அக்கறை கொண்டுள்ள பிரிட்டன் இந்தக் கூட்டரசின் இன்ஞெரு நேச நாடாகவும் காவலஞகவும் இருக்க வேண்டும். இந்தக் கூட்டரசு, காக்கசஸ் போன்ற இராணுவ பலக்கோட்டையில் நிறுவப்பெற்று, இரு கடல்களை எல்லையாகக் கொண்டு தெற்கே துருக்கி மற்றும் பாரசீகம் வழியாக இந்து மாகடலை நோக்கிய பாதையைத் தடுக்கும் 1 கோடி 30 லட்சம் மக்கள் தொகை கொண்ட ஓர் இடைத்தட்டு நாட்டை வழங்கும். இந்த இடைத்தட்டு நாடு பிரிட்டனின் கரங்களில் பாரசீகத்தை எதிர்த்தும், குறிப்பாகத் துருக்கியை எதிர்த்தும், அவை இன்று போல 'கீழ்ப்படிய மறுப்பின்' ஒரு பலமான சம்மட்டியாக இருக்கலாம்''. சமூக-ஜனநாயகக் கட்சியால் (இதை நியாயமாகவே ஒரு முழுதளவு தேசியக் கட்சி என்று அழைக்கலாம்) வழிநடத்தப்படும் ஜார்ஜியா பிரான்சுடனும், குபான், தேரெக், மலைப் பிரதேச, அஸர்பைஜான், ஆர்மீனிய ஆகிய காக்கசஸ் குடியரசுகளின் நாடுகடந்து வந்துள்ள அரசாங்கங்கள் எல்லாவற்றுடனும் கூட்டுச் சேர்ந்து காக்கசசில் பிரிட்டனுக்கு மதிக்கவொண்ஞத சேவை புரியலாம். இதர எல்லா அரசாங்கங்களுடன் கூடவே ஜார்ஜிய அரசாங்கம் முதல் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புப் படைப் பிரிவுடன் சேர்ந்து காக்கசசிற்குள் பிரவேசிக்க வேண்டும் என்று அவ்வறிக்கை கூறியது.

**ஆங்கிலோ-சோவியத் உறவுகள், 1917-1921** என்ற நூலில் ரிச்சர்ட் உல்மன்(பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத் துணைப் பேராசிரியர்) கிரேட் பிரிட்டன் பேரரசின் யுத்த அமைச்சு மற்றும் அதன் கீழ்த்திசைக் கமிட்டி ஆகியவற்றின் ஆவணங்களை மேற்கோள் காட்டுகிறுர். இந்த தஸ்தாவேஜுகள் பிரிட்டிஷ் அரசாங்கம் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசிலிருந்து ஜார்ஜியா, அஸர்பைஜான், ஆர்மீனியா ஆகியவை பிரிந்து செல்வதை ஆதரித்தது என்பதையும் அதோடு அது இவற்றின்மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பியது என்பதையும் காட்டுகின்றன. ஆஞல் டிரான்ஸ் காக்கசஸ் பிரதேசத்தின் எதிர்காலம் குறித்து பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குள்ளேயே கருத்து வேற்றுமைகள் இருந்தன. யுத்த அலுவலகமும் அயல் துறை அமைச்சராகச் செயல்பட்ட கர்சன் பிரபுவும், பிரிட்டன் இந்தப் பிரதேசத்தை

நீண்ட காலம் கைப்பற்றி வைத்திருக்க வேண்டும் என்று கருதினார்கள். முதல் அமைச்சர் லாயிட் ஜார்ஜ் உள்ளிட்ட இதர அரசாங்க உறுப்பினர்கள் டிரான்ஸ் காக்கசஸ் அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ் அல்லது இத்தாலி போன்ற ஏதாவது ஒரு வல்லரசின் ஆட்சிக் கட்டளை உரிமையின் கீழ் வைக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். பாரிஸ் சமாதான மாநாட்டில் இந்தப் பிரச்சினையை எழுப்புவது என்று பிறகு யோசனை கூறப்பட்டது[1].

தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய லெனினது கோட்பாடு முதலாவதாகவும் முக்கியமானதாகவும் ஒரு தேசம் பிரிந்து போய் ஒரு சுதந்திரமான அரசை நிறுவிக் கொள்வதை உள்ளடக்குகிறது. எனினும் வரலாற்று நிலைமைகள் மாறியதன் காரணமாக சுயநிர்ணயத்தின் சாத்தியமான வடிவங்கள் அதிகரித்தது போலவே பிரிந்து போவதன் நடைமுறை சாத்தியமான வடிவங்களும் அதிகரித்தன.

ஒரு தேசிய அரசினை நிறுவும் வடிவிலான தேசங்களின் எந்த ஒரு சுயநிர்ணயமும் பிரிவினை என்ற வடிவில் பிரிந்து செல்வதை முன்னதாகவே எண்ணிப் பார்க்கிறது, ஆனால் இந்தப் பிரிவினையின் தன்மையும் அளவும் வேறுபடக் கூடும். ஒரு தேசம் தன்னைத் தானே ஒரு சுயாட்சி சோவியத் குடியரசின் வடிவில் நிறுவிக் கொள்ளலாம், அதாவது ஒரு தேசிய அரசாக, முழு அரசுரிமையுள்ள அரசாக அல்ல. அல்லது அது ஒரு முழு அரசுரிமையுள்ள சோவியத் குடியரசாக உருவாகிக் கொள்ளலாம். இதில் சுயாட்சியை விடவும் குணாம்சத்தில் வேறு வகையான சட்டம் மற்றும் தனியாகப் பிரிந்து வெளியேறும் உரிமை உள்ளடங்கியுள்ளது. இன்னொரு சாத்தியக்கூறு என்னவென்றால் ஒரு தேசம் தன்னைத் தானே துண்டாடிப் பிரிந்து போய் தனது வர்க்கத் தன்மை காரணமாக வேறுவகையான முழு சுதந்திர உரிமை உள்ள அரசாகலாம் (உதாரணம் பின்லந்து மற்றும் போலந்து).

சோஷலிசத்தின் கீழ் சர்வசுதந்திர தேசிய அரசு நிறுவப்படுவது என்பது தேசிய சர்வசுதந்திரத்தை எப்போதும்

---

[1] R. Ullman, *Anglo-Soviet Relations, 1917-1921. Britain and the Russian Civil War*, Princeton, New Jersey, 1968, pp. 73-81.

முன்னனுமானிக்கிறது. அரசுரிமை தேசிய சர்வசுதந்திரத்தை அடிப்படையாக்கியதாகும். சுயநிர்ணய உரிமை காரணமாக ஒரு தேசம் சோஷலிசத்தின் கீழ்கூட அரசுரிமையுள்ள தேசிய அரசினைக் கட்டாயம் நிறுவ வேண்டும் என்பதில்லை, எனவே தேசிய சர்வசுதந்திர உரிமை எப்பொழுதும் அரசின் சர்வ சுதந்திர உரிமை என்ற வடிவில் நிலைநாட்டப்படுவதில்லை.

சோவியத் தேசிய அரசை நிறுவுவதில் பெற்ற அனுபவம் ஒரு தேசிய அரசு சர்வசுதந்திர உரிமையுள்ள அரசாகவும் (ஒன்றியக் குடியரசு) இருக்கலாம், அல்லது ஒரு சுயாட்சி அரசாக, அதாவது சர்வசுதந்திர உரிமை இல்லாத அரசாக வும் (சுயாட்சிக் குடியரசு) இருக்கலாம் என்பதைக் காட்டு கிறது. இந்த வடிவங்களை (கூட்டாட்சி மற்றும் சுயாட்சி) ஆய்வு செய்வதற்கு லெனின் மிகப் பெரும் முக்கியத்துவம் அளித்தார். ஒரு பல்தேசிய சோஷலிச அரசின் நிர்மாணத் தில் அவை வகிக்கும் பங்கைக் கவனத்தில் எடுத்துக் கொண் டார்.

சோஷலிச தேசிய அரசின் மிகவும் சூழ்தகுதியுள்ள வடி வங்கள் பற்றி முடிவு செய்வது லெனினுக்கோ கம்யூனிஸ்டுக் கட்சிக்கோ எளிதாக இருக்கவில்லை. கூட்டாட்சி பற்றிய கருத் துக்கள் கோட்பாடு முறையில் நிராகரிப்பு என்பதிலிருந்து பல்தேசிய சோஷலிச அரசை நிறுவுவதற்கு மிகவும் பொருத்தமான வடிவம் என்றளவுக்கு ஒரு பன்முகமான பரிணும நடைமுறைக்கு மாறியது என்பது நன்கறிந்த விஷயம். சுயாட்சியினைப் புகுத்துவது சம்பந்தமான கருத்தும் மாற்ற மடைந்தது.

தேசிய அரசு உருவாக்கத்தின் ஸ்தூலமான வடிவங்களால் மக்களின் புரட்சிகரப் படைப்பாற்றல் செயல்பாடுகள் செழுமையடைந்ததோடு லெனினும் கட்சியும் தேசிய சுய நிர்ணயத்தின் வழிகளைச் சற்றே திருத்தினுர்கள்; இதர பொருத்தமான வடிவங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து சுயநிர்ணயத்தைப் பிரிந்து சென்று ஒரு சுதந்திரமான அரசை நிறுவிக் கொள்வது என்ற அளவுக்கு மட்டும் அவர் கள் குறுக்கி விடவில்லை. தேசிய சுயநிர்ணயத்தின் விளைவாக ஒரு சுதந்திரமான (முழு அரசுரிமையுள்ள) தேசிய அரசினை நிறுவுவது என்பது தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய மிகவும் முக்கியமான பிரச்சினையாக நீடிக்கிறது.

ருஷ்யாவின் எல்லைப்புற தேசியப் பிரதேசங்களில் உழைக்கும் மக்களின் புரட்சிகரமான எழுச்சி நிலைமைகளில், புது வடிவிலான அரசு அமைப்புகள் தோன்றின. இதன் காரணமாக கட்சி இனிமேலும் முன்போலவே, பரவலான பிராந்திய சுயாட்சி அல்லது ஒரு தேசம் சுதந்திரமாகப் பிரிந்து சென்று ஒரு சுதந்திரமான அரசை நிறுவிக் கொள்வது என்பதை மட்டும் அங்கீகரித்தால் போதாது என்பது இயல்பே. தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய கட்சியின் வேலைத்திட்டக் கோட்பாடு மேலும் சரிநுட்பமாக வரையறுக்கப்பட வேண்டும் என்ற தேவை ஏற்பட்டதென்றால், அதற்குக் காரணம் புரட்சி அனுபவம், தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய புதிய வடிவங்களைக் கோரிய தேசிய வளர்ச்சியின் புதிய தேவைகளை முன்வைத்ததேயாகும்.

ஒரு பல்தேசிய நாட்டில், மாறி வரும் வரலாற்று, தேசிய மற்றும் இதர நிலைமைகளின் ஒட்டுமொத்தமான செல்வாக்கின் கீழ், பல்வேறு தேசிய அரசு வடிவங்கள் எழுகின்றன. எதிர்காலத்தில் எழக் கூடியதான எல்லா வடிவங்களையும் முன்னறிந்துள்ளதாகவோ, மாறிவிட்ட வரலாற்று நிலைமைகளைப் பொருட்படுத்தாமல் ஒரு நாட்டுக்கு மிகவும் ஏற்றதான தேசிய அரசு அமைப்பு வடிவத்தை எதிர்நோக்கி விட்டதாகவோ மார்க்சிய-லெனினியம் உரிமை கொண்டாடவில்லை.

ஆனால் தேசிய சர்வசுதந்திர உரிமையின் அளவைப் பல்வேறு அரசு மற்றும் சட்ட வடிவங்களால் நிர்ணயிக்க முடியாது. உதாரணமாக சோவியத் ஒன்றியத்தின் முழு அரசுரிமையுள்ள தேசிய அரசான ஒன்றியக் குடியரசுக்கு ஒரு தேசிய அரசான, ஆனால் முழு அரசுரிமை பெறாத ஓர் சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசை விடவும் அதிகமாக தேசிய அரசுரிமை இருப்பதாகக் கருதுவது தவறாகும்.

எனவே ஒரு தேசத்திற்குரிய சுயநிர்ணயத்தின் வடிவம் எதுவாக இருந்த போதிலும் (சர்வசுதந்திரமான அரசு, அல்லது சுயாட்சி அரசு, அல்லது மற்றதொரு சுயநிர்ணய வடிவிலான அரசு)இது இதர எல்லாத் தேசங்களையும் போலவே சுயநிர்ணய உரிமையை அனுபவித்து முழு உரிமையுடன் தொடர்ந்து நிலவுகிறது.

மார்க்சிய-லெனினியத்தின் விளக்கப்படி தேசிய சுயநிர்ணயத்தின் சாரமான அரசியல் அர்த்தம், ஒரு தேசம் தனது

அரசமைப்பின் வடிவத்தை சுதந்திரமாகத் தேர்ந்தெடுப்பது மற்றும், மக்கள் விருப்பப்படி அரசின் எல்லைகளை நிறுவுவது, விருப்ப பூர்வமாக ஒன்றிணையவும் பெரியதோர் மத்தியப் படுத்தப்பட்ட அரசை நிறுவுவதற்குமான ஜனநாயக முன் தேவைகளை உருவாக்குவது என்பதில் காணக் கிடக்கின்றது.

இத்தகைய இணைப்புக்கும் மத்தியத்துவத்திற்கும் உரிய ஒரு வடிவமான சோஷலிசக் கூட்டாட்சியானது தேசிய சுய நிர்ணயத்தின் அனுபவம் அதன் விரிவாக்கத்தைக் கோரிய பொழுதும் அதன் காரணமாகவும்தான் எழுந்தது.

எட்டாவது கட்சிக் காங்கிரசில் கட்சியின் வேலைத்திட்டம் பற்றிய தமது அறிக்கையில் லெனின் கட்சியின் புதிய வேலைத்திட்டத்தின் நகல் தேசங்களின் சுயநிர்ணயம் பொதுவாக விவாதிக்கப் பெற்ற காலமுதல் உண்மையில் என்ன நடைபெற்றதோ அதன் அங்கீகாரமாகும் என்று கூறினார். அந்தக் காலத்தில் பாட்டாளி வர்க்கக் குடியரசுகள் இருக்கவில்லை. அவை தோன்றிய பொழுது, அவை தோன்றிய காரணத்தால் மட்டுமே "**சோவியத் பாணியில்** அமைக்கப்பட்ட அரசுகளின் ஒரு கூட்டாட்சி" என்று எழுதுவது சாத்தியமாயிற்று[1].

கூட்டாட்சிக்குரிய இரண்டு வரலாற்று ரீதியான வகைகள்—சுயாட்சியின் அடிப்படையில் நிறுவப்பட்ட கூட்டாட்சி (ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு) மற்றும் சமத்துவமுள்ள சர்வசுதந்திரக் குடியரசுகளின் ஒன்றியமாக நிறுவப் பெற்ற கூட்டாட்சி (டிரான்ஸ் காக்கேசிய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு மற்றும் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம்) தோன்றின. இதற்குக் காரணம் கூட்டாட்சி பந்தங்களின் தன்மையானது சோவியத் தேசிய அரசுத்துவத்தின் தன்மையால் நிர்ணயிக்கப்பட்டது.

மார்க்சும் எங்கெல்சும் மத்தியத்துவவாதிகள், கூட்டாட்சியை எதிர்ப்பவர்கள் என்ற போதிலும் குறிப்பிட்ட

---

1 வி. இ. லெனின், "தொழிலாளி வர்க்கமும் இதன் 'நாடாளுமன்றப்' பிரதிநிதித்துவமும்" (V. I. Lenin, *Collected Works*, Vol. 29, p. 172).

வரலாற்று நிலைமைகளில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண இது உதவுவதால் அவர்கள் விதிவிலக்குகள் செய்தார்கள். கூட்டாட்சி தேசிய சமாதானத்தையும் தேசங்களின் சமத்துவத்தையும் உத்தரவாதம் செய்கிறது; ஒரு பெரிய அரசின் அனுகூலங்களிலிருந்து இந்த தேசங்கள் நலன் பெற உதவுகிறது.

பிரிட்டனுக்கும் அயர்லந்திற்கும் இடையே தேசிய முரண்பாடுகள் கடுமையாக அதிகரித்ததால் பிரிட்டிஷாரை எதிர்த்த அயர்லந்து மக்களின் தேச விடுதலைப் போராட்டம் 1860ஆம் ஆண்டுகளின் இறுதியில் கடுமையாக அதிகரித்த பொழுது மார்க்ஸ் 1801ல் பிரிட்டனுக்கும் அயர்லந்திற்கும் இடையே நிறுவப்பட்டிருந்த ஒன்றியத்தை நீக்கி விட்டு அதனிடத்தில் கூட்டாட்சிக் கோட்பாடுகளின் மீதான ஒரு சுதந்திரமான நேச உறவினை நிறுவ விரும்பினார்[1]. இந்த ஒன்றியத்தை நிறுவுவது சாத்தியமல்ல என்று நிரூபிக்கப்பட்டால் பிரிந்து செல்வதை இது தடை செய்யாது.

மார்க்சின் இந்தக் கருத்துக்கள் தேசியப் பிரச்சினை மற்றும் கூட்டாட்சி ஆகியவை பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் வளர்ச்சி மீது வலுவான செல்வாக்கு செலுத்தின. இந்தக் கருத்துக்களை லெனின் கவனமாக ஆராய்ந்தார், தேசியப் பிரச்சினை பற்றிய அவரது நூல்களில் அடிக்கடி குறிப்பிட்டார். இந்தப் பிரச்சினையில் மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார், இந்த நிலை பாட்டாளி வர்க்கக் கொள்கைக்கு முன்மாதிரியாக இருத்தல் வேண்டும், இது மாபெரும் நடைமுறை முக்கியத்துவத்தை முழுமையாகத் தொடர்ந்து வைத்திருக்கிறது என்று வலியுறுத்தினார்[2].

விதிவிலக்கான சூழ்நிலைகளில் ஒரு கூட்டரசு நிறுவப்படுவதை அனுமதிக்கலாமா என்பது பற்றி முடிவு செய்த பொழுது கட்சியும் லெனினும் குறிப்பிட்ட வரலாற்று நிலை

---

[1] கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 638 (ஜெர்மன்).

[2] வி. இ. லெனின், ''தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை'' (வி. இ. லெனின், தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள், மாஸ்கோ, பக்கம் 144).

மைகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டனர். ஆனால் கோட்பாடளவில் கூட்டரசு அமைப்பினை எதிர்த்தனர். ருஷ்யாவில் ஒரு கூட்டரசு நிறுவப்படுவது பற்றிய கருத்தை லெனின் *1912-1914*ல் எதிர்த்தார், ஆனால் ஒரு கூட்டரசு பால்கன் குடியரசு நிறுவப்படுவதை ஆதரித்தார்[1].

விவாதத்தின் கீழ் இருக்கும் வரலாற்றுக் கால கட்டங்களின் பொழுது கூட்டரசு பற்றிய லெனின் வெளியிட்ட கருத்துக்களைப் பரிசீலித்துப் பார்த்தால் அவர் அதைக் கோட்பாடளவில் 1917 வரையில் எதிர்த்து வந்தார். ஆனால் புரட்சித் தருவாயிலும் சிறப்பாக அதற்குப் பிறகும் அதன் அவசியத்தைக் கண்டார் என்பதைத் தெளிவாகக் காணலாம். ஒரு பல்தேசிய அரசு என்ற முறையில் ருஷ்யாவின் கூட்டாட்சிக் கட்டமைப்பு ஒரு விதிவிலக்கு என்பதற்காக ஏற்றுக் கொள்ளப்படவில்லை, மாறாக கூட்டரசின் பாத்திரம், அதன் அடிப்படை முக்கியத்துவம் பற்றிய கருத்துக்கள் மறு மதிப்பீடு செய்யப்பட்டதன் விளைவாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது ஒரு முக்கியமான உண்மையாகும். கூட்டரசு பற்றிய மார்க்சிய-லெனினியக் கருத்துக்களில் ஏற்பட்ட திருத்தம் கம்யூனிஸ்டுக் கட்சியும் லெனினும் வகுத்தளித்த கூட்டரசு பற்றிய போதனை மேலும் அபிவிருத்தி செய்யப்படுவதை இயல்பாகவே குறித்தது.

மார்க்சையும் எங்கெல்சையும் போலவே லெனினும் வறட்டுச் சூத்திரவாதத்தை வன்மையாக எதிர்த்தார். அனைத்து மார்க்சியக் கருத்துரைகளையும் அவர் குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளிலும் சோஷலிசத்திற்கான தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் வெளிச்சத்திலும் சரியா என்று கவனமாகத் தேர்வாய்வு செய்தார். அவர் எழுதினார்: ''சோஷலிசத்திற்கான பாதையின் கடைசி விவரங்கள் உட்பட மார்க்ஸ் அறிந்திருந்தார் அல்லது மார்க்சியவாதிகள் தெரிந்து வைத்திருந்தார்கள் என்று நாம் உரிமை கொண்டாடவில்லை. அதுபோன்ற எதையும் பற்றி உரிமை கொண்

---

[1] வி. இ. லெனின், ''பால்கன் மக்கள் இனங்களும் ஐரோப்பிய அரசுறவுத் துறையும்'', ''வெட்கக் கேடான தீர்மானம்'' மற்றும்''உலக வரலாற்றில் புதிய அத்தியாயம்''(V. I. Lenin, *Collected Works*, Vol. 18, p. 368).



E MAR

டாடுவது மடமையாகும். நாம் அறிந்திருந்தது என்னவென்ருல் இந்தப் பாதையின் திசைவழி மற்றும் இதைப் பின்பற்றி வரும் வர்க்க சக்திகளும்; பொறுப்பேற்று செயலில் ஈடுபட்ட லட்சோப லட்சம் மக்களின் அனுபவம் மூலம் மட்டுமே குறிப்பிட்ட நடைமுறை விவரங்கள் தெளிவாகத் தெரிய வரும்''[1].

கூட்டரசு பற்றிய கட்சியின் மற்றும் லெனினது கருத்துக்களின் பரிணமத்தினை ஆய்வு செய்யும் பொழுது மாறிவிட்ட வரலாற்று நிலைமைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்; இந்த நிலைமைகளின் கீழ் பல்தேசிய ருஷ்யாவில் தேசிய இயக்கத்தின் விரிவும் முனைப்பும் பிரியும் சக்திகள் வளர்ச்சியடைந்ததும் ''குறிப்பிட்ட ஒரு இடைக்கால வடிவம் எதிலிருந்து எதுவாக மாறிச் செல்கிறது என்பதை அதனதன் ஸ்தூலமான வரலாற்றுத் தனி இயல்புகளுக்கு ஏற்ப நிலைநாட்டும் பொருட்டு... இடைக்கால வடிவங்கள்''[2] குறித்து மிகுந்த கவனம் செலுத்தும் அவசியத்தை லெனின் வலியுறுத்திஞர்.

தேசிய அரசின் உருவாக்கத்தில் கூட்டரசின் முக்கியத்துவமும் பங்கும் பற்றிய வரலாற்று வழி மற்றும் ஆழமான விஞ்ஞானக் கருத்துக்கும் முதலாளித்துவ சமூக-வியலாளர்களின் கூட்டரசு பற்றிய வறட்டு சூத்திர விளக்கத்திற்கும் பொதுவான அம்சம் எதுவும் கிடையாது. மிகப் பெரும் தேசிய முரண்பாடுகளின் காரணமாக இது எங்காவது நிறுவப்பட்டாலுங்கூட இது தனி ஒரு நாட்டின் ஒற்றுமையை சீர்குலைப்பதில் கொண்டு விடும், இதனுல் எதிர்மறை விளைவுகள் மட்டுமே ஏற்படும் என்று அவர்கள் கருதுகிருர்கள்.

**ஒரு கூட்டாட்சிக் குடியரசு என்ருல் என்ன, இது ருஷ்யாவுக்குப் பொருந்துமா?** என்ற 1917ல் வெளியிடப்பட்ட தமது நூலில் ஒரு முதலாளித்துவப் பேராசிரியர் யாஷ்சென்கோ, ருஷ்யாவில் ஒரு கூட்டரசு அமைப்பை நிறுவுவது சம்பந்தமாக எழுதிய பொழுது, ஒற்றுமையைக் குலைக்கும் கூட்டாட்சி பற்றிய ஒவ்வொரு தேசியப் போக்கு, குறுகிய பிரதேசத்திற்

---

[1] வி. இ. லெனின், ''கட்டுரையாளரின் நாட்குறிப்பிலிருந்து''(V. I. Lenin, *Collected Works*, Vol. 25, p. 281).

[2] வி.இ. லெனின், **அரசும் புரட்சியும்**, மாஸ்கோ, பக்கம் 102.

குரிய மனப்பான்மையின் கடைக்கோடி வெளியீடே, பிராந்திய வேற்றுமைகள் மேலும் உயர்ந்த சிறந்த அரசு வடிவத்தை எதிர்த்து போராடப் பார்க்கும் மனித குலத்தின் அரசியல் வாழ்க்கையில் கடந்து சென்ற ஒரு கட்டமே என்று கூறினார். கூட்டாட்சி வடிவத்தில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது வரலாற்றின் சக்கரத்தைப் பின்புறம் இழுப்பதற்குச் சமமாகும் என்றும், இதை முன்வைத்தவர்கள் ருஷ்யாவைப் பல சுதந்திரமான அரசுகளாகப் பிரிவினை செய்யக் கோருகிறார்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் வாதாடினார்.

ருஷ்யா ஒரு மத்தியப்படுத்தப்பட்ட அரசாக இருந்த பொழுது ஒரு கூட்டரசு நிறுவப்படுவதானது மத்தியத்துவப் படுத்தலை, பொருளாதாரப் பந்தங்களை, இன்ன பிறவற்றைப் பெருமளவு குலைத்து, தனி ஒரு மொத்த முழு அரசினைப் பிளவுறுத்தி, இறுதியில் புரட்சிகரமான வளர்ச்சியின் வாய்ப்புகளைப் பிரதிகூலமான முறையில் பாதித்திருக்கும். கட்சியும் லெனினும் இதைக் கருத்தில் கொண்டு மத்தியப்படுத்தப் பெற்ற பெரிய அரசினை ஆதரித்தார்கள். இது மிகவும் சிறந்த முறையில் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து, ஒழுங்கமைந்து, வர்க்கப் போராட்டத்தை நடத்த உதவியது. ஆனால் அக்டோபர் புரட்சிக்கு முன் பழைய ருஷ்யாவின் ராணுவ மற்றும் அதிகாரவர்க்க ஒற்றுமை முடிவுக்கு வந்து, பல தேசிய எல்லைப்புறப் பிரதேசங்கள் உண்மையில் பிரிந்து சென்று விட்ட பொழுது, ருஷ்யாவில் ஒரு கூட்டரசினை நிறுவுவது ஓரளவு மத்தியத்துவப்படுத்தும் செயலாக, பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த உழைக்கும் மக்களை ஒற்றுமைப்படுத்தும் திசையிலான நடவடிக்கையாக இருந்தது.

தேசியப் பிரச்சினை குறித்த போல்ஷிவிக் வேலைத்திட்டம் நிறைவேற்றப்படுவதானது ருஷ்யாவின் தனியொரு மத்தியத்துவப்படுத்தப் பெற்ற அரசினைச் சிதைவுக்கு இட்டுச் செல்லும் என்று சோஷலிசத்தின் விரோதிகள் சுமத்திய குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கு முகமாக லெனின் எழுதினார்: ''ருஷ்யா சிதறிப் போய்த் தனித்தனிக் குடியரசுகளாகப் பிளவுற்று விடும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவ்வாறு நேரும் என்று அஞ்சுவதற்குக் காரணமில்லை. சுதந்திரக் குடியரசுகளின் எண்ணிக்கை எவ்வளவாக இருந்த போதிலும் சரி, நாம்

எதைப் பற்றியும் அஞ்ச வேண்டுவதில்லை. எமக்கு முக்கியமான விஷயம் என்னவென்றால், அரசின் எல்லை எங்கே இருக்கிறது என்பதல்ல, மாறாக எல்லாத் தேசங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் தேசிய வித்தியாசங்கள் எதுவுமின்றி முதலாளி வர்க்கத்தை எதிர்த்த போராட்டத்தில் ஒன்று சேர்ந்து நிற்கிறார்களா இல்லையா என்பதேயாகும்''[1].

பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் ஒற்றுமையில், குறிப்பாக மாபெரும் ருஷ்ய மக்களுடன் ஒற்றுமை கொள்வதில் கொண்டிருந்த பலமான ஆர்வம் சோஷலிசக் கூட்டரசை நிறுவுவதில் மிக முக்கியமான பங்கு வகித்தது. அது நிறுவப்படுவதை ஊக்குவித்த காரணிகளில் ஒரு பொதுவான வரலாறு, வலுவான பொருளாதாரப் பந்தங்கள், நெருக்கமான கலாசார உறவுகள் ஆகியவை உட்படும். இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் ஒரு சோஷலிசப் பல்தேசிய அரசு நிறுவப்படுவதன் அவசியத்தை எதார்த்தமாக நிர்ணயம் செய்யும் காரணிகளை எவரும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது.

ருஷ்யாவில் கூட்டாட்சி பற்றிய தமது கருத்தை லெனினும் கட்சியும் ஏன் மாற்றிக் கொண்டார்கள் என்பதற்கான முக்கியமான காரணம் கூட்டாட்சியின் தன்மை பற்றிய கருத்து மாற்றமடைந்ததேயாகும்.

ஆழமான சர்வதேசத் தன்மை வாய்ந்த ஓர் ஆட்சி அதிகார வடிவான சோவியத்துகள் நிறுவப்பட்டதானது, அடிப்படையிலேயே ஒரு புதிய அடித்தளம் கொண்டதான ஒரு பல்தேசிய அரசு ஸ்தாபிக்கப்படுவதை அவசியமாக்கியது. இதன் விளைவாக, கறாரான மத்தியத்துவத்தை விரிவான ஜனநாயகத்துவத்தோடு இணைப்பது சாத்தியமாயிற்று. இங்கு குறிப்பிடப்படுவது சோவியத் சோஷலிசக் கூட்டரசாகும். இதை வேறுபட்ட வரலாற்று நிலைமைகளில் இதற்கு முன்னதாக நிறுவியிருக்க முடியாது.

அரசின் மத்தியத்துவம் பற்றி லெனின் மேற்கொண்ட நிலையின் அடிப்படையில் கூட்டரசு பற்றிய அவரது கருத்துக்

---

1 வி. இ. லெனின், ''முதலாவது அனைத்து ருஷ்யாவின் கடற்படைக் காங்கிரசில் ஆற்றிய உரை'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 26, p. 344).

கள் இந்த வகையில் மிகுந்த முக்கியத்துவமுடையவையாகும். 1913ல் அவர் எழுதினுர்: ''கூட்டாட்சியையும் அதிகாரத்தின் பன்முகப்பாட்டையும் மார்க்சியவாதிகள் எதிர்க்கிருர்கள் என்பது உண்மைதான். முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய, மிகவும் அதிகாரமையப்பாடு பெற்ற அரசுகள் தேவை என்பதுதான் அதற்கு ஒரே காரணம்.... ஆனுல் பல்வேறு தேசிய இனங்கள் எந்த அளவுக்கு ஒன்றுசேர்ந்து ஒரு தனி அரசு அமைத்து வாழ்ந்து வருகின்றனவோ அது வரை, எக்காரணத்தை முன்னிட்டும் கூட்டாட்சிக் கோட்பாட்டையோ அல்லது அதிகாரப் பன்முகப்பாட்டையோ மார்க்சியவாதிகள் ஒரு பொழுதும் ஆதரித்துப் பிரசாரம் செய்ய மாட்டார்கள்''[1].

இங்கு லெனின் கூட்டரசினை மத்தியத்துவக் குலேவுக்குச் சமமாகக் கொள்கிருர். வேறு நிலைமைகள் சமமாக இருக்க, சமூக விழிப்படைந்த பாட்டாளி வர்க்கத்தினர் மத்திய கால தனிமைப்பாட்டை எப்பொழுதும் எதிர்ப்பார்கள், பெரிய மத்தியத்துவப்படுத்தப் பெற்ற அரசின் சாதகங்களை ஆதரிப்பார்கள்.

1914 ஏப்ரலில் எழுதப் பெற்ற அவரது தேசியக் கொள்கைப் பிரச்சினை குறித்து என்ற கட்டுரையில் பிராந்தியங்களின், குறிப்பாய் மக்கள் தொகையின் தேசிய இயைபு கலவையாக இருக்கும் பிராந்தியங்கள் மற்றும் மாவட்டங்களின் சுயாட்சி, ஜனநாயக மத்தியத்துவத்திற்கு எதிராக இருக்காது என்னும், ''கலவையான மக்கள் தொகையுள்ள ஒரு பெரிய அரசில் பிராந்திய சுயாட்சி மூலம் மட்டுமே உண்மையான ஜனநாயக மத்தியத்துவம் சாத்தியம்''[2] என்னும் முடிவுக்கு வருகிருர் லெனின்.

1918 மார்ச்சில் எழுதப்பட்ட '' 'சோவியத் ஆட்சியதிகாரத்தின் உடனடிக் கடமைகள்' என்ற கட்டுரையின் முதற் குறிப்''பில் லெனின் எடுத்த முடிவு சோஷலிசக் கூட்டரசினைப்

---

[1] வி. இ. லெனின், ''தேசியப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்'' (தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள், மாஸ்கோ, பக்கங்கள் 61 மற்றும் 62).

[2] V. I. Lenin, *Collected Works*, Vol. 20, p. 224.

புரிந்து கொள்வதற்கு விசேஷ முக்கியத்துவமுடையதாகும்: ''ஒருபுறம் ஜனநாயக மத்தியத்துவம் எந்த வழியிலும் சுயாட்சியை விலக்கி விடுவதில்லை, மாறாக அதன் அவசியத்தை முன்னுணர்கிறது; மறுபுறம் உண்மையிலேயே ஜனநாயகமான ஓர் அமைப்பில், குறிப்பாக சோவியத் அரசில், கூட்டரசு உண்மையான ஜனநாயக மத்தியத்துவத்தை நோக்கிய ஒரு படி மட்டுமேயாகும்''[1] என்று அவர் கூறினார்.

உழைக்கும் மக்களின் ஆட்சியின் ஒரு வடிவமான சோவியத்துகள் நிறுவப்பட்டதானது பல்தேசிய சோஷலிச அரசில் மக்களை ஒற்றுமைப்படுத்துவதில் மிகவும் முக்கியமான பங்கு வகித்தது. அவை எல்லா உழைக்கும் மக்களையும் அனுமதித்ததன் காரணமாக லட்சோப லட்சம் விவசாயிகளையும் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த அனைத்து உழைக்கும் மக்களையும் தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி ஒன்றுதிரட்டுவது சாத்தியமாகியது. சோவியத்துகளின் சர்வதேசியத் தன்மை பல்வேறு குடியரசுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் ஒற்றை அரசை நிறுவும்படி தூண்டுகிறது. சோவியத்துகளை அடிப்படையாக்கிய கூட்டரசு புதிய பாணியிலான கூட்டரசாகும். சோவியத்துகள் நிறுவப்படுவதற்கு முன்னால் அதைப் பற்றி முன்னறிந்திருக்க இயலாது.

சோவியத் தேசிய அரசு உருவாக்கத்தின் போது எழுந்த கூட்டரசு வடிவங்களானவை தேசங்களை மேலும் நெருக்கமாக அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சேர்த்துக்கொண்டு வருவதற்கான இன்றியமையாத சாதனம் என்பதைத் தெளிவாகக் காட்டின.

சோவியத் பல்தேசிய அரசில் கூட்டரசுக் கோட்பாடு பிரயோகிக்கப்படுவதால், முன்னாள் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் கம்யூனிசத்தை நோக்கிப் படிப்படியாகவும் வேதனை இன்றியும் முன்னேறுவதற்கு சோவியத் அமைப்பு உதவியுள்ளது என்று தனது முடிவுகள் ஒன்றில் 10ஆவது கட்சிக் காங்கிரஸ் கூறியது[2].

---

[1] V. I. Lenin, *Collected Works*, Vol. 27, p. 207.

[2] **சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி, இதன் காங்கிரசுகள், மாநாடுகள், மத்தியக் குழு பிளினம் கூட்டங்கள் ஆகியவற்றின் தீர்மானங்கள் மற்றும் முடிவுகளில்**, *தொகுதி 1, மாஸ்கோ, பக்கம் 558 (ருஷ்யன்).*

லெனினது முன்கூற்றை அடிப்படையாக்கியுள்ள இது, சோஷலிச மற்றும் கம்யூனிச நிர்மாணத்தில் அடைந்த வரலாற்று அனுபவத்தைக் கொண்டு மூன்றுவது கட்சி வேலைத் திட்டத்தில் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

சோவியத் பல்தேசிய அரசு நிறுவப்பட்டதானது நாட்டில் வாழ்ந்திருந்த அனைத்து மக்களினங்களும் தொழிலாளர், அவர்களது கம்யூனிஸ்டுக் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொண்ட புரட்சிகர படைப்பாற்றலின் விளைவாகும். நாட்டில் நிலவும் வலிமை மிக்க ஒற்றுமை இயக்கம் பற்றிய மிகவும் ஆழமான ஆய்வுக்குப் பிறகு கம்யூனிஸ்டுக் கட்சியானது பல்வேறு வடிவங்களிலான சோவியத் சோஷலிசக் கூட்டரசின் அடிப்படையில் சோவியத் பல்தேசிய அரசைக் கட்டும் கொள்கையினைப் பின்பற்றத் தொடங்கியது.

அத்தியாயம் 3

# சோவியத் தேசங்கள் மற்றும் தேசியக் குழுக்களின் சர்வசுதந்திர சித்தத்தின் உருவகம் என்ற முறையில் சோவியத் ஒன்றியத்தின் நிறுவதலும் வளர்ச்சியும்

சோஷலிசக் கூட்டரசின் ஆக உயர்ந்த வடிவமான சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் லெனினது தேசியக் கொள்கையின் கோட்பாடுகளுக்குப் பொருந்திய தாக அவரது நேரடி வழிகாட்டுதலின் கீழ் நிறுவப்பட்டது.

நாட்டில் அடிப்படையான சமூக-பொருளாதார மாற்றங்கள் ஏற்படவும், தேசியப் பிரச்சினை பற்றிய லெனினது வேலைத்திட்டம் நிறைவேற்றப்படவும், சோவியத் குடியரசுகள் நிறுவப்படவும் பிரதான அரசியல் காரணியாக விளங்கியது அக்டோபர் புரட்சியேயாகும். சோவியத் பல்தேசிய அரசு உருவாக்கத்தில் கிடைத்த அனுபவம் பல மார்க்சிய-லெனினிய முடிவுகளை ஊர்ஜிதம் செய்துள்ளது: சமூகத்தை சோஷலிச வழிகளில் மாற்றியமைப்பது மூலம் மட்டுமே தேசியப் பிரச்சினைக்கு உண்மையில் தீர்வு காண முடியும்; சோஷலிச ஜனநாயகம் மாமூல் முதலாளித்துவ ஜனநாயகம் போல் அன்றி (அது தேசிய சமத்துவத்தைப் பறைசாற்றும் ஆனால் நிலைநாட்டாது) மக்களினங்களுக்குச் சமமான உரிமைகளையும் வாய்ப்புக்களையும் உத்தரவாதம் செய்கிறது; பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த உழைக்கும் மக்களின் ஜீவாதார நலன்களுக்கு உரிய கவனம் செலுத்தி தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நிலைமைகளை உருவாக்குகிறது; சோவியத் அரசிலுள்ள அனைத்து தேசங்கள், தேசியக் குழுக்களின் ஒற்றுமை, சர்வாம்ச வளர்ச்சி, உறுதியான இணைவு ஆகியவை சோஷலிச அமைப்பின் தன்மையால் நிர்ணயிக்கப்படுகின்றன, அவை சோஷலிச வளர்ச்சியின் புறநிலை விதியாக உள்ளன; சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் பல்தேசிய அரசமைப்பின் ஆக நிலையான, மிகவும் நவீனமான

வடிவமாகும், இது சமூகம் முழுவதன் நலன்களையும் ஒவ்வொரு தேசத்தின் நலன்களையும் இசைவாக ஒருங்கிணைக்கிறது.

சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி (70ஆவது விதி) சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம், தேசங்களின் சுதந்திரமான சுயநிர்ணய உரிமையின் விளைவாகவும் சம உரிமையுடைய சோவியத் குடியரசுகள் சுயவிருப்புடன் இணைந்ததன் விளைவாகவும் கூட்டரசுக் கோட்பாட்டின் படியும் உருவான, ஒரே ஒன்றிய பல தேச அரசாகும். சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம், சோவியத் மக்களின் அரசு ஒற்றுமையை உருவகப்படுத்துகிறது. இது எல்லா தேசங்களையும், மக்களினங்களையும் கம்யூனிசத்தை நிர்மாணிப்பது என்ற குறிக்கோளுடன் ஒன்றிணைக்கிறது.

சர்வசுதந்திர உரிமையுள்ள குடியரசுகளின் ஒரு கூட்டரசாக சோவியத் பல்தேசிய அரசு உருவாக்கப்பட்டதானது மார்க்சிய-லெனினியம் சோஷலிச நாட்டின் அரசுரிமையினை நிலைநாட்டுவது, வலுப்படுத்துவது தொடர்பான பிரச்சினைகளுக்குப் படைப்பாற்றல் முறையில் எவ்வாறு தீர்வு காண்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டியது.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் என்னும் ஜனநாயக வழியில் மத்தியத்துவப்படுத்தப் பெற்ற, அரசுரிமையுள்ள கூட்டாட்சி அரசின் உருவி சர்வசுதந்திர தேசிய அரசுகள் சுயவிருப்பத்தோடும் சமநீதியுடனும் ஒன்றிணைவதற்கான ஒரு வடிவத்தைக் கண்டுபிடித்ததன் மூலம் மனித குலத்திற்கு லெனின் வரலாற்றுச் சிறப்புடைய சேவையினைப் புரிந்திருக்கிறார். இதில் முக்கியமானது என்னவென்றால் இந்த அரசு ஒன்றியத்தின் கோட்பாடுகள் சோஷலிச அமைப்பின் தன்மையிலேயே வேர் கொண்டுள்ளன. இதனால் ஒவ்வொரு உறுப்புக் குடியரசின் சர்வசுதந்திரத்தை உருவகப்படுத்தும் சோவியத் ஒன்றிய அரசு நிறுவப்படுவது சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு சாத்தியமாயிற்று.

அக்டோபர் புரட்சிக்குச் சற்று முன்னால் எழுதப் பெற்ற 'கட்சி' வேலைத்திட்டத்தில் திருத்தம்'' என்ற அவரது கட்டுரையில் லெனின் தேசங்களின் புரட்சிகரமான இணைவு வேண்டும் என்று கூறினார், ''பொதுவாக எல்லா நாடுகளையும் ஒருமைப்படுத்துவதை அல்ல, காரணம் சமுதாயப்

புரட்சியானது, சோஷலிசத்திற்கு ஏற்கெனவே கடந்து சென்று விட்ட அல்லது கடந்து சென்று கொண்டிருக்கும் நாடுகளையும், தமது சுதந்திரத்தை அடைந்து வரும் காலனிகளையும் மட்டுமே ஒருமைப்படுத்தக் கோருகிறது''[1].

அக்டோபர் புரட்சி நாட்டிலுள்ள தேசங்கள் மற்றும் தேசியக் குழுக்களின் வாழ்க்கை முழுவதையும் அடிப்படையிலேயே மாற்றியது. தேசங்கள், தேசிய உறவுகளின் வளர்ச்சியில் புதிய விதிகளை ஏற்படுத்தியது. இதன் மூலம் ஒரு புது வகையான பல்தேசிய அரசுக்கும் மற்றும் தேசிய அரசுத்துவத்திற்குமான சமூக-பொருளாதார அடித்தளத்தை நிறுவியது.

சோவியத் ஒன்றிய அரசு நிறுவப் பெற்றதானது ஒரு சிக்கலான நிகழ்வாகும். புரட்சிப் போராட்டம், உள்நாட்டுப் போர் மற்றும் அந்நியத் தலையீட்டின் சிக்கலான நிலைமைகளில் நடத்திய நீண்டகாலத் தேட்டத்தின் போக்கில் சுதந்திரமான சோவியத் குடியரசுகளை ஒன்றிணைக்கும் பல வடிவங்கள் மற்றும் முறைகள் காணப்பட்டன. குடியரசுகளின் ஒன்றியத்தை ஒரே அடியில் செயல்படுத்திவிட முடியாது, மாறாக ஆக பெரிய பொறுமையுடனும் கவனத்தோடும் அதை நோக்கிச் செயல்பட வேண்டும் என்று லெனின் எச்சரிக்கை செய்தார்[2].

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை நிறுவும் வரலாற்று நிகழ்ச்சிப்போக்குப் பொருளாதார, கலாசார பிற்பட்ட நிலை காரணமாகச் சிக்கலடைந்தது. மேலும் முன்னுள் தேசியப் பூசல்களின் மீதமிச்சங்கள், முதலாளித்துவ தேசியவாதம், வல்லரசு தேசியவெறி, கட்சியினுள் தேசியத் திரிபுவாதிகளின் எதிர்ப்பு ஆகியவற்றை எதிர்ப்புரட்சியாளர்கள் பயன்படுத்த நடத்தும் முயற்சிகளுக்கு எதிராகப் போராட வேண்டி இருந்தது.

12ஆவது கட்சிக் காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசியப் பிரச்சினை பற்றிய தீர்மானம் சோவியத் சோஷலிசக்

---

[1] V.I. Lenin, *Collected Works*, Vol. 26, p. 176.

[2] வி. இ. லெனின், ''உக்ரேனியத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்குக் கடிதம்.'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 30, p. 293).

குடியரசுகளின் ஒன்றியமாகப் போகும் அமைப்பைச் சேர்ந்த மக்களினங்களிடையான ஒத்துழைப்பின் வளர்ச்சியைக் கரூரான விஞ்ஞான அடிப்படையில் நான்கு பிரதான கட்டங்களாகப் பிரித்தது: (1) புரட்சியின் முதல் கட்டம்; இந்த காலத்தில் எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் சோஷலிசப் புரட்சியில் ஒருமுகப்படுத்தப் பெற்ற புரட்சிகரச் செயலில் இறங்கி, அது வெற்றியடைந்த பிறகு தாம் சுதந்திரமான தேசிய அமைப்புகளாக இருப்பதை முதல் தடவையாக உணர்ந்தார்கள்; நாடு அந்நியத் தலையீட்டால் இன்னும் அச்சுறுத்தப்படவில்லை; மக்களினங்களிடையான ஒத்துழைப்பு இன்னும் திட்டவட்டமான வடிவை எடுக்கவில்லை; (2) உள்நாட்டுப் போர், தலையீடு நடைபெற்ற காலத்தில் தேசியக் குடியரசுகளை ஆயுத பலம் கொண்டு பாதுகாப்பது அவசியமான பொழுது, ராணுவ மற்றும் அரசியல் ஒற்றுமை; தற்போதைக்குப் பொருளாதார வளர்ச்சி பற்றிய பிரச்சினைகள் தமக்குரிய வாய்ப்பை நோக்கிக் காத்திருக்க வேண்டும்; (3) யுத்தப் பிற்கால கட்டத்தின் பொருளாதார ஒற்றுமை; போரினால் அழிக்கப் பெற்ற உற்பத்தி சக்திகள் மீண்டும் அமைக்கப் பெற்று தேசியப் பொருளாதாரத்தைப் புனரமைக்கவும் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்தவும் பொருளாயத வளங்கள் ஒன்றுதிரட்டப்பட வேண்டும்; (4)இறுதி கட்டம்; ராணுவ, பொருளாதார மற்றும் அரசியல் ஒற்றுமைக்கு மேல் கூடுதலாக அரசுறவுத்துறை ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டது. இதெல்லாம் ஒரு பல்தேசிய ஒன்றிய சோவியத் அரசினை நிறுவுவதற்குரிய முன்தேவைகளை உருவாக்கி, சர்வசுதந்திரமான சோவியத் தேசியக் குடியரசுகளை சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் ஒன்றிணைத்தது.

புரட்சியின் முதல் காலகட்டம் 1917 அக்டோபர் முதல் 1918 நடுப்பகுதி வரை நீடித்தது. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு முதல் சில வாரங்களுக்கு ருஷ்யாவின் சோவியத் குடியரசு முன்னாள் ருஷ்யாவின் எல்லா தேசியப் பிராந்தியங்களையும் கொண்டதான ஒற்றை அரசாக இருந்தது. சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசில், ருஷ்யாவின் எல்லா தேசங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் சோவியத் ஆட்சியை அமைக்கவும், ருஷ்ய மக்களுடன் ஒன்று சேரவுமான தமது

விருப்பத்தை வெளிப்படுத்திஞர்கள். லெனினுல் கையெழுத்திடப்பட்டு 1918 ஜனவரியில் சோவியத்துகளின் அகில ருஷ்யாவின் மூன்ருவது காங்கிரசிஞல் அங்கீகரிக்கப் பெற்றதான'' ''உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்''தில் சோவியத் அரசின் கூட்டாட்சி அமைப்பு சட்ட பூர்வமாக உருவகம் பெற்றது.

இந்தப் பிரகடனம் ''ருஷ்யாவின் சோவியத் குடியரசு சுதந்திர தேசங்களின் சுதந்திரமான இணைப்பு என்ற கோட்பாடு மீது சோவியத் தேசியக் குடியரசுகளின் ஒரு கூட்டரசாக நிறுவப்படுகிறது'' என்று கூறியது. இவ்வாருக அது சோவியத் அரசின் கூட்டரசு அமைப்பின் கோட்பாட்டை—சுதந்திர தேசங்களின் சுதந்திர இணைப்பை—உருவாக்கியது மற்றும் இந்த இணைப்பின் வடிவத்தை சோவியத் குடியரசுகளின் கூட்டமைப்பு என்று நிர்ணயித்தது.

ருஷ்யாவில் வாழும் அனைத்து தேசங்களின் உழைக்கும் வர்க்கங்களின் சுதந்திரமான, சுயவிருப்பமான, இதன் விளைவாக நெருக்கமான, வலுவான ஓர் ஒன்றியத்தை நிறுவ வேண்டும் என்ற உழைக்கும் மக்களின் விருப்பத்தை இந்தப் பிரகடனம் வெளிப்படுத்தியது. ஆஞல் ஒவ்வொரு தேசத்தின் தொழிலாளர்களும் விவசாயிகளும் முழு அதிகாரம் பெற்ற தமது சொந்த சோவியத் காங்கிரசுகளில், கூட்டாட்சி அரசாங்கத்திலும் இதர சோவியத் கூட்டரசு அமைப்புகளிலும் கலந்து கொள்வது பற்றியும், எந்த அடிப்படையில் சேர்ந்து கொள்வது என்பது பற்றியும் சுதந்திரமாக முடிவு செய்யும் உரிமை வழங்கி, ருஷ்யாவின் சோவியத் குடியரசுகளின் கூட்டரசினது அடிப்படைக் கோட்பாடுகளை மட்டுமே நிலைநாட்டியது.

புரட்சியின் போது ருஷ்யாவைச் சேர்ந்த மக்களினங்களால் நிறுவப் பெற்றதான எல்லா சோவியத் குடியரசுகளும் ஒரு கூட்டாட்சி ஒன்றியத்தை விழைந்தன. அவை சோஷலிசத்தைக் கட்டியமைக்கத் தொடங்கியவுடன், சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் மூல முன்மாதிரியான ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசுடன் மிகவும் நெருக்கமாக ஒன்று சேர்ந்து நின்றன. முதல் ஐந்தாண்டுகளில் சோவியத் அரசு தேசங்கள், தேசியக் குழுக்களிடையே புதிய சோஷலிச உறவுகளையும் ஒத்

துழைப்பையும் வளர்த்துக் கொள்வதில் செழுமையான அனுபவம் பெற்றது.

சோவியத் நாட்டில் இரு சர்வவுரிமையுள்ள குடியரசு களான ருஷ்ய மற்றும் உக்ரேனியக் குடியரசுகளினுடைய உறவுகளுக்கு அடிப்படையாய் முதல் தடவையாகக் கூட்டாட்சிக் கோட்பாடு பயன்படுத்தப் பெற்றது. 1917 டிசம்பர் 3ஆம் நாள் லெனினுல் எழுதப் பெற்ற "உக்ரேனிய ராடாவுக்கு இறுதி எச்சரிக்கையுடனுன உக்ரேனிய மக்களுக்கான அறிக்கை"யை மக்கள் கமிசாரவை அங்கீகரித்தது. இந்த அறிக்கை உக்ரேனியாவின் சுயாதீனத்தை அதிகார பூர்வமாக அங்கீகரித்து, "ருஷ்யாவிலிருந்து பிரிந்து செல்லும் உரிமை அல்லது ருஷ்யக் குடியரசுடன் கூட்டரசு அல்லது அதே போன்ற உறவுகளின் அடிப்படையில் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளும் அதன் உரிமையினை"[1] உறுதிப்படுத்தியது.

சர்வவுரிமையுள்ள சோவியத் குடியரசு என்று பிரகடனம் செய்யப்பட்ட பிறகு உக்ரேனியா ருஷ்யாவின் சோவியத் குடியரசுடன் கூட்டாட்சி உறவு கொண்டது. சோவியத் பல்தேசிய அரசு தோன்றியதன் ஆரம்ப கட்டத்தில் இருந்த அதன் கூட்டரசுத் தன்மையினைக் காட்டும் வகையில் இது மிகவும் முக்கியமானதாகும். உள்நாட்டு அரசியல் மற்றும் சர்வதேச நிலைமையைத் தக்கவாறு கவனத்தில் கொண்டு சுதந்திரமான சோவியத் குடியரசுகளுக்கிடையே இதர வடிவங்களிலான சட்டத்துறை மற்றும் அரசு உறவுகளைக் காண முயற்சிகள் செய்யப்பட்டன என்பது தெரிந்ததே.

1918 ஜூலை 10ஆம் நாள் சோவியத்துகளின் முதலாவது அகில ருஷ்யாவின் காங்கிரஸ் முதல் சோவியத் அரசியல் சட்டமான ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் அரசியல் சட்டத்தை அங்கீகரித்தது. இது இக்குடியரசு உருவாக்கப்பட்டதை சட்டபூர்வமாக நிலைநாட்டியது. மக்களினங்களிடையான ஒத்துழைப்பின் வளர்ச்சியின் முதல் கட்டம் முடிவடைந்ததை இவையெல்லாம் குறித்தன.

உள்நாட்டுப் போர் மற்றும் அந்நியத் தலையீட்டின் பொழுது (1918 நடுப்பகுதி முதல் 1920 இறுதி வரை) சுதந்

---

[1] V. I. Lenin, *Collected Works*, Vol. 26, p. 361.

திர சோவியத் குடியரசுகளின் ராணுவ-அரசியல் ஒற்றுமை அக்குடியரசுகளிடையே கூட்டாட்சி உறவுகளை நிறுவுவதில் முக்கியமான வரலாற்றுப் பாத்திரம் வகித்தது, அதோடு இந்த உறவுகளை வளர்த்து வலுப்படுத்துவதில் குணும்ச ரீதியில் ஒரு புதிய கட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. ''உலக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடுவதற்காக சோவியத் குடியரசுகளான ருஷ்யா, உக்ரேனியா, லாத்வியா, லித்துவேனியா மற்றும் பைலோருஷ்யாவை ஒன்றிணைப்பது சம்பந்தமான ஆணை'' இந்தக் காலத்திய மிக முக்கியமான சட்டபூர்வ நடவடிக்கையாகும், அந்த அரசாணை 1919 ஜூன் 1ந் தேதி அகில ருஷ்யாவின் மத்திய செயற் குழுவினால் பிறப்பிக்கப்பட்டது. லெனின் எழுதிய ''ராணுவ ஒற்றுமை பற்றிய மத்திய குழுவின் தாக்கீது நகலை''[1] அடிப்படையாகக் கொண்டிருந்தது. சோவியத் குடியரசுகளின் பொதுவான நோக்கங்களை அடைவதற்காகவே ராணுவ ஒன்றியம் நிறுவப்பட்டது. அதாவது, சோவியத் ஆட்சியை பேணிக்காத்து வலுப்படுத்துவது, சோவியத் குடியரசுகளின் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்வது, உழைக்கும் மக்களின் சமூக வெற்றிகளை வலுப்படுத்துவது, மக்களினங்களின் நட்புறவு மற்றும் ஒற்றுமையை மேலும் பலப்படுத்துவது. இது மாபெரும் சர்வதேச முக்கியத்துவமுடைய ஒரு நடவடிக்கையாகும்.

இந்த ஆணை ராணுவ ஒன்றியத்தை அமைத்த குடியரசுகளின் விருப்பத்திற்கு ஏற்பப் பிறப்பிக்கப்பட்டது. 1919 ஜனவரியில் உக்ரேனியா ஒரு ''நெருக்கமான பாதுகாப்பு இணைப்பை'' நிறுவ வேண்டும் என்று ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு, பைலோருஷ்யா, லாத்வியா, லித்துவேனியா மற்றும் எஸ்தோனியாவின் அரசாங்கங்களிடம் வேண்டுகோள் விடுத்தது. இதே போன்ற ஒரு வேண்டுகோளை உக்ரேனின் மத்திய செயற்குழுவும் விடுத்தது. இதே ஆண்டில் மே 18ஆம் நாள் இந்தச் செயற்குழு சோவியத் குடியரசுகளின் ராணுவ சக்திகளை ஒன்றிணைப்பது பற்றிய ஒரு தீர்மானத்தை அங்கீகரித்து எல்லா சோவியத் குடி

[1] வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 38, மாஸ்கோ, பக்கங்கள் 400-401 (ருஷ்யன்).

யரசுகளின் மத்தியச் செயற்குழுக்களும் ஒரு ஒன்றுபட்ட புரட்சி முன்னணியினை அமைப்பதற்கான திட்டவட்டமான வடிவங்களை வகுக்கக் கோரும்படி தனது தலைமைக் குழுவைக் கேட்டுக் கொண்டது. எல்லாக் குடியரசுகளுக்கும் மையமாக விளங்கும் ருஷ்யாவின் கூட்டரசின் வழிகாட்டுதலின் கீழ் அனைத்து சோவியத் குடியரசுகளின் ஆயுதப் படைகளையும், மற்றும் எதிரியை எதிர்த்துப் போராடத் தேவையான பொருளாயத வளங்களையும் ஒருமுகப்படுத்தித் திரட்டுவதை இத்தீர்மானம் முன்வைத்தது.

*1919* ஜனவரியில் லாத்வியாவும் *1919* பிப்ரவரியில் பைலோருஷ்யாவும் லித்துவேனியாவும் இதே முன்முயற்சியை எடுத்தன. உக்ரேனியா, பைலோருஷ்யா, லாத்வியா மற்றும் லித்துவேனியா சோவியத்துகளின் காங்கிரசுகள் குடியரசுகளின் ராணுவ ஒன்றியத்தை நிறுவுவதென்று முடிவு எடுத்தது மூலம் அதனை ருஷ்யாவின் கூட்டரசுடனை தமது கூட்டாட்சி உறவுகளின் ஒரு வளர்ச்சிக் கட்டமாகக் கருதின.

மேலே குறிப்பிடப்பட்ட ஆணை சம்பந்தமான விவாதத்தில் உக்ரேனிய, பைலோருஷ்ய, லித்துவேனிய, லாத்விய சோவியத் அரசாங்கங்களின் பிரதிநிதிகள் செயலூக்கமுள்ள பங்கு வகித்தார்கள். இந்த ஆணை மாபெரும் அரசுத்துறைச் சட்ட முக்கியத்துவம் உடையது, காரணம் இது சோவியத் குடியரசுகளின் அரசு அமைப்புகளை ஒன்றிணைப்பதற்கான திட்டவட்டமான வடிவங்களை நிறுவியது.

சோவியத் குடியரசுகளான ருஷ்யா, உக்ரேனியா, லாத்வியா, லித்துவேனியா, பைலோருஷ்யா மற்றும் கிரீமியாவின் ராணுவக் கட்டமைப்பு மற்றும் தலைமை, தேசியப் பொருளாதார அவைகள், போக்குவரத்து, நிதி, உழைப்பு ஆகிய துறைகள் அனைத்தையும் ஒரு பொது இயக்குனர் அமைப்பின் கீழ் கொண்டுவர வேண்டுவது அவசியம் எனக் கருதப்பட்டது. இந்த ஒன்றிணைப்பு சம்பந்தப்பட்ட குடியரசுகளின் மத்தியச் செயற் குழுக்கள் மற்றும் மக்கள் கமிசாரவைகளின் ஒப்புதலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

ஒன்றிணைக்கப்படும் நிர்வாகத் துறைகளின் தலைமையில் ஓரளவுக்கு மத்தியத்துவம் இருந்த போதிலும், அகில

ருஷ்யாவின் மத்திய செயற்குழு, ஒன்றியத்தைச் சேர்ந்த குடியரசுகளின் சுதந்திரம், சுயாதீனம், சுயநிர்ணயம் ஆகியவற்றை அங்கீகரிக்கும் என்று இந்த ஆணை கூறியது.

உள்நாட்டுப் போருக்குப் பிறகு (1920 பிற்பகுதி முதல் 1922 நடுப்பகுதி வரை) சர்வவுரிமை பெற்ற சோவியத் குடியரசுகளின் ஒன்றியம் ஒரு பொருளாதார ஒன்றியத்தின் வடிவை மேற்கொண்டது. தேசியப் பொருளாதாரத்தைப் புனரமைக்கவும் சோஷலிசத்திற்கான பொருளாயத முன் தேவைகளை உருவாக்கி அபிவிருத்தி செய்யவும் வேண்டி முயற்சிகளையும் மூலவளங்களையும் திரட்டும் நோக்கத்துடன் செய்து கொள்ளப்படும் ஒன்றிய உடன்பாடுகள் இந்தக் கட்டத்திற்கு உரியதானது. தேசியப் பொருளாதாரத்தைப் புனரமைத்து அபிவிருத்தி செய்வது என்ற மிகவும் கடினமான கடமைக்குக் கட்சியும் லெனினும் மாபெரும் முக்கியத்துவம் அளித்தார்கள். சமூகத்தின் பொருளாதார அடிப்படையினை மாற்றியமைப்பது மூலம் மட்டுமே இந்தக் கடமையினை நிறைவேற்ற முடியும். எனவே, சோஷலிசத்தைக் கட்டத் தொடங்கி விட்ட அனைத்து மக்களினங்களின் முயற்சிகளைத் திரட்டுவது, முக்கியமான பொருளாதாரத் துறைகளில் ஒற்றைக் கொள்கையைப் பின்பற்றுவது என்ற இரண்டும் அவசியம். இவ்வாறாக, பொருளாதார ஒன்றியமும் சோவியத் குடியரசுகள் வழங்கி வரும் பரஸ்பர உதவியும் பொருளாதாரத்தைத் திட்டமிடுதல், சோஷலிச நிர்வாகம் ஆகிய அடிப்படையிலிருந்து எழும் புறநிலைத் தேவைக்குப் பொருந்தியதாக இருக்கின்றன.

அந்த சமயத்தில் குடியரசுகளிடையே செய்து கொள்ளப்பட்ட ஒன்றிய உடன்பாடுகள் அவற்றின் ராணுவ, பொருளாதார ஒன்றியத்திற்குச் சட்ட வடிவத்தைக் கொடுத்தன. குடியரசுகளிடையே ராணுவ மற்றும் பொருளாதார ஒற்றுமையைக் கோரி ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு 1920 டிசம்பர் 28ல் உக்ரேனியாவுடனும், 1921 ஜனவரி 16ல் பைலோருஷ்யாவுடனும் செய்து கொண்ட உடன்பாடுகள் இந்த விஷயத்தில் மிகவும் எடுப்பான உதாரணங்களாகும். அவை ராணுவம் மற்றும் கடற்படை, அயல் துறை வர்த்தகம், நிதி, போக்குவரத்து, உழைப்பு, தபால் மற்றும் தந்தி ஆகிய துறைகளிலான மக்கள் கமிசார

கங்களையும், உயர் தேசியப் பொருளாதார அவையையும் ஒன்றிணைப்பதற்கு வகை செய்தன. ஒன்றுபடுத்தப்பட்ட மக்கள் கமிசாரகங்களின் நிர்வாக வடிவமும் தன்மையும் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் குடியரசுகளின் அரசாங்கங்களுக்கும் இடையில் ஏற்படும் தனி உடன்பாடுகளால் நிலைநாட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

ஒருமுகப்படுத்தப் பெற்ற நிர்வாகத்திற்கான மக்கள் கமிசாரகங்கள் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் மக்கள் கமிசாரவையில் சேர்ந்திருந்தன. மக்கள் கமிசாரகங்களின் வேலைகளை சோவியத்துகளின் அகில ருஷ்யாவின் காங்கிரசுகளும், அகில ருஷ்யாவின் மத்திய செயற் குழுவும் வழிகாட்டி நடத்தின. சோவியத்துகளின் அகில ருஷ்யாவின் காங்கிரஸ் மற்றும் அகில ருஷ்யாவின் மத்திய செயற் குழு வேலைகளில் ஒவ்வொரு சுதந்திரக் குடியரசும் பிரதிநிதித்துவம் பெற்றது மூலம் குடியரசுகள் இந்த வேலைகளை வழிகாட்டி நடத்துவதில் பங்குபற்றுவது உறுதி செய்யப்பட்டது. ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் ஒருமுகப்படுத்தப் பெற்ற மக்கள் கமிசாரகங்கள், ருஷ்யாவுடன் உடன்பாடுகள் செய்துள்ள குடியரசுகளில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை வைத்திருந்தன. இவர்கள் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் மக்கள் கமிசாரவையால் நியமனம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட குடியரசு அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பட்டார்கள். பிறகு அவர்கள் இந்தக் குடியரசுகளின் சோவியத்துகளின் காங்கிரசுகள் மற்றும் மத்திய செயற் குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தார்கள்.

அந்த சமயத்தில் குடியரசுகளிடையிலான ஒன்றிய உடன்பாடுகளைத் தவிர வேறு அரசாங்க உடன்பாடுகளும் செய்து கொள்ளப்பட்டன. ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசுக்கும் உக்ரேனியாவுக்கும் இடையே அயல் வர்த்தகத்திற்கான மக்கள் கமிசாரகமும், உணவுத் துறை மக்கள் கமிசாரகமும் உடன்பாடுகள் செய்து கொண்டன. ஒன்றியக் குடியரசுகளின் மக்கள் கமிசாரகங்களும் தமக்குள்ளே பல்வேறு தனிப்பட்ட உடன்பாடுகளைச் செய்து கொண்டன. ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடி

யரசுக்கும் டிரான்ஸ் காக்கேசிய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசுக்கும் இடையே டிரான்ஸ் காக்கேசியாவில் ரயில்வேக்களை நிர்வாகம் செய்யும் நடைமுறை பற்றியும், ருஷ்யாவின் கூட்டரசுக்கும் ஜார்ஜியாவுக்கும், ருஷ்யாவின் கூட்டரசுக்கும் பைலோருஷ்யாவுக்கும், ருஷ்யாவின் கூட்டரசுக்கும் ஆர்மீனியாவுக்கும் இடையே நிதி விஷயங்கள் பற்றியும், ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசுக்கும் பைலோருஷ்யாவுக்கும் இடையே அகில ருஷ்யாவின் மத்திய செயற் குழுவின் கூட்டரசு நிலக் கமிட்டியில் அங்கத்துவம் பற்றியும் உடன்பாடுகள் ஏற்பட்டன. எனினும் இத்தகைய உடன்பாடுகள் எல்லாக் குடியரசுகளுடனும், கூட்டாக நிர்வாகம் செய்யப்படும் பொருளாதாரப் பிரிவுகளுக்கும் இடையே செய்து கொள்ளப்படவில்லை; ஒருமுகப் படுத்தப் பெறாத மக்கள் கமிசாரகங்கள் பெரும்பாலும் இதில் சம்பந்தப்பட்டிருந்தன.

அந்த சமயத்தில் குடியரசுகளுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளும் உடன்பாடுகளும் உருவாகிக் கொண்டிருந்த கூட்டரசின் உயர் அரசாங்க அமைப்புகளுக்கான சட்ட அடிப்படையை உருவாக்கின, அதோடு எதிர்கால கூட்டரசின் அரசாங்க யந்திரத்திற்கான அடிப்படையை நிறுவின.

அந்தக் காலகட்டத்தில் சோவியத் குடியரசுகள் தமது பொருளாதார முயற்சிகளை மத்தியப்படுத்தவும் ஒருமுகப் படுத்தவும் பல நடவடிக்கைகளை எடுத்தன; அதன் மூலம் கம்யூனிசம் நாடு முழுவதிலும் பெருவீத உற்பத்தி பெருமளவுக்கு மத்தியப்படுத்தப் பெறுவதைக் கோருகிறது என்ற லெனினது கருத்தைச் செயல்படுத்தத் தொடங்கின.

சோவியத்துகளின் ஏழாவது அகில ருஷ்யாவின் காங்கிரஸ் ருஷ்யாவை மின்சார மயமாக்குவதற்கான அரசுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டதும், 1921 பிப்ரவரியில் அரசாங்கத் திட்டக் கமிஷன் நிறுவப் பெற்றதும் இந்தத் திசையிலான ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். ''அரசாங்கப் பொதுத் திட்டக் கமிஷன் பற்றிய சட்டம்'' காங்கிரசில் அங்கீகரிக்கப்பட்ட மின்சார மயமாக்கும் திட்டத்தின் அடிப்படையில் தனி ஒரு அரசுப் பொருளாதாரத் திட்டத்தை வகுப்பதற்கும் அதன் அமுலாக்கத்தை மேற்பார்வை செய்யவும்

கமிஷன் நிறுவப்படுகிறது என்று கூறியது. மின்சார மயமாக்கும் திட்டமும், அரசாங்கத் திட்டக் கமிஷனின் நடவடிக்கைகளும் எல்லா சோவியத் குடியரசுகளுக்கும் பொருந்தின.

1922ல் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் உயர் தேசியப் பொருளாதார அவை குடியரசுகளின் ஆக முக்கியமான தொழில் துறை நிறுவனங்களை நிர்வாகம் செய்தது. அதே சமயம் நிலப் பயன்பாடு, விவசாய வளர்ச்சி, போக்குவரத்து, தகவல் துறை நிர்வாகம் ஆகியவற்றில் எல்லாக் குடியரசுகளுக்கும் பொதுவான ஒரு கொள்கையை வகுப்பதற்கான அடிப்படை நிறுவப்பட்டது. குடியரசுகளுக்கு இடையே சுங்கவரிகள் ஒழிக்கப்பட்டன; காப்பு வரித் தடைகள் அகற்றப்பட்டன.

1922 பிப்ரவரி முதல் குடிமக்கள் ஒரு சோவியத் குடியரசிலிருந்து இன்னொன்றுக்கு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி பிரயாணம் செய்யலாம் (அந்தந்தக் குடியரசுக்குள் இடமாற்றம் சம்பந்தமாக சோவியத் குடியரசுகளின் உரிய அமைப்புகளால் நிறுவப் பெற்றவை தவிர). எல்லாச் சோவியத் குடியரசுகளிலும் ஒரே பாஸ்போர்ட் முறை நிறுவப்பட வேண்டியுள்ளது.

தனி ஒரு சட்ட முறையினை நிறுவுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், சர்வசுதந்திர உரிமையுள்ள சோவியத் குடியரசுகளிடையே கூட்டரசு உறவுகளை வளர்ப்பதில் முக்கியமான பங்கு வகித்தன. எல்லாக் குடியரசுகளின் சட்ட முறையிலும் அடிப்படைக் கோட்பாடுகள் ஒரே மாதிரி இருப்பதற்குக் காரணம் ஒத்திசைவான சமூக மற்றும் அரசு அமைப்பு, பொது நோக்கங்கள் மற்றும் கடமைகள், பொது சித்தாந்தம், ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுவான வழிகாட்டுதல் ஆகியவற்றின் எதார்த்த விளைவேயாகும். சோவியத் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்கள், ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் (1918) முதல் தடவையாக உருவகம் பெற்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன என்ற உண்மையில் இது வெளியாயிற்று. ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு சட்டத்திலிருந்து பல ஷரத்துக்களை இரவல் பெற்று, வேறு சோவியத் குடியரசுகளுக்கு அவற்றின்

பிரயோகம் விஸ்தரிக்கப்பட்டது, அல்லது ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் சட்டத்தின் அடிப்படையில் புதிய சட்டங்கள் வரையப்பட்டன. பல கூட்டரசு அமைப்புகள் நிறுவப் பெற்றதானது பொதுவான சட்ட முறையினைப் புகுத்த உதவியது.

பொருளாதார ஒன்றியத்தின் தருணத்தில் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் தலைமையிலான சோவியத் குடியரசுகளின் அரசுறவுத் துறை ஒன்றியம் நிறுவப்பட்டது. இது கூட்டரசு உறவுகளின் வளர்ச்சியைப் பெருமளவுக்கு மேம்படுத்தித் தனி ஒரு ஒன்றிய அரசை அமைக்க உதவியது. இந்த அரசுறவுத் துறை ஒன்றியம் ஜெனோவாவில் நடைபெறவிருந்த அகில ஐரோப்பியப் பொருளாதார மாநாட்டில் பிரதிநிதித்துவம் சம்பந்தமான உடன்படிக்கையினால் உறுதிப்படுத்தப் பெற்றது. இந்த உடன்படிக்கை ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு, உக்ரேனியா, பைலோருஷ்யா, ஜார்ஜியா, ஆர்மீனியா, அஸர்பைஜான், கோரசம், புகரா மற்றும் தொலைகிழக்கு குடியரசால் கையொப்பமிடப்பட்டிருந்தது. ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு மட்டுமே மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்ததால் கையொப்பமிட்டவர்கள், இந்த மாநாட்டில் அனைத்து சோவியத் குடியரசுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி அவற்றின் நலன்களைப் பாதுகாக்கவும், மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளுடன் நேரடியாகவோ நேரடியற்ற முறையிலோ மாநாட்டுடன் தொடர்புள்ள எல்லா வகையான சர்வதேச ஒப்பந்தங்கள் உடன்பாடுகளை அவற்றின் சார்பில் செய்து கொள்ளவும் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசிடம் ஒப்படைத்தார்கள்.

1922 ஜனவரி 27ந் தேதி நடைபெற்ற அகில ருஷ்யாவின் மத்திய செயற் குழுவின் விசேஷக் கூட்டத்திற்கு சோவியத் குடியரசுகளின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் கூட்டத்தில் ஜெனோவா மாநாட்டிற்கான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். உக்ரேனிய, அஸர்பைஜான், ஜார்ஜிய மற்றும் ஆர்மீனிய சோவியத் அரசாங்கங்களின் பிரதிநிதிகள் இந்தப் பிரதிநிதிக் குழுவில் சேர்க்கப்

பட்டு அவர்களுக்கு முடிவு செய்யும் உரிமை அளிக்கப் பட்டது.

ஜெனோவா மாநாடு சோவியத் அரசுறவுத் துறைக்குப் பெரும் வெற்றியை விளைவித்தது. சுதந்திர உரிமையுள்ள சோவியத் குடியரசுகளின் சர்வதேச நிலையை வலுப்படுத்த உதவியது.

1922 நடுப்பகுதிக்குள் சோவியத் குடியரசுகளுக்கிடையிலான கூட்டரசு உறவுகளின் முந்திய வடிவங்கள் அவற்றின் செல்தகமையை இழந்து ஒன்றியக் குடியரசுகளிடையான ஒத்துழைப்பின் வளர்ச்சியைத் தடை செய்யும் வகையில் அச்சுறுத்தின. எனவே இணைப்பாட்சி முறை உறவுகளின் ஆக உயர் கட்டத்திற்கான மாற்றம் செய்ய வேண்டி இருந்தது. சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் என்ற வடிவில் ஒரு கூட்டாட்சி அரசினை நிறுவுவதற்கான காலம் வந்து விட்டது.

சோவியத் குடியரசுகளுக்கு இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பு அவை ஒரே அரசில் ஒன்றிணைவதன் முக்கியத்துவத்தையும் இந்த ஒன்றியத்து வளர்ச்சியின் அவசர அவசியத்தையும் காட்டியது. அதற்குக் காரணம் என்னவென்றால், முதலாவதாக, போரினால் அழிக்கப்பட்ட உற்பத்தி சக்திகளை புதுப்பிக்கவும், சீர்குலைவுற்ற பொருளாதார உறவுகளை மீண்டும் நிலைநாட்டவும் வேண்டி இருந்தது; நாட்டின் மையத்துக்கும் முன்னாள் தேசிய எல்லைப்புற மாவட்டங்களுக்கும் இடையிலான உழைப்பின் சமூகப் பிரிவினையை, உழைப்பு சக்தியையும் பொருளாயத மூலவளங்களையும் திரட்டுவது மூலம் வலுப்படுத்த வேண்டி இருந்தது; அது சோஷலிசத்தின் பொருளாயத, தொழில்நுட்ப அடித்தளத்தைக் கட்டியமைப்பதற்குத் தேவையாக இருந்தது; இரண்டாவதாக, ருஷ்யத் தொழிலாளர் மற்றும் புதிய சோவியத் தேசிய அரசு அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகளிடையிலான நேச அணியை வலுப்படுத்த வேண்டி இருந்தது—லெனின் இந்த நேச அணியினை சோவியத் ஆட்சியின் ஓர் அடிப்படையாகக் கருதினார்; மூன்றாவதாக, சுற்றிலும் முதலாளித்துவம் நிலவும் சூழ்நிலையில் முதல் தடவையாக சோஷலிசம் நிறுவப்படுவதால், சோவியத் மக்கள் இனங்கள் ஒரே அயல் துறைக் கொள்கையினைக் கடைப்பிடிப்பதும், சோவியத்

குடியரசுகள் தமது தற்காப்பு ஆற்றலை வலுப்படுத்திக் கொள்வதும் தலையாய முக்கியத்துவம் கொண்டிருந்தன.

அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய முதல் ஐந்தாண்டுகளில் முன்னாள் அசமத்துவமாகவும் ஒடுக்கப்பட்டும் கிடந்த தேசங்கள் சுதந்திரமான சோவியத் அரசுகளை நிறுவின, ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு இவற்றின் மையமாக விளங்கியது. உள்நாட்டுப் போர், அந்நியத் தலையீடு, முதலாளித்துவ சுற்றி வளைப்பு போன்ற நிலைமைகளில் பொது எதிரியை எதிர்த்து பொது நோக்கங்களுக்கான போராட்டத்தில் சோதர ஒத்துழைப்பை உத்தரவாதம் செய்யும் புதிய சோஷலிச சர்வதேச உறவுகளை நிறுவுவதில் அவை செழுமையான அனுபவம் பெற்றன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு எதிர்ப்புரட்சியின் ஒருங்கிணைந்த சக்திகளை எதிர்த்து நடந்த கடுமையான போரின் பொழுது ஒற்றுமைப்படுவதற்கான சோவியத் குடியரசுகளின் ஆவல் வலுவடைந்தது. உள்நாட்டுப் போரின் பொழுது நிலைநாட்டப் பெற்ற அவற்றின் ராணுவ-அரசியல் கூட்டணி, மிகவும் நெருக்கமாக ஒத்திசைந்த அயல்துறைக் கொள்கை, சோஷலிச நிர்மாணத்தின் ஆரம்ப கட்டத்தில் தேசியப் பொருளாதாரத்தைப் புனரமைக்கவும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் தமது பாதுகாப்பு ஆற்றலை வலுப்படுத்திக் கொள்ளவும் அவை மேற்கொண்ட கூட்டு முயற்சிகள் யாவும் ஒப்பந்த இயல்புள்ள உறவுகளிலிருந்து கூட்டரசை நோக்கிய மாற்றத்திற்கு இயல்பாகவே வகை செய்தன. ஆனால் இந்த ஒற்றுமையை அடைவதற்கு முன்னால் மக்கள் இனங்களின் பல்வேறு மட்டங்களிலான சமூக-பொருளாதார வளர்ச்சி, தேசியப் பூசல், அவநம்பிக்கை ஆகியவற்றின் மீதமிச்சங்கள், முதலாளித்துவ தேசியவாதம், வல்லரசு தேசியவெறி ஆகிய தடைகளை வென்று அகற்ற வேண்டி இருந்தது.

சோஷலிசப் புரட்சி, ஒற்றுமைப்படுத்தும் இயக்கம் இரண்டுக்கும் விசையாக விளங்கியது ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம். தமது போல்ஷிவிக் அமைப்புகளால் வழிகாட்டப் பெற்ற இந்தத் தொழிலாளர்கள் உழைக்கும் மக்களின் அகத்தே சர்வதேச ஒருமைப்பாட்டு உணர்வினைப் புகட்டினர், சோவியத் ஆட்சி, சோஷலிசத்திற்கான போராட்

டம் என்ற பொதுவான அரசியல் கொள்கையின் அடிப்படையில் அவர்களை ஒற்றுமைப்படுத்தினர்.

வரலாற்று வளர்ச்சியின் புறநிலைத் தன்மை ஒரு பல் தேசிய சோவியத் சோஷலிச அரசு நிறுவப்பட வேண்டுவதன் அவசியத்தை ஆணையிட்டு வலியுறுத்தியது.

லெனினது கருத்துப்படி, சோவியத் குடியரசுகளிடையே நெருக்கமான ஒன்றியம் இல்லாவிடில் உலக ஏகாதிபத்தியத்திடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டு அவை வாழ முடியாது; சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தைப் பேணிக் காப்பதும் வலுப்படுத்துவதும் சோவியத் மக்களுக்கும் உலக கம்யூனிசப் பாட்டாளிகளுக்கும் மிகவும் அவசியமான நடவடிக்கை, உலக முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடவும் அதன் சதிகளை எதிர்த்துத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் இதன் மூலம் இயலும்; சோவியத் குடியரசுகளின் ஒன்றியமும் அவற்றினிடையே நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பும் இல்லாவிடில் ஏகாதிபத்தியத்தால் அழிக்கப் பெற்ற உற்பத்தி சக்திகளை மீண்டும் புதுப்பிக்க முடியாது, ஒரு பொதுவான திட்டத்தின் அடிப்படையில் முறைப்படுத்தப் பெற்ற பொது சோஷலிசப் பொருளாதாரத்தை நிறுவ இயலாது, சீரான ஒரு சமூக உழைப்புப் பிரிவினையையோ நாட்டு மக்கள் இனங்கள் அனைவற்றின் நன்மைக்காக இயற்கை மூலவளங்களைத் திறம்படப் பயன்படுத்துவதையோ உத்தரவாதம் செய்ய முடியாது; சோவியத் குடியரசுகளின் வலுவான ஒன்றியம் இல்லாமல் உழைக்கும் மக்களின் வளவாழ்வை உறுதியாக மேம்படுத்த முடியாது, நாட்டிலுள்ள தேசங்கள், தேசியக் குழுக்களின் கலாசாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது.

எனவே, சோவியத் குடியரசுகள், அவற்றை வெளியார் தாக்குதலிலிருந்து பாதுகாக்கக் கூடிய, பொருளாதார வெற்றிகளையும் மக்களினங்களின் சுதந்திரமான தேசிய வளர்ச்சியையும் உறுதிப்படுத்தவல்ல ஓர் ஒன்றிய அரசில் ஒன்றிணைக்கப்பட வேண்டி இருந்தன.

மக்கள் இனங்களின் ஒற்றுமை இயக்கத்திற்கு வழிகாட்டுதல் நல்கிய லெனினும் கம்யூனிஸ்டுக் கட்சியும் தேசியப் பிரச்சினைக்குப் பொதுவாகவும் தேசிய-அரசு நிர்மாணப் பிரச்சினைக்குக் குறிப்பாகவும் தீர்வு காண்பதில் ஏற்பட்ட

அனுபவத்தைத் தத்துவ ரீதியாக ஆய்வு செய்வதற்கும் பொதுமைப்படுத்துவதற்கும் மாபெரும் முக்கியத்துவம் அளித்தார்கள்.

தனி முழுமையான பல்தேசிய அரசை நிறுவும் போக்கில் தமது ஒற்றுமை இயக்கத்தில் மக்கள் அடைந்த அனுபவம், ஜனநாயக மத்தியத்துவம், சமத்துவம், சுயவிருப்பம் ஆகிய கோட்பாடுகளை வளர்ப்பதிலும், சோஷலிசக் கூட்டமைவின் வகைகளையும் உள்ளடக்கத்தையும் நிர்ணயிப்பதிலும், மக்கள் இனங்களின் சமூக வாழ்க்கையில் தேசிய மற்றும் சர்வ தேசிய அம்சங்களைக் கண்டறிவதிலும் ஒரு முக்கிய பங்கு வகித்தது.

டிரான்ஸ் காக்கேசியக் கூட்டரசு நிறுவப்பட்ட பொழுது சர்வசுதந்திர உரிமையுள்ள சோவியத் குடியரசுகளின் இடையிலான கூட்டாட்சி உறவுகளின் வளர்ச்சியிலும், குடியரசுகளின் சர்வசுதந்திர உரிமையை வெளிப்படுத்தும் குறிப்பிட்ட சட்டத்துறை-அரசு வடிவங்கள் நிறுவப்படுவதிலும் செழுமையான அனுபவம் அடையப் பெற்றது.

சோவியத் ஒன்றியத்தின் முதல் முன்மாதிரியான டிரான்ஸ் காக்கேசியக் கூட்டரசை நிறுவுவதில் லெனின் முன்முயற்சி எடுத்தார். ''அஸர்பைஜான், ஜார்ஜியா, ஆர்மீனியா, தாகெஸ்தான் மற்றும் மலைப்பிரதேசக் குடியரசு கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு'' 1921 ஏப்ரல் 11ம் நாள் எழுதிய கடிதத்தில் சோவியத் ஆட்சி வலுப்பட்டு வளர்ச்சியுறவும், முன்மாதிரியான தேசிய சமாதானம் நிலைநாட்டப்படவும் டிரான்ஸ் காக்கேசியக் குடியரசுகளிடையே பலமான நேச அணி முக்கியமானது என்று லெனின் வலியுறுத்தினர். அதோடு டிரான்ஸ் காக்கேசிய கம்யூனிஸ்டுகள் தமது நிலைமையின் தனிச்சிறப்பைப் புரிந்து கொண்டு இந்த விஷயத்தில் தமது போர்த் தந்திரங்களை வகுக்க வேண்டும் என்றும் கூறினர்[1]. டிரான்ஸ் காக்கேசியாவில் இருக்கும் சுதந்திரக் குடியரசுகளின் அரசு இணைப்பின் குறிப்பிட்ட வடிவங்கள் லெனினது கருதுகோள்களின் அடிப்படையில் வகுக்கப் பெற்றன.

தனது வடிவில் டிரான்ஸ் காக்கேசிய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு முழு சுதந்திர உரிமையுள்ள

---

[1] V. I. Lenin, *Collected Works*, Vol. 32, p. 316.

குடியரசுகளால் ஆக்கப் பெற்ற ஓர் ஒன்றிய அரசாக இருந்தது, இவ்வாறு அது சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தைப் போல இருந்தது. அவை அதிகாரத் தகமை விஷயத்தில் பிரதானமாக வேறுபட்டிருந்தன—உறுப்புக் குடியரசுகளின் அதிகாரத்தின் கீழ் இருந்த சட்டமியற்றல், நிர்வாகம் சம்பந்தமான சில துறைகள் நீங்கலாக டிரான்ஸ் காக்கேசிய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு ஓர் ஒன்றியக் குடியரசின் அதிகாரத் தகமை பெற்றுள்ளது. சோவியத் ஒன்றியத்தைப் போலன்றி டிரான்ஸ் காக்கேசிய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு, உறுப்புக் குடியரசுகள் அதனிடமிருந்து விலகிக் கொள்ளும் உரிமையை அங்கீகரிக்கவில்லை.

சோவியத் ஒன்றியத்தை நிறுவுவது சம்பந்தமான பிரச்சினை 1922 ஆகஸ்டு தொடக்கத்தில் சோவியத் குடியரசுகளின் பிரதிநிதிகள் கூட்டுவித்த ஒரு மாநாட்டில் முதன் முறையாக எழுப்பப்பட்டது. அந்த சமயத்தில் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் 12ஆவது அகில ருஷ்யாவின் மாநாடு நடைபெற்றது. தேசியக் குடியரசுகளின் முன்முயற்சியால் இது விவாதிக்கப்பட்டது. இதர குடியரசுகளை ஐக்கியப்படுத்தும் நோக்கத்துடன் அவற்றின் மீது ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு எவ்வித நிர்ப்பந்தமும் கொண்டுவரவில்லை; சோவியத்துகளின் 10ஆவது அகில ருஷ்யாவின் காங்கிரஸ் நடக்கும் வரையில் இந்த விஷயம் பற்றிய தனது அதிகாரபூர்வ நிலையை அது வெளியிடவில்லை.

இந்த மாநாடு சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை நிறுவும் கருத்தை அங்கீகரித்தது, அதன் அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படைக் கோட்பாடுகளை உருவாக்கக் கோரியது.

ஆனால் சோவியத் ஒன்றியம் நிறுவுவது சம்பந்தமான விவாதம் பல்வேறு காரணங்களால் தடைப்பட்டது.

சோவியத் பல்தேசிய அரசு நிறுவப் பெற்றதன் இறுதி கட்டத்தில் கட்சி, பல்வேறு தேசியத் திரிபுவாதிகள் தொடுத்த பிடிவாதமான எதிர்ப்பை வென்று சமாளிக்க வேண்டி இருந்தது; தனிப்பட்ட ஊழியர்கள், மத்திய மற்றும் ஸ்தல அமைப்புகளின் பல தவறுகளைத் திருத்த வேண்டி இருந்தது.

தேசியப் பிரச்சினை சம்பந்தமான அடிப்படையிலேயே தவறான இரண்டு போக்குகள் சோவியத் ஒன்றியம் நிறுவப்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்தன. ஒரு போக்கு—வல்லரசுப் போக்கு—மகத்தான ருஷ்ய தேசத்திற்கு ஒன்றியத்தில் சலுகையுள்ள இடம் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும் என்ற அபிலாஷையில் வெளிப்பட்டது; இன்னொன்று—ஸ்தல தேசியவாதப் போக்கு—1922ல் குடியரசுகளிடையே நிறுவப் பெற்ற கூட்டரசு உறவுகளை அகற்றி அவற்றை ஒன்றுக்கொன்று தனிமைப்படுத்தி வைக்கும் வகையில் எதார்த்தத்தில் கட்டுப்பாடு செய்தது.

இரு போக்குகளும் உண்மையில் சோவியத் குடியரசுகளிடையே ஒத்துழைப்பைச் சீர்குலைக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தன. ஆனால் சோவியத் ஒன்றியம் நிறுவப் பெற்றதன் தனிப்பட்ட வரலாற்று நிலைமைகளின் கீழ் வல்லரசு தேசிய வெறி ஆகப் பெரிய அபாயமாக இருந்தது. இது புதுப்பிக்கப்படுவதால் முன்னாள் ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் ருஷ்யத் தொழிலாளர் மீது அவநம்பிக்கை கொள்வார்கள், உலகின் முதல் சோஷலிச அரசின் வாழ்வையே இது அச்சுறுத்தும். இத்தகைய சூழ்நிலைமைகளில் சோவியத் குடியரசுகளை ஒன்றிணைப்பதற்கான பல்வேறு திட்டங்கள் எழுந்தது இயல்பே. அவற்றினுள் குடியரசுகளிடையே கூட்டிணைப்பு அரசு உறவுகளை அடிப்படையாக்கிய திட்டங்களும் அடங்கும். சோவியத் குடியரசுகளை ஒற்றை ஆட்சியின் கீழ் ஒன்றிணைத்து விடுமாறு கோரி அதன் வழி அவற்றின் சர்வசுதந்திர உரிமையைப் பறிக்கும் சில திட்டங்களும் இருந்தன.

எனவே, உலகின் முதல் சோஷலிச ஒன்றிய அரசினை நிறுவுவதற்கான அடிப்படைக் கோட்பாடுகளை வகுப்பதில் மிகவும் முற்ற முழுக் கவனம் செலுத்தப்பட வேண்டுவது அவசியம்.

சோவியத் அரசினை நிர்மாணிப்பதில் ஜனநாயகக் கோட்பாடுகளை முரணின்றி தொடர்ந்து பின்பற்றிக் கொண்டு லெனின், ஒரு கூட்டரசு நிறுவப்படுவதால் தேசியக் குடியரசுகளுக்கு இடையிலான அரசு உறவுகள் வலுவடையும் அவற்றின் சர்வசுதந்திர உரிமை கணிசமாக வலுப்படும் என்று கருதினார். சோவியத் ஒன்றியத்தின் குடியரசுகளிடையே எவ்வித அசமத்துவமும் இருத்தல் கூடாது என்று அவர்

கூறினர். ஒன்றியத்தின் வடிவங்களைக் கவனமாக ஆராய்ந்து அனுபவ மூலம் அவற்றை சரிபார்க்கவும் கோரினர்.

சோவியத் குடியரசுகளின் ஓர் ஒன்றியம் அவற்றின் சர்வ சுதந்திரத்தைப் பேணுவதாக இருத்தல் வேண்டும் என்று லெனின் கருதினர். எனவே அவர், ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு உட்பட எல்லா சோவியத் குடியரசுகளும் ஒரு புதிய அரசில், சோவியத் குடியரசுகளின் ஒன்றியத்தில், சுயவிருப்பத்துடன் மற்றும் சமத்துவத்துடன் ஒன்றிணைய வேண்டும் என்று பிரேரேபித்தார். சோவியத் ஒன்றியம் நிறுவப்பட்டதால் குடியரசுகள் தமது சுதந்திரத்தை இழந்து விடவில்லை; இது ஒரு புதிய கட்டத்தை, அதாவது சமத்துவமுள்ள குடியரசுகளின் ஒரு கூட்டரசையே உருவாக்கியுள்ளது என்று இக்குடியரசுகளுக்குக் காட்ட வேண்டியதன் அவசியத்தை லெனின் வலியுறுத்தினர். புது வடிவிலான ஒன்றிணைப்பும் ஒன்றியக் குடியரசுகளின் சர்வ சுதந்திர உரிமைக்கு உத்தரவாதம் செய்யும் என்று அவர் விளக்கினர்.

1922 அக்டோபரில் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் குழுவின் பிளினம் கூட்டத்தில் ''சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் சோவியத் குடியரசுகளின் ஒன்றிணைப்பு'' என்ற தலைப்பிலான அறிக்கை விவாதிக்கப்பட்டது. லெனினது கொள்கைப்படி ஒரு தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. இதன் முதல் ஷரத்து சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் சேர்ந்து இணைந்து கொள்வதற்காக உக்ரேனிய, பைலோருஷ்ய, டிரான்ஸ் காக்கேசியக் குடியரசுகளின் கூட்டரசு, ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு ஆகியவற்றிடையே ஓர் உடன்பாடு ஏற்பட வேண்டும் என்றும் அவற்றுக்கு ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்லும் உரிமை வழங்க வேண்டும் எனவும் கூறியது. சோவியத் ஒன்றியத்தின் உருவாக்கத்தை நோக்கிய ஒரு தயாரிப்பு நடவடிக்கை என்ற முறையில் இந்தப் பிளினம் ஒரு கமிஷனை நிறுவியது. இந்தக் கமிஷனுக்கு, சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களை வகுத்தல் மற்றும் குடியரசுகளின் ஒன்றிணைவு பற்றிய சட்டத்தின் (உடன்பாட்டின்) மசோதாவை

ஒன்றியக் குடியரசுகள் வரைய உதவுதல் என்ற கடமைகள் ஒப்படைக்கப்பட்டன. இந்தச் சட்டம் குடியரசுகளின் சோவியத்துகளின் காங்கிரசுகளால் விவாதிக்கப்படும்.

இந்தப் பிளினம் கூட்டத்திற்குப் பிறகு சோவியத் ஒன்றியத்தை நிறுவுவது பற்றிய பிரச்சினை தனிப்பட்ட குடியரசுகளில் விவாதிக்கப்பட்டது. ஒன்றிணைப்புக்கான உழைக்கும் மக்களின் இயக்கம் ஓங்கியதோடு 1922 டிசம்பரில் எல்லா சுதந்திர சோவியத் குடியரசுகளிலும் சோவியத்துகளின் காங்கிரசுகள் நடைபெற்றன. சமத்துவம், சுதந்திர விருப்பம், பிரிந்து போகும் உரிமை என்ற அடிப்படையில் சோவியத் ஒன்றியத்தை நிறுவுவது என்ற முடிவை காங்கிரசுகள் ஏற்றுக் கொண்டன.

1922 டிசம்பர் 30ந் தேதி நடைபெற்ற சோவியத் சோஷலிசக் குடியரசுகள் ஒன்றியத்தின் சோவியத்துகளின் முதல் காங்கிரசில் சுதந்திர சோவியத் குடியரசுகளான ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு, உக்ரேனியா, பைலோருஷ்யா, டிரான்ஸ் காக்கேசிய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு ஆகியவற்றால் தனி ஒன்றிய அரசான சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை நிறுவுவது சம்பந்தமான பிரகடனம் அங்கீகரிக்கப்பட்டு, ஒன்றிய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்தக் காங்கிரசில் கலந்து கொண்டவர்கள் ஒன்றிய அரசின் ஆக உயர் சட்டமியற்றும் அமைப்பான சோவியத் ஒன்றியத்தின் மத்திய செயற் குழுவினைத் தேர்ந்தெடுத்தார்கள்—இது காங்கிரசுகளுக்கிடையே செயல்படும். அதோடு இந்த அமைப்பிடம் சோவியத் ஒன்றியத்திற்கு ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை வரையவும் அதை உடனடியாக அமுல்படுத்தவுமான கடமையையும் ஒப்படைத்தார்கள்.

இந்தக் கடமை 1923 ஜூலை 6ம் நாள் நிறைவேற்றப்பட்டது. 1923 ஜூலை 13ம் நாள் சோவியத் ஒன்றியத்தின் மத்திய செயற் குழுவின் தலைமைக் குழு உலகின் அனைத்து மக்களுக்கும் எல்லா அரசாங்கங்களுக்கும் ஓர் அறிக்கையை விடுத்தது. ''சோவியத் குடியரசுகளின் மக்களினங்களிடையான சோதர ஒத்துழைப்பின் அடிப்படையில் நிறுவப் பெற்ற ஒன்றிய அரசு மக்களிடையே சமாதானத்தைப் பேணிக் காக்கும் எண்ணங் கொண்டுள்ளது'', மேலும் ''சமத்துவமுடைய

தேசிய இனங்கள் ஒன்றுக்கொன்று நெருக்கமான பரஸ்பர செயல்பாடு மூலம் தமது கலாசாரத்தையும் வளவாழ்வையும் கூட்டு முறையில் வளர்த்துக் கொள்ளும், உழைக்கும் மக்களின் ஆட்சிக்குரிய கடமைகளை நிறைவேற்றும்'' என்று அந்த அறிக்கை கூறியது.

1924 ஜனவரியில் நடைபெற்ற சோவியத்துகளின் இரண்டாவது அகில ஒன்றியக் காங்கிரஸ் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்பு சட்டத்தை அங்கீகரித்தது. இதில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படையில் உலகின் முதல் பல்தேசிய சோஷலிச ஒன்றிய அரசினைக் கட்டுவதற்குரிய லெனினது கோட்பாடுகள் இணைக்கப் பெற்றிருந்தன. சோவியத் ஒன்றியம் நிறுவப்பட்ட பிறகு அரசு நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகள் இயல்பாகவே மத்தியப்படுத்தப் பெற்றன. இந்த அரசியல் அமைப்புச் சட்டம் பாதுகாப்பு, அயல்துறை உறவுகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம்போன்ற விஷயங்களில் ஒற்றுமையும் மத்தியத்துவமும் அவசியம் என்று வலியுறுத்தியது. சோவியத் ஒன்றியத்தில் பொருளாதார மற்றும் நிதித் துறைக் காரியங்களை முறைப்படுத்தும் பிரதான விதிகளை வகுத்தது. இந்த அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றியக் குடியரசுகளின் சமத்துவம், சர்வசுதந்திர உரிமைகள், அவற்றின் இணைவின் சுயவிருப்பத் தன்மை ஆகியவை குறித்த புதிய உத்தரவாதங்களையும் வகுத்தளித்தது. குடியரசுகளின் சோதர ஒற்றுமை மேலும் வளர்வதற்கான முன்தேவைகள் இவ்வாறு உருவாக்கப்பட்டிருந்தன.

சோவியத் ஒன்றியம் ஓர் ஒன்றிய அரசாக வளர்ச்சியடைவது கம்யூனிஸ்டுக் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் சோஷலிசத்தை நிறுவுவதற்காக சோவியத் மக்கள் நடத்திய போராட்டத்தின் வரலாற்றுடன் இணை சேர்ந்திருந்தது.

சோவியத் ஒன்றியம் நிறுவப்பட்ட பொழுது முன்னாள் ருஷ்யப் பேரரசில் இருந்த மத்திய ஆசியாவில் மூன்று அரசுகள் நிலவின; அவையாவன: ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் ஒரு பகுதியாக இருந்த துருக்கிஸ்தான் சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசு மற்றும் புகாரா, கோரசம் சோவியத் மக்கள் குடியரசுகள். லெனினது முன்முயற்சியின்படி மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப இந்தக் குடியரசுகளின் பிரதேசம் தேசிய அடிப்படையில் மறு

பிரிவினை செய்யப்பட்டது. 1923 அக்டோபரில் நான்காவது அகில கோரசம் 'குருல்தாய்' கோரசம் சோவியத் மக்கள் குடியரசு ஒரு சோஷலிசக் குடியரசாக மாற்றமடைந்ததைப் பிரகடனம் செய்ததோடு, இக்குடியரசு சோவியத் ஒன்றியத்தில் ஒரு பகுதியாக சேர விரும்புவதாயும் முடிவு செய்தது. 1924 செப்டம்பரில் புகாரா சோவியத் மக்கள் குடியரசின் மக்கள் பிரதிநிதிகளின் காங்கிரசும் இதே போன்ற முடிவை அங்கீகரித்தது.

1924 முன் பனிக் காலத்தில் துருக்கிஸ்தான், புகாரா மற்றும் கோரசம் ஆகியவற்றின் உயர் அரசாங்க அமைப்புகள் மத்திய ஆசியாவைத் தேசிய அடிப்படையில் பிரதேச மறுபிரிவினை செய்வது பற்றிய ஒரு முடிவை எடுத்தன. இதன் விளைவாக உஸ்பெக்கிஸ்தான் (துருக்கிஸ்தான், புகாரா, கோரசம் ஆகியவற்றிலான உஸ்பெக்குகள் அடங்கியது), துருக்மேனியா (கோரசம், புகாரா, துருக்கிஸ்தானிலுள்ள துருக்மேனியர் அடங்கியது), உஸ்பெக்கிஸ்தானின் ஒரு பகுதியாகத் தாஜிக் சுயாட்சி சோவியத் சோஷலிசச் குடியரசு, ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் பகுதியாக காரா-கிர்கீசிய சுயாட்சிப் பிராந்தியம், கிர்கீசியாவின் பகுதியாகவும் பிறகு கசாகுஸ்தானின் பகுதியாகவும் காரா-கல்பாக் சுயாட்சிப் பிராந்தியம் ஆகியவை நிறுவப்பட்டன.

தேசியக் கோட்பாட்டிற்கு ஏற்ப மத்திய ஆசியா மறுபிரிவினை செய்யப்பட்டதில் மிகப் பெருமளவிலான பிரதேசம் சம்பந்தப்பட்டிருந்தது. அது மத்திய ஆசிய மக்கள் இனங்களைத் தேசிய சோவியத் சோஷலிசக் குடியரசுகளில் மீண்டும் சேர்த்து ஒன்றிணைத்தது. அவற்றின் காலகாலமான பிரிவினைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. 1925 மே மாதம் சோவியத்துகளின் மூன்றுவது அகில ஒன்றியக் காங்கிரஸ் மத்திய ஆசிய மக்களின் விருப்பப்படி உஸ்பெக்கிஸ்தானையும் துருக்மேனியாவையும் சோவியத் ஒன்றியத்தில் சேர்த்துக் கொண்டது. 1929 அக்டோபரில் உஸ்பெக்கிஸ்தான் உழைக்கும் மக்களின் ஒப்புதலுடன் தாஜிக் சுயாட்சி சோஷலிசக் குடியரசு ஒன்றியக் குடியரசாகி சோவியத் ஒன்றியத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

சோஷலிசம் நிலைநாட்டப்பட்டதானது சோவியத் மக்கள் இனங்களின் அரசுத்துவ வளர்ச்சியின் ஒரு புதிய கட்டத்

திற்கு இட்டுச் சென்றது. இது மக்கள் இனங்களிடையே அரசியல், பொருளாதார, கலாசார சமத்துவத்தை ஏற்படுத்தி, சோஷலிச தேசங்களின் மேலான வளர்ச்சிக்கும் அவை படிப் படியாக ஒன்று சேருவதற்கும் பாதை சமைத்தது.

1936ல் அங்கீகரிக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்பு சட்டம் சோவியத் மக்களின் மகத்தான வெற்றி சாதனையாகும். அது சோவியத் ஒன்றியத்தில் சோஷலிசம் வெற்றிவாகை சூடியது (முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கான மாற்றம் முழுமை பெற்றது என்று அதற்குப் பொருள்), சோஷலிச நிர்மாணம், தொழில் துறையில் இயந்திரமயமாக்குதல், விவசாயத்தில் கூட்டுத்துவமாக்குதலுக்குரிய கால கட்டத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றங்கள், மிகவும் குறுகிய காலத்தில் நிறைவேற்றப் பட்ட கலாசாரப் புரட்சி ஆகியவற்றை வெளிப்படுத்தியது. 1924க்கும் 1936க்கும் இடையே சோவியத் ஒன்றியம் பல நூற்றுண்டுக் கால அபிவிருத்தியை நிறைவு செய்தது. கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் சோவியத் அரசின் மாருத அக்கறையினுலும், எல்லா சோஷலிச தேசங்களும் வழங்கிய சோதர பரஸ்பர உதவியின் காரணமாயும் முன்னுள் பின்தங்கிய நிலையில் இருந்த தேசிய மாவட்டங்கள் முன் என்றும் கண்டிராத வேகத்தில் வளர்ச்சியடைந்தன.

நாடு தனக்குச் சொந்தமான வலிமை மிக்க தொழில் துறையினைக் கட்டியது, தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் புதிய தலைமுறைகளைப் பயிற்றுவித்தது, மற்றும் பொருளாதாரத்தில் சார்பு நிலையை அகற்றியது. கிராமப் புறங்களில் கடுமையான வர்க்கப் போராட்டத்தின் விளைவாக ஒரு வர்க்கம் என்ற முறையில் குலாக்குகள் ஒழிக்கப்பட்டனர், லட்சக் கணக்கான விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிலும் கூட்டுப் பண்ணைகளிலும் ஒன்று திரண்டனர், சொத்துடைமை முறைக்குரிய தனிநபர்வாத மனப்போக்கைப் படிப்படியாக உதறித் தள்ளினார்கள், இவ்வாருகப் பொருளாயத-தொழில்நுட்ப அடிப்படையின் துரிதமான வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டார்கள்.

**புதிய சோவியத் சோஷலிச தேசங்கள்** இறுதியாக உருப் பெற்றன. முதலாளித்துவ வளர்ச்சி கட்டத்தைக் கடந்து

செல்லாமலே சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதற்கான வாய்ப்பு இப்போது பல மக்கள் இனங்களுக்குக் கிடைத்தது. 1930 நடுப்பகுதியிலேயே சோவியத் ஒன்றியத்தில் சோஷலிசம் நிலைநாட்டப் பெற்று விட்டது. காரணம் சோஷலிச நிர்மாணத்தில் சோதரக் குடியரசுகளின் மக்கள் செயலூக்கமுள்ள பங்கு வகித்தார்கள்.

சோவியத் ஒன்றியத்தின் 1936ம் ஆண்டைய அரசியல் அமைப்பு சட்டம், தேசங்களின் சமத்துவம் பற்றிய லெனினது கோட்பாட்டை வளர்த்து அதை மீறவொண்ணாத சட்டம் என்று பறைசாற்றியது.

புதிய அரசியல் அமைப்பு சட்டம் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒன்றியக் குடியரசுகளின் எண்ணிக்கை 7லிருந்து 11 ஆக அதிகரித்தது. கசாகுஸ்தானும் கிர்கீசியாவும் சுயாட்சிக் குடியரசுகளிலிருந்து ஒன்றியக் குடியரசுகளாக மாற்றப்பட்டன. டிரான்ஸ் காக்கேசிய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு கலைக்கப்பட்டது. அஸர்பைஜான், ஆர்மீனியா மற்றும் ஜார்ஜியா சுதந்திரமான முழு உரிமையுள்ள அரசுகளாகி சோவியத் ஒன்றியத்தின் பகுதியாயின. 1939ல் மேற்கு உக்ரேனியா உக்ரேனிய சோவியத் சோஷலிசக் குடியரசிலும் மேற்கு பைலோருஷ்யா பைலோருஷ்ய சோவியத் சோஷலிசக் குடியரசிலும் மீண்டும் சேர்ந்து ஒன்றிணைந்தன. 1940ல் கரேலிய மற்றும் மோல்தாவியக் சுயாட்சிக் குடியரசுகள் ஒன்றியக் குடியரசுகளாயின.

லித்துவேனியா, லாத்வியா மற்றும் எஸ்தோனியாவில் சோவியத் ஆட்சி மீண்டும் நிறுவப்பட்டதானது சோவியத் பல்தேசிய அரசின் வளர்ச்சியில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். 1940 ஆகஸ்டில் பால்டிக் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப இம்மூன்று குடியரசுகளும் சோவியத் ஒன்றியத்தின் பகுதியாயின.

சோவியத் ஒன்றியத்திற்குள் எஸ்தோனியா சேர்ந்து கொண்டது பற்றிய எஸ்தோனியக் குடியரசின் அரசாங்க டூமா செய்த பிரகடனம், எஸ்தோனியக் குடியரசின் சர்வ சுதந்திர உரிமைக்கும், எஸ்தோனிய மக்களின் சுதந்திரமான தேசிய வளர்ச்சிக்கும் தொழில் துறை, விவசாய மற்றும் கலாசார முன்னேற்றத்திற்கும் உத்தரவாதமளிக்கும் ஒரே பாதை இதுவே என்று கருதுவதாகக் கூறியது.

1944ல் துவா மக்கள் குடியரசு ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசில் ஒரு சுயாட்சிப் பிராந்தியமாகச் சேர்ந்தது (1961ல் அது சுயாட்சிக் குடியரசாகியது). 1957ல் கரேலோ-பின்னிஷ் சோவியத் சோஷலிசக் குடியரசின் சுப்ரீம் சோவியத் கூட்டத்தில், இந்தக் குடியரசின் உழைக்கும் மக்கள் இதனை கரேலிய சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசாக மாற்றுவது என்ற முடிவை எடுத்தார்கள். முன்னுள் அது வரலாற்று பந்தங்களால் இணைந்திருந்த ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசில் சேரும் உரிமையினை வைத்திருந்தது.

மாபெரும் தேசபக்தப் போரில் (1941-1945) வெற்றியடைவதற்காக சோவியத் அரசின் எல்லா தேசங்களும் தேசிய இனங்களும் பெரிய பங்கு ஆற்றி இருந்தன. வரலாற்று சிறப்புள்ள இவ்வெற்றி சோஷலிச சமூக மற்றும் அரசு அமைப்பின் மேன்மையையும், லெனினுல் நிறுவப் பெற்ற பல்தேசிய அரசின் மகத்தான ஜீவ சக்தியையும் அதன் மீருவொண்ணுத முழுமையையும் எடுத்துக் காட்டியது.

இன்று சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் 15 சமத்துவ சோவியத் சோஷலிசக் குடியரசுகளைக் கொண்டதாக இருக்கிறது.

(பக்கம் 84-85ல் உள்ள அட்டவணை 1ஐப் பார்க்கவும்)

சோவியத் குடியரசுகள் நிறுவப் பெற்றதோடு கூடவே, லெனினது தேசியக் கொள்கைக்கு ஏற்ப சிறிய தேசியக் குழுக்கள் பல்வேறு வடிவங்களிலான தேசிய சுயாட்சியைத் தேர்ந்து கொண்டன. ''உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடன''மும் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் 1918ம் ஆண்டு அரசியல் சட்டமும் இந்த நடைமுறைக்குச் சட்ட அடிப்படையாக இருந்தன. தனிச் சிறப்புள்ள வாழ்க்கை முறை மற்றும் தேசிய இயைபுடைய பிராந்தியங்களின் சோவியத்துகள் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசுடன் கூட்டாட்சி அடிப்படைகளில் சேர்ந்துள்ள சுயாட்சிப் பிராந்திய இணைப்புகளாக ஒன்றுசேரலாம் என்று இந்தச் சட்டங்கள் கூறின. சோவியத் பல்தேசிய அரசு நிறுவப்பட்ட முதல் இரு பத்தாண்டுகளில் இந்த ஒன்றிணைதல் சிறப்பான துரித வேகத்தில் நடைபெற்றது. இப்பொழுது சோவியத்

## சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த ஒன்றியக் குடியரசுகள்

| குடியரசுகள் | நிறுவப்பட்ட தேதி | சோவியத் ஒன்றியத்துடன் இணைந்த தேதி | பரப்பு (1,000 சதுரக் கிலோமீட்டர்) | மக்கள் தொகை (இலட்சம்)[1] |
|---|---|---|---|---|
| ரு. சோ. கூ. சோ. கு. | 1917 நவம்பர் 7 | 1922 டிசம்பர் 30 | 17,075. 4 | 1,337.28 |
| உக்ரேனியா | 1917 டிசம்பர் 25 | 1922 டிசம்பர் 30 | 603.7 | 488.30 |
| பைலோருஷ்யா | 1919 ஜனவரி 1 | 1922 டிசம்பர் 30 | 207.6 | 93.40 |
| உஸ்பெக்கிஸ்தான் | 1924 அக்டோபர் 27 | 1924 அக்டோபர் 27 | 447.4 | 136.95 |
| கஸாகுஸ்தான் | 1920 ஆகஸ்டு 26 | 1936 டிசம்பர் 5 | 2,717.3 | 141.70 |
| ஜார்ஜியா | 1921 பிப்ரவரி 25 | 1936 டிசம்பர் 5 | 69.7 | 9.23 |

| | | | | |
|---|---|---|---|---|
| அஸர்பைஜான் | 1920 ஏப்ரல் 28 | 1936 டிசம்பர் 5 | 86.6 | 56.06 |
| லித்துவேனியா | 1940 ஜூலை 21 | 1940 ஆகஸ்டு 3 | 65.2 | 32.90 |
| மோல்தாவியா | 1924 அக்டோபர் 12 | 1940 ஆகஸ்டு 2 | 33.7 | 38.06 |
| லாத்வியா | 1940 ஜூலை 21 | 1940 ஆகஸ்டு 5 | 63.7 | 24.78 |
| கிர்கீசியா | 1936 டிசம்பர் 5 | 1936 டிசம்பர் 5 | 198.5 | 32.94 |
| தாஜிக்கிஸ்தான் | 1929 அக்டோபர் 16 | 1929 அக்டோபர் 16 | 143.1 | 33.85 |
| ஆர்மீனியா | 1920 நவம்பர் 29 | 1936 டிசம்பர் 5 | 29.8 | 37.90 |
| துருக்மேனியா | 1924 அக்டோபர் 27 | 1924 அக்டோபர் 27 | 448.1 | 24.95 |
| எஸ்தோனியா | 1940 ஜூலை 21 | 1940 ஆகஸ்டு 6 | 45.1 | 14.29 |

[1] 1974 ஆம் ஆண்டுப் புள்ளிவிவரங்கள்.

சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசுகள்

| சுயாட்சி குடியரசுகள் | நிறுவப்பட்ட தேதி | பரப்பு (1,000 சதுரக் கி. மீ.) | மக்கள் தொகை (ஆயிரம்)[1] |
|---|---|---|---|
| ரு. சோ. கூ. சோ. கு. | | | |
| உத்மூர்த்தியா | 1934 டிசம்பர் 28 | 42.1 | 1,444 |
| கபர்தீனோ-பல்க்காரியா | 1936 டிசம்பர் 5 | 12.5 | 643 |
| கரேலியா | 1923 ஜூலை 25 | 172.4 | 725 |
| கல்மீக்கியா | 1935 அக்டோபர் 20 | 75.9 | 273 |
| கோமி | 1936 டிசம்பர் 5 | 415.9 | 1,023 |
| சுவாஷியா | 1925 ஏப்ரல் 21 | 18.3 | 1,264 |
| செச்சேனோ-இங்கூஷியா | 1936 டிசம்பர் 5 | 19.3 | 1,140 |
| தாகெஸ்தான் | 1921 ஜனவரி 20 | 50.3 | 1,573 |
| தாத்தாரியா | 1920 மே 27 | 68.0 | 3,298 |
| துவா | 1961 அக்டோபர் 10 | 170.5 | 251 |
| பஷ்கீரியா | 1919 மார்ச் 23 | 143.6 | 3,828 |
| புரியாத்தியா | 1923 மே 30 | 351.3 | 845 |
| மாரியா | 1936 டிசம்பர் 5 | 23.2 | 693 |
| மார்தோவியா | 1934 டிசம்பர் 20 | 26.2 | 996 |

| சுயாட்சி குடியரசுகள் | நிறுவப்பட்ட தேதி | பரப்பு (1,000 சதுரக் கி. மீ.) | மக்கள் தொகை (ஆயிரம்)[1] |
|---|---|---|---|
| யக்கூத்தியா | 1922 ஏப்ரல் 27 | 3,103.2 | 750 |
| வட ஒசேத்தியா | 1936 டிசம்பர் 5 | 8.0 | 586 |
| | உஸ்பெக்கிஸ்தான் | | |
| காரா-கல்பாக் | 1932 மார்ச் 30 | 165.6 | 804 |
| | ஜார்ஜியா | | |
| அப்ஹாசியா | 1921 மார்ச் 4 | 8.6 | 499 |
| அஜாரியா | 1921 ஜூன் 16 | 3.0 | 339 |
| | அஸர்பைஜான் | | |
| நகிச்செவான் | 1924 பிப்ரவரி 9 | 5.5 | 224 |

[1] 1975 ஜனவரி 1ன் புள்ளிவிவரங்கள்.

ஒன்றியத்தில் 20 சுயாட்சி சோவியத் குடியரசுகளும், 8சுயாட்சிப் பிராந்தியங்களும், ஓரளவு சிறிய தேசியக் குழுக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் 10 சுயாட்சி மாவட்டங்களும் உள்ளன. 131 தேசங்களும் தேசியக் குழுக்களும் வாழும் சோவியத் ஒன்றியத்தில் 53 குடியரசுகள், சுயாட்சிப் பிராந்தியங்கள், சுயாட்சி மாவட்டங்கள் உள்ளன. சில குடியரசுகள் பல தேசியக் குழுக்களை உட்கொண்டிருக்கும் தேசிய அரசு வடிவமாக உள்ளன. உதாரணமாக, தாகெஸ்தான் 30 தேசியக் குழுக்களின் அரசாக விளங்கியது.

சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசுகள் சோவியத் ஒன்றிய அரசில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றன.

அவை பல்வேறு தேசங்கள், தேசியக் குழுக்களின் தேசிய சர்வசுதந்திர உரிமையினை உருவகப்படுத்தும் சோவியத் தேசிய அரசின் ஒரு வடிவமாகும், அதோடு இந்த தேசங்கள் தமது உள் விவகாரங்களைத் தாமே நிர்வாகம் செய்வதற்கான அரசு மற்றும் அரசியல் சுயாட்சியை உறுதி செய்யும் ஒரு வடிவமாகும்; சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசுகள் தமது பிரதேச எல்லைக்குள் தமது அதிகாரத்தகமைக்கு ஏற்ப சுயாட்சி அடிப்படையில் ஆட்சி அதிகாரம் அமுல் நடத்துகின்றன.

ஒரு சுயாட்சிக் குடியரசுக்கு ஒரு தேசிய அரசின் எல்லாச் சிறப்புக் கூறுகளும் உள்ளன. அதற்குத் தனக்கே சொந்தமான அரசியல் அமைப்புச் சட்டம், சட்டமியற்றல், சுப்ரீம் சோவியத் உள்ளிட்ட உயர் அரசாங்க அமைப்புகள், செயல் துறை மற்றும் நிர்வாக அமைப்புகள், அமைச்சரவை, உயர் நீதிமன்றம், இதர நீதித்துறை அமைப்புகள் யாவும் உண்டு. சுயாட்சிக் குடியரசின் வடிவத்தை எடுத்து விட்ட ஒரு தேசம் தனது உயர் மற்றும் ஸ்தல அரசு அமைப்புகள் மூலம் தனது சர்வசுதந்திர உரிமையைச் செயல்படுத்துகிறது. ஒன்றியக் குடியரசின் உள்ளார்ந்த பகுதியான சுயாட்சிக் குடியரசுக்கு ஓர் அரசு என்ற முறையில் சர்வ சுதந்திர உரிமை இல்லை. ஆனால், முதலாவதாக, ஒரு சுயாட்சிக் குடியரசுக்கு ஒரு முழு உரிமையுள்ள அரசின் அடையாளங்கள் யாவும் உள்ளார்ந்து கிடக்கின்றன. தேசம் தனது சுதந்திர சித்தத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில் இக்குடியரசு முழு உரிமையுள்ள அரசாகலாம்; சோவியத் அரசின் வரலாற்றில் இத்தகைய நிகழ்ச்சிகள் பல தடவை ஏற்பட்டுள்ளன. இரண்டாவதாக, சோவியத் ஒன்றிய அரசின் ஒரு பகுதி என்ற முறையில் ஒரு சுயாட்சிக் குடியரசு அது சேர்ந்துள்ள ஒன்றியக் குடியரசின் மற்றும் சோவியத் ஒன்றியம் அனைத்தின் சர்வசுதந்திர உரிமையைச் செயல்படுத்தப் பல்வேறு வழிகளில் பங்கு பற்றுகிறது. காரணம் இது சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் தேசிய இனங்களின் சபையில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது.

ஒரு கூட்டாட்சி சோஷலிச அரசு என்ற முறையில் சோவியத் ஒன்றியத்தின் ஐம்பதாண்டு காலத்திற்கும் அதிகமான

வளர்ச்சி அதன் அடிப்படைக் கோட்பாடுகள் உயிராற்றல் பெற்றுள்ளன என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. இந்தக் கோட்பாடுகள் கீழ்வருவனவாகும்:

முதலாவதாக, ஒரு கூட்டரசு என்ற முறையில் சோவியத் ஒன்றியம் சோவியத்துகள் மற்றும் சோவியத் முறையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதன் உள்ளமைப்பு சோவியத் சோஷலிச அரசுகளாகும்.

இரண்டாவதாக, சோவியத் ஒன்றியத்திற்கு ஒரு தேசிய மற்றும் பிரதேச அடிப்படை உண்டு. சோவியத் கூட்டிணைப்பின் உறுப்புகள் (சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம், ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு) தேசிய நிர்வாக அமைப்புகள் அல்லது தேசிய அரசாங்க அமைப்புகளாகும். சர்வசுதந்திர உரிமையுள்ள தேசிய அரசுகள்—ஒன்றியக் குடியரசுகள்—ஒரு கூட்டரசு என்ற முறையிலான சோவியத் ஒன்றியத்தின் உள்ளமைப்புகளாகும். சோவியத் கூட்டரசு பல்தேசிய அரசில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஒரு ஆக முக்கியமான முறையாகும்.

முதலாளித்துவக் கூட்டரசுகள் பொதுவாகப் பிரதேச ஒருங்கிணைப்பை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றின் பிரதேசத்தில் வாழும் தேசிய இனங்களின் சட்டத்துறை அரசு உறவுகள் பற்றி எவ்வித கவனமும் செலுத்தப்படுவதில்லை. கூட்டரசு கட்டமைப்புக் கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடு தனி அரசுகளை நிறுவும் விஷயத்தில் தேசியச் சிறுபான்மையினரின் நலன்களைக் கவனத்தில் கொள்வதில்லை (அதனிடம் 50 அரசுகளும் 10 தேசிய இனங்களும் உள்ளன). அமெரிக்காவின் சட்டமியற்றும் மற்றும் கூட்டரசு அமைப்புகளின் நிலையும் இதுவே. அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த அரசுகளுக்குப் பிரதிநிதித்துவமளிக்கும் கோட்பாட்டை அடிப்படையாக வைத்திருந்த பொழுதிலும், செனட் சபையானது நீக்ரோ மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி வரும் பொழுதில் இன்று மிகவும் அவசரமாகியுள்ள தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில்லை. இதர முதலாளித்துவக் கூட்டரசுகளின் நிலையும் இதுவே.

மூன்றாவதாக, சோவியத் கூட்டரசு அடிப்படையாகக் கொண்டுள்ள இன்னொரு கோட்பாடு, சோவியத் தேசிய

அரசுகளின் சுயவிருப்ப ஒப்புதலாகும். சோவியத் குடியரசுகளின் சுயவிருப்ப ஒன்றிணைப்புக்குக் கட்சி மாபெரும் முக்கியத்துவம் அளித்தது, லெனினும் அவ்வாறே அளித்தார். 1919ல் சுதந்திரக் குடியரசுகள் (குறிப்பாக உக்ரேனியா) ருஷ்யாவின் கூட்டாட்சியில் முழுமையாகச் சேர்ந்து இணைந்து விடுவது, அல்லது அதனுடன் நெருக்கமான கூட்டரசு உறவுகளை நிறுவிக் கொள்வது என்ற பிரச்சினையை சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது லெனின் ''தெனீக்கின் மீதான வெற்றி குறித்து உக்ரேனியத் தொழிலாளர், விவசாயிகளுக்கு ஒரு கடிதம்'' எழுதினார். அதில் இரு குடியரசுகளுக்கும் இடையான ஒரு வலுவான ஒன்றியம் எடுக்கக் கூடிய சாத்தியமான வடிவங்கள் என்ன என்பதை விளக்கி மிகவும் முக்கியமான அம்சத்தை வலியுறுத்தியிருந்தார். அவர் கூறியதாவது: ''நாம் விரும்புவது தேசங்களின் **சுயவிருப்பமான** ஒன்றியம்—ஒரு தேசம் இன்னொரு தேசத்தைப் பலவந்தப் படுத்த இடம் தராத ஒன்றியம்—பரிபூரண நம்பிக்கையுடனும், சோதர ஒற்றுமையை தெளிவாக அங்கீகரித்து முற்றிலும் சுயவிருப்ப ஒப்புதல் மீதும் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றியத்தையே நாம் விரும்புகிறோம்''[1].

முதலாளித்துவத்தின் கீழ் கூட்டரசை நிறுவுவதில் சுயவிருப்பக் கோட்பாடு மற்றும் சுயவிருப்பமாகப் பிரிந்து செல்வது பற்றிய கோட்பாடு கிடையாது. சில சமயம் முதலாளித்துவக் கூட்டரசின் சில பகுதிகள் தனிப்பட்ட பிரதேசங்களை விலைக்கு வாங்குவதால் (லூயிசியானா, பிளாரிடா மற்றும் அலாஸ்கா) அல்லது நிலப்பரப்பைக் கவர்ந்ததால் (டெக்சாஸ், நியூ மெக்சிகோ, கலிபோர்னியா, மற்றும் அரிசோனா) அதற்குள் வந்தவை. இந்த இரண்டு விஷயத்திலும் அப்பிரதேசங்களின் மக்களிடம் கலந்தாலோசிக்கப்படவில்லை. சில கூட்டரசுகள் செயற்கையாக நிறுவப்பட்டன, வெளியிலிருந்து வந்த பலமான நிர்ப்பந்தத்தால் மக்கள் மீது திணிக்கப்பட்டவை (உதாரணமாக: மலேஷியா).

ஒன்றியக் குடியரசுகளுக்கு ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்லும் உரிமை உண்டு. இந்த உரிமை ஒரு கூட்டரசில் அவை ஒன்றிணைவதன் சுயவிருப்பத் தன்மையினை உத்தரவா

---

[1] V. I. Lenin, *Collected Works*, Vol. 30, p. 293.

தம் செய்கிறது. சோவியத் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் போது இது முதலில் வகுக்கப்பட்டது, பின்னல் சோவியத் ஒன்றியத்தின் 1924ம், 1936ம் ஆண்டு அரசியல் அமைப்பு சட்டங்களிலும் இன்னும் அமுலில் இருந்து வரும் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இணைக்கப் பெற்றது. அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் நகல் நாடுதழுவிய அளவில் விவாதிக்கப்பட்ட பொழுது நடைமுறை முக்கியத்துவம் இல்லாத காரணத்திஞல் (சோவியத் அரசின் வரலாற்றில் ஓர் ஒன்றியக் குடியரசு ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்ல முடிவு செய்த சம்பவமே கிடையாது), இந்த உரிமையை உத்தரவாதம் செய்யும் விதியை அகற்றி விடலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. ஆனல் சோவியத்துகளின் எட்டாவது அகில ஒன்றியத்தின் விசேஷ காங்கிரஸ் இந்த யோசனையை நிராகரித்தது, காரணம் ஒன்றியத்திலிருந்து ஒரு ஒன்றியக் குடியரசு பிரிந்து செல்வதற்கான உரிமை ஒன்றியத்தின் உறுப்பு அரசுகளின் சுயவிருப்பத் தன்மைக்கும் ஒன்றியக் குடியரசுகளின் சமத்துவத்திற்கும் முக்கியமான அரசியல்-சட்ட உத்தரவாதமாகத் திகழ்கின்றது என்பதே.

நாலாவதாக, சோவியத் கூட்டரசு அதன் உறுப்பு அரசுகளின் சமத்துவம் என்ற கோட்பாட்டை அடிப்படையாக வைத்திருக்கிறது. அது தேசத்தின் சர்வசுதந்திர உரிமை அங்கீகரிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு உள்ளது. இந்தக் கோட்பாடு 1924ம் ஆண்டு முதல் ஒன்றிய அரசியல் அமைப்புச் சட்டத்திலும், சோவியத் ஒன்றியத்தின் 1936ம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதி 13லும் உருப் பெற்றிருந்தது. இந்த விதி சோவியத் ஒன்றியம் சமத்துவமுடைய சோவியத் குடியரசுகளின் சுயவிருப்ப ஒன்றிணைவிஞல் நிறுவப் பெற்ற ஓர் ஒன்றிய அரசு என்று வரையறுக்கிறது. நிலப்பரப்பின் அளவு மற்றும் மக்கள் தொகை எதுவாக இருந்த பொழுதிலும் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் சபைகளில் ஒன்முன தேசிய இனங்களின் சபையில் எல்லா ஒன்றியக் குடியரசுகளுக்கும் ஒரே எண்ணிக்கையிலான பிரதிநிதிகள் உள்ளனர்.

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தில் 58 தேசிய இனங்களின் பிரதிநிதிகள் உள்ளனர். சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்திலுள்ள ஒன்

றியத்தின் சபை பல்வேறு தேசிய இனங்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தேசிய இனங்களின் சபையில் ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகள், சுயாட்சிப் பிராந்தியங்கள், சுயாட்சி மாவட்டங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளனர். 1966ல் தேசிய இனங்களின் சபையில் ஒன்றியக் குடியரசுகளின் பிரதிநிதித்துவம் விரிவாக்கப் பட்டது. இரு சபைகளும் ஏககாலத்தில் கூடுகின்றன. அரசு மற்றும் சமுதாய வாழ்க்கை பற்றிய பல்வேறு பிரச்சினைகளை விவாதிக்கவும் சட்டங்களை அங்கீகரிக்கவும் இச்சபைகளின் பிரதிநிதிகளுக்கு சம உரிமைகளும் வாய்ப்புகளும் உண்டு.

ஆகச் சிறிய தேசியக் குழுக்கள்கூட சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத், ஒன்றியக் குடியரசுகள் மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. பல்தேசிய சோவியத் சோஷலிச அரசு பற்றிய லெனினது கருத்து எல்லா உயர் அரசு அமைப்புகளிலும் முன் என்றும் இருந்திராத வகையில் சோவியத் உழைக்கும் மக்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பதில் வெளிப்படுகிறது.

1970ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி ஒன்றியக் குடியரசுகளுக்குத் தமது பெயர்கள் இட்டுள்ள 15 தேசங்களைச் சேர்ந்தவர்கள் நாட்டின் மக்கள் தொகையில் 90 சதவிகிதமாக இருந்தார்கள். 5 லட்சம் முதல் 50 லட்சம் வரை மக்கள் தொகை கொண்ட ஆறு தேசங்கள் (தாத்தாரியர், சுவாஷியர், மர்த்வீனியர், பஷ்கீரியர், உத்மூர்த்தியர், மாரியர்) நாட்டின் மக்கள் தொகையில் 8 சதவிகிதம் ஆகும்.

இருபத்தொன்று தேசங்கள் சோவியத் ஒன்றியத்தின் மக்கள் தொகையில் 98 சதவிகிதம் உள்ளன. அதாவது நாட்டின் மக்கள் தொகையில் முழுமையான பெரும்பான்மையாக உள்ளன. சுருங்கக் கூறின் உருவாகியுள்ள தேசங்கள் சோவியத் மக்கள் இனங்களின் இனமரபு வாழ்க்கையைச் சிறப்பித்துக் காட்டுகின்றன. ஆனல் சோவியத் மக்கள் தொகையில் 2 சதவிகிதமே உள்ள 100க்கு மேற்பட்ட தேசியக் குழுக்கள் சோவியத் தேசங்களின் சோதரக் குடும்பத்தில் சம உரிமைகளையும் மதிப்பையும் அனுபவிக்கின்றன, மேலும் வளர்ச்சியடைவதற்கான சகல வாய்ப்புகளையும் பெற்றுள்ளன. சோவியத் ஒன்றியத்தின் மக்கள் தொகையில் 0.06 சதவிகிதமே

கொண்ட தொலை வடக்கிலுள்ள தேசியக் குழுக்களின் நிலைமையும் இத்தகையதே. தாகெஸ்தானிலுள்ள தேசியக் குழுக்கள் நாட்டின் மக்கள் தொகையில் 0,5 சதவிகிதமே, சோவியத் அரசு நிறுவப்பட்ட பிறகு ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசினுள் தேசிய சுயாட்சியினைப் பெற்ற தேசிய இனங்களான புரியாத்துகள் (315,000), யக்கூத்துகள் (296,000), கபர்தீனியர்கள் (280,000), கல்மீக்குகள் (137,000), துவின்கள் (139,000); உஸ்பெக்கிஸ்தானிலுள்ள காரா-கல்பாக்குகள் (236,000) இதே உரிமைகளைப் பெற்றிருந்தார்கள். 1970ல் இந்த தேசிய சுயாட்சிக் குடியரசுகளின் மக்கள் தொகை, நாட்டின் மொத்தம் சுமார் 24.2 கோடியில் 32 லட்சமாக இருந்தது. அவற்றுக்கு தேசிய இனங்களின் சபையில் மொத்தமுள்ள 750 இடங்களில் 68 பிரதிநிதிகள் உள்ளனர். இவ்வாறாக, நாட்டின் மக்கள் தொகையில் ஒரு சதவிகிதத்திற்கும் அதிகமாக இருக்கும் மேலே குறிப்பிட்ட ஆறு மக்கள் இனங்களுக்கு இந்த சபையில் 9 சதவிகிதம் பிரதிநிதிகள் உள்ளனர். இதிலிருந்து பெரிதும் சிறிதுமான சோஷலிசத் தேசங்கள் உண்மையில் சமமாக உள்ளன என்பது தெளிவாகும். கடந்த அறுபதாண்டுகளுக்கும் அதிகமாக உண்மையான புரட்சிகர ஜனநாயகத்தை அனுபவித்து வரும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் நாட்டில் இந்த சமத்துவம் முற்றிலும் இயல்பானதே.

ஒவ்வொரு ஒன்றியக் குடியரசுக்கும் ஒருவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் குடியரசின் பிரதிநிதிகள்—சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்து சுப்ரீம் சோவியத்தின் உறுப்பினர்கள்—சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவிலுள்ள 15 உபதலைவர்களாவர். ஒன்றியக் குடியரசுகளின் அமைச்சரவைத் தலைவர்கள், அவர்கள் வகிக்கும் பதவி காரணமாக, அரசாங்கத்தில்—சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அமைச்சரவையில்—அங்கம் வகிக்கிறார்கள். ஒன்றியக் குடியரசுகளின் உயர் நீதி மன்றத் தலைவர்கள், அவர்கள் வகிக்கும் பதவி காரணமாக சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் உயர் நீதி மன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.

மேலும், சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் விசேஷக் கூட்டத்தைக் கூட்டு

மாறு, சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத் தலைமை குழுவிடம் கோருகின்ற உரிமை ஒவ்வொரு ஒன்றியக் குடியரசுக்கும் உண்டு.

சோவியத் ஒன்றியத்தில் சேர்ந்த குடியரசுகளின் சமத்துவம், சட்டத்தினால் மட்டுமின்றி, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளினாலும் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

ஐந்தாவதாக, சோவியத் கூட்டரசின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஜனநாயக மத்தியத்துவமும் அடங்கும். இந்தக் கோட்பாடு கூட்டரசின் சட்ட மற்றும் ஒழுங்கமைப்பு அடிப்படையாகும்.

ஜனநாயக மத்தியத்துவம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், சோவியத் அரசு வடிவத்தின் அமைப்பையும் பணிகளையும், கருராக நிர்மாணிக்கிற மேலும் பொதுவான ஒரு கோட்பாட்டின் அடித்தளத்தில் குறிப்பிடப்படும் இந்தக் கோட்பாடு அமைந்துள்ளது: கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையுள்ள அரசு ஆட்சியகாரத்தின் எல்லா அமைப்புக்களும் தேர்ந்தெடுக்கப்படுவது, இவ்வமைப்புக்கள் மக்களுக்கு வகை சொல்லக் கடவது, உயர் மட்ட அமைப்புக்கள் எடுக்கும் முடிவுகளுக்கு கீழ் மட்ட அமைப்புக்கள் கட்டுப்படுவது ஆகியவை ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டில் அடங்கும். ஆங்காங்கு எடுத்துக் கொள்ளப்படுகிற முன்முயற்சியுடனும் ஆக்க பூர்வச் செயல்பாட்டுடனும், ஒவ்வொரு அரசு அமைப்பின் பொறுப்புடனும் கொடுக்கப்பட்டுள்ள பணியை நிறைவேற்றுகிறவரின் பொறுப்புடனும் ஒற்றைத் தலைமையை இணைத்து வைக்கிறது ஜனநாயக மத்தியத்துவம். சோவியத் ஒன்றியத்தை ஓர் கூட்டரசாக நிறுவியதில் கிட்டிய அனுபவம் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டை பிராந்திய சுயாட்சியுடன் மட்டுமின்றி ஒன்றியக் குடியரசுகளின் சர்வசுதந்திர உரிமையை உத்தரவாதம் செய்யும் சோஷலிசக் கூட்டரசுக் கட்டமைப்போடும் இணைக்கமுடியும் என்பதைக் காட்டியது. ஜனநாயக வகையில் மத்தியத்துவப்படுத்தப் பெற்ற கூட்டரசு, அதில் சேரும் அரசுகளின் சுதந்திரமான, தங்கு தடையற்ற வளர்ச்சிக்கு வகை செய்கிறது. ஜனநாயக மத்தியத்துவம் என்ற அடிப்படைக் கோட்பாடு, மத்தியத்துவப்படுத்தப் பெற்ற தலைமையினைக் கூட்டரசு அடிப்படையில் வலுப்படுத்துகிறது, கூட்

டரசு, உறுப்பு பகுதிகளின் உரிமைகளையும் அதிகாரத்தை யும், அவற்றின் செயல்பாட்டுத் துறைகளையும் விரிவாக்கு கிறது.

ஆறுவதாக, ஒரு கூட்டரசு என்ற முறையில் சோவியத் ஒன்றியத்தின் அடிப்படை அம்சம், தேசிய சுயநிர்ணயம் என்ற அடிப்படைக் கோட்பாட்டின் அடித்தளத்தில் தேசிய அரசுத்துவம் வளர்ச்சி அடைவதை சாத்தியமாக்குவதாகும். ஏற்கனவே கூறப்பட்டபடி, சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம், சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை, தேசங்களின் சுதந்திரமான சுய நிர்ணய உரிமையின்படி, கூட்டரசுக் கோட்பாட்டின்படி உருவான ஐக்கிய ஒன்றிய பலதேச அரசு என்று வரையறுக்கிறது (70ஆவது விதி). மக்களின் சர்வசுதந்திர விருப்பத்திற்கு ஏற்ப பல சுயாட்சிக் குடியரசுகள் ஒன்றியக் குடியரசுகளாக (சர்வசுதந்திர உரிமையுள்ள அரசுகளாக) மாற்றம் அடைந்தன. சோவியத் கூட்டரசின் நெளிவு சுளிவான தன்மையும், அதன் வடிவங்களின் நெகிழ்திறமும் அதன் வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகித்துள்ளன.

சோவியத் ஒன்றியம் உருவாக்கப்பட்டதானது தேசங்கள், தேசியக் குழுக்களினிடையே எவ்வாறு அசமத்துவத்தைப் போக்குவது, சுயவிருப்பக் கோட்பாட்டுக்கு ஏற்ப, சமத்துவம் மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம் என்ற அடிப்படையில் மக்களினங்களை எவ்வாறு ஒற்றுமைப் படுத்துவது என்பதை முற்போக்கு மனித குலத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளது.

அத்தியாயம் 4

# சோஷலிச தேசங்களின் மற்றும் அனைத்து சோவியத் மக்களின் சித்தத்தின் வெளியீடு என்ற முறையில் அரசுரிமை

சோவியத் நாட்டில் அரசுரிமை, தேசிய மற்றும் மக்களின் சர்வசுதந்திர உரிமையினை அடிப்படையாக்கியதாகும். அரசுரிமையே அனைத்து மக்களின், ஒவ்வொரு தேசம் மற்றும் தேசியக் குழுவின் சர்வசுதந்திர சித்தத்தின் ஆக முக்கியமான வெளியீடாகும். இவ்வாறாக, கூட்டாட்சி உறவுகளின் தனி இயல்புகள் பற்றியும், ஒன்றிய அரசு என்ற சிக்கலான யந்திரத்தின் செயற்பாடு பற்றியும் ஒரு தெளிவான சித்திரத்தை முன்வைக்க நாம் விரும்புவோமானால், அரசுரிமை பற்றிய கருத்தை, தேசிய சர்வவுரிமை மற்றும் மக்களின் முழு ஆட்சியோடான அதற்குள்ள உறவுகளின் வெளிச்சத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அரசுரிமை என்பது ஆட்சியதிகாரத்தின் சாரத்தை வெளிப்படுத்தும் அதன் பறிக்க முடியாத உள்ளார்ந்து கிடக்கும் அம்சங்களின் ஒட்டுமொத்தமாகும், அரசின் உள்நாட்டு மற்றும் அயல்துறை நடவடிக்கைகளின் அரசியல்-சட்ட வடிவங்களில் வெளிப்பாடாகும். இந்த அம்சங்கள், ஒரு நாட்டில், ஆட்சியதிகாரம் மேலோங்கி இருப்பதும், சர்வதேச சட்ட உறவுகளில் அது வேறு எந்த நாட்டிடமிருந்தும் சுதந்திரமாக இருப்பதுமேயாகும்.

அரசுரிமையின் சாரத்தைப் பரிசீலிப்பதற்கு முன்னால் ஆட்சி அதிகாரத்தின் சாரத்தையும் அதன் சர்வசுதந்திர அம்சங்களின் வெளியீடுகளையும் பற்றி ஆராய வேண்டும். ஒரு சமுதாய நிகழ்வு என்ற முறையில் ஆட்சி அதிகாரம் என்பது திட்டவட்டமான அதிகார உறவுகளால் வெளியிடப்படும் ஒரு சமூகச் செயல்பாடு ஆகும். மக்களின் சமூக வாழ்க்கை, அவர்களது நடத்தை மற்றும் பரஸ்பர உறவுகளை முறைப்

படுத்த சமுதாயத்திற்கு அதிகாரம் தேவை. சமுதாய வளர்ச்சியின் அளவு மற்றும் சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினைகள் எதுவாக இருந்த போதிலும் உற்பத்தி நிலைமைகள் காரணமாக ஆட்சி உறவுகள் கட்டாயமாக நிலைநாட்டப்பட வேண்டும். எங்கெல்ஸ் எழுதியது போன்று "எல்லா சமூக அமைப்புகளையும் சாராத ஒருவிதமான அதிகாரம், ... ஒருவிதமான கீழடங்குதல் நம்மீது திணிக்கப்படுகிறது, இதோடு கூடவே நாம் உற்பத்தி செய்து, பண்டங்களைப் புழங்கச் செய்வதற்கான பொருளாயத நிலைமைகளும் ஏற்படுகின்றன"[1].

திட்டவட்டமான பொருளாயத, சித்தாந்த, உளவியல் உறவுகளின் வெளிப்பாடு என்ற முறையில் ஒரு வர்க்க சமுதாயத்தில் அரசு நிறுவப்படும் பொழுது ஆட்சி அதிகாரம் புதிய பண்புத் தன்மைகளைப் பெறுகிறது. பொருளாதாரத் துறையில் ஆளும் வர்க்கம் அரசியல் ஆட்சி அதிகாரத்தைச் செலுத்துகின்றது. இந்த வர்க்கம் ஒழுங்கமைக்கப்படும் வன்முறை (அரசு யந்திரம்) மூலம் இதர வர்க்கங்களைப் பலவந்தப் படுத்துகிறது, வர்க்க எதிரிகளை ஒடுக்குகிறது, தனது சொந்த நலன்களுக்காக சமூக விவகாரங்களை நிர்வாகம் செய்கிறது. சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு அடிப்படையிலேயே புதிய வடிவிலான அரசாட்சி முறை தோன்றுகிறது. இந்த ஆட்சியின் ஆக முக்கியமான அம்சம் என்னவென்றால் வரலாற்றிலேயே முதல் தடவையாக இது மக்களுக்குச் சொந்தமானதாக இருக்கிறது. அதாவது, தொழிலாளர்களுக்கும் அவர்கள் தலைமை தாங்கி வரும் உழைக்கும் மக்களுக்கும் சொந்தமானதாக இருக்கிறது. சோஷலிசத்தின் கீழ் ஆட்சியின் அதிகார உறவுகள் தனித்தன்மை வாய்ந்தவை, "ஆட்சியாளர்கள்" மக்களுக்குப் பொறுப்பாக இருக்கிறவர்கள், மக்களின் கண்காணிப்புக்கு உட்படுகிறவர்கள், அதன் மூலம் மக்களுக்குக் கீழடங்குகிறவர்கள். அரசு அதிகாரம் முழுவதும் "ஆளப்படுவோரிடம்" உள்ளது, தலைமை தாங்குவோரும் தலைமை தாங்கப்படுவோரும் "கூட்டு எஜமானர்கள்". அவர்கள் ஏககாலத்தில் ஆட்சி செலுத்துவோராகவும் ஆட்சிக்கு உட்படுவோராகவும், நிர்வாகிகளாயும் நிர்வகிக்கப்படு

---

[1] பி. எங்கெல்ஸ், "வரலாற்றில் பலத்தின் பாத்திரம்" (K. Marx, F. Engels, *Selected Works*, Vol. 3, p. 378).

வோராகவும், கட்டுப்படுத்துவோராயும் கட்டுப்படுத்தப்பட்டோராயும் விளங்குகின்றனர்.

ஆட்சி அதிகாரம், அதாவது வர்க்க சர்வாதிகாரம் (ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கம்) இறுதியாக சமூகத்தின் பொருளாதார அமைப்பையே அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும். உற்பத்தி முறையில், உற்பத்தி சாதனங்களின் உடைமையாளர் உற்பத்தியாளர்களை நோக்கித் தோற்றுவிக்கும் நேரடியான உறவுகளில் மட்டுமே "சமுதாயக் கட்டமைப்பு முழுவதன் ஆக உட்கிடக்கையான இரகசியமும், ஒளி மறைவான அடிப்படையும், அதோடு கூடவே சர்வசுதந்திர உரிமைக்குரிய உறவின் அரசியல் வடிவமும்" காண முடியும் என்று மார்க்ஸ் கூறினார்[1].

ஒரு வர்க்க சமுதாயத்தில் ஆட்சி அதிகாரம், சமுதாய உறவுகளையும் மற்றும் சமுதாயத்தின் உறுப்பினர்களின் நடத்தையையும் ஒழுங்கமைக்கும் ஓர் அரசியல் சக்தி என்ற முறையில் முக்கியமான பாத்திரம் வகிக்கிறது. இந்த அதிகாரம் ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கிறது, இவ்வாறு இவை பொதுவான முக்கியத்துவம் பெற்று விடுகின்றன.

ஒரு சமுதாயம் புரியும் அரசியல் செயல்பாடுகளின் அனைத்து அம்சங்களும் ஏதாவது ஒரு வகையில் ஆட்சி அதிகாரத்துடன் பந்தப்பட்டவையாகும். எனவே லெனின் அரசியலை, அரசின் விவகாரங்களில் பங்கு கொள்வது, அரசுக்கு வழி காட்டுவது, அரசின் முன் உள்ள கடமைகளையும் அதன் நடவடிக்கைகளின் வடிவங்கள் உள்ளடக்கத்தையும் நிர்ணயிப்பது என்று வரையறுத்துக் கூறினார்.

இன்றைய வர்க்க சமுதாயத்தில் எதாவது ஒரு சில அரசியல் நடவடிக்கைகளில் அறவே இறங்காத வெகுஜன நிறுவனங்கள் எதுவும் இல்லை எனலாம்.

ஆட்சியதிகாரத்தின் பலம் மற்றும் மேலாண்மையின் அடிப்படையில் மட்டுமே மாறி வரும் காலகட்டத்தின் முரண்பாடுகளை வென்று அகற்ற முடியும், சோஷலிசக் கோட்பாடுகளின் மீது சமூக உறவுகளை மறுசீரமைக்க முடியும் என்பதை அனுபவம் காட்டுகிறது. லெனின் எழுதினார்: "சுரண்டலாளர்களுடைய எதிர்ப்பை நசுக்குவதற்கும் சோஷலிசப்

[1] K. Marx, *Capital*, Vol. 3, Moscow, 1959, p. 773.

பொருளாதாரத்தை 'ஒழுங்கமைப்பதில்' மாபெரும் திரள்களான மக்களுக்கு—விவசாயிகளும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரும், அரைப் பாட்டாளி வர்க்கத்தினருமானேருக்கு—தலைமை தாங்குவதற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கு அரசு அதிகாரம், பலத்தின் மத்தியத்துவ நிறுவன ஒழுங்கமைப்பு, பலாத்காரத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு தேவைப்படுகிறது''[1].

இவ்வாருக லெனின் ஒரு சோஷலிச அரசாட்சியின் நோக்கங்களையும் கடமைகளையும் வரையறுத்தார். அவரது வரையறுப்பு அரசுரிமையின் சாரத்தைப் புரிந்து கொள்வதற்கு மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் உடையதாகும்.

ஆட்சி அதிகாரம் பற்றிய லெனினது கருத்தில் குறைந்த பட்சம் மூன்று கூறுகள் உண்டு, அவை அரசுரிமையில் வெளியீடாகியுள்ளன.

முதலாவதாக, ஆட்சியதிகாரம் ஆளும் வர்க்கத்தின் சமூக சக்தியாகும், இங்கு இது பாட்டாளி வர்க்கத்தினுடையதாகும். இந்த சக்திதான் சமுதாயத்தில் ஆளும் வர்க்கமாகத் தன்னைத் தானே நிலைநாட்டிக் கொள்ள உதவுகிறது. இந்த சக்தி (அரசாட்சி) பூரணமான ஆதிக்கம் செலுத்தும் தலைமை சக்தியாக, மேலோங்கிய சக்தியாக இருத்தல் வேண்டும். மேலோங்கிய சக்தி என்ற முறையில் அரசாட்சி மேலோங்கிய வர்க்கத்தின் நேரடி ஆட்சி தவிர சமுதாயத்தில் வேறு எந்த ஆட்சியும் நிலவுவதை சாத்தியமற்றதாக்கி விடும்.

இரண்டாவதாக, அரசாட்சி ஆளும் வர்க்கத்திற்கு மட்டும் சொந்தமாக இருப்பின் சமூகத்தில் சர்வசுதந்திரம் உள்ள மேலோங்கிய சக்தியாகி விடும். இந்த ஆட்சி மத்தியப்படுத்தப்படும் பொழுது ஓர் உரிமையாளர் மட்டுமே அதிகாரத்தை வைத்திருக்க முடியும்.

மூன்ருவதாக, அரசாட்சி சமூகத்திலுள்ள ஆளும் சக்தியின் வெளியீடு என்ற முறையில் திட்டமிட்ட வழியில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். அது கட்டுமான ரீதியில் ஒரு முகப்படுத்தப் பெற்று தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு யந்திரத்தையும் விசேஷமாக உருவாக்கப்பட்ட அமைப்புகளையும் கொண்டு இருக்க வேண்டும்.

---

[1] வி. இ. லெனின், நூல் திரட்டு, பாகம் 2, மாஸ்கோ, பக்கம் 241.

''அரசு'' என்ற சொல்லுக்குப் பல பொருட்கள் உள்ளன. அரசாட்சி, அதாவது அரசியல் சக்தி என்ற பொருளில் இது பயன்படுத்தப்படுகிறது, வர்க்க சமூகத்திலிருந்து இது ஓரளவுக்குச் சுதந்திரமானதாகும். சமூகத்தின் அதிகார அமைப்புகளிலும் நிறுவனங்களிலும் இது குடிமக்களின் பொதுச் சட்ட அமைப்பு என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இது பிரதானமாயும் ஏறக்குறைய ஒரு சிக்கலான ஏற்பாட்டை, ஒரு கருவி அல்லது யந்திரத்தைப் பொருள் படுத்துவதாகவே இருக்கிறது. இதன் உதவியுடன் சமூகத்திலுள்ள ஆளும் வர்க்கமோ, அல்லது வளர்ச்சியடைந்த சோஷலிச சமூக அமைப்பில் உள்ளது போன்று மக்கள் அனைவருமோ அரசாட்சியை அமுல் நடத்திச் சமூகத்தின் விவகாரங்களை நிர்வாகம் செய்கின்றனர்.

அரசாட்சிக்கும் அரசுக்கும் இடையிலான உறவுத் தன்மை உள்ளடக்கத்திற்கும் வடிவத்திற்கும் இடையிலுள்ளது போன்றதாகும். உள்ளடக்கத்திற்கு எப்போதுமே ஒரு பொருத்தமான வெளியிடும் வடிவம் தேவை. சோஷலிச அரசு (உழைக்கும் மக்களை நாட்டின் நிர்வாகத்திலும் மற்றும் சோஷலிச, கம்யூனிச நிர்மாணப் பணியிலும் ஈர்க்கும் ஒரு சாதனம்) தொழிலாளி வர்க்கம், அதன் கட்சியினால் தலைமை தாங்கப்படும் உழைக்கும் மக்களின் நிறுவன முறையில் அமைந்த அரசியல் ஆட்சியின் வடிவமாகவே எப்போதும் இருந்து வருகிறது.

ஒரு சோஷலிச அரசு, சுரண்டும் அரசுகளிலிருந்து அதன் சமூக இயல்பு, நோக்கங்கள், கடமைகள், செயல்கள், அரசியல் வடிவம், ஒழுங்கமைப்பின் கோட்பாடுகள் அனைத்திலும் அடிப்படையாகவே வேறுபடுகிறது. சோஷலிச அரசு இச்சொல்லின் கறாரான பொருளின்படி ஓர் அரசல்ல, காரணம் இது சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியின் நலன்களுக்கு ஏற்றதாக உள்ளது, சோஷலிச மற்றும் கம்யூனிச நிர்மாணத்தின் நோக்கங்களுக்குப் பொருந்தியதாக உள்ளது, ஒரு சில சுரண்டலாளர்கள் உழைக்கும் மக்களை அடக்கவும் ஒடுக்கவும் பயன்படுத்தும் ஒரு சாதனமாக உதவுவதில்லை என்று லெனின் கூறினார்.

பாட்டாளி வர்க்க அரசு பற்றிய லெனினது கருத்து, சோஷலிசத்தின் கீழிலான அரசாட்சியின் சமூகத் தன்மை



EMARA PUBL

குறித்து மார்க்ஸ் செய்த விஞ்ஞான முன்னறிவித்தலுக்கு முற்றிலும் பொருத்தமானதாக இருந்தது. அரசாட்சி இனி மேலும் கரூரான அரசியல் ஆட்சியாக இருக்காது, காரணம் ''அரசியல் அதிகாரம் என்பது முதலாளித்துவச் சமுதாயத்திலுள்ள பகைமையின் அதிகார பூர்வமான வெளிப்பாடாகும்'' என்று மார்க்ஸ் கூறினார்[1].

கம்யூனிச நிர்மாண நிலைமைகளில் சோஷலிச சமூக அமைப்பு சமூகரீதியில் மேலும் இணைவுற்று ஒரே இயல்பு கொண்டதாகிறது. சோஷலிச சமூகம் வளர்ச்சியடைவதோடு வர்க்க சமூகத்திலிருந்து வழி வந்த அம்சங்கள் ஒழிக்கப் படுகின்றன, இது ஒரு புது வடிவிலான சமூக அமைப்பான கம்யூனிச சமூக அமைப்பில் சென்று முடிவு பெறும்.

அரசாட்சியும் அரசுரிமையும் சோஷலிசத்தின் கீழ் தமது அரசியல் அர்த்தம் எதையும் இழந்து விடுவதில்லை என்பது இயல்பே. அரசுரிமை ஓர் அரசியல் மற்றும் வர்க்க காரணியாகவே நீடிக்கிறது. ஆனால் அரசாட்சி மற்றும் அரசுரிமை அவற்றின் அரசியல் தன்மையை இழந்து விடும் வரலாற்று வாய்ப்பு சோவியத் சோஷலிச அரசினை வலிமைப்படுத்தும் கடமையிலிருந்து வேறுபட்டு இருக்கவில்லை.

ஓர் அரசிற்கான தேவை இருக்கும் வரையில் சோஷலிச அரசு வலுவடைந்து வளர்ச்சியடைதல் வேண்டும். சோஷலிச அரசு மட்டுமே சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரே அரசியல் அமைப்பாகும். ஆகப் பெரியதும் மிகவும் முழுமையானதுமான அமைப்பாக இருப்பதால் அதனுள் கம்யூனிச நிர்மாணத்தின் கடமைகளைச் செயல்படுத்துகிற, விசேஷ உறுப்புகள் மற்றும் நிறுவனங்கள் கொண்ட பல்கிப் பரவிய அமைப்பு அடங்குகிறது. இது பொதுஜன அமைப்புகளைப் போலன்றி, அரசிடம் ஒரு விசேஷ யந்திரம் மற்றும் வன்முறைக்கான சாதனங்கள் உட்படசட்ட சாதனங்கள் உள்ளன. இவற்றின் மூலம் அது பொருளாதாரத்தைத் திறம்பட நிர்வாகம் செய்கிறது, தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கு மத்தியப்படுத்தப் பெற்ற வழிகாட்டுதலை உத்தரவாதம் செய்கிறது, சமூக விரோத நிகழ்வு

---

1 கார்ல் மார்க்ஸ், **மெய்யறிவின் வறுமை**, மாஸ்கோ, 1975, பக்கம் 224.

களை எதிர்த்து முனைப்பான போராட்டம் நடத்துகிறது. பொதுஜன அமைப்பு எவ்வளவுதான் பெரியதாக இருந்த போதிலும் அதனுல் அரசின் இடத்தை நிரப்ப முடியாது.

பொதுஜன அமைப்புகளைப் போலன்றி சோவியத் அரசுக்கு முழு ஆட்சியதிகாரம் உண்டு. இந்த அதிகாரம் மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகள், அவை கீழடக்கப்பட்டுள்ள அரசு இயந்திரம் இரண்டின் உருவிலுமான அரசுக்குரிய தனிவுரிமை. அரசின் அரசியல் கடமைகளில் ஒன்று பொதுஜன அமைப்புகள் சட்டப்படி தமது நடவடிக்கைகளை நிறைவேற்றுமாறு கண்காணிப்பதாகும். ஆனுல் இந்தக் கண்காணிப்பு சட்டத்தின் கட்டமைப்புக்குள் அடங்கியது, எனவே பொதுஜன அமைப்புகள் சட்டப்படி இயங்கும் வரையில் அரசு இவற்றின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை. பல சமயங்களில் பொதுஜன அமைப்புகள் அரசு அமைப்புகளால் வழிகாட்டப்படுகின்றன. இவற்றில் உற்பத்தி மற்றும் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், பல்வேறு சுயசேவா சங்கங்கள், உள்ளூர் சோவியத்துகளின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் தெரு மற்றும் வீட்டுக் கமிட்டிகள், பொது ஒழுங்கு மேற்பார்வை உள்ளிட்ட சுயசேவா அமைப்புகள் அடங்குகின்றன. பொதுஜன அமைப்புகள் அரசுக்குரியது போன்ற பணிகளை நிறைவேற்ருவிடினும், அரசுக்குரிய அதே அதிகாரங்கள், சட்ட உரிமைகளை அவை பெறவில்லை என்ருலும், சோஷலிச அரசுக்கும் பொதுஜன அமைப்புகளுக்கும் இடையே வித்தியாசங்கள் இருந்த போதிலும், பொதுஜன மற்றும் அரசு வழிகாட்டுதல் ஒன்றுசேரவும் ஓரளவுக்கு ஒன்ரேடொன்று பின்னிப் பிணைந்திருக்கவும் கூடும்.

அரசு மற்றும் பொதுஜனக் கோட்பாடுகளின் இணைப்பு மக்கள் கண்காணிப்பு அமைப்புகளின் செயல்களில் தெளிவாக வெளியாகியுள்ளது. இதை மக்கள் கண்காணிப்புக் கமிட்டிகளில் பொது மக்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதிலும் கமிட்டிகள் புரியும் பணிகளில் பகுதி நேர ஊழியர்களாக அவர்கள் பங்குபற்றுவதிலும் காணலாம். இவ்வாருக அரசாங்கக் கண்காணிப்பு பொதுஜனக் கண்காணிப்போடு உள்ளார்ந்து இணைந்துள்ளது. இந்த இணைப்பு மக்கள் கண்காணிப்புக் கமிட்டிகளின் இயைபில் மட்டுமின்றி அவைகளின் வேலையை ஒழுங்கமைப்பதிலும் கண்காணிப்பின்

வடிவங்கள் மற்றும் முறைகளிலும் வெளிப்படுத்தப் பெறு கிறது.

சோஷலிச அரசியல் அமைப்பின் நோக்கங்கள், கடமை கள் மற்றும் சமூக-வர்க்கத் தன்மை ஆகியவற்றைக் கவனத் தில் எடுத்துக் கொள்ளும் பட்சத்தில், பொதுஜன அமைப் புகள் புரிந்து வரும் செயல்பாடுகளில் பல்வேறு இதர அரசுக் கடமைகள் ஆற்றப்பட்டு வருவதைக் காணலாம். ஆனால் அரசு அமைப்புகளின் செயல்பாடுகளின் ஒரு முக்கியமான அம்சத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்; அது தான் அரசு அமைப்புகள் மட்டுமே அதிகாரத்தைக் கையாள் கின்றன என்பது. இந்தப் பணிகளைப் புரிவதற்கு எந்தப் பொதுஜன அமைப்புக்கும் அதிகாரம் அளிக்கப்படவில்லை.

அரசு அதிகாரத்தில் அடையப் பெற்றுள்ள அரசுரிமையே சோவியத் சமுதாயத்தின் அரசியல் அமைப்பு அடித்தளமாக வைத்திருக்கும் மிக முக்கியமான கோட்பாடுகளில் ஒன்று கும்.

ஆட்சி அதிகாரத்தின் ஒரு சாதனம் என்ற வகையில், அரசுரிமை சமுதாயத்தின் அரசியல் அமைப்பைப் பெரு மளவு சார்ந்து, இந்த அதிகாரத்தைச் செயல்படுத்துவதில் வெளியிடப்படுகிறது. அரசுரிமையின் ஸ்தூலமான வெளி யீடுகள் நிலைமைகள், சந்தர்ப்ப சூழல்களைச் சார்ந்து நிற்ப தால் வேறுபடுவது இயல்பே. அவற்றில் ஆக முக்கியமான வை சமுதாயத்தின் சமூக-பொருளாதாரக் கட்டமைப்பின் முதிர்ச்சி மட்டம், வர்க்க மற்றும் தேசிய முரண்பாடுகளின் கூர்மை, அரசு மற்றும் அரசியல் நிர்வாகத்தின் வடிவங்கள் ஆகியவையே.

அரசுரிமையின் அரசியல் மற்றும் வர்க்க முக்கியத்துவம் சோஷலிசத்தின் கீழ் அடிப்படையிலேயே மாற்றமடைகிறது. மார்க்சிய-லெனினியத்தின்படி ஆளும் முதலாளி வர்க்கத்தை ஒழித்துக் கட்டி, தமது சொந்த அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகப் பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆதிக் கத்தை வென்று பெற வேண்டும்.

''ஆதிக்கத்திற்காகப் போராடி வரும் ஒவ்வொரு வர்க் கமும், பாட்டாளி வர்க்கத்தைப் போன்று அதன் மேலாதிக் கம் பழைய வடிவிலான சமூகம் முழுவதையும் அதன் ஆதிக் கத்தையும் ஒழித்துக் கட்டுவதை முற்கோளாகை வக்கும்

பொழுதும், தனக்கென அரசியல் அதிகாரத்தை முதலில் வென்று கொள்ள வேண்டும்'' என்று மார்க்ஸ் எழுதினார்[1].

சோஷலிச சமூக அமைப்பிலும் மற்றும் சர்வதேச சட்ட உறவுகளிலும் ஆட்சி அதிகாரத்திற்கு அரசுரிமையுடன் பொதுவான பல முக்கிய அம்சங்கள் இருக்கின்றன.

ஒரு புலப்பாட்டின் சாரம் அதன் முக்கியமான அம்சங்களின் அமைப்பாக முடிவுறுகிறது, அதாவது திட்டவட்டமான மற்றும் பொதுவான அம்சங்களின் மிகவும் சிக்கலான அமைப்பாக ஆகிறது. அரசுரிமை என்பது ஆட்சியின் ஒரு வடிவமல்ல, மாறாக ஆட்சிக்குரிய சாரத்தின் வெளியீடாகும். எனவே, ஆட்சி அதிகாரத்தின் அம்சங்கள் எல்லாமே அரசுரிமையின் அம்சங்களாக இராது, அவ்வாறு இருக்கும் என்று கருதுவது அரசுரிமையையும் ஆட்சி அதிகாரத்தையும் நேரடியாக ஒன்றெனை உறுதி செய்வதாகும், இது அனுமதிக்க முடியாதது.

அரசுரிமை பல்வேறான எல்லா வடிவங்களிலுமான ஆட்சி அதிகாரத்தின் உள்ளடக்கத்தின் ஒரு குணும்சக் கூறேயாகும். ஆனால் ஆட்சி அதிகாரம் ஆளும் வர்க்கங்கள் சமூகத்திற்கு அளிக்கும் அரசியல் வழிகாட்டுதலிலான அதன் தன்மையையும் மற்றும் திசைவழிகளையும் வெளியிடுவதால், குறிப்பிட்ட சமுதாய நலன்களுக்கு ஏற்ப அரசு விஷயங்களில் தீர்வு காண்பதும், அரசுரிமையை வெளியிடுதல் மற்றும் அடைவதற்கான சாதனங்களும், தவிர்க்க முடியாத வகையில் ஓர் அரசியல் மற்றும் சட்டத் தன்மையைப் பெற்று விட்டன.

அரசுரிமை, ஆட்சி அதிகாரத்தின் தன்மைகளின் ஒரு தொகுப்பு என்ற உண்மை, முதல் தோற்றத்தில் அத்தன்மைகள் அரசியல் திசையிலானவை என்று கருதுவதற்கான ஆதாரங்களை வழங்குவதில்லை. ஆனால் ஒவ்வொரு இயற்கைப் புலப்பாடும் திட்டவட்டமான நிபந்தனைகளின் கீழ், ஒரு குறிப்பிட்ட உறவுகள் அமைப்பில் எப்பொழுதும் ஏற்படுகிறது. இந்த அமைப்பின் ஒரு பகுதி என்ற முறையில் இந்த அமைப்பினால் தோற்றுவிக்கப் பெற்ற, அதற்கு இன்றியமையாத அம்சங்கள் அதனிடம் உள்ளன. எனவே ஆட்சி

[1] K. Marx, F. Engels, *The German Ideology*, Moscow, 1964, p. 45.

அதிகாரத்தின் சர்வசுதந்திரத் தன்மைகள் சமுதாயத்தின் அரசியல் அமைப்பினுலும் வர்க்க இயல்பினுலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

எனவே அரசுரிமையைச் சிறப்பித்துக் காட்டும் பொதுவான அரசியல் மற்றும் சட்ட அம்சங்களுக்குப் பின்னுல், வெவ்வேறு வரலாற்று மாதிரி அரசுகளினுடைய சமூக-அரசியல் இயல்பிலான வேறுபாட்டையும், சோஷலிச அரசில் அரசுரிமை அடையும் பிரத்தியேக அம்சங்களையும் காணத் தவறக் கூடாது.

ஆட்சி அதிகாரத்தின் பிரதான சர்வசுதந்திர அம்சமான மேலதிகாரம், அரசு மற்றும் பொதுஜன அமைப்புகளின் செயல்களில் எழும் எந்த ஒரு அதிகார உறவுகளிலும் இந்த ஆட்சி அதிகாரம் மேலோங்கி நிற்கும் என்பதைக் குறிப்பாகக் காட்டுகிறது.

சமுதாயத்தில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவது, பொதுஜன அமைப்புகள், அதிகாரிகள், குடிமக்களின் சட்ட ஆற்றல், உரிமைகளையும் கடமைகளையும் வரையறுப்பது ஆகியவற்றுக்கான அரசின் ஆற்றலின் நடைமுறை வெளியீடே மேலதிகாரம். இது ஆட்சியின் மேலதிகாரத்தையும் அதே போன்று சமூகத்தில் ஆட்சியின் முழுவுரிமை வாய்ந்த செல்வாக்கின் வரம்பையும் தெளிவாக நிர்ணயிக்கிறது. சமுதாயத்திலுள்ள வேறு எல்லா அதிகாரங்களிலிருந்தும் ஆட்சி அதிகாரத்தின் அடிப்படை தன்மையை அது வலியுறுத்துகிறது, அதாவது ஆட்சியதிகாரம் ஒன்றே சர்வவுரிமை பெற்ற அதிகார அமைப்பு என்பதைக் காட்டுகிறது.

மேலாதிக்கமுடையதும் வரம்பிலாததுமான ஆட்சி அதிகாரம் சமுதாயத்திலுள்ள எல்லா உறவுகள் மீதும் வலுவான செல்வாக்குச் செலுத்த இயலும், செலுத்தலாம். இதனுல் தான் இது சர்வமுந்தழுவியதாக விளங்குகிறது.

ஆட்சி அதிகாரத்தின் தன்மையினை நிர்ணயிக்கும் ஒற்றுமை, சுதந்திரம், வரம்பிலா மேலாதிக்கம் போன்ற அம்சங்கள் மேலதிகாரத்தின் கருத்தமைப்பாக உருவெடுக்கின்றன.

ஆட்சியின் மேலதிகாரம் அது ஒரு நாட்டில் வேறு எந்த அதிகாரத்திலிருந்தும் சுதந்திரமாக இருக்கிறது என்பதை முன்னனுமானிக்கிறது. இதன் பொருள் இது மட்டுமே ஆட்சி செய்கிறது என்பதாகும். மார்க்ஸ் எழுதினுர்: "தனி ஒரு

நாட்டில் சர்வவுரிமை பெற்ற ஆட்சிகள் ஏககாலத்தில் அக்கம் பக்கமாக நிலவ முடியாது. இது வட்டத்தைச் சதுரமாக்கு வது போன்ற அபத்தமான வேலை[1]''.

ஆட்சி அதிகாரத்தின் சுதந்திரம் என்ருல், அது ஆட்சி அமைப்புகளின் அதிகாரங்களைச் சுதந்திரமாக நிர்ணயிக் கிறது, மற்றும் அதன் செயல்பாடுகளை நிறைவேற்றும் முறை களையும் வடிவங்களையும் நிர்ணயிக்கிறது என்று பொருளா கும்.

ஆட்சி அதிகாரத்தின் மேலதிகாரம் அரசினுள்ளேயும் அயல்துறை உறவுகளிலும் அதன் சுதந்திரத்தை முன் அனு மானிக்கிறது.

ஆட்சி அதிகாரத்தின் மேலே குறிப்பிடப்பட்ட தன்மை களின் இணைப்பு மேலதிகாரத்தின் கூட்டுக் கருத்தமைப்பை உருவாக்குகிறது. நடைமுறையில் மேலதிகாரத்திற்குப் பல ஒழுங்கமைப்பு மற்றும் சட்ட அம்சங்கள் உள்ளன. இது பிரதிநிதித்துவ அரசு அமைப்புகளான சோவியத்துகளின் அமைப்பிலும் அவற்றின் செயல்பாடுகளிலும் வெளியிடப்படு கிறது. சோவியத்துகள் மக்களின் சித்தப் பிரகாரம் நிறுவப் பட்டு, உழைக்கும் மக்களின் நலன்களுக்காகவே செயல் படுகின்றன. அரசு அமைப்புகளின் சர்வ அதிகாரத்தை நிர்ணயிக்கும் மக்களின் சர்வ அதிகாரம் சோவியத்துகளின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளில் ஆட்சி அதிகாரத்தின் அரசுரிமையாகிறது.

சமத்துவமான சர்வசுதந்திரமுள்ள அரசுகளிடையான சர்வதேச உறவுகளும் மற்றும் ஒத்துழைப்பும் அவற்றின் சர்வசுதந்திரத்தை எந்த வழியிலும் மீறிவிடுவதில்லை. வேறு எந்த விளக்கமும், அரசுரிமையின் சாரத்தையும் இது அமுல் செய்யப்படுவதற்கான ஏற்பாட்டையும் புரிந்து கொள்ளத் தவறுவதை எடுத்துக் காட்டுகிறது. ஆட்சி அதிகாரத்தின் சர்வசுதந்திரம் என்பதால் அரசு இதர நாடுகளுடன் விரிந் தளவிலான பல பிரச்சினைகள் மீது சில சர்வதேச ஒப்பந்தங் களை ஏற்படுத்திக் கொண்டு, பரஸ்பர இணக்கத்தின் அடிப்

---

1 ''சமூக-ஜனநாயகவாதிகளின் ரைனிஷ் மாவட்டக் கமிட்டிக்கு எதிரான வழக்கு. கார்ல் மார்க்ஸ் ஆற்றிய உரை'' (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 6, மாஸ்கோ, பக்கம் 253 [ருஷ்யன்]).

படையில் அவற்றில் வகுத்துள்ள நோக்கங்களை அடைய முயலுதல் கூடாது என்று அர்த்தமல்ல, காரணம் இந்த சர்வ தேச சட்ட நடவடிக்கைகள் சுயவிருப்பமானவை, சமத்துவ மானவை.

சோவியத் அயல்துறைக் கொள்கை சோஷலிச சர்வ தேசியக் கோட்பாடுகளையும், நாடுகளின் சமூக-அரசியல் அமைப்பு, பொருளாதார மற்றும் ராணுவ ஆற்றல், நிலப் பரப்பு, மக்கள் தொகை இத்தியாதி எதுவாக இருந்த போதிலும், அவற்றின் அரசுரிமை, சமத்துவத்தை அங்கீகரித்தல், அதாவது எல்லா நாடுகளின் அரசியல் மற்றும் சட்ட சர்வ சுதந்திரத்தை அங்கீகரித்தல் என்பதை அடிப்படையாக்கிய தாகும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம் கூறுவதாவது: ''வரலாற்றிலேயே முதல் தடவையாக, பெரிய நாடுகள் மட்டுமின்றி சிறிய நாடுகளும், சுதந்திர மான வளர்ச்சியைத் தேர்ந்துள்ள நாடுகளும், சமாதானத்தை விழையும் அனைத்து நாடுகளும், அவற்றின் வலிமை எதுவாக இருப்பினும் சரி, ஒரு சுதந்திரமான அயல்துறைக் கொள்கையைப் பின்பற்றும் நிலைமை எழுந்துள்ளது''[1].

அரசுரிமையின் பிரதான சிறப்பியல்புகளில் ஒன்றுன சுதந்திரம் பன்முகமானதாக உள்ளது, அதற்குப் பல முக்கிய மான அம்சங்கள் உள்ளன. அதற்கு அரசியல், பொருளா தார மற்றும் ராணுவ சுதந்திரம் உள்ளது.

நாடுகளுக்கும் மற்றும் தேசிய இனங்களுக்கும் இடை யிலான பகைமை நிலவும் பொழுது, ஏகாதிபத்திய வல்லரசு கள் மீது அரசியல் மற்றும் பொருளாதாரச் சார்பு கொண் டுள்ள தனிப்பட்ட நாடுகள் உண்மையிலேயே, சில சமயங் களில் சட்ட முறையிலே, அவற்றின் அரசுரிமைகளை அமுல் செய்ய முடியாது, அதாவது அவை முழுமையான அரசுரிமை பெற்ற நாடுகளல்ல. ''கீழ்ப்படுத்தப்படும் நாடுகளும் மக் களும் அரசியல் சுயேச்சையை இழக்க நேர்வதுடன் இணைந்த கீழ்ப்படிதல் **வடிவம்தான்** நிதி மூலதனத்துக்கு மிகவும் 'வசதியானதாகவும்' '' இருக்கும் என்று லெனின் கூறினர்[2].

---

[1] *The Road to Communism*, Moscow, 1961, p. 503.

[2] **வி. இ. லெனின், நூல் திரட்டு,** பாகம் 2, மாஸ்கோ, பக்கம் 130.

தமது ஏகாதிபத்தியம் பற்றிய குறிப்புப் புத்தகங்களில் லெனின் ஏகாதிபத்திய வல்லரசுகளிடையே உலகம் பங்கிடப் பட்டிருப்பது குறித்து விளக்கும் பொழுதில் நிதி மற்றும் அரசியல் துறைகளிலும் சுதந்திரமாக உள்ள நாடுகள், நிதித் துறையில் சார்பான ஆனல் அரசியலில் சுதந்திரம் கொண்ட நாடுகள், மற்றும் அரைக் காலனிகள், காலனிகள், அரசியல் முறையில் சார்பு நாடுகள் ஆகியவற்றை வேறு படுத்திக் காட்டினர். இந்த மதிப்பீடுகள் அவற்றின் உடனடி அரசியல் முக்கியத்துவத்தை இன்றும் இழந்து விடவில்லை.

அரசுரிமை விஷயத்தில் தனிப்பட்ட மாதிரியான சார்புத் தன்மை முக்கியத்துவத்தில் வேறுபடுகிறது. அரசுரிமையுள்ள நாடுகளின் பொருளாதார மற்றும் இதர உள்ளாற்றல் கள் எதுவாக இருந்த போதிலும் அவற்றிடையே "ஒரு வகை அரசியல் சமநிலை" நிலவுவது பற்றிய லெனினது கருத்து, குறிப்பாக நமது கால கட்டத்தில் அயல்துறைக் கொள்கை உறவுகளின் சாரத்தைப் புரிந்து கொள்ள விரும் பும் எவருக்கும் மிகப் பெரும் முக்கியத்துவம் உடையது[1].

விடுதலை பெற்ற பல நாடுகள் அரசியல் சுதந்திரம் மட்டுமே பெற்ற நாடுகளாகும்; அவை தமது அரசுரிமையை வலுப்படுத்துவதற்கு அவசியமான பொருளாதார, ராணுவ மற்றும் இதர சுதந்திரங்களை இன்னும் பெறவில்லை. இது இளம் நாடுகளின் வளர்ச்சிக்கு ஜீவாதார முக்கியத்து வமுடையது.

அரசுரிமை ஓர் இணைக்கப் பெற்ற சர்வாம்ச கருத்த மைப்பு, ஆட்சி அதிகாரத்தின் உள்ளடக்க அம்சங்களான மேலதிகாரம், சுயாதீனம் ஆகியவற்றின் உள்ளார்ந்த இணைப் பைக் குறிக்கிறது.

ஆட்சி அதிகாரம் ஒரு சமூகச் செயல், இது சமுதாயத் திற்கு அரசியல் வழிகாட்டுதலை மேற்கொள்ளும் ஆளும் வர்க் கத்தின் தன்மை, திசைவழி ஆகியவற்றை உருவகப்படுத்தும் ஒரு சமூக சக்தியின் நேரடி வெளியீடாகும். எனவே தான்

---

[1] வி. இ. லெனின், "ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷி விக்) கட்சியின் மாஸ்கோ அமைப்பின் செயலூக்கமுள்ள ஊழியர் கூட்டம்" (V. I. Lenin, *Collected Works*, Vol. 31, p. 442).

வர்க்க நலன்களுக்குப் பொதுவான அரசுத் தன்மையினை வழங்கும் ஆற்றல் ஆட்சி அதிகாரத்திற்கு இருக்கிறது. இந்த விஷயத்தில் ஆட்சி அதிகாரம் அரசின் சாரத்தை உருவகப் படுத்துகிறது. இதை ஏற்றுச் செல்வது அரசின் பொருத்த மான யந்திரம், அதாவது அரசேயாகும். அரசைப் பொருத்த வரையில் ஆட்சி அதிகாரம் அடிப்படையான, உண்மையில் நிர்ணயகரமான கூறு ஆகும்.

ஏதார்த்தத்தில் அரசு தன் நடவடிக்கைகளை ஒரு குறிப் பிட்ட சட்டக் கட்டுக்கோப்புக்குள் மேற்கொள்ள வேண்டும், இவ்வாறு அதன் சட்டத் தகுநிலையை நிர்ணயித்து, அதன் சொந்த அரசுரிமைகளை நிலைநாட்ட வேண்டும். இது அதன் பொருளாதார மற்றும் சமூக-அரசியல் தேவைகளை சாத்திய மான அளவு சிறந்த வழியில் நிறைவு செய்ய வேண்டும்.

அரசியல் அமைப்புச் சட்டமானது ஒரு அரசுக்கு மிகப் பெரும் முக்கியத்துவமுடைய உரிமைகளை ஒன்றிணைக்கிறது, அதன் தகமை அதிகாரத்தின் அடித்தளமாகும். அவை ஒரு நாட்டின் அரசுரிமையின் சாரத்தை வெளியிடும் சர்வசுதந் திர உரிமைகள் அல்லது உயர் உரிமைகளாகும்.

அரசுரிமைக்கும் ஒரு நாட்டின் சர்வசுதந்திர அதிகாரங் களுக்கும் இடையே தர்க்க ரீதியான தொடர்பு உள்ளது, காரணம் ஏராளமான சர்வசுதந்திர அதிகாரங்கள் மூலம் அரசுரிமை உத்தரவாதம் செய்யப்படுகிறது. சர்வசுதந்திர அதிகாரங்கள் மீறவொண்ணாதவை, காரணம் அவை அரசு ரிமையை வெளிப்படுத்தி வலுப்படுத்துகின்றன. இது அவற் றை அரசின் இதர அதிகாரங்களிலிருந்து தனியாக எடுத்துக் காட்டுகிறது, பிந்தியது சில வரையறைகளுக்குள் விரிவடை யலாம் அல்லது சுருங்கலாம்.

அரசுரிமையை முழுமையாக வெளியிட்டு அதைக் கை வரப் பெறுகிற நாட்டின் சர்வசுதந்திர அதிகாரங்களே அரசின் தகமை அதிகாரத்தின் கருமையமாக உருவம் பெறு கின்றன, அதன் அரசுரிமையை உறுதிப்படுத்துகின்றன. சோவியத் ஒன்றியத்தின் சர்வசுதந்திரத்திற்கும், ஒன்றியக் குடியரசுகளின் சர்வசுதந்திரத்திற்கும் இடையிலான உறவு களில் இது தனி முக்கியத்துவம் பெறுகிறது.

## அத்தியாயம் 5

# சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமைக்குரிய சட்ட மற்றும் சமூக-அரசியல் அடிப்படைகள்

சோவியத் நாட்டில், ஒரே சோஷலிசப் பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பு, அடி முதல் முடி வரை ஒரு சீரான ஆட்சி அதிகார அமைப்பு என்ற அடிப்படையில் சோவியத் சோஷலிசக் குடியரசுகளது ஒன்றியத்தின் அரசுரிமை ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமையுடன் ஒன்றுகவே இருக்கிறது.

அரசு மற்றும் சட்டக் காரணி என்ற முறையில் சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமை, ஆட்சி அதிகாரத்தின் முழுநிறைவையும் கோருகிறது. சோவியத் நாட்டில் தனி ஒரு ஆட்சி அதிகாரம் ஒன்றிய அரசின் தனி ஒரு அரசுரிமையினை நிர்ணயிக்கிறது, இதன் அடித்தளமாக இருக்கும் சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் தனி ஒரு அரசுரிமையை நிர்ணயிக்கிறது. ஓர் ஒன்றிய அரசில் ஆட்சி அதிகாரத்தின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் கோட்பாடுகள், சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமைக்கும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமைக்கும் இடையிலான உறவுகளின் அடிப்படையாகவும் அமைகின்றன. சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஒற்றுமை, சோவியத் ஒன்றியமும் மற்றும் ஒன்றியக் குடியரசுகளும் ஏககாலத்தில் ஒரே பிரதேசத்தின் மீது, ஒரே குடிமக்கள் சம்பந்தமாக ஒரே அரசு அமைப்பு முறையின் மூலம் ஆட்சி அதிகாரத்தை அமுல் செய்வதை சாத்தியமாக்குகிறது.

சோவியத் ஒன்றிய அரசில் ஆட்சி அதிகாரத்தின் ஒற்றுமை தனியொரு அரசியல் அடிப்படையால் உத்தரவாதம் செய்யப்படுகிறது. இதில் மக்களின் பிரதிநிதிகளது சோவியத்துகள் சோவியத் மக்களின் சர்வ அதிகாரம் சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அரசியல், பொருளாதார அமைப்பாகும்.

ஆட்சி அதிகாரத்தின் உள்ளடக்கத்தினை இறுதியாக நிர்ணயம் செய்யும் பொருளாதார அடித்தளத்தின் ஒரு சீரான தன்மை, அரசு உடைமையின் தனி ஒரு அமைப்பில் நேரடியாக வெளிப்பட்டுள்ளது.

அரசுக் சொத்துடைமை (பொது மக்கள் சொத்து), கூட்டுப்பண்ணை-கூட்டுறவுச் சொத்து என்னும் வடிவங்களில் உற்பத்திச் சாதனங்களின் மீதான சோஷலிசச் சொத்துடைமை சோவியத் யூனியனின் பொருளாதார அமைப்பிற்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

தொழிற்சங்கங்கள், மற்ற பொது நிறுவனங்கள் ஆகியவை தமது பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கொண்டுள்ள செல்வங்களும் சோஷலிசச் சொத்துடைமையாகும்.

சோஷலிசச் சொத்துடைமையை அரசு பாதுகாக்கிறது, அது பெருகுவதற்கான சூழ்நிலைமைகளைத் தோற்றுவிக்கிறது.

சோஷலிசச் சொத்துடைமையை தமது சொந்த லாபத்திற்கும் சுயநல நோக்கங்களுக்கும் பயன்படுத்த எவருக்கும் உரிமை கிடையாது (10ஆவது விதி).

அரசுச் சொத்துடைமை அனைத்து சோவியத் மக்களுக்கும் உரிய சொத்துடைமையாகும். இது சோஷலிசச் சொத்துடைமையின் அடிப்படை வடிவமாகும்.

நிலம், அதன் கனி வளம், தண்ணீர், காடுகள் ஆகியவை அரசின் விசேஷச் சொத்துடைமையாக விளங்குகின்றன. இயந்திரத் தொழில், கட்டுமானத் தொழில், விவசாயம் ஆகிவற்றுக்குத் தேவையான அடிப்படை உற்பத்திச் சாதனங்கள், போக்கு வரத்து, தகவல் சாதனங்கள், வங்கிகள், அரசால் ஒழுங்கமைக்கப்பட்ட வர்த்தக, வீட்டு வசதி, மற்ற நிறுவனங்களின் செல்வங்கள், நகரக் குடியிருப்புக்களில் பெரும் பகுதி, அதே போல அரசுப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான மற்ற செல்வங்கள் ஆகிய அனைத்தும் அரசின் பிரத்தியேகமான சொத்துடைமையாகும்.

பிரதான உற்பத்தி சாதனங்களில் தனியார் உடைமையை ஒழித்தது மூலமும் நிலம், கனி வளங்கள், காடுகள், நீர்வளம், தொழிற்சாலைகள் மற்றும் வங்கிகளைத் தேசவுடைமையாக்கியதன் விளைவாகவும் அனைத்து மக்களின் உடைமை நிறுவப் பெற்றது. தேசிய உடைமை உறவுகள் (அனைத்து

மக்களுடையவை) சட்ட பூர்வம் கெட்டிப்படுத்தப்பட்ட பொழுது இவையெல்லாம் அரசு உடைமையாயின.

சோவியத் மக்கள் தனி ஒரு முழு உருவில் சோஷலிச அரசின் வடிவில் எல்லா அரசு உடைமைகளுக்கும் ஏக உரிமையாளர்களாவர். சோஷலிச அரசு உடைமையின் தன்மையினைப் புரிந்து கொள்ளவும், சோவியத் ஒன்றிய அரசில் சொத்துரிமையாளரை நிர்ணயிக்கவும் இது தலையாய முக்கியத்துவமுடையதாகும்.

அரசு உடைமை பின்வரும் காரணங்களால் அனைத்து மக்களின் உடமையாகிறது: (1) அதன் தோற்றம் (இது சோஷலிசப் புரட்சியின் போது சுரண்டலாளர் உடைமைகளைப் பறித்ததன் விளைவாகவும் அனைத்து சோவியத் மக்களின் ஒன்று சேர்ந்த உழைப்பாலும் நிறுவப்பட்டதாகும்); (2) அதன் நோக்கம் (உற்பத்தி மற்றும் சொந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அனைத்து மக்களின் நலன்களுக்காக இது பயன்படுத்தப்படுகிறது); (3) அதன் நிர்வாகத்தின் தன்மை (அனைத்து மக்களின் உடைமையாதலின் அனைத்து மக்களின் சோவியத் அரசால் நேரடியாக அல்லது சோவியத்துகள் மூலம் உழைக்கும் மக்கள் கூட்டமைப்புகளும் தனிப்பட்ட குடிமக்களும் பங்கு பற்றுவது மூலம் நிர்வகிக்கப்படுகிறது); (4) இது சம்பந்தமான கடமைகள் (தனிப்பட்ட உழைக்கும் மக்களும், அவர்களது கூட்டமைப்புகளும், அரசாங்க மற்றும் பொதுஜன அமைப்புகளும் சோஷலிச உடைமையினை வலுப்படுத்தி அதிகரித்துப் பாதுகாக்க வேண்டும்).

எனவே சோவியத் மக்கள் சோவியத் அரசு என்ற உருவில் ஒரே சொத்துரிமையாளராகவும் அதே சமயம் கடமை உறுப்பினர் என்ற முறையில் பன்முகமாயும் விளங்குகின்றனர், அதாவது தனி சொத்துரிமையாளர் (சோவியத் குடிமக்கள்) கூட்டுச் சொத்துரிமையாளர் (தொழில் நிறுவனங்கள், பொது அமைப்புகள் இத்தியாதிகளின் ஊழியர்கள்).

தனி ஒரு அரசு உடைமைக்கு இவ்வாறு தனி ஒரு உடைமையாளர், அதாவது சோவியத் சோஷலிச அரசு உள்ளது, இது அனைத்து சோவியத் மக்களையும் உருவகப்படுத்துகிறது. இந்த உண்மை அரசு உடைமை பற்றிய உரிமை சோவியத் ஒன்றியத்திற்கு மட்டும் சொந்தமா ஒன்றியக் குடியரசுகளுக்

கும் உண்டா என்பதற்குத் தீர்வு காண்பதில் தலையாய முக்கியத்துவம் உடையது.

இந்த விஷயத்தில் நிலவுடைமை தனி முக்கியத்துவம் பெறுகிறது, ஏனெனில் மற்றவையோடு கூட இது ஒன்றிய அரசின் பிரதேச மேலதிகாரத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. சோவியத் ஒன்றியத்தில் நிலப்பரப்பு ஒன்றிய அரசு மற்றும் ஒன்றியத்தைச் சேர்ந்த குடியரசுகளின் கைகளில் உள்ளது. அவற்றின் சுயவிருப்ப ஒப்புதலுடன் மட்டுமே அவற்றின் பிரதேசங்களில் மாறுதல்கள் செய்யலாம்.

சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களும், சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் நிலச் சட்டங்களும் நிலம் அரசின் தனியுரிமைக்குட்பட்ட உடைமை என்று வரையறுத்துள்ளன, அவை நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையை வழங்குகின்றன. எனவே நிலத்தின் மீதான அரசின் உடைமை உரிமையினை நேரடியாகவோ மறைமுகமாகவோ மீறும் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்க முடியாது.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் (இதில் 15 சமத்துவமான ஒன்றியக் குடியரசுகள் உள்ளன) இயற்கை மூலவளங்களின் மீதான உடைமை உரிமையை அனுபவித்து வருகிறது. எனவே சோவியத் ஒன்றியம் முழுவதும் ஒவ்வொரு குடியரசும் இந்த உரிமைக்கு உரியவர்களாக விளங்கி, தமது நிர்வாக மற்றும் அரசு அமைப்புகள் மூலம் நாட்டின் இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறாக இந்த உரிமையைச் செயல்படுத்துவது சம்பந்தமாக அவை ஒவ்வொன்றையும் தழுவிய அதிகாரத் தகைமையை வரையறுத்தல் பிரதானமானது.

சோவியத் ஒன்றிய அரசு—சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம்—நிலம், இயற்கை மூலவளங்கள் உட்பட அரசு உடைமையின் தனி ஒரு உரிமையாளர். ஒன்றியக் குடியரசுகளும் அரசு உடைமையின் உரிமையாளர்களே. சோவியத் ஒன்றியம் ஒன்றியக் குடியரசுகளைக் கொண்டதாக இருக்கிறது, அவை இன்றி அது நிலவ முடியாது என்பதாலும், சோவியத் ஒன்றிய அரசுக்குத் தனி ஒரு ஆட்சியதிகாரம் இருப்பதாலும், இது தனி ஒரு அரசு உடைமையினை உறுதிப்படுத்தி அதை முற்றிலும் அடிப்படையாக்கி இருப்பதாலும்

சோவியத் ஒன்றியமும் ஒன்றியக் குடியரசுகளும் உடைமை உரிமை விஷயத்தில் தனி ஒரு உரிமையாளராக உருவெடுக்கும். ஒன்றிய அரசு மட்டுமே அரசு உடைமையின் உரிமையாளர், காரணம் இது தனி ஒரு முழு அமைப்பாக சோவியத் மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அரசு உடைமையைக் கையாளும் விஷயத்தில் சோவியத் ஒன்றியம், ஒன்றியக் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகள், உள்ளூர் சோவியத்துகளிடையிலான உரிமைப் பிரிவினை; தனி ஒரு சோஷலிச அரசு உடைமை பல்வேறு உரிமை பெற்ற உறுப்புகளிடையே பிரித்துக் கொள்ளப்படுகிறது என்ற பொருளைத் தராது. நிலம், கனிவளங்கள், உள்நாட்டு நீர்வளங்கள் ஆகியவற்றின் உடைமை உரிமையிலிருந்து எழும் உறவுகளை முறைப்படுத்துவதில் சோவியத் ஒன்றியம் வகிக்கும் வழிகாட்டும் பாத்திரம், இயற்கை மூலவளங்களைப் பாதுகாப்பதற்கான அகில ஒன்றியச் சட்டம் நிறைவேற்றப்படுவதை அவசியப்படுத்துகிறது. இன்று இந்தப் பிரச்சினைகள் ஒன்றியக் குடியரசுகளின் சட்ட வரம்பின் கீழ் உள்ளன.

சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் சட்டங்களின் அடிப்படைகளுக்கு ஒத்த முறையில் நாட்டின் நிலத்தை நிர்வாகம் செய்யவும் கையாளவுமான வழிகாட்டு நெறிகளை சோவியத் ஒன்றியம் வழங்குகிறது. சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஏற்ப தனது அதிகாரத் தகமைக்கு உட்பட்டு அது தனி ஒரு நிலநிதியை நிர்வாகம் செய்கிறது, நிலத்தைப் பயன்படுத்துவதற்கான ஒரு முறையையும் பிரதானக் கோட்பாடுகளையும் நிறுவுகிறது, நாட்டின் நிலத்தைச் சீராகப் பயன்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டத்தை நிர்ணயிக்கிறது, நிலத்தின் உபயோகத்தின் மீது கண்காணிப்பு செய்கிறது. ஒவ்வொரு ஒன்றியக் குடியரசும் குடியரசின் கட்டுக்கோப்புக்குள் தனி ஒரு அரசு நில நிதியை நிர்வாகம் செய்யலாம். இதனைப் பயன்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டத்தை நிர்ணயம் செய்யலாம், நில உரிமை பற்றிய முறையையும் நடப்பையும் நிலைநாட்டலாம். சோவியத் ஒன்றியத்தின் அதிகாரத்தினுள் வராத நில உறவுகளை முறைப்படுத்தலாம்.

தனி ஒரு நில நிதியை நிர்வாகம் செய்யவும் கையாளவுமான சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசு

களின் அதிகாரம் நிலம் சம்பந்தப்பட்ட அரசு உடைமை உரிமையை அடிப்படையாக்கியதாகும்.

நிலத்தின் உடைமையாளர் என்ற முறையிலான அரசின் அதிகாரங்கள் அரசியல் துறையிலான அதன் மேலதிகாரங் களுடன் இரண்டறக் கலந்ததாகும். இவை இரண்டும் பிர தேச மேலதிகாரம் என்ற கருத்தமைப்பில் உருவகம் பெற் றுள்ளன. எனினும் நாம் ஏற்கெனவே கண்டது போல இந்த அதிகாரங்களினுடைய உறவுகள் இருக்கும் நிலையில் அரசின் மேலதிகாரமும் சர்வ சுதந்திரமும் நிலம் மீதான அரசின் உடைமை உரிமையையும் அதன் ஆட்சி வட்டத்தின் பிர தேசத்தையும் நிர்ணயிக்கின்றன. இவ்வாறாக அரசின் பிர தேச மேலதிகாரம் ஓர் இன்றியமையாத பகுதி என்ற முறை யில் நிலத்தின் மீதான உடைமை உரிமை மற்றும் அரசுப் பிரதேசம் என்ற கருத்தமைப்பில் அடங்கிய இதரக் கூறுகளை உட்படுத்துகிறது. ஆனால் அந்த மேலதிகாரம் மேற்குறிக்கப் பட்ட உரிமையுடன் குறுக்கப்படுவதல்ல, பிந்தியது அதற்குக் கீழடங்கியதாகும்.

சோவியத் ஒன்றிய அரசில் பிரதேச மேலதிகாரம் ஒன் றிய அரசின் முழுப் பிரதேசத்தையும் பொருத்தவரை சோவி யத் ஒன்றியத்திற்கே உரியது, ஒவ்வொரு ஒன்றியக் குடியர சுக்கும் அதனதன் சொந்தப் பிரதேசம் பொருத்தவரை இந்த மேலதிகாரம் அவற்றுக்கே உரியது.

சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் பின்கண்ட அம்சங்களை உறுதிப்படுத்துகிறது: சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அரசுரிமை அதன் பிரதேசம் முழுதுக்கும் பரவி நிற்கிறது. சோவியத் ஒன்றியத் தின் பிரதேசத்தில் ஒன்றியக் குடியரசுகளின் பிரதேசமும் உட்படும். மேலும், ஒன்றியக் குடியரசின் பிரதேசம் அதன் சம்மதமின்றி மாற்றப்பட முடியாது. குடியரசுகளுக்கு இடை யில் உள்ள எல்லைகள், சம்பந்தப்பட்ட குடியரசுகளின் பரஸ் பர உடன்பாட்டுடன் மாற்றப்படலாம். இது சோவியத் ஒன் றியத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். சோவியத் ஒன் றியத்தின் அரசுரிமைக்கும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரி மைக்கும் இடையிலான உறவினைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால், ஓர் ஒன்றிய அரசு என்ற முறையில் தனி ஒரு ஆட்சி அதிகாரம் நிலவுகிறது, ஒன்றிய அரசின் பிரதே

சத்திலான எல்லா உடைமைகளுக்கும் தனி ஒரு உரிமையாளர் இருக்கிறுர் என்ற உண்மையிலிருந்து செயல்பட வேண்டும். சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் பிரதேச மேலதிகாரம் உள்ளார்ந்த முறையில் பரஸ்பர உறவுடையது. பிரதேச மேலதிகாரம் என்ற கோட்பாடு சோவியத் ஒன்றியத்துக்கும் ஒன்றியக் குடியரசுகளுக்கும் அவற்றின் ஆட்சிப்பிரதேசத்தில் நிர்வாக அமைப்பு விஷயத்தில் மிக முக்கியமான அரசியல் சட்ட அதிகாரங்களைத் தோற்றுவித்துள்ளது. சோவியத் அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றியக் குடியரசுகளின் மிக முக்கியமான அரசுரிமையான, தனது பிரதேச, பிராந்திய, வட்டார, மாவட்டப் பிரிவுகளை நிர்ணயிப்பது, நிர்வாக—பிரதேச அமைப்பின் மற்ற பிரச்னைகளைத் தீர்ப்பது ஆகியவற்றை உறுதி செய்கிறது (79ஆவது விதி). ஒன்றியக் குடியரசுகளில் சுயாட்சிக் குடியரசுகளும் சுயாட்சிப் பிராந்தியங்களும் நிறுவப்படுவதை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் சோவியத் ஒன்றியத்திற்கு உண்டு. காரணம், இது மாபெரும் அரசியல் முக்கியத்துவமுள்ள செயற்பாடாகிய தேசியக் கொள்கையுடன் நேரடியாகத் தொடர்புடையது என்பதோடு தேசிய அரசுகளின் பிரதேச உரிமைக்கு இது உத்தரவாதம் செய்கிறது.

அரசுக் கட்டமைப்பு மீதான பிரிவில் ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் குடியரசுகளின் பிரதேச அமைப்பு சம்பந்தமான அதிகாரத் தகமையை இணைத்துள்ளன. அதாவது எல்லைகளை அங்கீகரித்தல், சுயாட்சிக் குடியரசுகள் மற்றும் சுயாட்சிப் பிராந்தியங்களின் வட்டாரப் பிரிவினை, பிரதேசங்கள் பிராந்தியங்கள் பிரிவு, பிராந்திய ரீதியாக பிரிக்கப் படாத குடியரசுகளின் குடியரசு நகரங்களை வரிசைப் படுத்தி மாவட்டப் பிரிவுகளை வகுத்தல் ஆகியவையாகும்.

சட்டரீதியாக அரசுப் பிரதேசம் (அரசின் மேலதிகாரம் மேலோங்கி இருக்கும் நிலப்பரப்பு) ஒரு அரசு-சட்ட மற்றும் சர்வதேச-சட்டத் துறை ஆட்சிமுறையாகும், இதில் அரசுப் பிரதேசத்தின் எல்லாக் கூறுகளும் அடங்கியுள்ளன அரசுப் பிரதேசம் தானே இயல்பான முறையில் அரசுடன் சட்ட உறவுகள் கொள்ள இயலாது. சட்ட உறவுகள் ஓர் அரசின் பிரதேசம் சம்பந்தமாக மட்டுமே எழுகின்றன. அரசுப் பிர

தேசத்தின் சட்டத் தன்மை, அரசின் பொருத்தமான அதிகார பூர்வ சர்வ சுதந்திரச் சட்டங்களிலும் இதர அரசுகளுடனுன அதன் பிரதேச உறவுகளிலும் வெளிப்படுகிறது. சில சமயம் பிரதேச நிர்ணயம் பற்றிய பிரச்சினைகள் முந்திய அரசு செய்து கொண்ட சர்வதேச உடன்பாடுகள் மூலம் தீர்வு காணப் பெறுகின்றன. தேசங்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டை உண்மையிலேயே அடிப்படையாக்கிய சர்வதேச உடன்படிக்கைகள் மட்டுமே தமது சட்ட ஆற்றலைத் தொடர்ந்து வைத்திருக்கின்றன.

சர்வதேசச் சட்டத்தின் கீழ், பிரதேச உரிமை மற்றும் தேசங்களின் சுயநிர்ணயம் போன்ற கோட்பாடுகளை மீறுமலும், இந்தக் கோட்பாடுகளுக்கு ஏற்பப் படைத்துருவாக்கியதுமான சட்டங்கள் சட்ட ஆற்றலுள்ள சர்வதேசச் சட்டங்களாகும்.

அரசின் மேலதிகாரக் கருத்தமைப்புக்கு ஏற்ப (அரசு தன் பிரதேசத்திற்குள் சட்டங்களைச் செயல்படுத்த முற்றிலும் உரிமையுடையது என்று பொருள்) ஒரு அரசின் பிரதேச உரிமை மீது தலையிடுவது அது தனது சர்வ சுதந்திர அதிகாரத்தை அமுல் நடத்துவதன் மீது தலையிடுவதாகும், எனவே இது அரசின் அரசுரிமையைக் கொச்சையாக மீறுவதாகும். ஒரு அரசு இன்னொரு அரசின் பிரதேசத்தில் தனது ஆட்சி அதிகாரத்தைச் செயல்படுத்த முயல்வதும் இதைப் போன்றதேயாகும். பிரதேச மேலதிகாரம் என்பது, எந்த அரசும் இன்னொரு அரசின்மீது தலையிட்டு அங்கு தனது அதிகாரத்தைச் செயல்படுத்தக் கூடாது என்பதைக் குறிப்பாகச் சுட்டுவதாகும். அரசின் எல்லை அரசின் ஆட்சி வரம்பை வரையறுப்பதாகும். அரசு தன் பிரதேசத்தைப் பாதுகாத்துத் தற்காத்துக் கொள்கிறது, எல்லைகள், எல்லைப் பகுதிகள் மற்றும் இதர விசேஷ மண்டலங்கள் சம்பந்தமான விதிகளை நிறுவவும் மாற்றவும் செய்கிறது, தனது விண்வெளி மற்றும் பிரதேச நீர்ப்பகுதிகளில் போக்குவரத்து பற்றிய நிபந்தனைகள், தேசிய நீர்வள உபயோகம் பற்றிய நிபந்தனைகளை முறைப்படுத்துகிறது. பிரதேச மேலதிகாரம் பெற்ற அரசு, தன் நிலப்பரப்பை பிரதேச மற்றும் நிர்வாகப் பிரிவுகளாகவும் மக்கள் தொகையை பிரதேசத்திற்கான பிரிவுகளாக

வும் வரையறுத்து, அரசியல் மற்றும் நிர்வாகத் துறையிலான ஒழுங்கமைப்பை நிறுவுகிறது.

பிரதேச மேலதிகாரம் ஆட்சி அதிகாரத்தில் உள்ளார்ந்து கிடக்கும் ஒரு கடமையாகும். ஆட்சி அதிகாரம் நிலவுவதும் அமுல் செய்யப்படுவதும் பிரதேச ரீதியில் வரையறுக்கப்பட்டதான ஆட்சியின் நோக்கங்களே அவசியமாயும் கோருகின்றன. பிரதேச மேலதிகாரம், ஆட்சியின் முக்கியமான அம்சத்தின் ஒரு ஸ்தூலமான வெளியீடாகும், அதாவது இந்த ஆட்சியை தொடர்ச்சியாகச் செயல்படுத்துவதில் பல்வேறு வழிகளில் வெளிப்பாடாகும் மேலாதிக்கம் ஆகும்.

சோவியத் சோஷலிச அரசின் பிரதேச மேலதிகாரம், அரசின் உருவில் அரசியல் ஆட்சியையும் நிலத்தின் உடைமையையும் இணைக்கிறது.

சோவியத் சோஷலிச அரசில் தனி ஒரு கூட்டரசு சட்ட அமைப்பும் ஒரு சீரான சோஷலிச சட்ட முறையும் ஒற்றை ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கான திறமான சாதனங்களாகத் திகழ்கின்றன.

இந்தக் கோட்பாடு அரசியல் அமைப்புச் சட்டத்தின் மேலும் பொதுவான ஒரு கோட்பாட்டை அடிப்படையாய்க் கொண்டிருக்கிறது, இதன்படி, சோவியத் அரசும் அதன் எல்லா அமைப்புக்களும் சோஷலிச சட்டமுறையின் அடிப்படையில் இயங்குகின்றன, சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டுகின்றன, சமுதாயத்தின் நலன்களையும் குடிமக்கள் உரிமைகளையும் பாதுகாக்கின்றன. சோவியத் ஒன்றியத்தின் அரசு அமைப்புகள், சமுதாய நிறுவனங்கள், பொறுப்பேற்றுக் கொண்ட நபர்கள் ஆகிய அனைவரும் சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தையும், சோவியத் சட்டங்களையும் பின்பற்றக் கடமைப்பட்டவர்கள் (4ஆவது விதி).

சோவியத் சட்ட அமைப்பு எல்லாவற்றுக்கும் மேலாக அகில-ஒன்றியம் மற்றும் குடியரசுச் சட்டங்களைத் தனி ஒரு முழுமையாக ஒன்றிணைக்கும் பொதுவான அரசியல் திசைவழி, நோக்கங்கள் மற்றும் கோட்பாடுகளால் சிறப்புப் பெறுகிறது. சோவியத் நியதி மற்றும் சட்ட விதிகளின் அமைப்பு சோவியத் ஒன்றியத்தின் அமைப்புகளும் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அமைப்புகளும் நிறுவியுள்ள நியதிகள் உள்ளிட்ட சட்ட வடிவில் வளர்ந்து வருகிறது. சட்டம் இயற்று

வதில் சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசு களின் அதிகாரத் தகமை சோவியத் சட்ட வடிவில் இணைக்கப் பெற்றுள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் மற்றும் ஒன்றியக் குடியரசு களின் சட்டத் துறை அதிகாரத் தகமை கருராக அனுசரிக் கப்பட்டால் மட்டுமே சட்ட அமைப்பு ஒரே சீரானதாக இருக்கும். சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசு களின் சட்டமியற்றும் உரிமையின் வீச்சு அரசின் நடவடிக் கைகள், மற்றும் பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சி ஆகியவற்றினை மத்தியப்படுத்தல் அல்லது பன்முகப்படுத்த லின் அளவினையும் சார்ந்து நின்று பல்வேருக உள்ளது என் பது கண்கூடு. சோவியத் அரசு வளர்ச்சியின் இந்த அல்லது அந்தக் காலகட்டத்தின் அம்சங்கள் குடியரசுகளின் சட்ட உரிமைக்குள் வரும் பிரச்சினைகளின் அளவை அதிகரிக்கிறது அல்லது குறைக்கிறது, அதன் மூலம் அவற்றின் சட்டமியற் றும் அதிகாரங்களை அதிகரிக்கிறது அல்லது குறைக்கிறது. ஆனல் எந்த சட்டமியற்றும் துறைகள் ஒன்றிய அமைப்புகளின் அதிகாரத் தகமைக்குள் வரும், எந்தளவுக்கு வரும் என்ற பிரச்சினையை ஒன்றியக் குடியரசுகளின் சர்வ சுதந்திர உரி மைகளின் வரையறைகள் பற்றிய பிரச்சினையிலிருந்து தனி யாகப் பிரிக்க முடியாது. எனவே இந்தப் பிரச்சினைகளுக்கு ஒன்றியக் குடியரசுகளின் கருத்துக்கள் நலன்களுக்கு ஏற்ற முறையில் தீர்வு காணப்பட வேண்டும்—இந்தக் குடியரசுகளி னுடைய சித்தத்தின் அடிப்படையில்தான் ஒன்றியம் நிறுவப் பெற்றது. அதே சமயம் அவற்றின் தீர்வு எப்போதுமே ஒவ் வொரு ஒன்றியக் குடியரசின் தேசிய மற்றும் அரசு வளர்ச்சி யின் கொத்தளமாக இருக்கும் ஒன்றிய அரசின் பலத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

அகில-ஒன்றியச் சட்டங்களை இயற்றுவதானது சோவியத் சட்ட முறையின் ஒரு சீரான தன்மையை உத்தரவாதம் செய் யும் பொது அமைப்பில் கேந்திரமான பங்கு வகிக்கிறது, காரணம் அகில-ஒன்றியச் சட்ட முறை குடியரசுச் சட்ட முறைகளின் நியதி அடிப்படையாகும். சோவியத் ஒன்றியத் தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதி, அகில-ஒன்றிய சட்டங்களைப் பிறப்பிக்கும் தனி உரிமையினை சோவி யத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்திற்கு வழங்குகிறது.

சோவியத் அரசின் சட்ட அமைப்பின் ஒற்றை தன்மை, சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் பல் வேறு சட்டத் துறைகளில் ''சட்ட முறையின் அடிப்படை களைப்'' பிறப்பிப்பதற்கான சோவியத் ஒன்றியத்தின் அதி காரத் தகமை மூலம் அரசியல் அமைப்புச் சட்டப்படி உத் தரவாதம் செய்யப்படுகிறது. இது ஒன்றியக் குடியரசுகளுக்கு விரிந்த அளவிலான பிரச்சினைகள் மீது சட்டமியற்றவும், சட் டங்களை இயற்றுவதில் முன்முயற்சி செய்யவும் உரிமைகள் உள்ளன என்பதை முன்கூட்டியே அனுமானிக்கிறது.

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் அங்கீகரித்த ''சட்ட முறை அடிப்படைகள்'' குறிப்பிட்ட பிரச்சினைகளை முறைப்படுத்துவதற்கான அடிப்படைச் சட்டக் கோட்பாடு களை நிறுவும் உத்தேசமுள்ளவை. குடியரசுகளின் சட்டங்கள் பொருத்தமான பொதுக் கோட்பாடுகளை வெளியிட்டு அவற்றை விரித்துரைத்தும் ஸ்தூலப்படுத்தியும் குடியரசின் அதிகாரத் தகமைக்கு உட்பட்ட அனைத்துப் பிரச்சினைகளி லும் புதிய நியதிகளை நிலைநாட்டுகின்றன.

ஒன்றியத்தின் சட்ட நியதிகளை ஸ்தூலப்படுத்தி வளர்க் கும் குடியரசு அரசாங்கங்களின் தீர்மானங்களும் தாக்கீது களும் பெரும் பகுதியான குடியரசுச் சட்டங்களாக விளங்கு கின்றன. ஸ்தல நிலைமைகளைத் தக்க கவனத்தில் எடுத்துப் பிறப்பிக்கப்பட்ட இவை அகில-ஒன்றியச் சட்ட முறையின் மிகவும் உசிதமான பிரயோகத்தினை உத்தரவாதம் செய்ய உதவுகின்றன.

ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளிலிருந்து செயல் படத் தொடங்கி ஒன்றியக் குடியரசுகளின் சட்ட முறையா னது ஸ்தல அம்சங்களையும், ஸ்தல முன்முயற்சியையும், ஒரு பொது நோக்கத்தை அடைவதற்கான பல்வேறு வழிவகை களையும் முழுமையாக வளர்க்கிறது. ஒன்றியக் குடியரசுகளின் சட்டத் தொகுப்பேடுகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருக்கும், அவை பிரத்தியேகமான ஸ்தல நிலைமைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதும், எல்லா ஒன்றியக் குடியரசு களிலும் ஒரு சீராக உள்ள சமூக உறவுகளைச் சிறப்பாக வெளியிடும் சட்ட மற்றும் செயல் துறை வடிவங்களை நாடும் முயற்சியும் இதற்கு காரணம் ஆகும். இதனால், ஒன்றியக் குடி யரசின் பிரத்தியேக நிலைமைகளை கவனத்தில் கொண்டால்

மட்டுமே தீர்வு காணத் தக்கதான ஒரு சில பிரச்சினைகள் அளவுக்குக் குடியரசின் சட்டங்களை வரையறுத்து விடுவது என்று அர்த்தமல்ல. சர்வ சுதந்திர அரசுகளாக இருப்பதால் ஒன்றியக் குடியரசுகள் விரிந்த அளவிலான சமூக உறவுகளை முறைப்படுத்த இயலும்.

சோவியத் சட்ட அமைப்பாக உருவெடுத்துள்ள சட்ட நியதிகளைப் பின்வரும் அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படையில் அகத்தே ஒரு முகப்படுத்தவும் ஒற்றுமைப்படுத்தவும் முடியும்.

முதலாவதாக, சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ், சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் அமுலாவதைக் கண்கணிப்பதற்கும், ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டம் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தோடு முழுதும் பொருந்தியபடி இருக்குமாறு செய்வதற்கும், அரசாட்சி, நிர்வாகம் ஆகியவற்றின் உயர் அமைப்புக்கள் மூலம் அரசியல் அமைப்புச் சட்டம் வகை செய்கிறது. சட்ட அமைப்பு முழுவதையும் நிறுவுவதிலும் அதன் ஒற்றுமையைப் பேணிக் காப்பதிலும் இது சோவியத் ஒன்றியத்தின் தலைமைப் பாத்திரத்தை வலுப்படுத்துகிறது.

ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு பொருந்தியனவாக இருத்தல் வேண்டும், ஆனால் அரசியல் அமைப்புச் சட்டமியற்றலில் அமிதமான மத்தியத்துவத்திற்கோ, அவற்றின் அரசியல் அமைப்புச் சட்டங்களில் ஒன்றியக் குடியரசுகளின் தனி நிலைமைகள் வெளியிடாமல் இருப்பதற்கோ இடந்தரக் கூடாது.

இரண்டாவதாக, சோவியத் அரசியல் சட்டம் இன்னொரு கோட்பாட்டையும் முன்வைக்கிறது. இதன்படி ஒன்றியக் குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டம் சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஒத்ததாக இருக்கும். இது குடியரசின் சிறப்புத் தன்மைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும்.

மூன்றாவதாக, சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் பிரதேசம் முழுமைக்கும் ஒரே மாதிரியான சட்ட ஒழுங்கு முறையை நிலைநாட்டவும், சோவியத் ஒன்றி

யத்துக்கும், ஒன்றியக் குடியரசுகளுக்கும் சட்ட அடிப்படைகளை நிறுவுவதற்கும் சோவியத் ஒன்றியத்துக்கு அரசியல் அமைப்புச் சட்டம் முன்னுரிமை வழங்குகிறது (ஈ, 73ஆவது விதி).

நன்காவதாக, அகில-ஒன்றியச் சட்ட அமைப்பிற்குக் குடியரசுச் சட்டத்தை விட முன் உரிமை உண்டு. இந்தக் கோட்பாடு சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் படி சோவியத் ஒன்றியத்தின் சட்டங்களுக்கு எல்லா ஒன்றியக் குடியரசுகளிலும் அதே ஆட்சித்திறன் உண்டு. இவற்றிடை முரண்பாடு ஏற்படும் பொழுது அகில-ஒன்றியச் சட்டம் ஒன்றியக் குடியரசின் சட்டத்தை விட முன் உரிமை கொண்டது.

சோவியத் ஒன்றியத்தின் 1924ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டமும், அதன் அடிப்படையில் அங்கீகரிக்கப் பெற்ற ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களும் குடியரசுகளின் சட்டத்தைவிட அகில-ஒன்றியச் சட்டங்களுக்கு முதன்மை உரிமை உண்டு என்பதைக் குறிப்பிடவில்லை. ஆனால் அவை அகில-ஒன்றியச் சட்டத்தின் மேலதிகாரக் கோட்பாட்டை இணைத்துக் கொண்டிருந்தன. இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் 20ஆவது விதி, சோவியத் ஒன்றியத்தின் மத்தியச் செயற் குழுவுக்கு, ஒன்றியக் குடியரசுகளின், சோவியத்துகளின் காங்கிரசுகள், மத்தியச் செயற் குழுக்கள், இதர அதிகார அமைப்புகள் அங்கீகரிக்கும் ஆணைகள், தீர்மானங்கள் மற்றும் தாக்கீதுகளை தற்காலிகமாக விலக்கி வைக்கவோ ரத்துச் செய்யவோவான அதிகாரம் வழங்கியது. 31 மற்றும் 32ஆம் விதிகளைப் பின்பற்றி, சோவியத் ஒன்றியத்தின் மத்தியச் செயற் குழுவின் தலைமைக் குழுவுக்கு ஒன்றியக் குடியரசுகளின் மத்தியச் செயற் குழு மற்றும் மக்கள் கமிசாரகங்களின் தீர்மானங்களையும் ஒன்றியக் குடியரசுகளின் சோவியத்துகளின் காங்கிரஸ் தீர்மானங்களையும் அமுல் செய்வதை ஒத்திப் போடும் உரிமை உண்டு. இவை பின்னால் பரிசீலனைக்காகவும் அங்கீகாரத்திற்காகவும் சோவியத் ஒன்றியத்தின் மத்தியச் செயற் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

இன்றும் அமுலில் இருந்து வருகிற சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி ஒன்றியக் குடி

யரசுகளின் அமைச்சரவைகளின் தீர்மானங்களும் தாக்கீது களும் சட்டத்திற்குப் பொருந்தாதவையாக இருந்தால் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழுவுக்கு அவற்றை ரத்துச் செய்யும் அதிகாரம் உண்டு. சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவை, சோவியத் ஒன்றியத்தின் அதிகாரத் தகமை வட்டத்திற்குள்ளான பிரச்சினைகளில் ஒன்றியக் குடியரசுகளின் அமைச்சரவை எடுக்கும் தீர்மானங்கள் மற்றும் தாக்கீதுகளை அமுல் செய்யாது நிறுத்தி வைக்கலாம்.

ஒன்றியக் குடியரசுகளைச் சேர்ந்த ஒன்றிய-குடியரசு அமைச்சரகங்கள் இடும் உத்தரவுகள் ஒன்றியச் சட்டங்கள் அல்லது சோவியத் ஒன்றியத்தின் ஒன்றிய-குடியரசு அமைச்சரகங்களின் உத்தரவுகள் ஆகியவற்றுக்கு எதிராகவோ, ஒன்றியக் குடியரசுகளின் சட்டங்கள் அல்லது அமைச்சரவைகளின் உத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டிராமலோ இருக்கும் பட்சத்தில் அவற்றை சோவியத் ஒன்றியத்தின் ஒன்றிய-குடியரசு அமைச்சரகங்கள் ரத்துச் செய்து விடும்.

சோஷலிசச் சட்ட முறைமையின் ஒற்றுமை சோவியத் ஒன்றியத்தின் பிரொக்கியுரேட்டர் ஜெனரலின் (தலைமை அரசு வழக்கறிஞர்) தலைமையிலுள்ள வழக்கு விசாரணை அமைப்புகளின் கறாரான மத்தியத்துவப்படுத்தப் பெற்ற முறையில் உத்தரவாதம் செய்யப்படுகிறது. அவர், சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புப் படி எல்லா அமைச்சுகள், அரசு கமிட்டிகள், இலாகாக்கள், தொழில் நிலையங்கள், அமைப்புகள், நிறுவனங்கள், ஸ்தல சோவியத்துகளின் செயல் மற்றும் நிர்வாகக் கமிட்டிகள், கூட்டுப் பண்ணைகள், கூட்டு அமைப்புகள், மற்ற சமுதாய நிறுவனங்கள், பொறுப் பேற்றுக் கொண்ட நபர்கள் மற்றும் சோவியத் குடிமக்கள் சட்டங்களைச் சரியாகவும் ஒரேமாதிரியாகவும் கடைப்பிடித்து வருகிறார்களா என்பதைக் கவனிக்கும் உயர் கண்காணிப்பாளராகிறார். சோவியத் ஒன்றிய அரசு வழக்கு விசாரணை யாளர் கண்காணிப்பு பற்றியவிதி, சோவியத் ஒன்றியத்தின் தலைமை அரசு வழக்கறிஞர் அவருக்குக் கீழே உள்ள அரசு வழக்கறிஞர்கள் சோவியத் ஒன்றியம், ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் சட்டங்கள் சரியாகவும் ஒருசீராகவும் அமுல் செய்யப்படுவதைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

சோவியத் ஒன்றிய அரசில் ஒற்றைக் குடியுரிமை, ஆட்சி அதிகாரத்தின் ஒற்றுமைக்கு ஒத்ததாக இருக்கிறது.

சோவியத் குடியுரிமை சோவியத் ஒன்றியம் முழுமைக்கும் ஒன்றேயாகும். ஒன்றியக் குடியரசின் ஒவ்வொரு குடிமகனும் சோவியத் ஒன்றியத்தின் குடிமகனுவான்.

குடிமக்களின் அந்தஸ்து பற்றி ஒவ்வொரு ஒன்றியக் குடியரசுக்கும் ஏதேனும் பிரத்தியேக அம்சங்கள் இருந்தால் மட்டுமே தனி ஒரு கூட்டரசில் ஏககாலத்தில் ஒன்றிய குடியுரிமையும் மற்றும் குடியரசுக் குடியுரிமையும் வைத்திருப்பது நியாயமாகும்.

தனிப்பட்ட குடியரசுகளிடையே சில சிறிய வித்தியாசங்கள் நிலவுகின்றன. ஓர் ஒன்றியக் குடியரசில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு நபரும் (அவன் ஒரு வெளிநாட்டான் அல்லது நாடற்ற நபராக இல்லாதிருப்பின்) ஒரு திட்டவட்டமான குடியரசுக் குடியுரிமையை — ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு அல்லது உக்ரேனியக் குடியுரிமையைப் பெற்றவராக இருப்பார். அவர் வசித்து வரும் ஒன்றியக் குடியரசின் சட்ட வட்டத்தின் கீழ் இருக்கிருர் என்ற முறையில் சோவியத் குடிமக்களின் சட்ட அந்தஸ்து பாதிக்கப்படலாம். ஒன்றியக் குடியுரிமை சோவியத் குடிமக்களுக்கு ஒன்றியக் குடியரசின் குடிமக்கள் என்ற முறையில் அவர்கள் அனுபவித்து வருவதற்குப் புறம்பான கூடுதல் உரிமைகளே வழங்குகிறது.

சோவியத் குடியுரிமை அமைப்பு ஒற்றுமைக் கோட்பாட்டை உள் அடக்குகிறது, பிரதான அம்சங்களில் ஒன்ருகிய இது சோவியத் அரசு அமைப்பின் ஆழமான ஜனநாயக மற்றும் சர்வதேசியத் தன்மையை வெளிப்படுத்துகிறது, சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஒற்றுமையை நிர்ணயிக்கிறது.

சோவியத் குடியுரிமையின் ஒற்றுமைக் கோட்பாடு வெளிப்படுத்துவன பின்வருமாறு: (1) சோவியத் குடிமக்கள் ஒன்றியத்தின் குடிமக்களாகவும் அதே சமயம் ஒரு குடியரசின் குடிமக்களாகவும் இருக்கிருர்கள் என்ற உண்மை; (2) ஒன்றியக் குடியுரிமை மற்றும் குடியரசுக் குடியுரிமையினே இணைப்பது இவை ஒன்ருேடொன்று தொடர்புடையவை (இது சோஷலிசக் கூட்டரசில் மட்டுமே சாத்தியம்; அங்கு அரசுரிமையின் ஒற்றுமை சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமை

மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமையின் இணைப்பு மற்றும் அமைப்புரீதியான இடைத்தொடர்பு ஆகியவற்றால் சிறப்பிக்கப்படுகிறது); (3) சோவியத் குடிமக்களின் சமத்துவமான சட்ட அந்தஸ்து; இது இந்தக் கோட்பாட்டை நிறைவேற்ற இன்றியமையாதது.

சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் சோவியத் குடிமக்களுக்கு ஒற்றை ஒன்றியக் குடியுரிமை உண்டு, ஓர் ஒன்றியக் குடியரசின் குடிமக்கள் சோவியத் குடிமக்களாவர் என்று வகை செய்கிறது. எனவே சோவியத் ஒன்றியத்தில் ஒற்றை ஒன்றியக் குடியுரிமை உண்டு. இது சோவியத் குடிமக்களுக்கு நிலைநாட்டப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து ஒன்றியக் குடியரசுகளுக்குச் சொந்தமான குடியுரிமை உண்டு என்பதும் ஒன்றியக் குடியரசின் குடிமக்கள் அதே சமயம் சோவியத் ஒன்றியத்தின் குடிமக்களாகவும் இருப்பார்கள் என்பதும் தெளிவாகிறது.

சோஷலிச கூட்டரசுக்கு மட்டுமே குடியுரிமை ஒற்றுமை இருக்க முடியும். ஒரு முதலாளித்துவ அரசில் கூட்டரசுக் குடியுரிமைக்கும் ஸ்தலக் குடியுரிமைக்கும் இடையிலான பரஸ்பர உறவினைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் முதலாளித்துவக் கூட்டரசில் சேர்ந்த பிரதேசங்கள் அரசுகள் அல்ல என்பதை மனதிற் கொள்ள வேண்டும். ஸ்தலக் குடியுரிமை அதன் சட்ட இயல்பு காரணமாகப் பெருமளவுக்குப் பெயரளவிலேயே இருக்கும், ஏனென்றால் அது ஓர் அரசு, நாடு, மண்டலம் ஆகியவற்றின் சுதந்திரமான ஆட்சி அதிகாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த இயலாது.

மேலே சுட்டிக் காட்டப் பெற்ற சட்ட மற்றும் சமூக-அரசியல் காரணிகள் ஒன்றியத்தின் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமையை ஒற்றுமைப்படுத்தி இசைவாக்குவதை சாத்தியமாக்குகின்றன.

அத்தியாயம் 6

# சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமைக்கும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமைக்கும் இடையிலான தொடர்பாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படை

சோஷலிச உடைமை, சோஷலிசப் பொருளாதார அமைப்பு, மற்றும் மக்களிடையான நட்புறவு, சோதரக் கோட்பாடுகளை அடிப்படையாக்கிய சோஷலிச அமைப்பின் கீழ், சமத்துவமான சர்வசுதந்திரக் குடியரசுகள் ஒரு பல்தேசிய ஒன்றிய அரசாக சுயவிருப்பத்தால் ஒன்றிணைவதனால் அவற்றின் அரசுரிமைக்கு இழப்போ அல்லது கட்டுப்பாடோ ஏற்படாது. சோவியத் ஒன்றியத்தில் சோவியத் குடியரசுகள் சுயவிருப்பமாக இணைந்து கொண்டதானது அவற்றின் சோஷலிச அரசுரிமையைத் தெளிவாக வெளிப்படுத்தியது, அதற்கான உறுதியான உத்தரவாதங்களை வழங்கியது. சோவியத் குடியரசுகள் தனி ஒரு அரசு ஒன்றியமாக ஒன்றிணைந்ததன் நோக்கம், கூட்டு முயற்சிகள் மற்றும் மத்தியப் படுத்துதலின் சாதகங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் சுதந்திரமான வாழ்வைப் பேணிக்காத்து உத்தரவாதம் செய்து வலுப்படுத்துவதே.

தனி ஒரு சோவியத் ஒன்றிய அரசு நிறுவப்பட்ட பொழுது, எல்லா சமூகத் துறைகளிலும் சோவியத் குடியரசுகள் சேர்ந்து நடத்தி வந்த செயல்பாடுகள் குணும்ச முறையில் புதிய மட்டத்திற்கு உயர்த்தப்பட்டன. ஒன்றிய அரசின் அரசுரிமையையும், அதை உருவாக்கிய குடியரசுகளின் அரசுரிமையையும் பேணிக்காப்பதற்கான காரணங்கள், அரசு மற்றும் சட்டத் துறையிலான முழு அமைப்பாகிய சோவியத் ஒன்றியத்தில் ஒன்று சேர்ந்துவிட்ட குடியரசுகளின் கூட்டுக் குடும்பத்தில் வேர் கொண்டிருக்கின்றன.

சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமை மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமைக்கும் இடையிலான தொடர்பாட்

டின் சட்டத்தன்மை மற்றும் இந்த தொடர்பாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படையும் சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமையினைப் பரிசீலிப்பதில் மிகவும் முக்கியமான பங்கு வகிக்கின்றன. சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமை ஒரு சுதந்திரமான காரணியாகும். கூட்டரசைச் சேர்ந்து உருவாக்கியிருக்கும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமையின் விட்டுக் கொடுக்கும் பகுதியைக் கொண்டு உருவானதல்ல.

ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமை சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமையிலிருந்து வருவிக்கப் பெற்றதல்ல. சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமையும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமையும் வருவிக்கப் பெற்றதாக இருப்பின் அவை வரையறுக்கப்பட்டதாக இருக்கும். காரணம் அவை கூட்டரசுக்கும் அதன் உறுப்புக்களுக்கும் இடையே''பிரிக்கப்பட்டு'' இருக்கும். இது சோவியத் ஒன்றியத்தின் அரசு மற்றும் சட்டமுறைத் தன்மைக்கு எதிரான செயலாகும். ஒன்றியக் குடியரசுகள் ஓரளவுக்கு சர்வசுதந்திரமானவை, ஓரளவுக்கு சர்வசுதந்திரம் அல்லாதவை என்று ஏற்பது அரசுரிமைக் கருத்துருவுடன் முரண்படுகிறது, சோவியத் பல்தேசிய அரசின் தன்மை பற்றிய தவறான விளக்கத்திற்கு இடமளிக்கிறது.

ஆனால் சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமைக்கும், அதைச் சேர்த்து உருவாக்கியிருக்கும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமைக்கும் இடையிலான இடைத் தொடர்பினைப் புறக்கணிக்க இயலாது. சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமை கூட்டாட்சி அரசின் திட்டவட்டமான சட்ட அந்தஸ்து மட்டுமே, இந்த அரசு ஒன்றியக் குடியரசுகள் இருக்கும் பொழுது மட்டும் தான் நிலவும்; ஆனால் ஒன்றியத்திற்குள் ஒன்றிணைந்த பிறகு சில மாற்றங்களை அடைந்துள்ள ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமை கூட்டாட்சி உறவுகளுக்கு வெளியேயும் நிலவும். ஆனால் ஒரு ஒன்றிய அரசில் இரு மாதிரியான அரசுரிமைகள் ஒன்றோடொன்று தனித்து நின்று நிலவுதல் முடியாது, காரணம் அவை ஒன்றை ஒன்று நிறைவு செய்து கொள்ளும், ஒன்றுக்கொன்று பரஸ்பரம் செயல்பட்டுக் கொள்ளும்.

சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் மற்றும் சட்ட சுதந்திரம், அவற்றின் அரசுரிமை ஆகியவற்றுக்கு சோவியத் ஒன்றிய அரசில் ஒரு சில தனித்

தன்மைகள் உள்ளன என்பதை இது காட்டுகிறது. சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமையும், ஒவ்வொரு ஒன்றியக் குடியரசின் அரசுரிமையும் ஒவ்வொன்றும் முழுமை பெற்ற பிரிக்க வொண்ணுத கருத்துருக்களாகும், ஆனுல் அவை தொடர்ச்சியாக ஒன்றேடொன்று ஊடுருவிக் கூட்டாகச் செயல்படுகின்றன.

**கூட்டாட்சி அமைப்பில் ஒன்றியக் குடியரசுகள் இருப்பதால் அவற்றின் அரசுரிமை கட்டுப்படுத்தப்பட்டதாகப் பொருளாகாது.** கோட்பாடு அடிப்படையில் ஒன்றியக் குடியரசுகள் பூரண அரசுரிமையை அனுபவிக்கின்றன, இன்று நிலவும் அரசியல் அமைப்புச் சட்ட விதிகளை ஆய்வு செய்து பார்த்தால் இது தெரிய வரும்.

சோவியத் ஒன்றியம் உருவாக்கப்பட்டது பற்றிய உடன்படிக்கையும் எதையும் குறிப்பிடவில்லை. ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் 1925ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் சோவியத் ஒன்றியத்தின் 1924 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதல் விதி வரையறுத்துள்ளபடியான அதிகாரங்கள் ஒன்றியத்துக்கு மாற்றப்பட்டன என்று மட்டுமே கூறியது, ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் அரசுரிமையைக் கட்டுபபடுத்துவது பற்றிய எதையும் குறிப்பிடவில்லை. உக்ரேனியாவின் 1925ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் உக்ரேனியாவின் அரசுரிமை கட்டுப்படுத்தப்படுவது பற்றி ஏதோ சில கருத்துக்களைக் கூறியது ஆனுல் அந்த விதி குடியரசுக்கும் ஒன்றியத்திற்கும் இடையிலான அதிகாரப் பிரிவினையே இது என்பதைத் தெளிவாகக் காட்டியது. மேலும் மேலே குறிப்பிட்ட விதி உக்ரேனியாவை ஒரு சர்வ சுதந்திர அரசு என்று பறைசாற்றியது, அதாவது இதர குடியரசுகளுடன் உடன்படிக்கை உறவுகள் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டது.

தற்போது அமுலிலுள்ள அரசியல் சட்டப்படி ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமை சோவியத் ஒன்றியம் முழுவதாலும் பாதுகாக்கப்படும்.

சோவியத் அரசாட்சி நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் மூலம் சோவியத் ஒன்றியத்தில் அமுல்படுத்தப்பட வேண்டியவை என்று அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிற

விதிகளைத் தவிர, ஒன்றியக் குடியரசு தனது பிரதேசத்தில் சுயேச்சையாக அரசு ஆட்சி அதிகாரம் செலுத்துகிறது. ஒவ்வொரு ஒன்றியக் குடியரசும் தனது ஆட்சி அதிகாரத்தை பூரணமாக சர்வசுதந்திர உரிமைகளின் அடிப்படையில் அமுல் செய்கின்றன. எனவே, ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமை இந்த சர்வசுதந்திர உரிமைகளின் வலிமை மற்றும் முழுமையால் உத்தரவாதம் செய்யப்படுகிறது. இவ்வாறுக சோவியத் ஒன்றியத்தின் அரசுரிமையைப் போலவே ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமையும் எந்த ஒரு கட்டுக்கோப்புக்கும் அடங்கியதாக இல்லை, காரணம் ஒரு சர்வசுதந்திர அரசு அதன் சர்வசுதந்திர அதிகாரங்களை அமுல் செய்வதில் கட்டுப்படுத்தப்பட முடியாது.

ஒன்றியக் குடியரசுகள் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் சேர்ந்த பொழுது தமது உரிமைகள் சிலவற்றை ஒன்றியத்திற்குச் சுயவிருப்பமாக மாற்றி வழங்கின. இதனுல் அவை தமது அரசுரிமையைக் கட்டுப்படுத்திக் கொண்டன என்று அர்த்தமாகாது. இந்தக் கருத்து இரு காரணிகளை அடிப்படையாகக் கொண்டது. அவை ஒன்ருென்று முரண்படுவதாகத் தோன்றுகிறது, ஆனுல் உண்மையில் அவை முற்றிலும் இணக்கமுடையவை. முதலாவது ஓர் ஒன்றியக் குடியரசின் அரசுரிமையின் முழுமையான கட்டுப்பாடு அற்ற தன்மை பற்றியது, இரண்டாவது ஒன்றியத்தில் சேர்ந்தவுடன் ஓர் ஒன்றியக் குடியரசு தனது உரிமைகளைச் சுயவிருப்பத்துடன் தானுகவே கட்டுப்படுத்திக் கொள்வது பற்றியது.

அரசு தனது உரிமைகள் சிலவற்றை ஒன்றியத்திற்கு மாற்றித் தந்திருந்த பொழுதிலும் அது தன் அரசுரிமையை இழந்து விடுவதில்லை. இந்தப் பிரச்சினையை முறையாகப் பரிசீலனை செய்தால் ஒரு ஒன்றியக் குடியரசின் அரசுரிமையை நிர்ணயம் செய்வது, முதலாவதாக, ஒரு ஒன்றியக் குடியரசு, அதன் அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவை நிலைநாட்டியுள்ள உரிமைகளின் கட்டுக்கோப்புக்குள் தேவையான அளவுக்கு ஆட்சி அதிகாரத்தைச் சுதந்திரமாகச் செயல்படுத்துகிறது; இரண்டாவதாக, சோவியத் ஒன்றியத்துடன் சேர்ந்து அதிகாரத் தகமை அனுபவித்து வரும் துறையில் ஒன்றியக் குடியரசு தன் அரசுரிமையைச் செயல்படுத்துகிறது;

மூன்றாவதாக, உயர் அரசு மற்றும் அரசு நிர்வாக அமைப்புகளிலும் சோவியத் ஒன்றியத்தின் உயர் நீதிமன்றத்திலும் உள்ள பணிகளில் கலந்து கொள்வது மூலம் ஒன்றியக் குடியரசு தன் அரசுரிமையைச் செயல்படுத்துகிறது.

ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத், ஒன்றியத்து சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு, ஒன்றியத்தின் அரசாங்கம், ஒன்றியத்தின் மற்ற அமைப்புகள் ஆகியவற்றில் வருகின்ற ஒன்றியம் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில், ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி, ஒன்றியக் குடியரசு பங்கு கொள்கிறது.

ஒன்றியத்தின் அதிகார உரிமையை ஒன்றியக் குடியரசின் பிரதேசத்தில் அமுல்படுத்துவதற்கு அக்குடியரசு வகை செய்கிறது, பொருளாதார, சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுகிறது. ஒன்றியத்தின் அரசு அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றின் முடிவுகளை அது நிறைவேற்றுகிறது.

இவ்வாறாக சோவியத் ஒன்றியத்தின் பகுதிகள் என்ற முறையில் ஒன்றியக் குடியரசுகளுக்குப் போதிய அரசுரிமை உள்ளது, அவை சர்வசுதந்திர அரசுகளாக விளங்குவதை இது சாத்தியமாக்குகிறது.

ஓர் நாட்டின் அரசுரிமையை அதன் அதிகாரத் தகமையிலிருந்து தனியாகப் பிரித்துப் பரிசீலனை செய்ய முடியாது, காரணம் ஆட்சி அதிகாரத்தின் சர்வசுதந்திர அம்சங்கள் அந்த ஆட்சியின் அதிகாரங்களில் உண்மையில் கைவரப் பெற்றுத் திறம்பட வெளிப்படுத்தப் பெறுகின்றன. ஓர் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சட்டப்படி அதன் அதிகாரத் தகமையை அடிப்படையாக்கியவை. ஓர் ஒன்றியக் குடியரசின் அரசுரிமை அதன் அதிகாரத் தகமையுடன் இணைந்திருக்கிறது, இதற்குப் பிரதான காரணம் இந்தக் குடியரசு ஒரு சர்வசுதந்திர அரசு என்ற முறையில் தனது அதிகாரங்களை சுதந்திரமாக நிர்ணயிக்கிறது. ஓர் ஒன்றியக் குடியரசின் அரசுரிமை அதன் அதிகாரத் தகமையை நிலைநாட்டிக் கொள்ளுவதோடு மட்டும் நின்று விடுவதில்லை, மாறாக இந்த உரிமையில் பிரதானமாயும் வெளிப்படுகிறது.

எல்லா ஒன்றியக் குடியரசுகளுக்கும் சமமான அதிகாரத் தகமை உண்டு என்பதும், இது சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தாலும், ஒவ்வொரு ஒன்றியக்

குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டத்தாலும் நிர்ணயிக்கப் படும் என்பதும் மிகவும் முக்கியமான உண்மை. இந்த சமத் துவக் கோட்பாட்டின் பொருள் கூட்டரசின் உறுப்புகள் ஒன்றியத்தின் எல்லா அனுகூலங்களையும் அனுபவிப்பதோடு அதே அளவுக்கு ஒன்றியத்திற்கு ஆதரவாகத் தமது உரிமை கள் சிலவற்றை விட்டுக் கொடுக்கும் என்பதாகும். குடியரசு கள் சம உரிமைகளை அனுபவிக்கின்றன, ஒன்றியம் சம்பந்தப் பட்டவரை ஒரே விதமான கடமைகளைக் கொண்டு இருக் கின்றன.

**ஒன்றியக் குடியரசுகள் தமது உரிமைகள், நலன்கள், அரசு ரிமை ஆகிய விஷயத்தில் சமமான அளவுக்கு ஒன்றியத்தின் பாது காப்பை அனுபவிக்கின்றன.**

அரசுரிமைக்கும் அரசின் அதிகாரத் தகமைக்கும் இடை யிலான தொடர்பு எல்லாவற்றுக்கும் மேலாக சர்வசுதந்திர அரசு தனது அதிகாரங்களைச் சுதந்திரமாக நிர்ணயித்துக் கொள்கிறது என்ற உண்மையில் வெளியாகிறது. ''அதி காரத் தகமையின் அதிகாரத் தகமை'', அதாவது அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றுவது மூலம் அதன் அதிகாரத் தகமையை மாற்றும் உரிமை ஒரு சர்வசுதந்திர அரசின் பிர தான முன் உரிமையாகும். சோவியத் ஒன்றியம், ஒன்றியக் குடியரசுகள் இரண்டும் இந்த உரிமையை அனுபவிக்கின்றன.

சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத் தின் அதிகாரத் தகமையின் வீச்சை சோவியத் ஒன்றிய அர சின் கூட்டாட்சித் தன்மை காரணமாக ஒன்றியக் குடியரசு கள் நிர்ணயம் செய்கின்றன. ஆனால் சோஷலிசக் கூட்டரசின் கோட்பாடுகள் அனுஷ்டிக்கப்பட்டால்தான் ஒவ்வொரு ஒன் றியக் குடியரசின் அதிகாரத் தகமையையும் மாற்ற முடியும்; அதாவது, குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் அகில-ஒன்றிய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு இணையாக வும், ஒன்றிய அரசாக உருவாகும் குடியரசுகள் சமநிலையிலும் இருக்கும் போதுதான் இது சாத்தியமாகும்.

எனவே, ஒன்றியத்திற்கும் குடியரசுகளுக்கும் இடையிலான கூட்டாட்சி உறவுகள், ஒன்றின் அதிகாரத் தகமையை மற் றொன்றுக்குப் பிரதிகூலம் செய்து அதிகரிப்பது என்ற விருப் பத்தால் அன்றி, இரண்டின் அதிகாரத் தகமையையும் உத் தரவாதம் செய்வதற்கான நடவடிக்கைகள் மூலம் சிறப்புப் பெறுகின்றன.

சோவியத் ஒன்றியமும் ஒன்றியக் குடியரசுகளும் பரஸ்பரம் தமது உரிமைகளை ஒருமுகப்படுத்துகின்றன, இதில் அவற்றின் தனி உரிமைகளும் கூட்டு உரிமைகளும் அடங்கும். எனவே சோவியத் ஒன்றிய அரசின் அதிகாரத் தகமையை பின்வரும் முறையில் பிரிக்கலாம்:

(அ) சோவியத் ஒன்றியத்தின் விசேஷமான அதிகாரத் தகமை.

ஒன்றிய அமைப்புகளின் விசேஷ அதிகாரத் தகமை விஷயம் அடங்கிய உரிமைகள் மற்றும் இந்த உரிமைகளின் வீச்சு பற்றிய பிரச்சினை எப்போதுமே ஒன்றியக் குடியரசுகளின் சர்வசுதந்திர உரிமைகளின் வரம்புகள் பற்றிய பிரச்சினையோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. எனவே ஒன்றியத்தைச் சேர்ந்து உருவாக்கியிருக்கும் ஒன்றியக் குடியரசுகளின் கருத்துக்கள் நலன்களை உரிய முறையில் கவனத்தில் கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

(ஆ) சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் கூட்டு அதிகாரத் தகமை.

(இ) ஒன்றியக் குடியரசுகளின் விசேஷ அதிகாரத் தகமை.

சோவியத் ஒன்றியத்தின் விசேஷ அதிகாரத் தகமையைச் செயலாக்குவதில் ஒன்றியக் குடியரசுகள் நேரடியற்ற முறையில் பங்கு வகிக்கின்றன. ஒற்றைப் பொருளாதாரத் திட்டம், இதர ஒன்றியக் குடியரசுகளுடன் உற்பத்தியைத் தனித்திறமைப் படுத்தல் மற்றும் ஒத்துழைப்பு என்ற அடிப்படையிலான சோவியத் ஒன்றியத்தின் பொதுவான நலன்களை உரிய கவனத்தில் கொண்டே அவை தமது விசேஷ அதிகாரத் தகமையைச் செயலாக்குகின்றன.

ஓர் அரசின் இதே அதிகாரங்கள் அதன் அரசுரிமையின் வெளியீடாகவும் அதன் உத்தரவாதமாகவும் இருக்க முடியும், பெரும்பாலும் இருக்கிறது. இதனுல் அரசுரிமைக்கு விசேஷ உத்தரவாதங்கள் நிலைநாட்டப்படவில்லை என்று பொருள் அல்ல. ஓர் ஒன்றியக் குடியரசின் அரசுரிமைக்கும் இந்த அரசுரிமையில் உருக் கொண்டுள்ள உரிமைகளுக்குமான உத்தரவாதத்தை விரிவாக்க முடியும், ஆனுல் அரசுரிமையை விரிவாக்கவோ அல்லது குறைக்கவோ இயலாது. ஓர் ஒன்றியக் குடியரசின் அரசுரிமை ''வலுப்படுத்தப்பட்டுள்ளது'' என்று கூறுவது சிறப்பாக இருக்கும்.

ஒன்றியக் குடியரசின் அரசுரிமைக்கான மிகவும் முக்கியமான உத்தரவாதங்கள் சோவியத் அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளே அடித்தளமாக்கியவை. இந்த உத்தரவாதங்களில் அடங்கியதாவது: சோஷலிசத்தை நிறுவுதல், தேசியவாதம், தேசியவெறி ஆகியவற்றினைப் பரப்பும் கருவிகளான சுரண்டும் வர்க்கங்களை ஒழித்தல்; மக்களினங்களிடையே முழு சமத்துவம், தகர்க்கவொண்ணுத நட்புறவு, சோவியத் தேசங்களின் நோக்கங்களில் ஒற்றுமை, பொதுவான மார்க்சிய-லெனினிய சித்தாந்தம்; பாட்டாளி வர்க்க சர்வதேசியம் மற்றும் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகள்; சோஷலிச தேசங்களுக்கிடையே பொருளாதார ஆன்மிகச் செல்வங்களின் பரிமாற்றம் அதிகரித்தல்; மத்தியத்துவப் படுத்தப்பெற்ற தலைமையையும் ஒன்றியக் குடியரசுகளின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் சரியாக இணைக்கும் கொள்கையை முரணின்றிப் பின்பற்றி வரும் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பாத்திரம். இந்த உத்தரவாதங்கள் ஒன்றியக் குடியரசுகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் விசேஷமாயும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை அனுபவம் காட்டியுள்ளது.

சோஷலிசக் கூட்டுக் குடும்பத்தில் அங்கத்துவம் ஒவ்வொரு தேசம் மற்றும் தேசியக் குழுவின் சுதந்திரத்திற்கும் முழு வளர்ச்சிக்கும் அடிப்படை உத்தரவாதமாகும். ஒன்றியக் குடியரசின் அரசுரிமைக்கான அரசியல் அமைப்புச் சட்ட உத்தரவாதங்களின் ஏற்பாட்டில் இது தனது சட்டமுறை வெளிப்பாட்டைக் காண்கிறது:

(அ) சோவியத் ஒன்றியத்தின் அரசியல் நிர்ணயச் சட்டங்கள் (சோவியத்துகளின் முதல் அகில-ஒன்றிய காங்கிரசில் அங்கீகரிக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் உருவாக்கம் பற்றிய உடன்படிக்கை மற்றும் சோவியத் ஒன்றியம் உருவாக்கப்பட்டது பற்றிய பிரகடனம்), சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம், ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்கள்.

(ஆ) சோவியத் ஒன்றிய அரசின் அடிப்படைக் கோட்பாடுகளில் அகில-ஒன்றிய அரசு அமைப்புகள் தன்னிச்சையாக எந்த மாறுதலும் செய்ய அனுமதிக்காமை. சோவியத் ஒன்றியம் மற்றும இதர ஒன்றியக் குடியரசுகளினுடைய

அமைப்புகளின் சித்தத்திற்கு ஏற்ப எந்தவொரு ஒன்றியக் குடியரசும் கலைக்கப்படக் கூடாது, அதன் ஒன்றிய அங்கத்துவம் பறிக்கப்படக் கூடாது.

(இ) ஒன்றியக் குடியரசுகளின் சர்வசுதந்திர உரிமைகளுக்குப் பாதுகாப்பு.

(ஈ) சோவியத் அரசு அமைப்புகளின் அரசியல் அமைப்புச் சட்ட ஏற்பாடு. இதில் அடங்குவதாவது: சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் இரு சபைகள்; இந்த சபைகளில், இந்த சபைகளின் நிரந்தரக் கமிட்டிகளில், சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவில், சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவையில் சோவியத் ஒன்றியத்தின் உயர் நீதிமன்றத்தில் ஒன்றியக் குடியரசுகளுக்கு விரிவான பிரதிநிதித்துவம்; வெவ்வேறு வகையான அமைச்சுகள், (அகில-ஒன்றிய அமைச்சுகள், அகில ஒன்றிய குடியரசு அமைச்சுகள், குடியரசு அமைச்சுகள்).

(உ) சோவியத் ஒன்றியத்து சுப்ரீம் சோவியத்தின் அசாதாரணக் கூட்டம் கூட்டும்படி கோர உரிமை. ஒரு ஒன்றியக் குடியரசின் சர்வசுதந்திர உரிமைகளைப் பாதிக்கும் ஒன்றிய அமைப்பின் எந்த ஒரு சட்டத்தையும் ரத்துச் செய்ய சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்திற்கும் அதன் தலைமைக் குழுவுக்கும் உரிமையும் கடமையும் உண்டு.

ஒன்றியத்திலிருந்து சுதந்திரமாகப் பிரிந்து செல்லும் உரிமை குடியரசுக்கு வழங்கப்பட்டது மூலம், ஒன்றியக் குடியரசின் அரசுரிமை உத்தரவாதம் செய்யப்படுகிறது. இதைப் பிரிந்து செல்வது உசிதம் என்ற கருத்துடன் வைத்துக் குழுப்பக் கூடாது. ஓர் ஒன்றியக் குடியரசின் பிரிந்து செல்லும் உரிமை ஆக முக்கியமான உரிமையாகும், இது அதன் அரசுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கிறது, இந்த அரசுரிமையின் உள்ளடக்கத்தைக் காட்டுகிறது.

குடியரசின் குடிமக்கள் அவ்வாறு செய்யலாம் என்று சுதந்திரமாகத் தமது சித்தத்தை வெளிப்படுத்தினால் மட்டுமே, ஒரு குடியரசு ஒன்றியத்திலிருந்து சுதந்திரமாகப் பிரிந்து செல்லும் உரிமையைச் செயலாக்க முடியும்; அதாவது ஒன்றியத்திடமிருந்து கூட்டாட்சி உறவுகளை முறித்துக் கொள்ளும் ஒரு தரப்பான உரிமையைச் செயலாக்க ஒரு குடியரசு ஒன்றியத்தின் உயர் அரசு அமைப்புகள் அல்லது இதர ஒன்றியக்

குடியரசுகளின் உயர் அமைப்புகளின் ஒப்புதலைப் பெற வேண்டியதில்லை. இந்த உரிமையை ஒழித்து விட முடியாது, மாற்றவோ குறுக்கவோ முடியாது.

ஓர் ஒன்றியக் குடியரசின் பிரிந்து செல்லும் உரிமை ''எது நேர்ந்தாலும்'' இயக்குவிக்கப்படும் சட்டக் காரணியல்ல, ஒன்றிய அரசில் குடியரசின் சுயவிருப்ப அங்கத்துவத்தையும் கூட்டரசில் அதன் சர்வசுதந்திர சமத்துவத்தையும் உத்தரவாதம் செய்யும் தொடர்ச்சியாகச் செயற்படுகிற காரணியாகும்.[1] கூட்டரசில் ஒன்றியக் குடியரசின் சுயவிருப்பமான அங்கத்துவமும், அவற்றின் சம அந்தஸ்தும் அவற்றின் அரசுரிமையைத் திறம்பட உத்தரவாதம் செய்கின்றன.

பிரிந்து செல்லும் சுதந்திரம் சுதந்திரமான ஜனநாயக ஒருமைப்பாட்டின் மிக முக்கியமான உத்தரவாதம் என்று லெனின் எழுதினர். ''**சுதந்திரமான** ஒன்றிணைவை நாம் விரும்புகிருேம், இதனுல்தான் நாம் பிரிந்து செல்லும் உரிமையை அங்கீகரிக்க வேண்டும் (பிரிந்து செல்வதற்கான உரிமை இல்லாமல் ஒன்றிணைவை சுதந்திரமானது என்று கூற முடியாது).''[2]

---

[1] அக்டோபர் புரட்சியின் 50ஆம் ஆண்டு விழாவை ஒட்டி லண்டனில் வெளியிடப்பட்ட **சோவியத் தேசிய இனங்கள் பற்றிய கொள்கையின் செயற்பாடு** என்ற நூலின் ஆசிரியர்கள் ஒன்றியத்திலிருந்து சுதந்திரமாகப் பிரிந்து செல்லும் குடியரசுகளின் உரிமை பற்றி ஐயம் கிளப்பியிருக்கிருர்கள். குடியரசுகள் பிரிந்து செல்வதற்கான செயல்முறை அரசியல் அமைப்புச் சட்டத்தில் நிலைநாட்டப்படவில்லை என்று அடித்துக் கூறுகிருர்கள். இதே காரணத்தால் தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கு எவ்வித நடைமுறை முக்கியத்துவமும் இல்லை என்றும் கூறுகிருர்கள் (R. Conquest [ed.], *Soviet Nationalities Policy in Practice*, London, 1967, p. 116). ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்வது பற்றிய சட்ட வடிவம் பெற்ற தனி ஒரு செயல்முறை இல்லாதிருப்பதன் காரணம் ஒன்றியக் குடியரசு சுதந்திரமாகவும் ஒரு தரப்பாகவும் எந்த வடிவில் வேண்டுமாயினும் பிரிந்து செல்லலாம் என்பதே.

[2] வி. இ. லெனின், ''கட்சியின் வேலைத்திட்டத்தில் திருத்தம்'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 26, p. 176).

அத்தியாயம் 7

# சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்ட அதிகாரத் தகமை

சோவியத் ஒன்றிய அரசில் ஒட்டுமொத்தமாகக் கூட்டரசின் அதிகாரத் தகமையும் உறுப்புக் குடியரசுகளின் அதிகாரத் தகமையுமே ஒன்றியத்தின் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமை இசைவாக இணைக்கப்படுவதை உத்தரவாதம் செய்யும் பொறியமைவாகும். ஓர் அரசின் அதிகாரத் தகமை அரசியல் அமைப்புச் சட்டத்தில் வகை செய்துள்ளபடியான உயர் அரசு மற்றும் நிர்வாக அமைப்புகளிடம் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் ஒட்டுமொத்தத் தொகுப்பாகும். சர்வசுதந்திர அரசின் அதிகாரத் தகமையாக விளங்கும் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் சட்ட அதிகாரங்களைப் பின்வரும் விதத்தில் பிரிக்கலாம்:

**1. சோவியத் ஒன்றியத்தின் சட்ட வரம்புக்கு உட்பட்ட கூட்டாட்சி உறவுகள் பற்றிய பிரச்சினைகள்.**

சோவியத் ஒன்றியத்திற்குள் புதிய குடியரசுகளைச் சேர்த்துக் கொள்வது (சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் [அ, 73ஆவது விதி]).

சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியத்தில் புதிய குடியரசுகளை ஏற்றுக் கொள்வதற்கு சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்துக்கு மட்டுமே அதிகாரம் உண்டு என்று ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் நிர்ணயிக்கிறது (108ஆவது விதி). சோவியத் ஒன்றியத்தின் 1924ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதி 1[இ], ''ஒன்றியத்திற்குள் ஒரு புதிய குடியரசைச் சேர்த்துக் கொள்வது பற்றி உடன்படிக்கை செய்து கொள்வது'' சோவியத் ஒன்றியத்தின் சட்ட வரம்புக்குள் வருகிறது என்று வகை செய்துள்ளது.

இவ்வாருக, சோவியத் ஒன்றியத்தின் சோவியத்துகளின் மூன்ருவது காங்கிரஸ் ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. அத்தீர்மானம் சோவியத் ஒன்றியத்தின் உருவாக்கம் பற்றிய உடன்படிக்கைகளின் கீழ் துருக்மேனியாவையும் உஸ்பெக்கிஸ்தானையும் கொண்டு இரண்டும் சோவியத் ஒன்றியத்தில் சேர்ந்து கொண்டதை அதிகார பூர்வமாகப் பதிவு செய்தது. மேலும் சோவியத் ஒன்றியத்தின் 1936 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில் நிலைநாட்டப் பெற்றுள்ள நியதிக்குப் பொருத்தமாக, லித்துவேனியா, லாத்வியா, மற்றும் எஸ்தோனியாவை சோவியத் ஒன்றியத்தில் சேர்த்துக் கொள்வது பற்றிய சட்டங்களை சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் நிறைவேற்றியது.[1]

சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் பின்பற்றப்படுவது பற்றிய மேற்பார்வையும், சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்துடன் ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் பொருந்துவதை உறுதிப்படுத்துவதும் (சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதி 73 [ஆ]).

சோவியத் ஒன்றியத்தின் 1924 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ், ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்துடன் பொருந்தியதாக உள்ளதா என்பதை மேற்பார்வை செய்யும் பணியினை சோவியத் ஒன்றியத்தின் மத்தியச் செயற்குழுவும் அதன் தலைமைக் குழுவும் (சோவியத் ஒன்றியத்தின் சோவியத்துகளின் காங்கிரசுகள் தவிர) செய்து வந்தன. சோவியத் ஒன்றியத்தின் மத்தியச் செயற்குழுவும் அதன் தலைமைக் குழுவும், அவசியம் என்ற காரணத்தால், இந்தப் பொருத்தத்தை உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்குமாறு ஒன்றியக் குடியரசுகளின் மத்தியச் செயற்குழுக்களைக் கேட்டுக் கொண்டன. மறுபுறம் ஒன்றியக் குடியரசுகளின் மத்தியச் செயற்குழுக்களின் தலை

---

[1] சோவியத் சோஷலிசக் குடியரசுகளினது ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்து செய்திகள், இதழ் 28, 1940 (ருஷ்யனில்). சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் 1940 ஆகஸ்ட் 2 சட்டத்திற்கு ஏற்ப மோல்தாவிய சோவியத் சோஷலிசக் குடியரசு நிறுவப்பட்டது.

மைக் குழுக்கள் ஒன்றிய அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கு எதிரான ஆட்சேபணைகளை சோவியத் ஒன்றியத்தின் மத்தியச் செயற்குழுவின் தலைமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கலாம். 1933 வரையில் சோவியத் ஒன்றியத்தின் உயர் நீதிமன்றம், சோவியத்துகளின் காங்கிரசுகள், சோவியத் ஒன்றியத்தின் மத்தியச் செயற்குழு, அதன் தலைமைக்குழு ஆகியவற்றுடன் சேர்ந்து அரசியல் அமைப்புச் சட்டக் கட்டுப்பட்டின் ஆக முக்கியமான கடமைகளைச் செயல்படுத்தி வந்தது. சோவியத் ஒன்றியத்தின் மத்தியச் செயற் குழுவின் வேண்டுகோளின் படி அது ஒன்றியக் குடியரசுகள் நிறைவேற்றியுள்ள தீர்மானங் களின் சட்டத் தன்மை பற்றி சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி (விதி 43 [இ]) தீர்ப்பு அளிக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டம் செயலாவதை கட்டுப்படுத் துவதற்கும் கண்காணிப்பதற்கும், ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டமும் ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டமும் இதர சட்டங்களும் முழுதும் ஒத்தவை யாய் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுவதற்கும் ஒன்றியத் தின் சுப்ரீம் சோவியத் வகை செய்ய வேண்டுமென்று அமு லிலிருக்கிற அரசியல் அமைப்புச் சட்டம் பணிக்கிறது (ஈ, 121ஆவது விதி).

வெளிநாட்டு அரசுகளுடனும், சர்வதேச நிறுவனங்களு டனும் ஒன்றியக் குடியரசுகள் கொள்கிற உறவுகளை ஒன்றி ணைப்பது, அவற்றின் பொதுவான நடைமுறைகளை நிலை நாட்டுவது (ஒ, 73ஆவது விதி).

சோவியத் ஒன்றியம் நிறுவப்பட்ட பொழுது, ஒன்றியக் குடியரசுகள் தமது சுதந்திர சித்தத்துடனும் சமத்துவ அடிப் படையிலும் செயல்பட்டு அந்நிய நாடுகளுடன் நேரடியாக அரசுறவுத்துறை உறவுகள் கொள்வதைக் கைவிட்டு, அயல் துறை விவகாரங்களிலான தமது அதிகாரங்களை சோவியத் ஒன்றியத்திடம் மாற்றி அளித்தன. இதனால் அவை அயல் துறைக் கொள்கைப் பணிகளை நிறைவேற்றுவதிலிருந்து தடை செய்யப்பட்டன என்று அர்த்தமல்ல. சோவியத் ஒன்றியத் தின் அயல்துறை விவகாரங்களுக்கான மக்கள் கமிசாரகம், சோவியத் ஒன்றியம் அதை உருவாக்கிய ஒன்றியக் குடி யரசுகள் ஒருபுறமும், இதர நாடுகள் மறுபுறமுமாக இருக்க,

அந்த நாட்களில் அமுலில் இருந்த அந்த மக்கள் கமிசார கத்தைப் பற்றிய விதிகளுக்கு ஏற்ப அரசுறவுத் துறை உறவு களை நடத்தும் பொறுப்பை வகித்து வந்தது. ஒன்றியக் குடி யரசுகள் அயல்துறை விவகாரங்களுக்கான மக்கள் கமிசார கத்தோடு நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தன, அவற்றில் அதன் பொறுப்புள்ள பிரதிநிதிகள் இருந்தார்கள். அந்தப் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட ஒன்றியக் குடியரசு அரசாங் கத்தின் பரிந்துரை அல்லது ஒப்புதல் மூலம் நியமிக்கப்பட் டார்கள். சோவியத் ஒன்றியத்தின் அயல்துறை விவகாரங் களுக்கான மக்கள் கமிசாரகம், ஒன்றியக் குடியரசுகளின் உயர் அரசு அமைப்புகள் இரண்டுக்கும் பொறுப்பாக அவர் கள் வேலை செய்தார்கள். அவர்கள் சோவியத் ஒன்றியத்தின் அயல்துறை விவகாரங்களுக்கான மக்கள் கமிசாரகத்தின் நடவடிக்கைகள் குறித்து ஒன்றியக் குடியரசின் மத்தியச் செயற்குழுவுக்கும், மக்கள் கமிசாரவைக்கும் தகவல் தர வேண்டி இருந்தது; சோவியத் ஒன்றியத்தின் அயல்துறை விவகாரங்களுக்கான மக்கள் கமிசாரகத்திற்கு, சோவியத் அயல்துறைச் செயற்பாட்டுக்கு முக்கியமானதாக இருக்கும் ஒன்றியக் குடியரசுகளின் நடவடிக்கைகளைப் பரிச்சயம் செய்ய வேண்டி இருந்தது. அதோடு ஒன்றியக் குடியரசு எழுப்பும் அயல்துறைக் கொள்கைப் பிரச்சினைகளை சோவியத் ஒன்றியத்தின் அயல்துறை விவகாரங்களுக்கான மக்கள் கமி சாரகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர முடியும்.

''அயல்துறை உறவுகள் சம்பந்தமாக ஒன்றியக் குடியரசு களுக்கு அதிகாரங்கள் வழங்குவது பற்றியும், இதன் விளைவாக அயல்துறை விவகாரங்களுக்கான அகில-ஒன்றிய மக்கள் கமிசாரகம் குடியரசு மக்கள் கமிசாரகமாக மாற்றப்பட்டது குறித்து''மான 1944 பிப்ரவரி 1ந் தேதி நிறைவேற்றப் பட்ட சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் சட்டத் தின்படி, சோவியத் ஒன்றியத்தின் 1936ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதி 14 [அ]இன் மூலவாசகத்தில் ''அந்நிய நாடுகளுடனை ஒன்றியக் குடியரசுகளின் உறவு களைத் தழுவியதான பொது நடைமுறை நிலைநாட்டப்பட் டது'' என்ற சொற்கள் சேர்க்கப்பட்டன.

சோவியத் ஒன்றியத்தின் அமுலிலிருக்கிற அரசியல் அமைப்புச் சட்டம் பின்கண்டவாறு விதிக்கிறது: வெளிநாட்டு

அரசுகளுடன் தொடர்பு கொள்ளவும், அவற்றுடன் உடன் படிக்கைகள் செய்து கொள்ளவும், தூதரக, கான்சல் பிரதிநிதிகளைப் பரிமாறிக் கொள்ளவும், சர்வதேச நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவும் ஒன்றியக் குடியரசுக்கு உரிமை உண்டு (80ஆவது விதி).

சர்வதேச உறவுகளில் சோவியத் ஒன்றியத்தின் பிரதிநிதித்துவம், ஒன்றியக் குடியரசு வெளிநாட்டு அரசுகளுடனும் சர்வதேச அமைப்புகளுடனும் கொள்ளுகிற தொடர்புகள்; வெளிநாட்டு அரசுகளுடனும் சர்வதேச அமைப்புகளுடனும் ஒன்றியக் குடியரசுகள் கொள்கிற உறவுகளுக்குப் பொதுவான ஒழுங்கினை வகுப்பது, இவ்வுறவுகளை ஒன்றிணைப்பது; அரசு ஏகபோகத்தின் அடிப்படையில் வெளிநாடுகளுடன் வர்த்தகம் நடத்துவது எல்லா வகையான பொருளாதார உறவுகளை மேற்கொள்வது (ஒ, 73ஆவது விதி) ஆகியவை சோவியத் ஒன்றியத்தின் சட்ட அதிகாரத்திற்குள் வந்தன. ஒன்றியக் குடியரசுகள் ஒன்றியத்தின் நலன்களில் உரிய கவனம் செலுத்தி அயல்துறை உறவுகளில் தமது உரிமைகளைச் செயல்படுத்துகின்றன. சோவியத் ஒன்றியம் அதன் உயர் சட்டமியற்றும் மற்றும் நிர்வாக அமைப்புகள் மூலம் இந்த ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமையைப் பாதுகாக்கிறது, இதர நாடுகளுடனான அவற்றின் உறவுகளை ஒருங்கிணைக்கிறது, இந்த உறவுகளின் பொது நடைமுறையை நிலைநாட்டுகிறது.

ஒன்றியக் குடியரசுகளிடையான எல்லைகளுக்கான மாற்றங்களை அங்கீகரித்தல். ஒன்றியக் குடியரசுகளுக்குள் புதிய சுயாட்சிக் குடியரசுகளும் மற்றும் சுயாட்சிப் பிராந்தியங்களும் அமைவதை அங்கீகரித்தல் (சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதி 73 [''அ'' மற்றும் ''ஆ'']).

சோவியத் ஒன்றியத்தின் 1924ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் ''ஒன்றியத்தின் வெளி எல்லைகளிலான மாறுதலையும், ஒன்றியக் குடியரசுகளிடையான எல்லை மாறுதல்களை முறைப்படுத்தலையும்'' சோவியத் ஒன்றியத்தின் சட்ட அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது. சோவியத் ஒன்றியத்தின் 1936ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றியக் குடியரசுகளின் எல்லைகளை முறைப்படுத்துவதிலான ஒன்றியத்தின் மேலதிகாரத்தை மட்டும் வைத்துக் கொண்டு

சோவியத் ஒன்றியத்தின் புற எல்லைகள் பற்றிய பிரச்சினையை விட்டு விட்டது (விதி 14 [உ]).

1960 ஆகஸ்ட் 5ஆம் நாள் வெளியிட்ட தனது ஆணையின் மூலம் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு, ''சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அரசு எல்லைகளின் தற்காப்புக்கான விதிகளை'' அங்கீகரித்தது. இதன் 1ஆம் விதி சோவியத் ஒன்றியத்தின் அரசு எல்லைக்கோடு சோவியத் ஒன்றியத்தின் நிலம் மற்றும் நீர்ப்பகுதிகளின் எல்லைகளை வரையறுக்கும் கோடாகும், இந்தக் கோட்டின் செங்குத்தான நீட்டல் சோவியத் ஒன்றியத்தின் விண்வெளியையும் அதன் பூமிக் கடியிலான செல்வங்களின் அளவையும் நிர்ணயிக்கிறது என்று கூறுகிறது. எனவே அரசின் புற எல்லைக் கோடுகள் அரசின் பிரதேச மேலதிகாரத்தின் வரம்பை நிலைநாட்டுகின்றன.

இப்போது அமுலிலிருக்கிற ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தினுடைய அரசு எல்லைகளை நிர்ணயிக்கும் உரிமை ஒன்றியத்துக்கு வழங்குகிறது. (ஆ, 73ஆவது விதி).

1957 பிப்ரவரி 11ந் தேதிய சட்டத்தின் பிரகாரம் புதிய பிரதேசங்கள் மற்றும் பிராந்தியங்கள் நிறுவப்படுவதை சோவியத் ஒன்றியம் அங்கீகரிக்க வேண்டும் என்ற ஷரத்து சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டது. எனவே ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு, உஸ்பெக்கிஸ்தான் மற்றும் தாஜிக்கிஸ்தானைச் சேர்ந்திருக்கும் நிர்வாகப் பிராந்தியங்கள் மற்றும் பிரதேசங்கள் பற்றிய கணக்கெடுப்பு சோவியத் ஒன்றியத்தின் அப்போது அமுலிலிருந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கப்பட்டது. இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் 28ஆவது விதியின் வாசகம் பின்வருமாறு: ''ஒன்றியக் குடியரசுகளில் பிராந்தியம் மற்றும் பிரதேசங்களாக நிர்வாகப் பிரிவுகள் செய்வது சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது ஒன்றியக் குடியரசுகளின் சட்ட அதிகாரத்திற்குள் அடங்கும்''.

ஒன்றியக் குடியரசுகளின் சர்வசுதந்திர உரிமைகளின் இந்தப் புதிய விரிவாக்கம், அவற்றின் பிரதேச நிர்வாக அமைப்பு தற்போது உறுதியடைந்திருப்பதால் ஏற்பட்டதாகும். ஒன்றியக் குடியரசுகள் செழுமையான அனுபவம்

பெற்று விட்டன, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மத்தியப்படுத்தலின் அவசியம் இனிமேல் வேண்டியதில்லை.

இந்தப் புதிய சட்ட நடவடிக்கை சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தை மேலும் நிலைப்படுத்தியது. ஒன்றியக் குடியரசுகளின் பிரதேச நிர்வாகப் பிரிவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக 1938 முதல் 1956 ஜூலை வரை சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் 150க்கும் அதிகமான திருத்தங்கள் செய்யப்பெற்றன. ஒன்றியக் குடியரசுகளில் சுயாட்சிப் பிராந்தியங்களும் குடியரசுகளும் நிறுவப்படுவதை அங்கீகரிக்கும் உரிமையை மட்டுமே சோவியத் ஒன்றியம் வைத்திருந்தது. ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களிலும் இதனை ஒத்த திருத்தங்கள் செய்யப்பட்டன, இவை குடியரசுகளின் பிராந்தியப் பிரிவுகள் மற்றும் பிராந்தியங்களின் வட்டாரம் வட்டப் பிரிவுகளைக் குடியரசுகளின் சட்ட அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தன (79 ஆவது விதி).

சோவியத் ஒன்றியக் குடியுரிமை வழங்குவது, சோவியத் ஒன்றியக் குடியுரிமையை விட்டு விடுவது, சோவியத் ஒன்றியக் குடியுரிமையைப் பறிப்பது, தஞ்சம் தருவது ஆகிய பிரச்னைகளுக்குத் தீர்வு (ஒ, 121ஆவது விதி).

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழு மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளின் தலைமைக் குழுக்களுக்கு மட்டுமே சோவியத் குடியுரிமை வழங்கும் அதிகாரம் உண்டு, சோவியத் குடியுரிமை வழங்க ஒன்றியக் குடியரசுகளின் உயர் அரசு அமைப்புகள் மறுதலிப்பதை எதிர்த்து சோவியத் ஒன்றியத்தின் உரிய உயர் அரசு அமைப்புகளிடம் மனுச் செய்து கொள்ளும் நடைமுறையினை 1938ஆம் ஆண்டு சோவியத் குடியுரிமை சட்டம் ஒழித்து விட்டது. காரணம் சோவியத் ஒன்றியத்தின் 1936ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றியக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுக்களின் உத்தரவுகளை சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக்குழு ரத்து செய்வதற்கான உரிமையைப் பற்றிக் கருதவில்லை.

**2. சோவியத் ஒன்றியத்தின் சட்ட அதிகாரத்தின் கீழ் வரும் தற்காப்பு மற்றும் அயல் துறை உறவு விஷயங்கள்.**

பாதுகாப்பு மற்றும் அயல்துறை உறவுகள் பற்றிய சில பிரச்சினைகள் சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் கூட்டுச் சட்ட அதிகாரத்தின் கீழ் வரும், ஆனால் இந்த விஷயத்தில் சோவியத் ஒன்றியத்திற்கு மேலதிகாரம் உண்டு. சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி ஒன்றியக் குடியரசுகளுக்கும் இதர அரசுகளுக்கும் சர்வதேச அமைப்புக்களுக்கும் இடையிலான உறவுகள் சம்பந்தமான பொதுவான நடைமுறையை நிலைநாட்டவும், அவற்றை ஒன்றிணைக்கவும் குடியரசுகளின் ராணுவ அமைப்புகளை நிறுவுதல் பற்றிய வழிகாட்டும் கோட்பாடுகளை வகுக்கவுமான அதிகாரம் ஒன்றியத்திற்கு உண்டு.

—சமாதானம், போர், அரசுரிமையைக் காப்பது, அரசு எல்லைகளையும் சோவியத் ஒன்றியத்தின் பிரதேசத்தையும் காப்பது, நாட்டின் பாதுகாப்பை ஒழுங்கமைப்பது, இராணுவத் தலைமை ஆகியவை பற்றிய பிரச்னைகள் (ஏ, 73ஆவது விதி).

—அரசு ஏகபோகம் அடிப்படையில் வெளிநாட்டு வர்த்தகம் (ஓ, 73ஆவது விதி).

—அரசின் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்வது. (ஐ, 73 ஆவது விதி).

**3. சோவியத் ஒன்றியத்தின் சட்ட அதிகாரத்தின் கீழான பொருளாதார மற்றும் சமூக-கலாசாரப் பிரச்சினைகள்.**

இந்தப் பிரச்சினைகள் பலவும் சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் கூட்டுச் சட்ட அதிகாரத்தின் கீழ் உள்ளன. நில மற்றும் கடல் போக்குவரத்து, தற்காப்புத் துறைத் தொழில், சில உற்பத்தி சாதனங்களின் உற்பத்தி (விசை மற்றும் இரசாயனத் தொழில்கள், கப்பல் கட்டுதல், போக்குவரத்து நிர்மாணம் ஆகியவை) மீது சோவியத் ஒன்றியத்தின் நேரடியான சட்ட அதிகாரத்தின் கீழ் உள்ளன. அதோடு அது அகில-ஒன்றிய-குடியரசு தொழில் வளர்ச்சி, நிர்மாணம் ஆகியவற்றுக்கு வழிகாட்டுகிறது. மேலே குறிப்பிடப்பட்ட சில பிரச்சினைகள் சம்பந்தமாக ''அடிப்படைக் கோட்பாடுகளை'' நிலைநாட்டவும் ''சட்டத்துறை அடிப்படைகளை'' வகுக்கவும் சோவியத் ஒன்றியத்திற்கு உரிமையுண்டு; அதாவது, எல்லா ஒன்றியக் குடியரசுகளுக்கும் கட்டாயமான முறையில், சம்பந்தப்பட்ட சட்டத்துறை

அடிப்படைகளை நிலைநாட்ட சோவியத் ஒன்றியத்திற்கு உரிமையுண்டு.

ஒரே சீரான சமுதாய, பொருளாதார கொள்கையைக் கடைப்பிடிப்பது, நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிப்பது, விஞ்ஞான—தொழில் நுட்ப முன்னேற்றத்தின் பிரதான போக்குகளை நிர்ணயிப்பது, இயற்கை வளங்களைச் சீராகப் பயன்படுத்துவது, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது; ஒன்றியத்தின் தேசியப் பொருளாதாரம், சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றுக்கான திட்டங்களை வகுத்தளிப்பது, ஊர்ஜிதப்படுத்துவது, இவை நிறைவேற்றப்படுவது பற்றிய விவரங்களை உறுதிப்படுத்துவது (உ, 73ஆவது விதி).

சோவியத் ஒன்றியத்தின் 1924ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் அகில-ஒன்றியப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் பொதுத் திட்டத்தை நிர்ணயித்தல் அகில-ஒன்றிய முக்கியத்துவம் வாய்ந்ததான தொழில்கள், தனிப்பட்ட தொழில் நிறுவனங்களை வரிசைப் படுத்தல் ஆகியவற்றை மட்டுமே ஒன்றியத்தின் சட்ட அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கிறது. ஆனால் சோவியத் ஒன்றியத்தின் 1936ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் திட்டமிடுதலில் மேலும் அதிகமான மத்தியப்படுத்தலுக்கும் ஒன்றியம் மேலும் பெரிய பாத்திரம் வகிப்பதற்கும் வகை செய்திருக்கிறது. எனினும் இந்த உயர் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரக் கடமையின் செயலாக்கத்தில் ஒன்றியக் குடியரசுகள் செயலூக்கமான மற்றும் நிர்ணயகரமான பாத்திரம் வகிக்கின்றன. 1958 மே 4ஆம் நாள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் குழுவும் மற்றும் சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவையும் பொருளாதாரத் திட்டமிடலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றிய தீர்மானத்தை அங்கீகரித்தன. இதன் மூலம், ஒன்றியக் குடியரசுகளின் அமைச்சரவைகளுக்கு வீட்டு வசதி, நகர சபை, கலாசார நிர்மாணத்திற்கான முதலீடுகளை நிர்ணயிக்கும் உரிமை வழங்கப்பட்டது. ஒரு புதியதிட்டமிடல் நடைமுறை புகுத்தப்பட்டது. அதன்படி தொழில் மற்றும் நிர்மாண நிலையங்கள், ஸ்தல சோவியத்துகள், அமைச்சுகள் மற்றும் இலாகாக்கள், சோவியத் ஒன்றியத்தின் அரசாங்கத் திட்டக் கமிஷன் ஒன்றியக் குடியரசுகளின் அரசாங்கத் திட்டக் கமிஷன்க

ளுடன் சேர்ந்து வகுத்தளித்துள்ள நீண்ட காலத் திட்டத்திற்கு ஏற்பான முறையில் திட்டங்களை வரையும்.

ஒன்றியக் குடியரசுகளின் அரசாங்கத் திட்டக் கமிஷன்கள், எல்லா ஒன்றிய-குடியரசு மற்றும் குடியரசுத் தொழில் கிளைகளுக்குமான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை வரைகின்றன. அவை சம்பந்தப்பட்ட குடியரசுகளில் நிலவும் அகில-ஒன்றிய அமைச்சுகளின் நிறுவனங்களின் நகல் உற்பத்தித் திட்டங்களைப் பற்றிய யோசனைகளை முன்வைக்கலாம், தமது பிரதேசத்திலுள்ள வெவ்வேறுத் தொழில் கிளைகளுக்கு உட்பட்ட தொழில் நிலையங்களின் திட்டங்கள் நிறைவேற்றப்படும் பொழுது எழும் பிரச்சினைகளைப் பரிசீலித்து யோசனைகளை வகுத்தளிக்கலாம்.

ஒன்றியக் குடியரசுகளின் அமைச்சரவைகள், சோவியத் ஒன்றியத்தின் அமைச்சுகளும் இலாகாக்களும் தயாரித்துள்ள அவற்றின் பிரதேசத்தில் இருக்கும் எல்லா நிறுவனங்களுக்குமான நகல் திட்டங்களையும், புதியவற்றை நிறுவுவதற்கான அமைப்புத் திட்டங்கள், செயல்படும் நிறுவனங்களை நவீனப்படுத்துவது மற்றும் விரிவாக்குதல் பற்றிய பணிகளையும், அதோடு தொழில் துறை நிறுவனங்களை வளர்க்கவும் இட நிர்ணயம் செய்யவுமான நீண்ட காலத் திட்டங்களையும் பரிசீலனை செய்து சோவியத் ஒன்றிய அரசாங்கத்திற்கு யோசனைகளைச் சமர்ப்பிக்கும். இது ஒன்றியக் குடியரசுகள் ஒன்றிய மற்றும் குடியரசுத் தொழில்களின் நிர்வாகத்தில் பங்கு பற்றுவதை உறுதி செய்கிறது, சம்பந்தப்பட்ட குடியரசுகளின் நலன்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதை சாத்தியமாக்குகிறது, உற்பத்தி சீரான பிரதேச ரீதியில் பங்கிடப்படுவதற்கும் உழைப்பும் இயற்கை மூலவளங்களும் பயன்படுத்தப்படுவதற்குமான நிலைமைகளைப் படைக்கிறது.

ஒன்றிய-குடியரசு அமைப்புகளின் மேலும் நெளிவு சுளிவான ஓர் கட்டமைப்பு நிறுவப் பெற்றுள்ளது. உற்பத்தியின் பரிமாணம், நிறுவனங்களின் எண்ணிக்கை இவற்றை ஒட்டி சில தொழில் கிளைகளில் ஒன்றிய-குடியரசு அமைச்சுகளோ, அல்லது இலாகாக்களோ நிறுவப் பெற்றுள்ளன. அவை நிறுவனங்களை நேரடியாக நிர்வாகம் செய்கின்றன, அவற்றின் வேலைக்குப் பொறுப்பாக உள்ளன.

சோவியத் ஒன்றிய அரசில் நிலவும் எதார்த்த நிலைமைகள் பொதுவும் தனிப்பட்டதுமான நலன்கள் இணைக்கப்படுவதைக் கோருகின்றன, இது திட்டமிடலில் தெளிவாக வெளியாகியுள்ளது[1]. குடியரசுகளின் பொதுவும் தனிப்பட்டதுமான நலன்களுக்குச் சற்றே வேறு விதமான அணுகு முறை தேவை. அகில-ஒன்றிய நிர்வாக அமைப்புகள் பொது நலன்களைக் கவனித்துக் கொள்ளும் என்பது இயல்பே. ஆனல் குடியரசுகளின் தனிப்பட்ட நலன்களைக் கவனிப்பதில் அவற்றுக்குக் கஷ்டம் இருக்கிறது. குடியரசு அமைப்புகளால் இவற்றை இனங்கண்டு மேலும் முழுமையாக வெளிப்படுத்த முடியும். வெவ்வேறு குடியரசுகளின் இலாகாக்களின் சில திட்டங்களும் யோசனைகளும் பரஸ்பரம் தொடர்பற்றவையாக இருத்தல் கூடும். இது இயல்பே ஏனெனில் அவை அனைத்தின் நடப்பு நலன்களும் ஒரே மாதிரியாக இருக்கும் பட்சத்தில் சோவியத் பல்தேசிய அரசின் நலன்களை ஒவ்வொரு குடியரசின் நலன்களுடனும் இணைக்கத் தேவையில்லை. மறுபுறம் அவை அடிப்படையில் பொருத்தமாக அமையாமல் அவற்றை இணைக்கவே முடியாது.

சோவியத் ஒன்றியத்துக்கு ஒரே சீரான அரசு பட்ஜெட்டை வகுத்தளிப்பது, ஊர்ஜிதப்படுத்துவது, இது நிறைவேற்றப்படுவது பற்றிய விவரத்தை ஊர்ஜிதப்படுத்துவது; ஒரே சீரான நிதி, ஒதுக்கீடுகள் முறையை நிர்வகிப்பது; ஒன்றியத்தின் அரசு பட்ஜெட்டை உருவாக்கிற வருமானங்களை, வரிகளை நிர்ணயிப்பது; விலைவாசிகள், உழைப்புக்கான ஊதியம் ஆகிய துறைகளில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை நிர்ணயிப்பது (ஊ, 73ஆவது விதி).

---

[1] நலூம் யாஸ்னி என்ற அமெரிக்க நிபுணர் தமது சோவியத் பொருளாதாரம் பற்றிய கட்டுரைகள் என்ற நூலில் சோவியத் பொருளாதாரத் திட்டமிடலின் சாரத்தைச் சிதைக்க முயல்கிருர், அதை நிர்வாகத்தின் மிகவும் ஜனநாயக மற்ற முறையாக சித்தரிக்கிருர். ''திட்டமிடலில் மத்தியத்துவக் குவிவு பற்றிப் பெரிதாக விளம் பரப்படுத்தப்படும் அதே பொழுதில்... குடியரசுகளின் திட்டக் கமிஷன்கள், தனிப்பட்ட நிறுவனங்களைப் பற்றி பேசாமல் இருக்க, முடிவுகளை எடுப்பதிலிருந்து விலக்கியே வைக்கப்பட்டுள்ளன'' என்று வாதாடுகிருர். ஆனல் சோவியத் பொருளாதார வளர்ச்சி இதை மறுக்கிறது. (N. Jasny, *Essays on the Soviet Economy*, N.Y ., 1962, p. 184.)

மேலே குறிப்பிடப்பட்ட அரசியல் அமைப்புச் சட்ட நியதியை ''சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் பட்ஜெட் உரிமைகள்'' பற்றிய 1959 சட்டம் ஸ்தூலமாக வரையறுத்தது. இது சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஏற்பான முறையில் ஒன்றிய அரசின் நிதிக் கொள்கை ஓரளவு மத்தியத்துவப் படுவதற்கு வகை செய்கிறது, இந்த விஷயத்தில் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடு இடையறுது அனுசரிக்கப்படுவதை உத்தரவாதம் செய்கிறது. அரசாங்க பட்ஜெட்டே பிரதான நிதித்திட்டமாகும், அதன் மாபெரும் அரசியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தை முன்னிட்டு, இது ஆண்டுதோறும் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தால் அங்கீகரிக்கப் பெற்று அதன் மூலம் சட்டமாகிறது. ஒன்றிய பட்ஜெட் அகில ஒன்றிய முக்கியத்துவமுடைய பொருளாதார, கலாசார மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்குரிய செலவுகளுக்கான அவசியமான நிதிகளை வழங்குகிறது. ஒன்றியக் குடியரசுகளின் பொருளாதாரத்தின் முழு வளர்ச்சியை உத்தரவாதம் செய்யவும் மக்களின் வாழ்க்கை மற்றும் கலாசாரத் தரங்களை உயர்த்தவும் வேண்டி ஒன்றிய பட்ஜெட் மூலம் நிதி மூலாதாரங்களில் ஒரு பகுதி ஒன்றியக் குடியரசுகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

ஒன்றியக் குடியரசுகளின் பட்ஜெட்டுக் கட்டமைப்பு ஒரு ஒன்றியக் குடியரசின் சுப்ரீம் சோவியத்தால் நிறுவப்படுகிறது, அதுவே சுயாட்சிக் குடியரசுகள் மற்றும் ஸ்தல சோவியத்துகளின் பட்ஜெட் உரிமைகளையும் நிர்ணயம் செய்கிறது என்று இச்சட்டம் கூறுகிறது. ஒன்றியக் குடியரசுகள் தமது பட்ஜெட்டு நகலை ஒன்றியத்தின் மற்றும் குடியரசுகளின் பொருளாதாரத் திட்டங்களின் அடிப்படையில் வரைகின்றன.

குடியரசு பட்ஜெட்டுகள் ஒன்றியக் குடியரசின் அமைப்புகளுக்குப் பொருளாதார, கலாசார வளர்ச்சிக்குப் போதுமான நிதி ஆதாரங்களை வழங்குகின்றன.

ஒவ்வொரு ஒன்றியக் குடியரசு பட்ஜெட்டின் மொத்த வருவாய் மற்றும் செலவினங்களை நிர்ணயிப்பது மூலம் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் பொருளாதார

வளர்ச்சிக்கு வழிகாட்டும் தன் அதிகாரங்களைச் செயல்படுத்து கிறது. ஒன்றியக் குடியரசுகளின் பட்ஜெட்டுகளை அங்கீகாரம் செய்யும் ஒன்றியக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகள் வரவு செலவுகளின் அளவுகளை அதிகரிக்கலாம், ஆனால் சோவி யத் ஒன்றியத்தின் அரசு பட்ஜெட்டில் எதிர்நோக்கிய அகில-ஒன்றிய அரசு வரிகள் இதர வருவாய்களிலிருந்து குடியரசு களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை மாற்ற முடியாது.

வருவாய் அதிகரிப்பு அல்லது நிதி ஆதாரங்களைச் சிக் கனமாகப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட வருவாய் மற் றும் செலவுக்கிடையிலான வித்தியாசத் தொகை குடியரசு பட்ஜெட்டிற்குப் போகும். சட்டப்படி இந்தக் கூடுதல் ஆதாரங்கள் ஒன்றியக் குடியரசின் பொறுப்பில் இருக்கும் அதன் விருப்ப முடிவுப்படி பயன்படுத்தப்படும்.

பட்ஜெட்டுகள் அங்கீகரிக்கப்படும் பொழுது முன்கூட் டியே காண முடியாது போன அவசரத் தேவைகளை நிறைவு செய்யக் குடியரசு பட்ஜெட்டுகளில் சேமநிதிகள் உள்ளன.

இந்தச் சட்டம் ஒன்றியக் குடியரசுகள் தமது பட்ஜெட் உரிமைகளைச் செயல்படுத்துவதற்கு வலிமையான உத்தர வாதங்களை வழங்குகிறது. சோவியத் ஒன்றியத்தின் அரசு பட்ஜெட் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, ஒன்றியக் குடியரசு களின் பட்ஜெட்டுச் செலவினங்களை அதிகரித்தும், வர வினங்களை குறைத்தும் சோவியத் ஒன்றியத்தின் சட்டங் களோ அல்லது சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவையின் தீர்மானங்களோ பிறப்பிக்கப்படும் பொழுது, ஒன்றிய பட் ஜெட் குடியரசுகளின் பட்ஜெட்டிற்குச் செலவினங்கள் அதிகரிக்கும் பொழுது செலவை ஈடு செய்ய நிதி தரு கிறது, செலவுகள் குறைக்கப்பட்டு வருவாய் அதிகரிக்கும் பொழுது நிதிகள் ஒன்றிய பட்ஜெட்டிற்கு மாற்றப்படு கின்றன.

தேசியப் பொருளாதாரத்தின் பிரிவுகள், ஒன்றியத்தின் கீழுள்ள கூட்டமைப்புக்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் நிர்வாகம், ஒன்றியத்துக்கு—குடியரசுக்குக் கீழுள்ள பிரிவு கள், கூட்டமைப்புக்கள், தொழிற்சாலைகளை ஆகியவற்றின் பொது நிர்வாகம் (எ, 73ஆவது விதி).

1956 மே 30ந் தேதி சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் குழுவும் சோவியத் ஒன்றியத்தின் அமைச்

சரவையும் ''வெவ்வேறு பொருளாதாரத் துறைகளின் நிறுவனங்களை ஒன்றியக் குடியரசுகளின் சட்ட அதிகாரத்தின் கீழ் வைத்து சம்பந்தப்பட்ட நிறுவன நடவடிக்கைகளை அமுல் செய்வது பற்றி'' என்ற தீர்மானத்தை நிறைவேற்றின. இது உற்பத்தி மற்றும் கலாசாரத்தில் ஒன்றியக் குடியரசுகளின் முன்முயற்சியையும் சுதந்திரத்தையும் ஊக்குவிப்பதற்கான கட்சியின் கொள்கையைத் தெளிவாக வெளிப்படுத்தியது. இந்த தீர்மானத்தின்படி, ஒன்றியக் குடியரசுகளின் அமைச்சரவைகள், அவை தீர்வு காண வேண்டிய பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளின் அளவை விரிவுபடுத்துவது, இந்தக் குடியரசுகளின் அமைச்சர்களுக்கு மேலதிகமான உரிமைகள் வழங்குவது பற்றிய யோசனைகளை சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இவ்வாறாக ஒன்றியக் குடியரசுகள் தமது உரிமைகளை விஸ்தரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்வைக்கும்.

சோவியத் ஒன்றியத்தின் பிரதேசம் முழுவதிலும் சட்ட முறையை ஒரே சீராக்குவதையும், சோவியத் ஒன்றியத்தின், ஒன்றியக் குடியரசுகளின் சட்ட முறையின் அடிப்படைகளை நிர்ணயிப்பதையும் அரசாட்சி, நிர்வாகம் ஆகியவற்றின் உயர் நிறுவனங்களின் மூலம் சோவியத் ஒன்றியம் நிறைவேற்றுகிறது (ஈ, 73ஆவது விதி). இதனை, சோவியத் குற்றவியல், உரிமையியல் சட்ட முறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை உதாரணமாகக் கொண்டு பார்ப்போம்.

ஒன்றியக் குடியரசுகளின் நீதிமுறை அமைப்பு மீதான சட்டமியற்றுவதையும், மற்றும் உரிமையியல், குற்றவியல், நீதி நடைமுறைச் சட்டத் தொகுப்பேடுகளைப் பிறப்பிப்பதையும் ஒன்றியக் குடியரசின் சட்ட அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்த 1957 பிப்ரவரி 11ந் தேதிய சட்டம், சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் சட்டமியற்றும் அதிகாரத் தகமையை வரையறுக்கிறது. நீதிமுறை அமைப்பு மற்றும் நீதி நடைமுறை பற்றிய சட்டத்தின் அகில-ஒன்றிய அடிப்படைகளையும், உரிமையியல், குற்றவியல் சட்டங்களின் அடிப்படைகளையும் ஸ்தாபிக்கும் உரிமை சோவியத் ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டது. ஒன்றியக் குடியரசுகளுக்கு நீதிமுறை அமைப்பு மற்றும் நீதி

நடைமுறைத் துறையில் சுதந்திரமாகச் சட்டங்கள் செய்ய வும், ஒன்றியக் குடியரசுகளின் வரலாற்று, தேசிய மற்றும் இதர அம்சங்களையும் வழக்கங்களையும் கவனத்திற் கொண்டு குடியரசின் உரிமையியல், குற்றவியல் மற்றும் நடைமுறைச் சட்டத் தொகுப்பேடுகளைப் பிறப்பிக்கவுமான உரிமை வழங் கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட சட்டம் நிறைவேற்றப் பட்ட பிறகு சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்திலும், ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களிலும் பொருத்தமான மாற்றங்கள் செய்யப்பட்டன.

1958 டிசம்பர் 25ஆம் நாள் சுப்ரீம் சோவியத், சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் குற்றவியல் சட்ட அடிப்படைகள், சோவியத் ஒன்றியம், ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் நீதிமுறை அமைப்பு பற்றிய சட்ட அடிப்படைகள், சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் குற்றவியல் நீதி நடைமுறையின் அடிப்படைகள் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டது. சம்பந்தப் பட்ட சட்டத் தொகுப்பேடுகளை ஒன்றியக் குடியரசுகள் வகுத்து அங்கீகாரம் செய்துள்ளன.

1961 டிசம்பர் 8ஆம் நாள் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத், சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் உரிமையியல் சட்ட அடிப்படைகளையும், சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் உரிமையியல் நீதி நடைமுறை பற்றிய அடிப்படைகளையும் அங்கீகரித்தது. அகில-ஒன்றியச் சட்டங்களாக இருக்கும் இந்த அடிப்படைகள் எல்லா ஒன்றியக் குடியரசுகளுக்கும் ஒட்டுமொத்தமாக சோவியத் ஒன்றியத்திற்கும் பொது வான உரிமையியல் சட்ட உறவுகளின் சட்ட முறைமைப் பிரிவுகளை வலுப்படுத்துகின்றன. இந்த அடிப்படைகளிலிருந்து இயங்கத் தொடங்கிய ஒன்றியக் குடியரசுகள் புதிய உரிமை யியல், உரிமையியல் நீதி நடைமுறை சட்டத் தொகுப்பேடுகளை ஏற்றுக் கொண்டன, அந்தச் சட்டத் தொகுப்பேடுகள் குடியரசுகளின் ஸ்தல நிலைமைகளை உரிய கவனத்தில் எடுத்துக் கொண்டு பல்வேறு வகையான உடைமை மற்றும் இதர உறவுகள் சம்பந்தமான காரியங்களுக்குத் தீர்வு காண்பதற் கான நடைமுறையினை மேலும் விவரமாக வரையறுக்கின்றன.

உரிமையியல் சட்டத்தின் அடிப்படைகள் பற்றிய 3ஆம் விதி சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுக ளின் இந்தத் துறையிலான அதிகாரத் தகமையை நிலை நாட்டியுள்ளது. ''ஒன்றியக் குடியரசுகளின் உரிமையியல் சட்டத் தொகுப்பேடுகளும் இதர உரிமையியல் சட்டங் களும் அடிப்படைகளில் இதற்கு வகை செய்திருந்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி உடைமை மற்றும் உடை மையில்லாத சொந்த உறவுகளை முறைப்படுத்தும்'' என்று கூறுகிறது. பொருத்தமான ஒன்றியக் குடியரசு சட்டம் இவ்வாறாக விரிந்த அளவிலான உரிமையியல் சட்ட உறவு களை முறைப்படுத்துகின்றது, இறுதியாக குடியரசுகள் தாமே இந்த உறவுகளை நிர்ணயம் செய்கின்றன.

அடிப்படைகளின் பல விதிகள், சோவியத் ஒன்றிய மும் மற்றும் ஒன்றியக் குடியரசுகளும் சேர்ந்து முறைப் படுத்தி வரும் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டவை. சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகள் இத்தகைய சந்தர்ப்பங்களில் தனிச் சட்டங்களைப் பிறப்பிக்கின்றன. வேறு பல விதிகள் ஒன்றியக் குடியரசுகளின் சட்டங்களால் மட்டுமே முறைப்படுத்தப்படும் பிரச்சினைகள் பற்றியவையா கும். அந்தந்தக் குடியரசின் உரிமையியல் சட்டத் தொகுப் பேடு மற்றும் தனிச் சட்டங்கள் இந்தப் பிரச்சினைகளை மிக வும் விரிவாக விளக்குகின்றன.

வரலாற்று வளர்ச்சி, பூகோள மற்றும் பொருளாதார நிலைமைகள், தேசிய இயைபு ஆகியவற்றின் தனித் தன்மை களும் இதர காரணிகளும் பல்வேறு குடியரசுகளின் உரிமை யியல், குற்றவியல், நீதி நடைமுறை மற்றும் இதரச் சட்டங் கள் விஷயத்தில் தவிர்க்கவொண்ணாத வகையில் வேற்றுமை களை எழுப்புகின்றன. ஒன்றியக் குடியரசுகள் குற்றவியல் சட்டம் பற்றிய பிரச்சினைகளைத் தமது சொந்த வழியில் தீர்த்துக் கொள்கின்றன. காரணம் சில குற்றங்கள் சில குடி யரசுகளில் மிகப் பெரிய சமூக அபாயமாகி விடும், இதரக் குடியரசுகளில் இவை நடப்பதே இல்லை, அல்லது குற்றவியல் தன்மை என்று சாட்டுமளவுக்கு அவ்வளவு பெரிய சமூக அபாயத்தை ஏற்படுத்துவதில்லை.

தவறு திருத்தும் தண்டனை உழைப்புப் பற்றிய சோ வியத் ஒன்றியம், ஒன்றியக் குடியரசுகளின் சட்டத்தின்

அடிப்படைகள், 1969 ஜூலை 9ந் தேதி சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தால் அங்கீகரிக்கப்பட்டது. அது தண்டனை அனுபவிப்பதற்கான நடைமுறையையும் நிபந்தனைகளையும் வரையறுத்தது, குற்றவாளிகள் மீது தவறு திருத்திய நடத்தைக்கான தண்டனை உழைப்பைப் பிரயோகித்தல், நீதிமன்றத் தீர்ப்புகளை நிறைவேற்றும் உறுப்புகளும் நிறுவனங்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறை, குற்றவாளிகளைச் சீர்திருத்தி மறுவாழ்வு அளிப்பதில் பொதுமக்கள் அமைப்புகளின் பங்கு ஆகியவற்றையும் வரையறுத்துக் கூறியது.

ஒன்றியக் குடியரசுகள் தவறு திருத்தும் தண்டனை உழைப்புக்கான சட்டத் தொகுப்பேடுகளை அடிப்படைகளின் ஆதாரம் மீது வரைந்து அங்கீகரிக்கின்றன. அவை தண்டனை அனுபவிப்பது பற்றிய நடைமுறையை குறிப்பாக வரையறுத்தும், முன்னாள் தண்டனை பெற்றோர் வேலை வாய்ப்புப் பற்றியும், அவர்களது தண்டனைக்குரிய அந்தஸ்தை ரத்துச் செய்வது பற்றிய நடைமுறை குறித்தும் வேறு சட்டங்களைப் பிறப்பிக்கலாம்.

1947ல் திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சட்டங்களின் அடிப்படைகளை வரையறுப்பது சோவியத் ஒன்றியத்தின் சட்ட அதிகாரத்தகமையின் கீழ் வைக்கப்பட்டது. இதற்கு முன்னால் இந்தப் பணியை ஒன்றியக் குடியரசுகள் மட்டுமே செய்து வந்தன. 1968 ஜூன் 27ஆம் நாள், சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தால் அங்கீகரிக்கப்பட்ட சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் திருமணம், குடும்பம் பற்றிய சட்டங்களின் அடிப்படைகள், குடும்பம், மணவாழ்வு உறவுகளை முறைப்படுத்துவதற்குரிய மேலதிகமான உரிமைகளை ஒன்றியக் குடியரசுகளுக்கு வழங்கின. திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சட்டங்களில், அடிப்படைகளும், அவற்றுக்குப் பொருத்தமாகப் பிறப்பிக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் இதரச் சட்ட விதிகளும், ஒன்றியக் குடியரசுகளின் திருமணம், குடும்பம் பற்றிய சட்டத் தொகுப்பேடுகள் இதர சட்டங்களும் உட்படும். ஒன்றியக் குடியரசுகளின் சட்டம், அடிப்படைகள் அதன் அதிகாரத்தின் கீழ் வைத்துள்ள பிரச்சினைகளையும், அடிப்படைகள் நேரடியாக வரையறுக்கப்படாத மணவாழ்வு மற்றும் குடும்ப உறவுகளையும் முறைப்

படுத்துகிறது (விதிகள் 8, 9, 10, 12, 13, 15, 21, 24). அடிப்படைகளின் பல விதிகள் ஒன்றியக் குடியரசுகளின் சட்டங்களின் ஆதாரத்தில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகளை வரிசைப்படுத்தியுள்ளன.

திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சட்டத் தொகுப்பேடுகளின் வரையறுப்புக்களை ஸ்தூலப்படுத்தவும், ஸ்தல நிலைமைகளுக்கு உரிய கவனம் செலுத்தி அடிப்படைகளின் பொது ஏற்பாடுகளிலிருந்து வேறுபடவும் ஒன்றியக் குடியரசுகளுக்கு இந்த அடிப்படைகள் உரிமை வழங்கியுள்ளன. இந்த உரிமைகளை உருவகப்படுத்தி திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சட்டத் தொகுப்பேடுகளை ஒன்றியக் குடியரசுகள் விரித்துரைத்து அங்கீகாரம் செய்துள்ளன.

ஒன்றியக் குடியரசு தனது அதிகாரங்களை தனது உயர் அரசு உறுப்புகள் மற்றும் அரசு நிர்வாக அமைப்புகள் மூலம் அமுல் செய்கிறது.

**(1) அரசு விவகாரங்களில்**

ஓர் ஒன்றியக் குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டத்தை அங்கீகரிப்பதும் அதன் அனுசரிப்பு சம்பந்தமான கட்டுப்பாடும்.

ஒன்றியக் குடியரசுக்கு அதன் சுப்ரீம் சோவியத்தால் ஏற்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சொந்த அரசியல் அமைப்புச் சட்டம் உள்ளது, இது பின்னுல் சோவியத் ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுவதில்லை. இந்த அரசியல் அமைப்புச் சட்டம் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் வழியில் கட்டமைக்கப்பட்டது, இந்த உண்மையை சோவியத் சமூக மற்றும் அரசு அமைப்பின் பொதுவான பொருளாதார மற்றும் சமூக-அரசியல் அடிப்படை விளக்குகிறது. அதே சமயம் இந்த அரசியல் அமைப்புச் சட்டம் குடியரசின் தேசிய, பொருளாதார, அரசியல் மற்றும் வரலாற்று வழி அம்சங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

ஒன்றியக் குடியரசின் சட்டமியற்றும் உரிமையினைச் செயலாக்குவது.

தனது உயர் அரசு அமைப்புகளின் சட்ட அதிகாரத்தின் கீழ் வரும் பிரச்சினைகள் மீது சட்டமியற்ற ஓர் ஒன்

றியக் குடியரசுக்கு உரிமை உண்டு. ஒன்றியக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகள் தமது அதிகாரத் தகமைக் குட்பட்டு சட்டமியற்றும் கடமையைப் புரிகின்றன.

ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி ஒன்றியக் குடியரசின் சட்டங்கள் குடியரசின் சுப்ரீம் சோவியத்தினல் மட்டுமே இயற்றப்படுகின்றன (136ஆவது விதி).

ஓர் ஒன்றியக் குடியரசின் சுப்ரீம் சோவியத் நிறைவேற்றிய சட்டங்கள் ஒன்றிய அமைப்புகளின் அனுமதியைப் பெற வேண்டுவதில்லை; ஒன்றியக் குடியரசுகள் நிலைநாட்டியுள்ள நடைமுறைப்படி அவை உடனடியாக அமுலுக்கு வருகின்றன. ஓர் ஒன்றியக் குடியரசின் சட்டத்தைக் குடியரசின் சுப்ரீம் சோவியத் மட்டுமே திருத்தலாம் அல்லது அதன் செல்தகமையை ரத்துச் செய்யலாம், குடியரசுச் சட்டம் ஒன்றியச் சட்டத்தோடு வேறுபட்டிருந்தால் மட்டுமே ஒன்றியச் சட்டம் அமுலுக்கு வரும்.

உரியதான அகில-ஒன்றிய அரசு மற்றும் நிர்வாக அமைப்புகள் ஒன்றிய மற்றும் குடியரசுச் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும், அவை அவற்றின் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாகும்.

ஒன்றியக் குடியரசின் குடியுரிமை வழங்குவது, அதன் மூலம் சோவியத் ஒன்றியத்தின் குடியுரிமை வழங்குவது.

பிரதேச, பிராந்திய, வட்டார, மாவட்டப் பிரிவுகளை நிர்ணயிப்பது, நிர்வாக-பிரதேச அமைப்பின் மற்றெல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பது (79ஆவது விதி).

சோவியத் குடியரசுகளின் பிரதேசங்களின் இடையுறவுகளின் வரலாறு, ஒரு குடியரசிலிருந்து பிரதேசத்தைப் பிரித்தெடுத்துக் கொள்வதற்கான ஒரே ஒரு வழியை மட்டுமே அறியும், இது ஒரு குடியரசுக்கு இன்னொரு குடியரசு சுயவிருப்பமாகத் தன் பிரதேசத்தின் ஒரு பகுதியை மாற்றி வழங்குவதாகும். இவ்வாருக 1954ல் ருஷ்யாவின் கூட்டரசு கிரீமியப் பிராந்தியத்தை உக்ரேனியாவுக்கு மாற்றி அளித்தது. 1954 பிப்ரவரி 12ஆம் நாள் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக்குழு கிரீமியப் பிராந்தியத்திற்கும் உக்ரேனியாவுக்கும் இடையே பொருளாதார ஒற்றுமை, பிரதேச அருகாமை, நெருக்க

மான பொருளாதார மற்றும் கலாசார பந்தங்கள் இருப்பதன் காரணமாக, கிரீமியப் பிராந்தியத்தை ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசிலிருந்து உக்ரேனியாவுக்கு மாற்றுவது என்று முடிவு செய்கிறது. இந்தத் தீர்மானம் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக்குழு வின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். 1963ல் கஸாகுஸ் தான் தனது பிரதேசத்தில் ஒரு பகுதியை உஸ்பெக்கிஸ் தானுக்கு மாற்றி வழங்கியது.

பிறகு அந்தச் சட்டங்கள் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருக்கும்.

குடியரசுகள் பரஸ்பர ஒப்புதல் செய்து அது பற்றி சட்டங்களைப் பிறப்பிப்பது மூலம் எல்லாப் பிரதேச மாற் றங்களுக்கும் தீர்வு கண்டன. சோவியத் ஒன்றியத்தின் சுப் ரீம் சோவியத்திற்கே ஒன்றியக் குடியரசுகளுக்கிடையிலான எல்லைகளை அங்கீகாரம் செய்யும் அரசியல் அமைப்புச் சட்ட உரிமை உள்ளது. ஒன்றியக் குடியரசுகளிடையே பிரதேசத் தகராறுகள் எழும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஒன்றியக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகள் சமத்துவ அடிப்படை யில் சமரசக் கமிஷன்களை நிறுவும்.

குடியரசின் உயர் நீதிமன்றத்தின் கீழ் ஒரு ஒன்றியக் குடியரசு தனது நீதி அமைப்புகளை நிறுவுதல்.

1957 பிப்ரவரி 12ந் தேதி சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத், சோவியத் ஒன்றியத்தின் உயர் நீதி மன்ற நிலவரச் சட்டத்தை அங்கீகரித்தது. இது சோவியத் ஒன்றியத்தின் உயர் நீதிமன்றம் மற்றும் ஒன்றியக் குடி யரசுகளின் உயர் நீதிமன்றங்களின் அதிகாரத் தகமையை நிர்ணயிக்கிறது. முன்னுள் அமுலில் இருந்த நிலவரச் சட்டத்துடன் ஒப்பு நோக்கிடில் இது ஒன்றியக் குடியரசு களின் நீதிமன்றங்கள் விசாரணை நடத்திய வழக்குகள் விஷயத்தில் சோவியத் ஒன்றிய உயர் நீதிமன்றத்தின் மேற் பார்வைப் பணியைப் பெருமளவு கட்டுப்படுத்துகிறது. முன்நாட்களில் சம்பந்தப்பட்ட ஒன்றியக் குடியரசின் உயர் நீதிமன்றத்தைக் கலந்து கொள்ளாமலே மக்கள் நீதிமன் றங்கள் உட்பட எந்த நீதிமன்றத்திலிருந்தும் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரணைக்குக் கோரிப் பெறும் உரிமை சோவியத் ஒன்றியத்தின் உயர் நீதிமன்றத்

திற்கு இருந்தது. 1957ஆம் ஆண்டு நிலவரச் சட்டத்தின் படி சோவியத் ஒன்றியத்தின் உயர் நீதிமன்றமும் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்கான அதன் நீதித் துறை நிர்வாக குழுக்களும், ஒன்றியக் குடியரசு உயர் நீதிமன்றத்தின் தீர்வுகள் அல்லது தண்டனை வழங்குதல் ஒன்றியச் சட்டத்திற்கோ அல்லது இதர ஒன்றியக் குடியரசுகளின் நலன்களுக்கோ முரணுக இருந்தால் மட்டுமே, அவற்றை எதிர்த்த மனுக்களைப் பரிசீலித்து நீதிமுறையில் மேற்பார்வை புரியும் கடமையினை ஆற்றலாம். முன்னுட்களில் ஒரு ஒன்றியக் குடியரசின் உயர் நீதிமன்றத்தின் நிர்வாகக் குழுவின் தீர்ப்புகளையும் மற்றும் தண்டனை வழங்குதல்களையும் சோவியத் ஒன்றியத்தின் உயர் நீதிமன்றம் மட்டுமே ரத்தாக்க முடியும். இந்த உரிமையை தற்போது ஒன்றியக் குடியரசின் உயர் நீதிமன்றத் தலைமைக் குழு அல்லது தலைமைக் குழு இல்லாத குடியரசுகளின் உயர் நீதிமன்றங்களின் பிளினம்கள் பெற்றுள்ளன. பொதுவாகக் குடியரசின் நீதி அமைப்புகள் நீதித்துறை மேற்பார்வை என்ற முறையில் ஒன்றியக் குடியரசு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள வழக்குகளின் மறுவிசாரணையை முழுமைப் படுத்துகின்றன.

நீதி அமைப்பு, நீதி நடைமுறை, உரிமையியல் குற்றவியல் மற்றும் தவறு திருத்தத் தண்டனை உழைப்புக்கான சட்டத் தொகுப்பேடுகளை அங்கீகரிப்பதற்கான சட்டமியற்றல்.

சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் குடிமக்கள் உரிமைகள் பாதுகாப்பு.

ஒன்றியக் குடியரசுகளில் இதரக் குடியரசு அமைப்புகளின் சட்ட ஆற்றலுக்கான ஆதாரம் ஆட்சி அதிகாரமே. அதன் சர்வசுதந்திர உரிமைகளைச் செயலாக்குவதில் ஒன்றியக் குடியரசு வேறு எந்த அதிகார அமைப்புக்கும் பொறுப்புடையதல்ல, அவற்றின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியதுமல்ல. சம்பந்தப்பட்ட குடியரசின் மக்கள் அல்லது சோவியத் ஒன்றியத்தின் அனைத்து மக்களின் நலன்களுக்கு உகந்தது என்று தான் கருதும் எந்த முடிவையும் எடுப்பதற்கு ஒன்றியக் குடியரசின் சுப்ரீம் சோவியத்திற்கு அதிகாரமுண்டு. அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்படாத இந்த

முடிவுகள் சம்பந்தப்பட்ட குடியரசில் உயர் சட்ட வலிமை உடையனவாகும்.

ஒன்றியக் குடியரசின் ஆக உயர் அரசு அதிகாரம் இழக்கவோ துறக்கவோ முடியாதது, ஒன்றியக் குடியரசினாலும் அதன் ஒப்புதலுடனும் மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியதாகும்.

(2) கூட்டரசிற்குள்ளேயான உறவுகளில்

கூட்டரசின் ஒரு உறுப்பு என்ற முறையில் ஒன்றியக் குடியரசு சோவியத் ஒன்றியத்திடம் ஒரு சில அரசு நடவடிக்கைகளைச் செயலாக்குமாறு கோரலாம்; சோவியத் ஒன்றியத்தின் பல அரசு அமைப்புகளின் நிறுவுதல் மற்றும் நடவடிக்கைகளில் பங்கு பெறுகிறது. சோவியத் ஒன்றியத்தின் உறுப்புகள் என்ற முறையில் ஒன்றியக் குடியரசுகள் அனுபவிக்கும் உரிமைகள் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உருவகம் பெற்றுள்ளன. ஒன்றிய அரசின் ஆக உயர்ந்த அமைப்புகளான சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்திலும், சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவிலும் ஒன்றியக் குடியரசுகள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன.

சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தினுடைய தேசிய இனங்களின் சபை ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகள், சுயாட்சிப் பிராந்தியங்கள், சுயாட்சி மாவட்டங்களின் சோவியத்துகள் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. விகிதம்: ஒவ்வொரு ஒன்றியக் குடியரசிலிருந்தும் 32 பிரதிநிதிகள், ஒவ்வொரு சுயாட்சிக் குடியரசிலிருந்தும் 11 பிரதிநிதிகள், ஒவ்வொரு சுயாட்சிப் பிராந்தியத்திலிருந்தும் 5 பிரதிநிதிகள், ஒவ்வொரு தேசிய வட்டாரத்திலிருந்தும் ஒரு பிரதிநிதி. ஒன்றியக் குடியரசுகள் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவில் பிரதிநிதித்துவம் பெறுகின்றன. 1957 முதல் சோவியத் ஒன்றியத்தின் உயர் நீதிமன்றத்தில் ஒன்றியக் குடியரசுகளின் உயர் நீதிமன்றத் தலைவர்கள் மூலம் குடியரசுகள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. அவர்கள் தமது பொறுப்புக்கு ஏற்ப உயர் நீதிமன்றத்தின் உறுப்பினர்களாக உள்ளனர்

(சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் 105ஆம் விதி). சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவையில் ஒன்றியக் குடியரசுகளின் அமைச்சரவைத் தலைவர்கள்—அவர்களது பொறுப்புக்கு ஏற்ப—பிரதிநிதித்துவம் பெறுகின்றனர் (சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் விதி 70).

சோவியத் ஒன்றியத்தின் அமைப்புகளில் ஒன்றியக் குடியரசுகள் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பது அவை கூட்டரசின் அரசுரிமையையும் அதிகாரத் தகமையையும் செயலாக்குவதில் நேரடியான பங்கு பெறுவதை சாத்தியமாக்குகிறது. கூட்டரசு மற்றும் அதன் உறுப்புப் பிரிவுகளின் அதிகாரத்திற்கு உட்பட்ட உரிமை வட்டத்தை நிர்ணயிப்பதிலும், சோவியத் ஒன்றியத்தின் எல்லாப் பகுதிகளிலும் கட்டாயமாக அனுசரிக்கப்பட வேண்டிய சட்டங்களைப் பிறப்பிப்பதிலும், எல்லா அரசு அமைப்புகளின் நடவடிக்கைகள் மீதும் கறாரான அரசியல் அமைப்புச் சட்ட மேற்பார்வையை செயல்படுத்துவதிலும் ஒன்றியக் குடியரசுகள் பங்கு பெறுகின்றன.

சோவியத் ஒன்றியத்திடம் ஒரு சில அரசு நடவடிக்கைகளை நிறைவேற்றும்படி கோர ஒன்றியக் குடியரசுகளுக்கு உரிமை உண்டு.

சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஓர் ஒன்றியக் குடியரசு சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் விசேஷக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று கோரலாம். இத்தகைய நிலையில் இக்கூட்டத்திற்கு சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அங்கீகாரம்;

ஓர் ஒன்றியக் குடியரசுக்குள் புதிய சுயாட்சிக் குடியரசுகளும் சுயாட்சிப் பிராந்தியங்களும் உருவாவதை சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்;

சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசுகள், சுயாட்சிப் பிராந்தியங்களின் எல்லைகள் மற்றும் வட்டாரப் பிரிவினை அங்கீகரிப்பது;

அகில-ஒன்றிய நிர்வாகத்திற்குள்ளான நிறுவனங்களின் நிலைமை, நிர்வாகம் பற்றிய கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை;

சம்பந்தப்பட்ட ஒரு குடியரசில் ஒரு ஒன்றிய நிறுவனத்தினுடைய உற்பத்தியின் வளர்ச்சி, மேம்பாடு, நவீனப்படுத்தல், தனித்தேர்ச்சி, ஒத்துழைப்பு பற்றிய யோசனைகளை சோவியத் ஒன்றியத்தின் அரசாங்கத் திட்டக் கமிஷனுக்குச் சமர்ப்பிக்கலாம்.

(3) பொருளாதார மற்றும் சமூக-கலாசாரத் துறைகளில்

குடியரசின் பொருளாதாரத் திட்டம், பட்ஜெட் மற்றும் அதன் வரவு செலவு ஆகியவற்றை ஊர்ஜிதம் செய்தல்;

பொருளாதாரக் கணக்கு வைத்தலை மேற்பார்வை செய்தல்;

சோவியத் ஒன்றியத்தின் சட்டங்களுக்கு ஏற்ப அரசாங்க மற்றும் ஸ்தல வரிகள், கட்டணங்கள், லெவிகளை நிர்ணயம் செய்தல்;

சுயாட்சிக் குடியரசுகளின் பட்ஜெட் மற்றும் பிரதேசங்கள் பிராந்தியங்களின் ஸ்தல பட்ஜெட்டுகளை அமுல் நடத்தலை மேற்பார்வை செய்தல்;

சேமிப்புகள் காப்பீடு பற்றிய மேற்பார்வை;

குடியரசு ஆட்சி அதிகாரத்தின் கீழ் உள்ள வங்கிகள், தொழில்துறை, விவசாய மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அமைப்புகளின் நிர்வாகம், ஒன்றிய-குடியரசு மற்றும் ஸ்தல அதிகாரத்தில் இருக்கும் தொழில்கள், நிர்மாணப் பணிகளை இயக்குவித்தல்;

நிலம், கனிவளம், காடுகள், நீர்வளத்தைப் பயன்படுத்தல் பற்றிய நடைமுறையை நிர்ணயிப்பது;

வீட்டு வசதி நகர சபை நிர்வாகம், வீட்டு நிர்மாணம், நகர மற்றும் நாட்டுப்புற வளர்ச்சி பற்றிய திட்டமிடல், பாதை போடுதல், போக்குவரத்து தகவல் துறை நிர்வாகம்;

உழைப்புத் துறைச் சட்டமியற்றல், திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சட்டமியற்றல்;

சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, ஆரம்ப, செகண்டரி மற்றும் உயர் கல்வி நிர்வாகம்; ஒன்றியக் குடியரசின் கலாசார மற்றும் அறிவொளித் துறை, விஞ்ஞான நிறுவனங்கள் கழகங்களின் வழிகாட்டுதல் மற்றும் நிர்வாகம்;

உடற்பயிற்சி விளையாட்டு அமைப்புகளை இயக்குவித்தல்;

சோவியத் ஒன்றிய அரசின் வளர்ச்சி சோவியத் ஒன்றியத்தின் அதன் உறுப்புக் குடியரசுகளின் உரிமைகளின் முழு வளர்ச்சியுடனும், இந்த உரிமைகளை வழி வகைகளை மேம்படுத்துவதோடும், அவற்றின் இடை உறவு, ஒரு முகப்படுத்தல், அவற்றின் மேலதிகமான சமுதாய வினைத் திறன் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது. ஆனால் இந்த நடைமுறையை ஒரு தலைப் பட்சமாகவோ எளிதாகவோ செயற்படுத்தக் கூடாது. ஒன்றியக் குடியரசுகளின் விரிந்து வரும் உரிமைகளை சோவியத் ஒன்றியத்தின் வளர்ச்சியின் இயல்பான விளைவு என்று சிலர் தவருகக் கருதுகிருர்கள். முதலாவதாக, ஒன்றிய அரசின் வளர்ச்சி பற்றிய உள்ளிணைந்த பிரச்சினையின் ஒரு அம்சத்தை மட்டும் (மிகவும் முக்கியமானதாக இருப்பினும்), அதாவது சோவியத் ஒன்றியத்தை இந்த விஷயத்தில் புறக்கணித்து ஒன்றியக் குடியரசுகளின் உரிமைகள் அதிகரிப்பு என்பதை மட்டும் வைத்துப் பரிசீலனை செய்ய முடியாது. இரண்டாவதாக, உரிமைகளின் வளர்ச்சியை அவற்றின் விஸ்தரிப்போடு நிறுத்தி விட முடியாது. காரணம் இது அதன் விதியை அளவு அம்சத்திற்குக் குறுக்குவதாக இருக்கும்.

இந்த அதிகரிப்பை வளர்ச்சியின் விதி என்று கருதி ஒன்றியக் குடியரசுகளின் உரிமைகள் எல்லையற்ற அளவுக்கு அதிகரிக்கும் என்ற அடிப்படையில் தேசிய அரசு நிர்மாணத்தின் நடைமுறையினைப் பரிசீலிக்க முடியாது, காரணம் இந்தப் போக்கு எதார்த்தமாயும் தவிர்க்கவொண்ணுத வகையிலும் கூட்டரசுப் பந்தங்களை பலவீனப்படுத்துகிறது, இவ்வாருக ஒன்றியத்தைப் பாதிக்கிறது. ஒன்றியக் குடியரசுகள் தற்பொழுது தமது அதிகாரங்களை மேலும் முழுமையாக அமுல்படுத்த வேண்டும். ஆனல் சோவியத் ஒன்றியத்தின் விஸ்தரிக்கப் பெற்ற அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் ஒன்றியக் குடியரசுகளின் உரிமைகளை அதிகரிக்க முடியாது, ஓர் ஒன்றிய அரசு என்ற முறையில் சோவியத் ஒன்றியம் அதன் பிரதான அம்சங்களை இழந்து விடக் கூடாது. இந்த விஸ்தரிக்கப் பெற்ற அதிகாரத் தகமையே நாட்டில் அதன் மேலதிகாரத்தை ஊர்ஜிதம் செய்கிறது, ஒன்றியக் குடியரசுகளின் உரிமைகள் அதிகரிக்கப்பட வேண்டும், எல்

லாவற்றுக்கும் மேலாக அவற்றின் கூட்டு அதிகாரத்தின் கீழ் வரும் துறைகளில் சோவியத் ஒன்றியத்திற்கும் குடியரசு களுக்கும் இடையில் அதிகாரங்கள் மறுபங்கீடு செய்யப்பட வேண்டும்.

கூட்டரசு உறவுகளின் தன்மை காரணமாக, பொதுவான ஜீவாதார நலன்களைக் காப்பதற்காக சோவியத் ஒன்றியம் செயல்படுத்தும் அடிப்படை உரிமைகளை ஒன்றியக் குடியரசு களுக்கு வழங்க முடியாது. மறுபுறம் ஒன்றியக் குடியரசு களின் உரிமைகளைச் செயற்கையாகக் கட்டுப்படுத்தவும் கூடாது, ஏனெனில், ஒவ்வொரு குடியரசின் பாத்திரத்தையும் முன்முயற்சியையும் மிகவும் உசிதமான முறையில் இணைக்க சோவியத் ஒன்றியம் செய்து வரும் முயற்சிகளை இது தடை செய்யும். எனவே ஒன்றிய அரசின் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும் இந்த அதிகரிப்புக்குத் தலையாய முக்கியத் துவம் கொடுக்கப்பட்ட பொழுதிலும் ஒன்றியக் குடியரசு களின் உரிமைகள் அதிகரிப்பை ஒரு தன்நிறைவு ஒரு தலைப் பட்ச நடைமுறையாகக் கருதக் கூடாது.

ஆட்சி அதிகாரத்தை அமுல் நடத்தவும், அரசாங்க மற்றும் பொருளாதார நடவடிக்கைகள், கலாசார வாழ்க் கையில் முன்முயற்சி எடுக்கவும் வேண்டி சோவியத் ஒன்றி யத்தின் அரசியல் அமைப்புச் சட்டமும், சட்ட முறையும் ஒன்றியக் குடியரசுகளுக்கு விரிவான அதிகாரத்தை வழங்கி யுள்ளன.

ஒன்றியக் குடியரசுகள், தமக்குரிய பரவலான உரிமை களைப் பயன்படுத்தி அத்துடனேயே தமது பிரதேசத்தில் சோவியத் ஒன்றியத்தின் அதிகார உரிமையை நிலைநிறுத்து வதற்கு உதவுகின்றன, ஒன்றியத்தின் அரசாட்சி, நிர்வாக நிறுவனங்கள் எடுக்கின்ற முடிவுகளை நிறைவேற்றுகின்றன (77ஆவது விதி).

சோவியத் அரசு அமைப்பும், சமூக-அரசியல், பொரு ளாதார மற்றும் கலாசார துறைகளின் நிர்வாகமும் வலுப் பட்டு மேம்பாடடைந்ததானது மத்தியப்படுத்த வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. நிர்வாகத்தை மத்தியப் படுத்துவது மூலமும் ஒன்றியக் குடியரசுகளின் உரிமைகளை அதிகரிப்பது மூலமும் பெற்றுள்ள வாய்ப்புக்களைத் தனித் தனியாகப் பயன்படுத்த இயலாது, ஏனெனில் அவை அரசு

நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் இரண்டறக் கலந்தவை.

சோஷலிச சமூக அமைப்பின் வழிகாட்டும் சக்தியான கம்யூனிஸ்டுக் கட்சி, ஸ்தல முன்முயற்சியைத் தடை செய்யும் அதிகார வர்க்க மத்தியத்துவத்தை எதிர்த்தும், சோவியத் மக்களின் பொது நலன்களைப் புறக்கணித்து எழும் குறுகிய ஸ்தல நலன்கள், தேசியத் தனியுரிமை ஆகியவற்றை எதிர்த்தும் நடைபெறும் போராட்டத்தில் முன்னணியில் நிற்கிறது.

ஒன்று சேர்ந்து கம்யூனிசத்தைக் கட்டி வரும் சோவியத் தேசங்களின் சோஷலிசக் குடும்பத்தில் குறுகிய தேசிய மற்றும் ஸ்தல நலன்களுக்கு இடமே இல்லை. சோவியத் குடியரசுகள் மேலதிகமாக ஒன்றுக்கொன்று உதவிக் கொண்டும், ஒன்றியத்தின் அரசுரிமையும் ஒன்றியக் குடியரசுகளின் அரசுரிமையும் மேலும் மேலும் இசைவாக ஒன்றிணைந்தும் திகழும் போது மட்டுமே கம்யூனிசத்தின் பொருளாயத மற்றும் ஆன்மீக முன்தேவைகளைப் படைப்பாக்கம் செய்யும் கடமை வெற்றிகரமாக நிறைவேற்றப்படும். அனைத்து சோவியத் மக்களின் பொது நலன்கள் மீது உரியகவனம் செலுத்தியே கட்சியானது ஒன்றியக் குடியரசுகளின் உரிமைகளின் பரிமாணத்தையும் உள்ளடக்கத்தையும் நிர்ணயம் செய்கிறது.

சில மேலைநாட்டு ''சோவியத் இயலாளர்கள்'' சோவியத் ஒன்றிய அரசின் கூட்டரசு உறவுகளைப் பற்றி ஒரு சிதைந்த சித்திரத்தை வழங்குகிறார்கள். ஒன்றியக் குடியரசுகள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை என்று காட்ட முயல்கிறார்கள். இவ்வாறாக அலெக் நோவ் மற்றும் ஜே. ஏ. நியூத் (கிளாஸ்கோ பல்கலைக் கழகம்) எழுதியுள்ள **சோவியத் மத்தியக் கிழக்கு—வளர்ச்சிக்கான ஒரு கம்யூனிஸ்டு மாதிரி** என்ற நூலில் அவர்கள் மத்திய ஆசிய மற்றும் காக்கேசியக் குடியரசுகள் பொருளாதார முறையில் சுரண்டப்படவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் அகில-ஒன்றிய அமைப்புகள் செயல்படுத்தும் ''கட்டுப்பாட்டையும்'', இந்தக் குடியரசுகளின் ''சுதந்திரமின்மையையும்'' ''காலனி ஆதிக்கம்'' என்று அழைக்கிறார்கள், சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் எதிர் நோக்கப்பட்டுள்ள மாபெரும் சுதந்திரத்தையும் பல உரிமைகளை

யும் ஒன்றியக் குடியரசுகள் அனுபவிக்கவில்லை என்று வாதிடுகிறார்கள்[1]. இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமில்லாதவை; நாம் ஏற்கெனவே கண்டது போன்று ஒன்றியக் குடியரசுகள் சர்வசுதந்திர அரசுகளாகும், அவை அரசியல் அமைப்புச் சட்டப்படியும் மெய்யாகவும் விரிந்த அளவிலான உரிமைகளை அனுபவிக்கின்றன.

---

1 A. Nove, J. Neuth, *The Soviet Middle East, A Communist Model for Development*, London, 1967, pp. 33-34.

அத்தியாயம் 8

# வளர்ச்சியடைந்த சோஷலிச சமூகத்தில் சோவியத் தேசங்கள், தேசியக் குழுக்களின் செழுமையும் அவை நெருங்கிச் சேர்தலும்

சோவியத் சோஷலிசத் தேசங்களின் மாபெரும் குடும்பத்திற்குள் மட்டுமே ஒவ்வொரு சோவியத் குடியரசும் செழுமையுற்று வளர்ச்சியடைதல் சாத்தியம் என்பதை சோவியத் பல்தேசிய அரசின் வரலாறு காட்டுகிறது.

மாபெரும் தேசபக்தப் போரின் பொழுது சோவியத் பல்தேசிய அரசு கடும் சோதனைகளுக்கு இலக்கானது. சோவியத் ஒன்றியத்திற்கு எதிராகப் போரைக் கட்டவிழ்த்துவிட்ட ஜெர்மன் பாசிசம் சோவியத் மக்களிடையே தேசியப் பூசல்களைத் தூண்டி விடலாம் என்று கருதியது. ஆனால் நட்புறவு மற்றும் சோதரத்துவப் பந்தங்களினாலும், சோவியத் தேசபக்த உணர்வினாலும் ஒன்றிணைந்து நின்ற சோவியத் மக்கள் இனங்கள் தமது சோஷலிசத் தாயகத்தைப் பாதுகாக்க கம்யூனிஸ்டுக் கட்சியைச் சுற்றி அணி திரண்டன.

பாசிச ஆக்கிரமிப்பை எதிர்த்து பல்வேறு தேசிய இனங்களின் பிரதிநிதிகள் சோவியத் ஆயுதப்படைகளுடன் சேர்ந்து அக்கம் பக்கமாகப் போராடினர். போரின் சோதனையான நாட்களில் அனைத்து சோவியத் மக்களினங்களின் ஒற்றுமை எவ்வாறு வலுவடைந்தது என்பதை எடுத்துக் காட்ட நூற்றுக் கணக்கான சுவையான ஆவணங்கள் உள்ளன. 1941-1942 பின்பனிக் காலத்தில் லெனின்கிராத் வாசிகளுக்கு தாஜிக் உழைப்பாளி மக்கள் எழுதியதாவது: ''ஆயிரக் கணக்கான கிலோமீட்டர்கள் எம்மைப் பிரித்து வைத்திருந்தாலுங்கூட, லெனினது நகரின் தீரமிக்க பாதுகாப்பாளர்களே எங்கள் சிந்தனைகள் யாவும் உங்களிடமே உள்ளன. லெனின்கிராதைப் பாதுகாப்பது மூலம் நீங்கள்

எமது சுதந்திரத்தை, தாஜிக்கிஸ்தான் உழைப்பாளி மக்களின் இன்பமும் மகிழ்ச்சிகரமுமான வாழ்க்கையைப் பாதுகாத்து நிற்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம்''. பாசிஸ்டுகள் காக்கசஸ் மலைத்தொடரைக் கடக்க முனைந்து வந்து கொண்டிருந்த சமயம், 1942 ஆகஸ்டில் திபிலிசியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில், டிரான்ஸ் காக்கேசிய மக்கள் இனங்களைப் பிளவுறுத்தி அவர்களை மகத்தான ருஷ்ய மக்களிடமிருந்து பிரிந்து விடக் கூடிய சக்தி எதுவும் உலகில் இல்லை என்று அறிவிக்கப்பட்டது.

ஸ்டாலின்கிராதில் சமர் புரிந்து வந்த உஸ்பெக்குகளுக்கு உஸ்பெக் மக்கள் அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் கூறப்பட்டதாவது: ''ஜெர்மன் 'பஸ்மாச்'[1] உங்களது மூத்த சகோதரனை ருஷ்யனின் வீட்டிற்குள்ளும், உங்கள் சகோதரர்களான பைலோருஷ்யன் மற்றும் உக்ரேனியனின் வீட்டுக்குள்ளும் புகுந்து விட்டான்... ருஷ்யன் வீடு உங்கள் வீடு, உக்ரேனியனதும் பைலோருஷ்யனதுமான வீடும் உங்கள் வீடே''. எனவே எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த படைவீரர்கள் மாஸ்கோ, லெனின்கிராத், கீவ், செவஸ்த்தோப்பல், ஒதெஸ்ஸா மற்றும் ஸ்டாலின்கிராத் அருகிலும், குர்ஸ்க் வளைவிலும், நீப்பரைக் கடந்த பொழுதும் தீரத்துடன் போராடி தமது சோவியத் நாட்டை, தமது வீட்டை, தமது சொந்தக் குடும்பத்தைக் காத்து நின்றார்கள், எனில் அதில் வியப்பேது. 16ஆவது லித்துவேனிய டிவிஷன் ஓரியோல் மற்றும் போலத்ஸ்க் நகரங்களில் வீரமாகப் போராடியது, 416ஆம் அஸர்பைஜானிய டிவிஷன் வடக்கு ராணுவப் பிரிவில் போராடியது. 414 மற்றும் 276ஆம் ஜார்ஜிய டிவிஷன்கள், 89ஆவது ஆர்மீனிய டிவிஷன், மற்றும் இதர தேசிய ராணுவ பிரிவுகள் மகத்தான தீரத்தை வெளிக்காட்டின. எதிரி கைப்பற்றி வைத்திருந்த பிரதேசத்தில், பைலோருஷ்யா, பால்டிக், உக்ரேன், மற்றும் வட காக்கசஸ் பகுதிகளில், ஒரு சர்வதேசத் துணைப்படை இயக்கம் உருவாக்கப்பட்டது. சோவியத் பல்தேசிய அரசு இந்த சோதனைத் தீயில் புடமிடப்பட்டு

---

[1] உள்நாட்டுப் போரின் பொழுது மத்திய ஆசியாவில் இருந்த எதிர்ப்புரட்சிக் கொள்ளைக்காரர்கள்.

முன்னைவிட அதிக வலிமையுடனும் ஒற்றுமையுடனும் போரிலிருந்து மீண்டு வெளியே வந்தது.

சோஷலிச தேசங்கள் உருவம் பெற்றதோடு சோவியத் ஒன்றியத்தில் தேசிய அசமத்துவம் ஒழித்துக் கட்டப்பட்டு விட்டது. சோஷலிச அடிப்படையிலான அரசுத்துவமும், பொருளாதாரமும் கலாசாரமும் சுதந்திரமாக அபிவிருத்தி யடைந்து வருகின்றன, ஒட்டுமொத்தமாக ஒன்றியத்திற்கும் மற்றும் எல்லாக் குடியரசுகளுக்கும் சமூக முன்னேற்றம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

லெனினது முன்முயற்சியைப் பின்பற்றி கட்சியானது, எல்லைப்புறத் தேசியப் பகுதிகளின் பொருளாதார, கலா சார மற்றும் சமூக-அரசியல் வளர்ச்சியை விரைவுபடுத்தும் கொள்கையை மேற்கொண்டது. சோவியத் ஒன்றியத்தின் 50ஆம் ஆண்டு விழாக் கொண்டாட்டக் கூட்டத்தில் சோவி யத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொது செயலாளர் லியனீத் பிரேஷ்னெவ் தமது உரையில் கூறினார்:

''முன்னாள் ஒடுக்கப்பட்ட தேசங்கள், தேசியக் குழுக் களாக இருந்தவற்றுக்கு நாட்டின் மேலதிகமாக முன் னேற்றமடைந்த பகுதிகளும் எல்லாவற்றுக்கும் மேலாக ருஷ்ய மக்களும் அதன் தொழிலாளி வர்க்கமும் மாபெரும் சகலதுறை உதவிகளை வழங்குவது மூலம் மட்டுமே இந்தக் கொள்கையை நடைமுறையில் செயல்படுத்த முடியும் என்பதைக் கட்சி அறிந்திருந்தது.

''இத்தகைய உதவியையும், தேசிய எல்லைப்புறப் பகுதி கள் தமது பின்தங்கிய நிலையைப் போக்கிக் கொண்டு துரித வேகத்தில் வளர்ச்சியடைவதற்கான மாபெரும் முயற்சிகள், அப்பட்டமாகக் கூறினால் தியாகங்கள் செய்ய விருப்பத் தையும் லெனின் ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்துக்குப் பிரதான சர்வதேசக் கடமையாக விட்டுச் சென்றார். ருஷ்யத் தொழிலாளி வர்க்கம், ருஷ்ய மக்கள் இந்தக் கடமையை மதிப்புடன் நிறைவேற்றியுள்ளனர். உண்மை யில், இது ஒரு முழு வர்க்கத்தால், ஒரு முழு மக்களால் சர்வதேசியத்தின் பேரில் ஆற்றப் பெற்ற ஒரு மகத்தான சாதனையாகும். இந்த வீர அருஞ் செயலை எமது நாட்டு

எல்லா மக்களினங்களும் என்றுமே மறக்க மாட்டார்கள்''.[1]

ஓரளவு குறுகிய வரலாற்றுக் கால அளவுக்குள்ளேயே சோவியத் தேசங்கள் பொருளாதாரம், கலாசாரம் ஆகிய இரு துறைகளிலும் வளர்ச்சியடைந்துள்ளன. பல ஒன்றியக் குடியரசுகளும் (இப்போது யாவும் தொழில் வளர்ச்சி பெற்றுள்ளன) முதலாளித்துவ வளர்ச்சியின் வேதனை தரும் கட்டத்தைத் தாண்டிக் கடந்து, வளர்ச்சியடைந்த குடியரசுகளின், குறிப்பாக ருஷ்யாவின் கூட்டரசின், ஆதரவுடன் சோஷலிசத்தைக் கட்டத் தொடங்கின.

தனிப்பட்ட தேசங்கள், தேசியக் குழுக்களுக்கு இடையேயும், தேசியக் குடியரசுகளுக்கு இடையேயும் பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சி மட்டங்களில் இன்னும் மிகப்பெரும் வித்தியாசம் நிலவிய கட்டத்தில், பின்தங்கிய தேசங்கள் மற்றும் தேசியக் குழுக்களுக்கு வளர்ச்சியடைந்த தேசங்கள் தன்னலமற்ற நட்புமுறை உதவிகளை வழங்கின. வெவ்வேறு தேசிய பகுதிகளுக்குத் தமது சொந்த சொற்பமான ஆதாரங்களிலிருந்து பொருளாதார, தொழில் நுட்ப மற்றும் கலாசார உதவிகளைத் தாராளமாக வழங்கியது மூலம் பின்தங்கிய தேசங்கள், தேசியக் குழுக்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ருஷ்ய மக்கள் நிர்ணயமான பங்கு வகித்தார்கள். தமது சர்வதேசக் கடமையினை நிறைவேற்றுவதற்காக உழைப்பாளி மக்கள் பெருந்திரள் தமது சொந்த ஜீவாதாரத் தேவைகளை இவ்வளவு கரூராகக் கட்டுப்படுத்திக் கொண்ட இத்தகைய எடுப்பான உதாரணத்தை வரலாறு கண்டதில்லை.

ஓரளவு வளர்ச்சியுற்ற தொழில் துறையைக் கொண்ட மத்திய ருஷ்யப் பகுதிகளும், உக்ரேனியாவிலுள்ள தொழில் துறைப் பகுதிகளும், காக்கேசிய மற்றும் மத்திய ஆசியக் குடியரசுகளுக்கு நூற்றுக் கணக்கான தொழில் நிறுவனங்களைக் கட்டுவதற்கு உதவின. நாட்டின் மத்தியப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளில் ருஷ்யரல்லாத ஆயிரக் கணக்கான தொழிலாளர்களும், நிபுணர்களும் பயிற்சி அளிக்

---

[1] L. I. Brezhnev, *The Fiftieth Anniversary of the Union of Soviet Socialist Republics*, Moscow, 1972, p. 19.

கப்பட்டனர். பின்னுல் அவர்கள் தமது சொந்தத் தேசியக் குடியரசுகளில் உற்பத்தியை நிர்வாகம் செய்தார்கள்.

ஒன்றியக் குடியரசுகளின் பட்ஜெட்டுகளின் கட்டமைப்புப் பற்றிய புள்ளி விபரங்கள் இந்த விஷயத்தில் மிகவும் முக்கியமானவை. 1924-1925ல் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு தனது பட்ஜெட்டின் 34 சதவீதத்தைத் தனது சொந்தக் குடியரசு வருவாயிலிருந்து நிறைவு செய்தது; உக்ரேனியா 38.4 சதவீதமும், உஸ்பெக்கிஸ்தான் 21 சதவிகிதமும், டிரான்ஸ் காக்கேசிய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு 15.1 சதவிகிதமும், துருக்மேனியா 10.4 சதவிகிதமும் நிறைவு செய்தன. ஆனுல், ஒன்றிய பட்ஜெட்டால் நிறைவு செய்யப்பட்ட குடியரசு பட்ஜெட்டுகளின் பற்ருக்குறை விபரங்களைப் பார்த்தால் இந்தப் பற்ருக்குறை உக்ரேனியாவில் 12.5 சதவிகிதமும், ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசில் 19.7--சதவிகிதமும், உஸ்பெக்கிஸ்தானில் 28.7 சதவிகிதமும், டிரான்ஸ் காக்கேசிய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசில் 37.5 சதவிகிதமும், துருக்மேனியாவில் 62 சதவிகிதமும் இருப்பது தெரியவந்தது.

அகில-ஒன்றிய பட்ஜெட் பிரதானமாயும் அந்த சமயத்தில் அதிக வளர்ச்சியடைந்த குடியரசுகளாக விளங்கிய ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசு மற்றும் உக்ரேனியாவிலிருந்து கிடைத்த வருவாய்களைச் சார்ந்ததாக இருந்தது. எனவே, பெரும்பாலும் பின்தங்கி நின்ற குடியரசுகளின் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் வளர்க்கும் நோக்கத்துடன் செல்வாதாரங்கள் நாடு முழுதிலும் மறுபங்கீடு செய்யப்பட்டன. இது சோவியத் அரசின் நடைமுறையில் வெறும் தனி ஒரு நிகழ்ச்சி அன்று, மாருக இடையருத ஒரு கொள்கையாகும். 1936 ஏப்ரல் 21ஆம் நாள் சோவியத் அரசாங்கம் அங்கீகரித்த தீர்மானம், பின்வரும் நிதிகள் குடியரசு வருவாய்களிலிருந்து ஒன்றியக் குடியரசுகளின் மற்றும் ஸ்தல பட்ஜெட்டுகளுக்கு ஒதுக்கப்படுகிறது என்று கூறியது: ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசில் 15 சதவிகிதம், உக்ரேனியாவில் 21.1 சதவிகிதம், டிரான்ஸ் காக்

கேசியக் குடியரசுகளில் 40.5 சதவிகிதம், துருக்மேனியா வில் 66.7 சதவிகிதம், தாஜிக்கிஸ்தானில் 88.2 சதவிகிதம்.

லித்துவேனியா ஒரு முதலாளித்துவ அரசாக இருந்த பொழுது, ஒரு லித்துவேனியத் தூதுக்குழு சோவியத் ஒன்றியத்திற்கு விஜயம் செய்து அஸர்பைஜான் உள்ளிட்ட சில குடியரசுகளில் சுற்றுப் பயணம் செய்தது. இந்தச் சிறிய குடியரசு (லித்துவேனியாவை விடச் சற்றே பெரியது) பெரிய நிறுவனங்களைக் கட்டவும் மருத்துவமனைகள், கிளப்புகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் போன்றவற்றைப் பராமரிக்கவும் எவ்வாறு நிதி வசதிகளைப் பெறுகிறது என்பதை அறிந்து கொள்வதில் இந்தக் குழுவினர் அக்கறை கொண்டிருந்தார்கள். பெருமளவு நிதி வசதிகளை இக்குடியரசு ஒன்றிய அரசாங்கத்திடமிருந்து பெறுகிறது என்பதை அறிந்து அவர்கள் வியப்படைந்தார்கள். சோவியத் ஒன்றியத்திற்குள் இருப்பது நெருக்கமாக இணைந்த தான ஓர் உழைக்கும் குடும்பத்தில் இருப்பது போல: ஈட்டிய வருவாய் ஒன்றுசேர்க்கப்பட்டு தேவைகளுக்கு ஏற்பப் பங்கீடு செய்யப்படுகிறது.[1]

சோவியத் குடியரசுகள், தேசங்கள், தேசியக் குழுக்களின் பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சியை சமசீராகக் கொண்டுவருவது என்ற திட்டமிட்ட கொள்கை காரணமாக போர் முற்கால ஆண்டுகளிலேயே மாபெரும் வெற்றிகள் அடையப் பெற்றுள்ளன. துவக்க நிலையில் வித்தியாசங்கள் இருந்த போதிலும் சோவியத் மக்கள் இனங்கள் யாவும் நாடு தழுவிய தொழில்மயமாக்கம், விவசாயத்தில் சோஷலிச மாற்றங்கள் மற்றும் கலாசாரப் புரட்சியின் விளைவாக ஒரே சமயத்தில் சோஷலிசத்தைக் கட்டினார்கள்.

அக்டோபர் புரட்சிக்கு முன்னால், மத்திய ஆசியாவிலும் டிரான்ஸ் காக்கேசியாவிலும் சிறிய நிறுவனங்களும் குடிசைத் தொழில்களும் பிரதானமாக இருந்தன. இன்று இந்தப் பகுதிகளில் உலோகத் துறை, இரசாயன, விசை, இயந்திர நிர்மாண மற்றும் இதரத் தொழில்கள் இருக்கின்றன.

---

1 இஸ்வேஸ்தியா, *பிப்ரவரி 28, 1972.*

சோவியத் பல்தேசிய நாட்டின் மக்கள் வழங்கியுள்ள தன்னலமற்ற உதவியின் காரணமாக கஸாகுஸ்தான் நாட்டிலுள்ள ஆக மிகுதியான தொழில் வளர்ச்சியடைந்துள்ள பகுதிகளில் ஒன்ருகி விட்டது. தொழில்துறை உற்பத்தியில் அது ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சி சோஷலிசச் குடியரசுக்கும் உக்ரேனியாவுக்கும் அடுத்தபடி வருகிறது (1913ஆம் ஆண்டைப் போல 132 மடங்கு).

தொழில்துறை வளர்ச்சியில் கஸாகுஸ்தான் துருக்கி, பாகிஸ்தான், இரான் போன்ற நாடுகளை விஞ்சி விட்டது, உயர் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளின் அதே மட்டத்தில் இன்று நிற்கிறது. மின்விசை உற்பத்தியில் கஸாகுஸ்தான் (நபர் விகிதம்) பிரான்ஸ், பெல்ஜியம், ஆஸ்திரியா அல்லது இத்தாலியை விஞ்சி விட்டது. துருக்கி, இரான், இராக்கை விட 10 மடங்கு அதிக மின்சாரத்தை அது உற்பத்தி செய்கிறது.

கஸாகுஸ்தானனது பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் இதர உயர் வளர்ச்சி பெற்ற நாடுகள் உள்ளிட்டு 70 நாடுகளுக்குத் தன் செய்பொருட்களை ஏற்றுமதி செய்கிறது. கடந்த பத்தாண்டுகளில் இந்த ஏற்றுமதிகளின் பரிமாணம் இரு மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. புரட்சிக்கு முன்னல் இது நாடோடி மந்தை மேய்ப்பாளர்களின் பிரதேசமாக இருந்தது. சமையல் சட்டிகள், குதிரைகளுக்கு லாடமடிக்கும் ஆணிகள், விளக்குக்கு மண்ணெண்ணெய் ஆகியவற்றைக்கூட ருஷ்யாவின் மத்தியப் பகுதியிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டி இருந்தது. இன்று அது இரும்பல்லாத உலோகங்கள், யந்திரங்கள், சாதனங்கள், மருந்துப் பொருட்கள், இரசாயன மற்றும் பெட்ரோ-ரசாயனப் பொருட்கள் உள்ளிட்ட 300 வகையான தொழில் துறைப் பண்டங்களை ஏற்றுமதி செய்கிறது.

கஸாகுஸ்தானனது பிரான்ஸ், பின்லந்து டென்மார்க் போன்ற நாடுகள் யாவும் சேர்ந்து உற்பத்தி செய்யும் மின்சாரத்தை விட அதிகமான மின்சாரத்தையும், டென்மார்க், பின்லந்து, சுவிட்சர்லந்து நாடுகளை விட அதிகமான உருக்கையும், பெல்ஜியம், ஸ்பெயின், இத்தாலி நாடுகளைக் காட்டிலும் அதிகமான நிலக்கரியையும், பிரான்ஸ், இத்தாலி இரண்டையும் விட அதிகமான எண்

ணெய்யும் உற்பத்தி செய்கிறது. பிரிட்டனின் அளவுக்கு இரும்புத் தாது உற்பத்தி செய்து இந்தத் துறையில் ஜப்பான், மேற்கு ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியாவை விஞ்சி விட்டது.

உஸ்பெக்கிஸ்தானும் ஒரு காலத்தில் ஜார் ருஷ்யாவின் பின்தங்கிய எல்லைப்புறப் பகுதியாகவே இருந்தது. ஆனால் இப்போது அது ஒரு மிகப்பெரும் ஜவுளி உற்பத்தியாளன் என்பதோடு, துரிதமாக வளர்ந்து வரும் இரசாயனத் தொழிலும், முன்னேற்றமடைந்த பொறியியல் தொழிலும் கொண்டு விளங்குகிறது. இந்தக் குடியரசு மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தும் சேர்ந்து உற்பத்தி செய்வதை விட அதிகமான விவசாய யந்திரங்களை உற்பத்தி செய்கிறது. 1913ல் ருஷ்யப் பேரரசு உற்பத்தி செய்த மின்சக்தி போன்று 7 மடங்குக்கு அதிகமான மின்சாரத்தை இது உற்பத்தி செய்கிறது.

கலாசாரத் துறையிலும் மாபெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1914ல் உஸ்பெக்கிஸ்தானின் துவக்கப் பள்ளிகளில் 11,000 மாணவர்களே இருந்தனர், பொதுக் கல்விப் பள்ளிகளில் 18,000 மாணவர்களே இருந்தனர். இன்று இக்குடியரசில் 30 லட்சம் மாணவர்கள் கொண்ட 9,000 பொதுக் கல்விப் பள்ளிகள் உள்ளன. இதில் இரண்டு பல்கலைக் கழகங்களும், 36 உயர் கல்வி நிலையங்களும், 156 தொழில் நுணுக்கப் பள்ளிகளும் 3,70,000க்கும் அதிகமான மாணவர்களும் உள்ளனர். முழுமையான எழுத்தறியாமையிலிருந்து நவீன நாகரீகத்தை நோக்கி உண்மையிலேயே ஒரு பிரம்மாண்டமான பாய்ச்சல் நடைபெற்றுள்ளது. இவை ஒரு சில உண்மைகளே.

உஸ்பெக்கிஸ்தானுக்கு விஜயம் செய்த பிறகு இந்தியப் பிரமுகரான சேத் தாண்டன் கூறினார்: சோவியத் அரசு நிறுவப்பட்ட பின்னர் உஸ்பெக்கிஸ்தானில் மிகப் பெரும் பணி ஆற்றப்பட்டுள்ளது. அலாவுதீனின் ''அற்புத விளக்கின்'' உதவியைக் கொண்டுங்கூட இத்தகைய முன்னேற்றங்களைச் சாதிப்பது கடினம்.

அக்டோபர் புரட்சிக்கு முன்னால் துருக்மேனியாவில் ஒரு சில கைவினைத் தொழில் பட்டறைகளே இருந்தன. தற்போது அங்கே 400க்கும் அதிகமான பெரிய தொழில்

நிறுவனங்கள் உள்ளன. 1975ல் மோல்தாவியாவின் தொழில் துறை உற்பத்தி புரட்சிக்கு முன்பு இருந்ததை விட 140 மடங்கு அதிகம். அஸர்பைஜானில் எண்ணெய்த் தொழில் அடிப்படையிலேயே மாற்றியமைக்கப்பட்டுள்ளது. எரிவாயு, பொறியியல், இரும்பு இரும்பல்லாத உலோக, இராசயன மற்றும் இதர தொழில்கள் நிறுவப்பட்டுள்ளன. ஜார்ஜியாவில் தேனிரும்பு, உருக்கு, கலப்பு உலோகம், கனப் பொறியியல், யந்திரக் கருவிகள், இரசாயனம், மின்பொறியியல், நுண் கருவி தயாரிப்பு மற்றும் இதர தொழில்கள் நிறுவப் பட்டுள்ளன. லித்துவேனியா, லாத்வியா மற்றும் எஸ்தோனியாவில் தொழில்துறை உற்பத்தி 1940 உடன் ஒப்பிடும் போது 20 மடங்கு அதிகரித்துள்ளது. முதலாளித்துவ அரசாங்கம் ஆட்சியில் இருந்த காலகட்டம் முழுவதிலும், அதாவது 1940 வரை லாத்வியா 1913ஆம் ஆண்டு உற்பத்தி மட்டத்தைக்கூட எட்ட முடியவில்லை. சோவியத் லாத்வியா இன்று தொழில் வளர்ச்சி பெற்ற குடியரசாகும், அதன் செய்பொருட்கள் சோவியத் ஒன்றியத்திலும் இதர நாடுகளிலும் பெருமளவு மதிக்கப்படுகின்றன.

சைபீரியாவிலும் தொலைக் கிழக்கிலுமுள்ள சிறிய தேசியக் குழுக்களின் வாழ்க்கை மிகப் பெருமளவுக்கு மாற்றமடைந்துள்ளது. சோஷலிசம் நிறுவப் பட்டதன் விளைவாகவும் பிரதானமாக ருஷ்யத் தொழிலாளர்களின் உதவியாலும் புரியாத்துகள், யக்கூத்துகள், துவின்கள், ஹக்காசுகள், எவேன்குகள், கர்யாக்குகள், நேனர்கள், சுகசிகள், நீவ்ஹியர்கள், ஹான்துகள் மற்றும் இதர தேசியக் குழுக்கள் பின்தங்கிய நிலையிலிருந்து சமூக முன்னேற்றத்தை நோக்கியும் மற்றும் இயற்கைப் பொருளாதாரத்திலிருந்து பெருவீத உற்பத்திக்கும் ஒரே பாய்ச்சலில் முன்னேறியுள்ளனர். 1922-1923ல் தொலை வடக்கு, மலைப் பிரதேச அல்தாய் மற்றும் ஹக்காசியத் தேசிய வட்டாரங்களில் தொழில்கள் எதுவும் இருக்கவில்லை, புரியாத் மற்றும் யக்கூத் சுயாட்சிக் குடியரசுகளில் எட்டே குடிசைத் தொழில்பட்டறைகள் மட்டும் இருந்தன. இன்று எல்லா சுயாட்சிக் குடியரசுகளும் பிராந்தியங்களும் தொழில் வளம் பெற்ற பகுதிகளாக உள்ளன. நாட்டிலுள்ள பத்து தேசிய மாவட்டங்களில் மட்டுமே நவீன யந்திரங்கள் கொண்ட

200க்கும் அதிகமான பெரிய தொழில்துறை நிறுவனங்கள் உள்ளன.

சோவியத் குடியரசுகளின் தேசியக் கலாசாரம் அவற்றின் பெரும் பொருளாதார சாதனைகளுக்கு இணையாக வளர்ந்து வருகிறது. 1906ல் கஸாகுஸ்தான் மக்கள் தொகையில் 2 சதவிகிதத்தினரே எழுத்தறிந்தவர்களாக இருந்த பொழுது **வெஸ்த்னிக் வஸ்பித்தானியா** (''கல்வித்துறைச் செய்தியேடு'') என்ற சஞ்சிகை இங்கு எழுத்தறிவின்மையை ஒழிக்க 460 ஆண்டுகள் எடுக்கும் என்று கூறியது. ஆனால் சோஷலிச அமைப்பு ஒரு சில பத்தாண்டுகளில் எல்லோரும் எழுத்தறிவு பெறுவதைச் சாத்தியமாக்கியது. புரட்சிக்கு முன்பு கஸாகுஸ்தானில் உயர் கல்வி நிலையம் ஒன்றுகூட இருக்கவில்லை. இன்றோ அங்கு 40 உயர் கல்வி, மேலும் 180 செகண்டரி விசேஷக் கல்வி நிலையங்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 3,50,000 மாணவர்கள் பயில்கின்றனர். இந்தக் குடியரசின் பொருளாதாரத்தில், 1913ல் ஜாராட்சி ருஷ்யாவில் இருந்ததைவிட 2.5 மடங்கு அதிகமான உயர் மற்றும் செகண்டரி கல்வி பெற்ற தனித் தேர்ச்சியாளர்கள் வேலை செய்கிறார்கள்.

உஸ்பெக்கிஸ்தானில் 10,000 மக்களுக்கு 200 மாணவரும்; கிர்கீசியாவில் 150, கஸாகுஸ்தானில் 146, தாஜிக்கிஸ்தானில் 145, துருக்மேனியாவில் 131 பேரும் முறையே உள்ளனர். ஒப்பு நோக்கிப் பார்த்தால் இத்தாலியில் 65, பிரிட்டனில் 63, மேற்கு ஜெர்மனியில் 49, துருக்கியில் 29, பாகிஸ்தானில் 26, இரானில் 14 விழுக்காடு இருத்தல் தெரியும்.

ஒன்றியக் குடியரசுகளில் விஞ்ஞானப் பேரவைகள், ஆராய்ச்சிக் கேந்திரங்கள் உள்ளன. உயர் தேர்ச்சி வாய்ந்த நிபுணர்கள் உள்ளனர். பல்வேறு தேசிய மொழிகளில் புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் வெளியிடப்படுகின்றன. நாடு முழுவதிலும் பரவலாகக் கலாசார மன்றங்கள், நூலகங்கள், பொருட்காட்சி சாலைகள் நிரம்பி உள்ளன. சோவியத் பல்தேசியக் கலையும் இலக்கியமும் உலகு தழுவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

கடந்த ஐந்தாண்டுகளில் இந்தக் குடியரசுகளில் சமூக-கலாசார நடவடிக்கைகளுக்கான செலவு 50 முதல் 100

சதவிகிதம் வரை அதிகரித்துள்ளது. இதன் விளைவாக உண்மையில் ஒவ்வொரு தேசம் மற்றும் தேசியக் குழுவின் மூன்றில் ஒரு பகுதி மாணவர்களாக இருக்கின்றனர். ஏதாவது ஒரு வகையில் தமது வளர்ச்சியில் ஒன்றியத்தின் சராசரி மட்டத்தை இன்னும் எட்டியிராத மக்களினங்களின் கலாசார வளர்ச்சியைப் பிரதானமாயும் விரைவுபடுத்துவதற்கான கொள்கையை சோவியத் ஒன்றிய அரசு இடையறாது பின்பற்றி வருகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் குடியரசு பட்ஜெட்டுகளிலிருந்து செய்யப்படுகின்றன. நாட்டில் ஒட்டுமொத்தமாகப் பொருளாதாரத்திற்கான முதலீடு வழக்கமாக பட்ஜெட்டின் 45 சதவிகிதமாகும், சமூக-கலாசாரத்திற்கான முதலீடு 37.5 சதவிகிதமாகும். ஆனால் மத்திய ஆசியக் குடியரசுகளில் பிந்தியதற்கான முதலீடு முந்தியதற்குரியதை விட மிகவும் அதிகமாகும்.

கடந்த ஐந்தாண்டுத் திட்ட கால கட்டத்தில் குடியரசுகளின் ஆகப் பெரிய பட்ஜெட் முதலீடு பொதுக் கல்விக்கே செய்யப்பட்டது. சோவியத் பள்ளிக்கூடங்கள் 57 தேசிய மொழிகளில் போதனை அளிக்கின்றன. 1974-75ஆம் கல்வி ஆண்டில் உக்ரேனியாவிலுள்ள 30,000 பள்ளிகளில் 25,000 பள்ளிகள் உக்ரேனிய மொழியில் போதனை அளித்தன. மோல்தாவியாவில் 65 சதவிகிதம் பள்ளிகள் அந்தக் குடியரசின் மொழியிலேயே போதனை அளிக்கின்றன.

உயர் கல்வி அல்லது விசேஷ செகண்டரிக் கல்வி பெற்ற தேசிய ஊழியர்களுக்கான தேவை வெகுவாக அதிகரித்துள்ளது. அவர்களது பயிற்சியும் பெருகியுள்ளது. 1970-71 முதல் 1974-75க்கான கல்வி ஆண்டுகளில் உயர் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர் தொகை 60 சதவிகிதம் அதிகரித்தது. அதே காலகட்டத்தில் கஸாகு, மோல்தாவிய, துருக்மேனிய மாணவர் தொகை இரு மடங்காயிற்று; உஸ்பெக்கு, அஸர்பைஜானிய, கிர்கீஸ், தாஜிக் இதர மாணவர் தொகை இரு மடங்குக்கும் அதிகமாயிற்று. உஸ்பெக்கிஸ்தானில் பயிற்சி பெற்ற தனித் தேர்ச்சியாளர் எண்ணிக்கை 1975ல் 1970ம் ஆண்டு அளவை விஞ்சி 20 சதவிகிதம் அதிகரித்தது. இந்தக் குடியரசு பிரிட்டன் மற்றும் மேற்கு ஜெர்மனி இரண்டையும் விட அதிகமான அளவில் உயர் கல்வி மற்றும் செகண்டரி கல்வி மாணவர்

களைத் தனித் தேர்ச்சியாளர்களாகப் பயிற்றுவிக்கிறது.

ஒன்றியக் குடியரசுகளில் பரஸ்பரம் செழுமைப்படுத்துவதன் அடிப்படையில் கலாசாரம் பயன்தரும் முறையில் வளர்க்கப்படுகிறது, இதன் மூலம் தேசியக் கலாசாரங்களில் இருக்கும் ஆற்றல் மிக்க, வாழ்வை வலியுறுத்தும் அரியதான யாவும் சோவியத் மக்கள் அனைவரின் பொது உடைமையாகின்றன.

சோவியத் மக்கள் இனங்கள், உலகக் கலாசாரம் மற்றும் தமது சொந்த தேசியக் கலாசார சாதனைகள் இரண்டிலும் அதிகரித்த அக்கரை கொண்டிருக்கிறார்கள். இதை மொழிபெயர்க்கப்பட்டு வரும் இலக்கியத்தின் அளவிலிருந்து தெளிவாகக் காணலாம். 1975ல் 60 சோவியத் தேசிய மொழிகளிலிருந்தும், 40 பிற நாடுகளின் மொழிகளிலிருந்தும் புத்தகங்களும் பிரசுரங்களும் மொழிபெயர்க்கப்பட்டன. மொத்தம் 4,000க்கும் அதிகமான புத்தகங்கள் (8.5 கோடிப் பிரதிகளுக்கு மேல்) சோவியத் தேசிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. உக்ரேனியாவில், சோவியத் ஆட்சி அதிகாரம் நிறுவப்பட்டதற்குப் பிறகு, 9,000 ருஷ்யப் பேரிலக்கியங்கள் மற்றும் நவீன நூல்கள் (25 கோடி பிரதிகளுக்கு மேல்), பைலோருஷ்ய, ஜார்ஜிய, ஆர்மீனிய இதர எழுத்தாளர்களின் 2,000 நூல்களும் வெளியிடப் பட்டுள்ளன. அதே சமயம் உக்ரேனிய எழுத்தாளர்களின் பல நூல்கள் இதர சோவியத் தேசிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. இது இதர தேசிய இலக்கியங்களுக்கும் பொருந்தும். இவ்வாறாக எஸ்தோனிய எழுத்தாளர்களின் 700 நூல்கள் சோவியத் மக்களின் 37 மொழிகளில் பெயர்க்கப்பட்டு, 8 கோடி பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

சோவியத் குடியரசுகளில் நாடக மன்றங்கள் மற்றும் அமெச்சூர் குழுக்கள் தமது சொந்த மக்களின் வாழ்வு பற்றிய நாடகங்களை மட்டுமன்றி, சோவியத் ஒன்றியத்தின் இதர தேசிய மக்களினங்கள், வெளிநாடுகளைச் சேர்ந்த நாடகாசிரியர்கள், கவிஞர்களின் பேரிலக்கிய மற்றும் சமகால எழுத்தாளர் படைப்புக்களையும் அரங்கேற்றுகின்றன. பொது மக்கள் திரள் அமெச்சூர் குழுக்கள் மற்றும் நாடகத் துறையில் பரந்த அக்கரை காட்டி வருவதால் கலாசாரங்

களை மேலும் நெருக்கமாக இணைத்துக் கொண்டு வருவதற்கு இது ஒரு மிக முக்கியமான சாதனமாகத் திகழ்கிறது.

இருமொழி வழக்கின் வளர்ச்சியும், தேசிய மொழிகள் சுதந்திரமாக அபிவிருத்தியடைவதோடு கூடவே ருஷ்ய மொழியின் சமூகச் செயல்பாட்டின் பெருக்கமும் சோவியத் மக்கள் என்ற ஒரு புதிய வரலாற்று வழி சமூகத்தின் வளர்ச்சியில் ஒரு மிக முக்கியமான போக்காகத் திகழ்கின்றன.

சோவியத் ஒன்றியத்தில் சோவியத் தேசங்கள் மற்றும் தேசியக் குழுக்களின் மொழிகள் சமத்துவம், பரஸ்பரம் செழுமையுறுதல் என்ற அடிப்படையில் சுதந்திரமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. மேலும் மேலும் அதிகமான மக்கள் ருஷ்ய மொழியைப் பயின்று வருகிறார்கள், அது அனைத்து சோவியத் மக்கள் இனங்களிலான அன்றாடத் தொடர்புகளுக்கும் ஒத்துழைப்புக்குமான பொது மொழியாகி விட்டது. இது தேசிய மொழிகளின் பங்கையோ முக்கியத்துவத்தையோ எவ்வகையிலும் குறைக்கவில்லை, மாறாக அவை பரஸ்பரம் செழுமையுற உதவியுள்ளது. சோவியத் மக்கள் இனங்களின் இசைவிணக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு தேசங்களிடையான அன்றாடத் தொடர்புகளுக்கு ஒரு முக்கியமான சாதனம் என்ற முறையில் ருஷ்ய மொழி வளர்ச்சியடைந்து வருவது ஓர் இயல்பான நிகழ்ச்சிப் போக்கேயாகும்.

1970 ஜனவரியில் சோவியத் ஒன்றியத்தில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்குப்படி ருஷ்ய மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ருஷ்யரல்லாதார் தொகை 11ஆண்டுகளில் 1 கோடி 2 லட்சத்திலிருந்து 1 கோடி 30 லட்சமாக அதிகரித்துள்ளது. அதோடு ருஷ்ய மொழி (4 கோடி 19 லட்சம்) அல்லது தமது தாய்மொழி தவிர வேறு இதர மொழி அறிந்தவர்கள் தொகையும் பெருகியுள்ளது. இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு தமது தேசிய இனத்தின் மொழியல்லாது வேறு மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் 10 தேசங்கள், தேசியக் குழுக்களுக்கிடையே மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இருக்கின்றனர் என்ற உண்மையை வெளிப்படுத்தியது.

ஒன்றியக் குடியரசுகளின் பொருளாதார வளர்ச்சியின் துரித விகிதங்கள், அகில-ஒன்றிய உழைப்புப் பிரிவினையிலும் கம்யூனிசத்திற்கான பொருளாயத மற்றும் தொழில் நுட்ப அடித்தளத்தின் கட்டுமானத்திலும் அவற்றின் பங்கை அதிகரித்தன. ருஷ்யாவின் கூட்டரசு மின்விசையின் மொத்த உற்பத்தியில் 60 சதவிகிதத்திற்கும், எண்ணெயில் 80 சதவிகிதம், எரிவாயுவில் 45 சதவிகிதம், நிலக்கரியில் 55 சதவிகிதம், தேனிரும்பில் 49 சதவிகிதம், உருக்கில் 54 சதவிதத்திற்கும் வகை செய்கிறது. 1975ல் உக்ரேனியாவில் தொழில் துறை உற்பத்தி சோவியத் ஒன்றியத்தின் 1940ஆம் ஆண்டு உற்பத்தியைப் போல இருமடங்குக்கு மேலாகும்.

ஒரு குறிப்பிட்ட குடியரசின் பொருளாதார வளர்ச்சியை ஒரு சுதந்திரமான காரணியாக எடுத்து அளவிடும் பொழுது இரு விஷயங்களை மனதிற் கொள்ள வேண்டும். முதலாவதாக, இந்தக் குடியரசின் பொருளாதாரம் நாட்டின் பொருளாதாரத்தில் இரண்டறக் கலந்த ஒன்று என்பது. இரண்டாவதாக, ஒரு குடியரசின் பொருளாதாரத் துறை அல்லது தனி ஒரு நிறுவனத்தைக் கூட வளர்ப்பதில் பல மக்களினங்கள் ஏதாவது ஒரு வழியில் பங்கு பற்றுகின்றன என்பது.

சோவியத் மக்கள் இனங்கள் ஒரே விதமான பொருளாதார வாழ்க்கையையே நடத்துகின்றன, ஏனெனில் அவை ஒரே விதமான லட்சியத்தை, அதாவது கம்யூனிசத்திற்கான பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்படையினை நிறுவுவது என்ற லட்சியத்தைக் கடைப்பிடிக்கின்றன. ஒவ்வொரு குடியரசும் நாட்டின் வளர்ச்சி என்ற பொது நோக்கத்திற்கான தனது பங்குப் பணியை ஆற்றுகிறது, அதோடு தனது சொந்த வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் பெறுகிறது. உக்ரேனியா, இதர குடியரசுகளுக்கு ஆண்டுதோறும் அதன் உருட்டு இரும்பு உருக்கில் 60 சதவிகிதத்தை, நிலக்கரியில் 20 சதவிகிதத்தை, இரும்பு தாது உற்பத்தியில் 30 சதவிகிதத்தை, பெருமளவிலான யந்திரங்கள், ஆலைத் தொகுப்புகள் மற்றும் சாதனங்களை வழங்குகிறது. ஆனால் அது தனக்கு வேண்டிய பெரும்பாலான எண்ணெய்ப் பொருட்கள், வெட்டுமரம், பல்வேறு யந்

திரங்கள் மற்றும் கருவிகளை இதரக் குடியரசுகளிடமிருந்து பெறுகிறது. பைலோருஷ்யா தனது கனி உரங்கள், யந்திரக் கருவிகள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மாற்றிகள், இரசாயன இழை ஆகியவற்றில் 10ல் 9 பங்கையும், அதன் டிராக்டர்கள், லாரிகள், பேரிங்குகளில் முக்கால் பங்கையும் இதரக் குடியரசுகளுக்கு அனுப்பி வைக்கிறது. ஆனால் அது உக்ரேனியாவிடமிருந்து நிலக்கரியையும் உலோகங்களையும், அஸர்பைஜான் மற்றும் தாத்தாரியாவிடமிருந்து எண்ணெய்ப் பொருட்களையும், ருஷ்யாவின் கூட்டரசு மற்றும் பால்டிக் குடியரசுகளிலிருந்து பலவகை யந்திரங்கள், மின்சார சாதனங்களையும், தனக்குத் தேவையான தானியத்தில் 40 சதவீதத்தை ருஷ்யாவின் கூட்டரசு மற்றும் உக்ரேனியாவிடமிருந்தும் பெறுகிறது.

நாட்டின் ஒட்டுமொத்தத் தேவைகளை நிறைவு செய்ய ஒரு குடியரசு பலவகையான உற்பத்திப் பொருட்களை செய்கிறது என்பதைக் காட்ட பல உதாரணங்களை எடுத்துக் கூறலாம்.

தனது சொந்தப் பொருளாதார வளர்ச்சியில் ஒவ்வொரு குடியரசும் ஒன்றியம் முழுவதன் தேவைகளைக் கவனத்தில் கொண்டுள்ளது, குடியரசுக்ளின் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு இத்தகையதாக உள்ளது.

இன்று ஒரு தேசம் தனது உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளாமல், அகில-ஒன்றிய உழைப்புப் பிரிவினையில் தீவிரமாகக் கலந்து கொள்ளாமல் தனது திறமைகளையும் ஆற்றல்களையும் முழுமையாகப் பயன்படுத்த முடியாது. குடியரசுகள், பிரதேசங்கள், பிராந்தியங்களிடையே நேசப் போட்டியும் மற்றும் அனுபவத்தையும் தேர்ச்சி பெற்ற ஊழியர்களையும் பரிமாற்றம் செய்து கொள்வதும் இந்த விஷயத்தில் மாபெரும் முக்கியத்துவமுடையவை. ஒவ்வொரு தேசமும் இதர தேசங்களிடமிருந்து கற்றுக் கொள்ள முடியும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற மார்க்சின் வாசகங்களை சோவியத் எதார்த்தம் ஊர்ஜிதம் செய்கிறது.

தன்னலமற்ற பரஸ்பர உதவி சோவியத் மக்கள் இனங்களிடையே வளர்ந்து வரும் ஒத்துழைப்பின் ஒரு மாற்றவொண்ணு அம்சமாகும். கடுமையான பூகம்பத்தைத் தொடர்ந்து உஸ்பெக்கிஸ்தானுக்கும் தாகெஸ்தானுக்கும்

சோவியத் மக்கள் இனங்கள் உடனடி வழங்கிய நட்புமுறை உதவி இதற்கு விசேஷச் சான்ருகும். சோவியத் குடியரசுகள் 5,000 பள்ளி மாணவர்களுக்கு முழு ஆதரவு கொடுத்துக் கல்வி போதிக்கும் கடமையை ஏற்றுக் கொண்டன. இம் மாணவரில் பலர் மாஸ்கோவுக்கு வந்தார்கள்.

சோஷலிச நிர்மாணத்தின் பொழுது, லெனினது தேசியக் கொள்கையை நிறைவேற்றியதன் விளைவாக, பழைய காலம் சென்று விட்ட தேசிய இனங்களின் உண்மையான சமத்துவ மற்ற நிலை ஒழிக்கப் பெற்றுள்ளது. பல்வேறு தேசங்கள் மற்றும் தேசியக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சி சமன் செய்யப் பெற்றதானது சோஷலிச சமூக அமைப்பின் சமூக-அரசியல் முன்னேற்றத்துக்கு ஒரு பலமான ஊக்குவிப்பை அளித்தது.

இருந்த போதிலும் பொருளாதார சமன்படுத்தல் பிரச்சினை இன்னும் இருக்கிறது. இது எல்லைப்புறப் பகுதிகளின் பொருளாதார மற்றும் கலாசார பின்தங்கிய நிலையை வென்று சமாளிக்கும் பிரச்சினையாக மட்டும் இனி இருக்க முடியாது. இந்த கட்டம் நீண்ட கால முன்பே கடக்கப் பட்டு விட்டது. இன்று இது வெவ்வேறு குடியரசுகளின் பொருளாதார வளர்ச்சியில் இருக்கும் அசமத்துவங்களை மேலும் குறைப்பது பற்றிய விஷயமாகும். காரணம் நாட்டின் பல்வேறு பொருளாதாரப் பகுதிகள் வெவ்வேறு விகிதத்தில் வளர்ச்சியடைகின்றன. அவற்றின் துறைகளிடையான கட்டமைப்பில் மற்றும் மனிதசக்தி ஆதாரங்களில், உழைப்பின் உற்பத்தித் திறனின் மட்டத்தில் வேறுபடுகின்றன.

எல்லா தேசங்கள் மற்றும் தேசியக் குழுக்களின் சமத்துவத்தை உத்தரவாதம் செய்யக் கூடிய, அவற்றின் நலன்களில் அக்கறை கொண்ட, விசேஷமாயும் அதிக துரித விகிதத்தில் வளர்ச்சி பெற வேண்டிய நாட்டின் பகுதிகளைக் கவனத்தில் கொண்ட ஒரு கொள்கையைக் கட்சி தொடர்ந்து பின்பற்றும் என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம் கூறுவது குறிப்பிடத் தக்கது.

பொருளாதார வளர்ச்சி சம்பந்தமாக நாட்டிலுள்ள தனிப்பட்ட பகுதிகள் சமதரத்திற்கு உயர்த்தப்படும்

பொழுது, உயர் வளர்ச்சியடைந்த தொழில்துறையும் குடியரசுகளுக்கிடையிலான துறைவாரித் தனித் தேர்ச்சியும் அதே பொருளாதாரத் துறைகளில் அதே உயர் மட்ட உழைப்பின் உற்பத்தித் திறனையும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியையும் உத்தரவாதம் செய்யும், உழைப்பை யந்திரமயமாக்குவதை சமன்படுத்த உதவும், உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்தும்.

புதிய தொழில்துறை மையங்கள் நிறுவப் பெற்றதும், இயற்கை மூலவளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப் பெற்றதும், புதிய நிலம் பயிர் செய்யப் பெற்றதும். போக்குவரத்து சாதனங்கள் மேம்படுத்தப் பெற்றதும் நாட்டு மக்களின் இடமாற்றத்திற்கான வாய்ப்புகளை பெருக்கி, சோவியத் மக்களினங்களிடையே மேலும் நெருக்கமான தொடர்புகளை ஊக்குவித்தன, சோஷலிசத் தேசங்களை மேலும் நெருக்கமாகக் கொண்டுவந்து அவற்றின் ஒரு சீரான சமூகத் தன்மையை அதிகரித்தன.

தேசங்களிடையே வளர்ந்து வரும் தொடர்புகளும் அவற்றின் மேலதிகமான இசைவிணக்கமும் எதார்த்தத்தில் சோவியத் குடியரசுகளின் மக்களை மேலும் பல்தேசியத் தன்மை பெறச் செய்கின்றன. சோவியத் ஒன்றியத்தில் ஒன்றியக் குடியரசுகளுக்கு இடையிலான எல்லைகள் அவற்றின் முந்தைய முக்கியத்துவத்தை இழந்து வருகின்றன. பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த சோவியத் மக்கள், புது வகையான சமூக உறவுகளால் தோற்றுவிக்கப் பெற்று, சோவியத் தேசிய இனங்களினுடைய ஆக சிறந்த மரபுகளை உருவகப்படுத்துகின்ற பொதுவான கண்ணோட்டத்தினைக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் வாழ்க்கையிலுள்ள தேசிய அம்சத்தின் சாரம், பாத்திரம் மற்றும் முக்கியத்துவம் பற்றியதான சரியானு மதிப்பீடு, சோஷலிசத்தில் இருந்து கம்யூனிசத்திற்கான மாற்றம் செய்யப்பட்டு வரும் இன்று தேசிய உறவுகளுக்கு மாபெரும் முக்கியத்துவமுடையதாகும். தேசிய அம்சத்தின் பால் ஒரு சூன்யவாதப் போக்கை மேற்கொள்வதையும், அதை மிகைப்படுத்துவதையும் கம்யூனிஸ்டுக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

கட்சியானது, சாத்தியமான சகல வழிகளிலும் தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்து, எல்லாத் தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்களை அவர்களது பொருளாதாரம், கலாசாரம் மற்றும் தேசிய அரசுத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஒன்றுதிரட்டியது. அதே சமயம் அது தேசியத்திற்கும் சர்வதேசியத்திற்கும் இடையிலான உறவுகளை ஒரே படிமையாக வழிநடத்தியது, அதோடு தேசங்களும் தேசியக் குழுக்களும் கம்யூனிச லட்சியத்திற்கு மேலதிகமான பங்குப் பணி ஆற்றவும் உதவியது.

கம்யூனிச நிர்மாணத்தின் பொழுது எழும் தேசிய உறவுகள் பற்றிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் மற்றும் லெனினது தேசியக் கொள்கையின் அடிப்படையில் கட்சி தீர்வு காண்கிறது.

சோஷலிசம் ''மனித சமுதாயத்தின் புதிய மற்றும் மேன்மையான வடிவங்களைப் படைக்கிறது; இதன் கீழ் முதல் தடவையாக, நிலவும் தேசியத் தடைவேலிகள்'' (தனி உடமையால் நிறுவப் பெற்றவை—ஷெவ்த்சோவ்) ''அகற்றப்படும் பட்சத்தில், ஒவ்வொரு தேசிய இனத்தின் உழைக்கும் வெகுஜனங்களின் நியாயமான தேவைகளும் முற்போக்கான நாட்டங்களும் சர்வதேசிய ஒற்றுமை மூலம் நிறைவு செய்யப்படும்''[1] என்று லெனின் கூறியது சரியே. சோவியத் மக்கள் இனங்களை வளர்த்து அவர்களை நெருக்கமாக ஒன்றிணைத்துக் கொண்டு வருவதில் சோவியத் ஒன்றியத்தின் லெனினது கம்யூனிஸ்டுக் கட்சி பெற்ற அனுபவம் மனித குலம் சர்வதேசிய ஒற்றுமையை நோக்கி முன்னேறுவதற்குத் தலையாய முக்கியத்துவமுள்ளது.

சோவியத் கூட்டரசை, ருஷ்யாவின் பல்வேறு தேசிய இனங்களை தனி ஒரு ஜனநாயக மற்றும் மத்தியத்துவப் படுத்தப் பெற்ற சோவியத் அரசுக்குள் ஒருங்கிணைப்பதை நோக்கியதான ஒரு மிக முக்கியமான நடவடிக்கை என்று லெனின் கருதினார். கம்யூனிச அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கு லெனின் தயாரித்த தேசிய மற்றும் காலனிப்

---

[1] வி.இ. லெனின், ''சோஷலிச அகிலத்தின் நிலை மற்றும் கடமைகள்'' (V.I. Lenin, *Collected Works*, Vol. 21, pp. 38-39).

பிரச்சினை பற்றிய குறிப்புரையில் தனியொரு மத்தியத்துவப்படுத்தப் பெற்ற அரசு பற்றிய கருத்து தெளிவாக வரையறுக்கப் பெற்றுள்ளது. அவர் கூறினார்: ''முழு ஒற்றுமைக்கான ஓர் இடைக் கால மாறுதல் வடிவமே கூட்டரசு என்பதை உணர்ந்து மேலும் நெருக்கமான கூட்டரசு ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டுவது அவசியம்''[1].

இவ்வாறாக இந்தக் கருத்தமைப்பு சோவியத் கூட்டரசை முன்னனுமானிக்கிறது, காரணம், முழுமையான தேசிய ஒற்றுமையை சோஷலிசக் கூட்டரசு மூலம் மற்றும் அதன் கட்டமைப்பில் மட்டுமே அடைய முடியும். முழுமையான தேசிய ஒற்றுமை நிலவும் கம்யூனிச சமூக அமைப்பில் மட்டுமே கூட்டரசு தேவையற்று மிகையானதாகி விடும்.

தனி ஒன்றிய அரசான சோவியத் ஒன்றியத்தை நிறுவுவதிலும் மற்றும் வளர்ப்பதிலும் பெறும் அனுபவம் வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. இந்த அனுபவம், சோவியத் ஒன்றியம் நிறுவப்பட்ட முன் (1917-1922) சோவியத் குடியரசுகளுக்கிடையிலான அரசாங்க உறவுகளில் முதன்முதலாக உருவகம் பெற்றது. ஒரே ஒன்றிய அரசான சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் உருவாகி வளர்ச்சியடைவதால் அது மேலும் செழுமை பெற்றுள்ளது. கம்யூனிஸ்டுக் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் முதல் தடவையாகத் தொழிலாளி வர்க்கம் சர்வதேசிய அரசுக் கொள்கையின் கோட்பாடுகளைச் செயலாக்கத் தொடங்கியது; இது சுரண்டும் வர்க்கங்களும் அவர்களது அரசுகளும் பின்பற்றி வரும் கொள்கைக்கு எதிர்நிலையானது. தேசிய ஒடுக்குமுறை, தேசங்கள் ஒன்றுக்கொன்று தனிமைப்படுத்தப்படல், பரஸ்பர அவநம்பிக்கை மற்றும் பகைமை அகற்றப்பட்டு உண்மையான சமத்துவம் மற்றும் பரஸ்பர மதிப்பளிக்கும் உறவுகள் நிலைநாட்டப்பெற்றன.

---

[1] V.I. Lenin, *Collected Works*, Vol. 31, p. 147.

அத்தியாயம் 9

# அரசுரிமையும் சோஷலிச நாடுகளின் இடையிலான உறவுகளில் சோஷலிச சர்வதேசியக் கோட்பாடும்

ஒரு சமுதாய அமைப்பு என்ற முறையில் சோஷலிசம் இடைத்தொடர்புடைய மூன்று உள்ளடக்கக் கூறுகளைக் கொண்டதாக இருக்கிறது: (1) தனிப்பட்ட நாடுகளில் சோஷலிச நிர்மாணம், (2) சோதர சோஷலிச நாடுகளிடையிலான உறவுகளின் செயற்களம், (3) அரசுரிமையுள்ள சோஷலிச நாடுகளின் ஒரு பொருளாதார மற்றும் சமூக-அரசியல் ஒற்றுமை என்ற முறையில் சோஷலிசக் குடும்பம். சோஷலிச அமைப்பின் இந்த அடிப்படை அம்சங்கள் சோஷலிச நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மற்றும் அரசாங்கங்கள் புரிந்து வரும் செயல்பாடுகளில் உருவகம் பெற்றுள்ளன, மேலும் இந்த நாடுகளின் அரசுரிமை வெளியீடாகி வரும் பிரதானத் துறைகளையும் நிர்ணயம் செய்கின்றன. இந்தத் துறைகள் ஒவ்வொன்றுக்கும் தமக்கே உரிய சிறப்புக்கூறுகள் உள்ளன, ஆனால் அவை யாவும் அதே கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றுள் ஆகமுக்கியமானது சோஷலிச சர்வதேசியக் கோட்பாடு. சர்வதேசியம் முன் எப்பொழுதும் இருந்தது போலவே உலகக் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் இயக்கத்தின் அடித்தளமாக தொடர்ந்து நிலைத்திருக்கிறது.

பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியின் பின்னால் அனைத்து மக்களின் ஆட்சியின் சமூக-வர்க்க சாரம், மார்க்சிய-லெனினிய சித்தாந்தம், சோஷலிச மற்றும் கம்யூனிச நிர்மாணத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பாத்திரம் ஆகியவை சோஷலிச சர்வதேசியத்தின் முக்கியத்துவத்தை நிர்ணயம் செய்கின்றன. சோஷலிச சர்வதேசியமும், சோஷலிச அரசின் கொள்கையும் சட்டமுறை விதிகளும் நலன்களைப்

பரஸ்பரம் மூழ்கடிக்காமலும் அவற்றுடன் மோதாமலும் இருக்கும் வகையில் தேசிய நலன்களை அனைத்து மக்களின் நலன்களுடன் ஒன்று சேர்க்கின்றன. இது, சோஷலிச சர்வ தேசியக் கோட்பாடு, அரசுரிமையையும் தேசிய சர்வசு தந்திரத்தையும் முழுமையாக உருவகப்படுத்துகிறது என் பதைக் காட்டுகிறது.

சோஷலிச நாடுகளுக்கு இடையிலான கூட்டுறவுத் தொடர்பின் கோட்பாடு என்ற முறையில் சர்வதேசியம் நிலைநாட்டப் பெற்றதானது மிகவும் நிறைவான எதார்த்த நடைமுறையாகும். இந்தக் கோட்பாடு உலகளாவிய முத லாளித்துவத்தின் வீழ்ச்சியையும் சோஷலிசத்திற்கான மாற் றத்தையும் கண்டு வரும் இன்றைய சகாப்தத்தின் நியதி களால் தோற்றுவிக்கப்பட்டது. பல ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் வெற்றியடைந்து சோஷலிச உற்பத்தி உறவுகள் அங்கு நிறுவப்பட்ட பொ ழுது இந்த நாடுகளின் மக்களினங்களுக்கும் அரசுகளுக்கும் இடையிலான பகைமை முரண்பாடுகளுக்கான காரணங்கள் அகற்றப்பட்டன.

பல ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளில் சோஷலி சம் நிறுவப் பெற்றதன் விளைவாக எழுந்த உலக சோஷலிச அமைப்பு சர்வதேசிய ஒருமைப்பாட்டின் குழந்தை, மற் றும் உலகத் தொழிலாளி வர்க்கம் அடைந்த ஆக முக்கிய மான வெற்றியுமாகும். தோற்றத்திலேயே சர்வதேசியத் தன்மை வாய்ந்ததாக இருந்த அது இயல்பாகவே ஆழ்ந்த சர்வதேசியத் தன்மை கொண்டதாக இருக்கிறது, கார ணம், அது சோஷலிசப் பொருளாதார, கலாசார மற்றும் சமூக-அரசியல் வளர்ச்சியின் பொது விதிகளுக்கு ஏற்ப வளர்ந்து வரும் சர்வசுதந்திர அரசுகளின் அமைப்பாகும், அதோடு உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கு முழுவதன் மீதும் மிகவும் வலுவான செல்வாக்குச் செலுத்தி வருவ துமாகும். சோஷலிசத்தின் எதிர்காலம், சோஷலிச வெற்றி களைக் கெட்டிப்படுத்தல், ஒவ்வொரு சோஷலிச நாட்டிலும் உலக சோஷலிசக் கூட்டமைப்பிலும் மகத்தான சாதனைகளை உத்தரவாதம் செய்தல் ஆகியவற்றுக்கு சோஷலிச அரசுகள் உலக உழைப்பாளி மக்களுக்குப் பொறுப்பாளிகளாகும். பரஸ்பர நட்புமுறை உதவி மற்றும் சோதர ஒத்துழைப்பு

என்ற சோஷலிச நாடுகளின் இடையிலான உறவுகளுக்கு அடிப்படையாக உள்ள கோட்பாடுகளின் காரணமாகவும் இந்த அமைப்பு சர்வதேசியத் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டம் கூறுவதாவது: ''உலக சோஷலிச அமைப்பு நாடுகளிடையான **பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளின் ஒரு புது வகையே.** சோஷலிச நாடுகளுக்கு ஒரே மாதிரியான பொருளாதார அடிப்படை — உற்பத்தி சாதனங்களின் சமூக உடைமையும்; ஒரே மாதிரியான அரசியல் அமைப்பு—தொழிலாளி வர்க்கத் தலைமை கொண்ட மக்கள் ஆட்சியும்; ஒரு பொதுவான சித்தாந்தம்—மார்க்சிய-லெனினியம்; தமது புரட்சிகர சாதனைகளையும் மற்றும் தேசிய சுதந்திரத்தையும் ஏகாதிபத்திய முகாமின் அத்துமீறல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொதுவான நலன்களும்; மகத்தான பொது லட்சியம்—கம்யூனிசம்—ஆகியவை உள்ளன. இந்த சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பொது ஒற்றுமை, சோஷலிச முகாமுக்குள் அரசுகளுக்கிடையிலான நிலையான நட்புமுறை உறவுகளுக்கு எதார்த்தமான அடித்தளமாக விளங்குகிறது. சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளிடையான உறவுகளில் நிலவும் தனிச்சிறப்புடைய அம்சங்கள் பூரண சமத்துவம், சுதந்திரம், அரசுரிமைக்குப் பரஸ்பர மதிப்பு, சோதர பரஸ்பர உதவி மற்றும் ஒத்துழைப்பு ஆகியவையே''[1].

சோஷலிச சர்வதேசியம் ஒரு அரசியல் கோட்பாடாக நிலவும் அதே பொழுதில் சர்வதேச சட்டமுறைக் கோட்பாடாகவும் ஆகிவிட்டது, சோஷலிச நாடுகளிடையான உறவுகள் இதை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன, சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பல முக்கியமான தஸ்தாவேஜுகளில் இது வலுப்படுத்தப் பெற்றுள்ளது. 1969 ஜூன் மாதம் நடைபெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாட்டில் அங்கீகரிக்கப் பெற்ற பிரதான தஸ்தாவேஜு கூறுவதாவது: ''புது மாதிரியான சர்வதேச உறவுகளை நிறுவுவதும், சோஷலிச நாடுகளின்

[1] *The Road to Communism*, Moscow, 1961, pp. 465-66.

சோதரக் கூட்டணியை வளர்ப்பதும் ஒரு பன்முகமான வரலாற்று நிகழ்ச்சிப் போக்காகும். பல நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் வெற்றி ஈட்டியதைத் தொடர்ந்து பொது விதிகளின் அடிப்படையில் சோஷலிசத்தைக் கட்டுவது பல்வேறு வடிவங்களில் நடைபெற்று வருகிறது, இது ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளையும் தேசியத் தனித் தன்மைகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. இந்த நிகழ்ச்சிப்போக்கு வெற்றிகரமாக வளர்ச்சி பெற பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளைக் கறாராகப் பின்பற்றுதல், பரஸ்பர உதவியும், ஆதரவும், சமத்துவம், அரசுரிமை, ஒருவர் மற்றவரின் உள்விவகாரங்களில் தலையிடாமை ஆகிய அனைத்தும் அவசியம்''[1].

சோஷலிச சர்வதேசியக் கோட்பாடு, சோஷலிச நாடுகளிடையே ஏற்பட்ட பல உடன்படிக்கைகளில் சட்டமுறையில் இணைத்துக் கொள்ளப்பட்டது. சோஷலிச சர்வதேசியம் அரசுரிமையை மற்றும் ஒரு சோஷலிச அரசின் சர்வசுதந்திர தனி உயர் உரிமையை மதிக்க வேண்டும் என்று கோருவதை இந்த தஸ்தாவேஜுகள் காட்டுகின்றன.

சோஷலிச ஆட்சி அதிகாரத்தின் சாரத்தின் வெளியீடு என்ற முறையில், சோஷலிச நாடுகளின் அரசுரிமை சோஷலிச சர்வதேசியத்தில் இரண்டறக் கலந்துவிட்ட பகுதியாகும். சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகள் தேசியப் பிரச்சினையில் மார்க்சிய-லெனினிய போதனையை, லெனினது கோட்பாடான தேசிய சுயநிர்ணய உரிமை மற்றும் தேசிய சர்வசுதந்திரம் பற்றிய தத்துவத்தைச் செயல்படுத்துகின்றன.

உலக சோஷலிசக் கூட்டமைப்பில் தேசங்களின் அரசுரிமை, சாரத்தில் சர்வதேசியத் தன்மை கொண்ட அரசியல், பொருளாதார மற்றும் சித்தாந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் வளர்ந்து நிலையான உருப்பெறுகிறது. சோஷலிச அரசுகள் மற்றும் தேசங்களின் இடையி

---

[1] *International Meeting of Communist and Workers' Parties, Moscow, 1969*, [''கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு, மாஸ்கோ 1969''], Prague, 1969, p. 23.

லான உறவுகளில் அரசுரிமையானது தேசியத் தனிப் போக்கு, தேசியத் தனிவுரிமை அல்லது தன்முனைப்பு என்ற அடிப்படையில் இன்றி, நட்புறவு, சோதர ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி மற்றும் ஒற்றுமையின் அடிப்படையில் வளர்ச்சியடைகிறது. சோஷலிச தேசிய அரசுகளின் பரிபூர்ணமான வளர்ச்சி மற்றும் சர்வசுதந்திர சோஷலிச நாடுகளிடையே சர்வதேச உறவுகள் விரிவடைந்து கெட்டிப்படுதல் என்ற இசைந்து செயல்படும் இரண்டு வரலாற்றுப் போக்குகளின் அடிப்படையில் தேசங்கள் விரிவான கூட்டமைப்புகளாக ஒன்றுசேர்ந்து இறுதியில் இரண்டறக் கலந்து விடும். இந்த இரண்டு அடிப்படைப் போக்குகளின் இடைத்தொடர்பும் மற்றும் இயக்கவியல் ஒற்றுமையும் சோஷலிச ஆட்சி அதிகாரத்தின் சர்வதேசியத் தன்மையில் வேரூன்றியுள்ளன, மேலும் சோஷலிச நாடுகளின் பிரதானச் செயல்களில், குறிப்பாகவும் அவற்றின் அயல்துறைக் கொள்கை நடவடிக்கைகளில் உருவகம் பெற்றுள்ளன.

சோஷலிச அரசின் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் சமகாலத்திய சர்வதேசச் சட்டத்தின் வடிவம் மற்றும் எதார்த்த உள்ளடக்கத்திற்கு முற்றிலும் பொருந்தியதாக உள்ளது என்றும், இது அதன் உள்ளடக்கத்திலும் வரலாற்றுப் பாத்திரத்திலும் மேலும் குணும்சரீதியான மாற்றங்களை உண்டாக்க உதவும் என்றும் எஃப். கஷேவ்னிக்கவ் மற்றும் இ. பிளீஷ்சென்கோ (பிரபல சோவியத் சர்வதேச சட்டநிபுணர்கள்) தமது நூல்களில் எழுதியுள்ளனர். சமுதாய முன்னேற்றத்தின் வெளியீடு என்ற முறையில் சமகால சர்வதேசச் சட்டத்திற்கும் இந்த முன்னேற்றத்தின் திசைவழியை நிர்ணயிக்கும் சோஷலிச அரசுகளின் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் இடையே முரண்பாடு நிலவ முடியாது. சோவியத் அரசு, இதர சோஷலிச அரசுகளுடன் ஒன்றுசேர்ந்து மக்களினங்களிடையே சமாதானம் நட்புறவு என்ற மாபெரும் லட்சியங்களை மனித குலத்தின் சமூக முன்னேற்றத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் நாடுகளிடையான உறவுகளை ஆளுமை செய்யும் நியதிகளாக்கத் தனது சக்தியாலான சகலத்தையும் தொடர்ந்து செய்து வருகிறது. சோஷலிச நாடுகள் முன்வைத்த பல

யோசனைகள் சமகால சர்வதேசச் சட்டத்தின் பொதுக் கோட்பாடுகளிலும் மற்றும் தனி நியதிகளிலும் உருவகம் பெற்றுள்ளன.

சோஷலிச நாடுகளின் தேசிய மற்றும் சர்வதேசிய நலன்களை ஒத்திசைவாக இணைப்பதற்கான முன்தேவைகளை சோஷலிச அமைப்பு உருவாக்குகிறது. லெனினது கருத்துப் படி தேசிய அம்சத்துக்கும் சர்வதேசிய அம்சத்துக்கும் இடையிலான தொடர்பின் மிக முக்கியமான கோட்பாடுகளில் ஒன்று ''பல்வேறு தேசங்களின் நலன்கள் பற்றி விசேஷ கவனம் செலுத்தலாகும்''[1].

எந்த ஒரு சோஷலிச நாட்டின் தேசிய நலன்களும் முரணின்றி எய்தப் பெறும் என்பது உத்தரவாதம் செய்யப் படும் பொழுது மட்டுமே சோஷலிச நாடுகள் வலுவான சர்வதேசிய ஒற்றுமையை அனுபவிக்க முடியும். ஒவ்வொரு சோஷலிச நாடும் தனது கொள்கையையும் திட்டங்களையும் விரித்துரைத்து நிறைவேற்றும் பொழுது சோஷலிச மற்றும் கம்யூனிச லட்சியங்களுக்கான போராட்டத்தின் பொது நோக்கங்களுக்கு அவை எந்த அளவுக்கு ஒத்திருக்கின்றன என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். சோஷலிச நாடுகளின் இடையிலான உறவுகளில் சர்வதேசியத்தின் இயக்கவியல் தன்மை, சோஷலிச நாடுகளின் மக்களது தேசிய நலன்கள், அவர்களது சர்வதேசிய நலன்கள் இடையறுது எய்தப் பெறும் பொழுதே ஆக முழுமையாக வெளியீடாகிறது. தேசிய மற்றும் சர்வதேசிய அம்சங்கள் இடைத் தொடர்புடையவை, ஒன்றை ஒன்று சார்ந்து நிற் பவை.

தேசிய அரசுரிமையின் கோட்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் தேசங்கள் இதர தேசங்களை ஒடுக்கக் கூடாது என்றும் லெனின் வற்புறுத்தினர். தேசியப் பிரி வுணர்வு, தேசியவாதம், ஒரு தேசிய இனம் தன்னையும் தன் தொழிலாளி வர்க்கத்தையும் சுற்றிச் சீனச் சுவர் எழுப்பும் விருப்பம் போன்ற போக்குகளை எதிர்த்து அவர்

---

[1] வி. இ. லெனின், "*Observer* ஏட்டின் நிருபருடன் பேட்டி'' (V.I. Lenin, "*Collected Works*, Vol. 20, p. 23).

எச்சரித்தார்[1]. தேசியவாதம் அதன் இயல்பு காரணமாக உழைக்கும் மக்களின் சர்வதேச ஒருமைப்பாட்டுக்குப் புறம்பானது, எதிரானது. இது சோஷலிசக் கூட்டமைப்புக்கும், தேசியவாதப் போக்குகளை முறியடிக்கப் போதிய நடவடிக்கைகள் எடுக்கத் தவறும் ஒரு நாட்டின் நலன்களுக்கும் பெருந்தீங்கு விளைக்கும். உலக சோஷலிச அமைப்பின் வளர்ச்சியைக் கம்யூனிசத்தை நோக்கி நெறிப்படுத்திச் செல்லும் பொது லட்சியத்திற்கு ஒவ்வொரு நாடும் உரிய பங்குப்பணி ஆற்ற வேண்டும் என்று சோஷலிச சர்வ தேசியம் கோருகிறது. தேசியப் பிரிவுணர்வு, சுயநலம், புல்லுருவிப் போக்குகள் யாவும் சோஷலிச சர்வதேசியக் கோட்பாட்டுக்குப் புறம்பானவை.

முதலாளித்துவத்திலிருந்து வெளியேறும் நாடுகளின் ஆகநெருக்கமான கூட்டணி அவசியம் என்பதையும் சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தைக் கட்டுவதற்கான தமது முயற்சிகளை ஒன்றுபடுத்த வேண்டும் என்றும் உலக சோஷலிச அமைப்பின் அனுபவம் உறுதிப்படுத்தியுள்ளது. தன்னந்தனியாகவும் சோஷலிச நாடுகளின் உலகக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்தும் சோஷலிச நிர்மாணம் நடத்தலாம் என்ற கொள்கை தத்துவார்த்த முறையில் ஆதாரமற்றதாக இருக்கிறது, ஏனெனில் இது சோஷலிச சமூக அமைப்பின் வளர்ச்சியை ஆளுமை செய்யும் எதார்த்த விதிகளுக்கு முரணாக உள்ளது. பொருளாதார முறையில் இது தீங்கானது; காரணம், இது சமூக உழைப்பை வீணாக்கி உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தைத் தடை செய்கிறது, நாடு முதலாளித்துவ உலகினைச் சார்ந்து நிற்கும்படி செய்கிறது. அரசியல் முறையில் இது பிற்போக்கானது அபாயகரமானது; காரணம், ஏகாதிபத்திய சக்திகளின் ஐக்கிய முன்னணியின் எதிரில் இது மக்கள் இனங்களை ஒன்றுசேர்க்கவில்லை, மாறாகப் பிளவுறுத்துகிறது, முதலாளித்துவ-தேசியவாதப் போக்குகளை வளர்த்து வரும் இது இறுதியில் சோஷலிச சாதனைகளை இழப்பதில் கொண்டு போய் விடலாம்.

---

[1] வி. இ. லெனின், ''பூந்து தேசியவாதத்தின் கடைசிச் சொல்'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 6, pp. 520-21.)

சோஷலிச சர்வதேசியத்தின் கோட்பாடு தேசிய மற்றும் பொதுவான நலன்கள் ஒத்திசைவாக இணைவதையும் தேசியவாதத்தின் மீதமிச்சங்கள் ஒழிக்கப்படுவதையும் கோருகிறது. தேசிய நலன்களை மிகைப்படுத்துவதிலும், பொது அம்சங்களைவிட தேசியத் தனி அம்சங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதிலும், பரஸ்பரம் அங்கீகரிக்கப் பெற்ற கோட்பாடுகளைக் கடைப்பிடிக்காமல் இருப்பதிலும் தேசியவாதத்தின் இந்த மீதமிச்சங்கள் வெளியீடாகின்றன. தேசியவாதம் தோன்றுவதற்கான காரணங்கள் எதுவாக இருந்த போதிலும், அது தொகுக்கப்பட்டுள்ள சொல்லடுக்குகள் எத்தனை ''மிகைப்பட்ட புரட்சிகரமானதாக'' இருப்பினும் சரி, இது இறுதியாக சோஷலிச நாடுகளின் ஒற்றுமையின் அடிப்படையைக் குலைப்பதற்காகவே ஏகாதிபத்தியவாதிகளால் பயன்படுத்தப்படுகிறது என்பதை புரட்சிகரமான சோஷலிச நிர்மாணத்தில் பெற்ற செழுமையான அனுபவம் காட்டுகிறது. சோஷலிசம் ஒரு ச்ர்வதேச சக்தியாகி வரும் நிலையில் ஆழவேரோடியுள்ள குட்டிமுதலாளித்துவத் தேசியவாதத் தப்பெண்ணங்களை எதிர்த்துப் போராடுவது இன்றியமையாதது.

சோஷலிச நாடுகளின் தேசிய மற்றும் சர்வதேசியக் கடமைகளும் நலன்களும் சரியாக இணைக்கப்படும் பொழுது உலக சோஷலிச அமைப்பு வெற்றிகரமாக வளர்ச்சியடைய முடியும். தேசியக் கடமைகளுக்குத் தீர்வு காண்பதற்கான போராட்டத்திற்குப் புறம்பாகவோ, அல்லது ஒவ்வொரு நாட்டின் உழைக்கும் வெகுஜனங்களின் ஜீவாதார நலன்களைப் புறக்கணித்தோ, சர்வதேசியக் கடமைகளை நிறைவேற்ற முடியாது. அதே சமயம் பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் எல்லாப் பிரிவுகளும் செயலூக்கத்தோடு கலந்து கொள்ளாமல் தேசியக் கடமைகளை நிறைவேற்ற முடியாது.

கூட்டுச் செயல்பாட்டின் பொதுவான வடிவங்களையும் மற்றும் முறைகளையும் விரித்துரைக்கும் போது, லெனின், தேசிய அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தினர். அவர் கூறினர்: ''தேசிய சமுதாயங்களிடையிலும் நாடுகளிடையிலும் தேசிய, அரசு வேற்றுமைகள் இருக்கும் வரை—இவை நீண்ட நெடுங்

காலத்துக்கு, அனைத்துலக அளவில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் நிலைநாட்டப் பெற்ற பிறகுகூட தொடர்ந்து இருக்கவே செய்யும்—எல்லா நாடுகளின் கம்யூனிஸ்டுத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேச நடைமுறை உத்திகளின் ஒற்றுமைக்குத் தேவைப்படுவது இதன் பல்வேறு வகைகளை நீக்குவதோ, தேசிய வேறுபாடுகளை ஒழிப்பதோ அல்ல (தற்போது இது ஒரு பகற்கனவே ஆகும்), கம்யூனிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை (சோவியத் ஆட்சியதிகாரம், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்) செயல்படுத்தப்படுவதேதான்—தேசிய வேறுபாடுகளுக்கும், தேசிய அரசு வேறுபாடுகளுக்கும் ஏற்ப சிற்சில விவரங்களில் இந்த அடிப்படைக் கோட்பாடுகள் பிழையின்றி உருமாற்றப்பட்டுச் சரிவரப் பொருத்தமாக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்''[1].

சோஷலிசக் கூட்டமைப்பில் இருக்கும் ஒவ்வொரு தேசமும் சமத்துவமும் சுதந்திரமும் அனுபவிக்கிறது. பூரண சமத்துவம், பரஸ்பர நலன் மற்றும் தோழமை பூர்வமான பரஸ்பர உதவி என்ற கோட்பாடுகளால் வழி நடத்தப்படும் சோஷலிச நாடுகள் சாத்தியமான எல்லா வழிகளிலும் பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்த விழைகின்றன. இது ஒவ்வொரு சோஷலிச நாட்டின் மக்களின் நலன்களுக்கும் ஒட்டுமொத்தமாக சோஷலிசக் கூட்டமைப்பின் நலன்களுக்கும் உகந்ததாகும்.

உலக சோஷலிச அமைப்பின் வலிமை ஒற்றுமையை அடிப்படையாகக் கொள்கிறது. சோஷலிச நாடுகளிடையே இந்த ஒற்றுமை இருப்பதால் அவற்றின் நலன்கள் முற்றிலும் ஒன்றே என்று அர்த்தமல்ல. அவை ஒரே விதமான ஜீவாதாரமான சர்வதேச நலன்களை உடையனவாயினும் எப்போதும் ஒரே விதமான தேசிய நலன்களைக் கொண்டிருப்பது இல்லை. இதற்கு ஒரு முக்கியமான காரணம் பொருளாதார மற்றும் சமூக-அரசியல் வளர்ச்சி மட்டங்களிலும்

---

1 வி. இ. லெனின், ''இடதுசாரி'' கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு, மாஸ்கோ, 1977, பக்கம் 123.

தேசிய மற்றும் வரலாற்று தனித் தன்மைகளிலுமான வித்தியாசமாகும்.

தம்மிடையேயான உறவுகளை நிலைநாட்டிக் கொள்வதில் சோஷலிச நாடுகளுக்கு சார்ந்து நிற்பதற்கான முந்திய அனுபவம் எதுவும் கிடையாது. எனவே தேசிய மற்றும் சர்வதேசிய நலன்கள் எப்போதும் பிழையின்றி இணைந்திருப்பதில்லை. **1969**ல் மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாட்டின் தஸ்தாவேஜுகள் கூறுவதாவது: ''இந்தப் பாதை, அனைத்து வர்க்கங்கள் மற்றும் சமூகக் குழுக்களின் நலன்களைப் பாதித்தல் செய்யும் காலகாலமான பல மரபுகளிடமிருந்து அடிப்படையாக முறித்துக் கொள்வதையும், முற்றிலும் புது மாதிரியான சமூக உறவுகளை உருவாக்குவதையும், ஒரு புதிய மனப்பாங்கும் ஒரு புதிய உலகக் கண்ணோட்டமும் கொண்ட மக்களைப் பேணி வளர்ப்பதையும் உள்ளடக்கியதாகும். குறிப்பாயும் நாடுகளிடையான உறவுகள் சம்பந்தப்பட்ட வரை, கால காலமான தேசியப் பூசல்கள் மற்றும் அவநம்பிக்கைகளை வெற்றி கொண்டு அகற்றுவது இதிலடங்கும்''[1].

தேசியவாதம் உலக சோஷலிசக் கூட்டமைப்பை இறுதியாக ''அரித்து விடும்'' என்று ஏகாதிபத்தியம் பெரிதும் நம்பியிருக்கிறது. முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் ஒவ்வொரு சோஷலிச நாட்டின் தேசிய நலன்களையும் சர்வதேசிய நலன்களுக்கு எதிராக வைத்து சோஷலிச நாடுகளின் தொழிலாளர்கள் முரண்பாடான நலன்களைக் கொண்டிருப்பது இயல்பே என்று காட்ட முனைகிறார்கள். ஆனால் முதலாளித்துவத்தில் உள்ளார்ந்து கிடக்கும் எந்த வகையான முரண்பாடுகளும் சோஷலிசத்தில் இல்லை. பொருளாதார வளர்ச்சி மட்டங்கள், சமுதாயக் கட்டமைப்பு, சர்வதேச நிலை, தேசியத் தனித் தன்மைகள் ஆகியவற்றிலான ஏற்றத்தாழ்வால் தோற்றுவிக்கப்படும் வித்தியாசங்களை சோஷலிச நாடுகள், பாட்டாளி வர்க்க சர்வதேசியம், தோழமை முறையிலான விவாதம், சுயவிருப்பமான

---

[1] *International Meeting of Communist and Workers' Parties, Moscow 1969*, Prague, 1969, p. 147.

சோதர ஒத்துழைப்பு என்ற அடிப்படையில் வெற்றிகரமாகத் தீர்த்துக் கொள்கின்றன.

சோஷலிச நாடுகளின் பொருளாதார, ராணுவ மற்றும் அரசியல் அம்சங்களை வலுப்படுத்துவது ஒரு மிக முக்கியமான வர்க்கக் கடமையாகும். இதற்கு இன்றைய சர்வதேச நிலைமைக்குப் பொருந்திய முறையில் ஒற்றுமையினை வலுப்படுத்துவதற்கான வழிவகைகளை நாடுவது அவசியம்.

ஒரு சோஷலிச நாட்டின் வெற்றிகள், மனித குலம் முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசத்தை நோக்கி மாறிச் செல்வதை விரைவுபடுத்த உதவுகின்றன, மற்றும் உலக சோஷலிச அமைப்பு, உலகின் முற்போக்கு ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்திகள் இரண்டையும் வலுப்படுத்தவும் உதவுகின்றன. ஒரு நாடு தனது சொந்த மக்கள் சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றவில்லையானால் அது பொதுவான சோஷலிச லட்சியத்திற்கும் சர்வதேசியக் கோட்பாடுகளுக்கும் தீங்கு செய்வதாகிறது. சோஷலிசத்தின் கீழ், நாடுகளின் தேசிய மற்றும் சர்வதேசிய நலன்களுக்கிடையிலான இணக்கப்படுத்த முடியாத புறநிலை முரண்பாடுகள் அகற்றப்பட்டு விட்டதோடு, தேசிய நலன்களை சர்வதேசியத்திற்காகக் கைவிடவோ, சாத்தியமான பொழுது இந்த நலன்களை சர்வதேசிய மற்றும் உண்மையான தேசிய நலன்களின் ஒரு பகுதியாக இணைப்பதற்கு மாறாக அவற்றை ஒன்றுக்கொன்று கீழடக்கவோ அவசியமில்லை.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஒரு தேசிய சக்தி என்பதிலிருந்து ஒரு சர்வதேசிய சக்தியாகத் தவிர்க்க முடியாத வகையில் மாறும் எனவும், உலக அரசியல் மீது அது மிகவும் வலுவான செல்வாக்குச் செலுத்தும் எனவும் கூறியபொழுது லெனின் சரியாகவே கூறினார். இந்த சர்வதேசியக் கூறு, சோஷலிச நாடுகளின் மக்களின் பொதுவான ஜீவாதார நலன்களையும், எல்லா நாடுகளிலுமான சோஷலிச மற்றும் கம்யூனிச வளர்ச்சியின் பிரதானக் கடமைகளின் ஒற்றுமையையும் இடைத் தொடர்பினையும் ஒருங்கே வெளிப்படுத்துகிறது.

சோஷலிச நாடுகளிடையே சகலதுறை ஒத்துழைப்பை வளர்ப்பது மூலம் கம்யூனிஸ்டுகள் தமது சர்வதேசியக் கடமையை நிறைவேற்றுகின்றனர். இது சோஷலிச

அமைப்பு, பொருளாதாரப் போட்டியின் மிக முக்கியமான துறைகளில் முதலாளித்துவ அமைப்பிடம் புதிய வெற்றிகளை ஈட்ட வகை செய்கிறது. சோஷலிச நாடுகளின் பொதுவான ஜீவாதார நலன்கள் மற்றும் பிரதான நோக்கங்கள், அவற்றின் கொள்கைகள் அடிப்படையாக கொண்டுள்ள மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பின்பற்றி வரும் சோஷலிச அமைப்பு, மேலதிகமாக சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையையும் பரஸ்பர சுயவிருப்ப ஒத்துழைப்பையும் சார்ந்திருக்க வேண்டும்; இரு அமைப்புகளுக்கும் இடையிலான போராட்ட நிலைமையில் இது தேசிய நலன்கள் மீறப்படுவதைத் தவிர்க்கும், எல்லா நாடுகளின் வளர்ச்சியையும் உத்தரவாதம் செய்யும், உலக சோஷலிச அமைப்பை வலுப்படுத்தும்.

சோஷலிச நாடுகளைப் பேணிக்காத்து வலுப்படுத்துவதே சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் மற்றும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் மிக முக்கியமான கடமை, சர்வதேசியக் கடப்பாடுமாகும். உலகின் முதல் பாட்டாளி வர்க்க அரசு பற்றிக் கூறிய பொழுது லெனின், சோவியத் குடியரசைப் பாதுகாப்பது ''நமக்கும் சர்வதேச சோஷலிச இயக்கத்திற்கும் மிகவும் முக்கியமானது''[1] என்றார்.

சோஷலிச நாடு அதன் அரசுரிமையை உத்தரவாதம் செய்கிறது, அதே சமயம் எல்லா சோஷலிச நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களின், அனைத்து உழைக்கும் மக்களின் புரட்சிகர சாதனைகளையும் ஆட்சி அதிகாரத்தையும் பாதுகாக்கிறது. இந்தக் கடப்பாட்டை இது நிறைவேற்றுவதற்குக் காரணம், 1969 ஜூன் மாதம் நடைபெற்ற கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாட்டில் கூறப்பட்டது போன்று, ஒரு சோஷலிச நாட்டின் அரசுரிமையின் வர்க்க உள்ளடக்கம் சோஷலிசக் கூட்டமைப்பு மற்றும் சர்வதேச கம்யூனிஸ்டு மற்றும் புரட்சி

[1] வி. இ. லெனின், ''பிரதேசங்களைப் பிடித்தடக்கும் தன்மையான சமாதான உடன்படிக்கையைத் தனித்த முறையில் உடனடியாகச் செய்வது பற்றிய குறிப்புரைக்குப் பின்னுரை'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 26, p. 452).

இயக்கத்தின் பாலான சர்வதேசியப் பொறுப்போடு இணைந்ததாகும்.

சோஷலிச சர்வதேசியத்தின் கோட்பாடு, ஒவ்வொரு சோஷலிச நாட்டின் அரசுரிமையையும், சோஷலிசக் கூட்டமைப்பின் மீறவொண்ணுத் தன்மையையும் பாதுகாக்கும்படி கோருகிறது. ஒவ்வொரு சோஷலிச நாடும் சோஷலிசக் கூட்டமைப்பு முழுவதும் தமது உள்நாட்டு விவகாரங்களில் தலையிட ஏகாதிபத்திய நாடுகள் செய்யும் முயற்சிகள் அனைத்தையும் தகர்த்துவிட வேண்டும். இதுவே இன்றைய சர்வதேச உறவுகளின் மற்றும் சர்வதேசச் சட்டத்தின் அடிப்படையாகும்.

ஒரு சோஷலிச நாட்டின் கடமை என்ற முறையில் பாதுகாப்புச் செயல்பாடுகள் அதன் சொந்த அரசு நலன்களை உறுதி செய்வதற்கும் அப்பால் செல்கின்றன, ஒட்டுமொத்தமாகப் புதிய சமூக-பொருளாதார அமைப்பை வளர்ப்பதற்குரிய சர்வதேச நிலைமைகளை உருவாக்குவதும் இதில் உட்படும். சோஷலிச வளர்ச்சிப் பாதையை ஏற்றுக் கொண்டு விட்ட மக்கள் இனங்கள் நெருங்கி இணைந்த ராணுவ மற்றும் பொருளாதாரக் கூட்டணியை வைத்திருக்க வேண்டும், இல்லாவிட்டால் முதலாளிகள் ''எம்மைத் தனித்தனியாக நசுக்கி ஒடுக்கி விடுவார்கள்''[1] என்று லெனின் கூறினர். 1920 பிப்ரவரியில் அகில ருஷ்யாவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் செய்த அறிக்கையில் லெனின் இந்தக் கருத்தை விளக்கிக் கூறியதாவது: ''...ஏகாதிபத்திய வல்லரசுகளின் மாபெரும் அணியை எதிர்த்து நிற்கும் நாம், ஏகாதிபத்தியத்தோடு போராடி வரும் நாம், நெருக்கமான ராணுவ ஒற்றுமை அவசியப்படுகிற ஒரு கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம், இந்த ஒற்றுமையைச் சிதைக்கச் செய்யப்படும் எந்த முயற்சியும் சற்றும் அனுமதிக்க முடியாதது, சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்திற்குத் துரோகம் என்று கருதுவோம்...நாம் கூறுகிறோம்: ராணுவப்

---

1 வி. இ. லெனின், ''உக்ரேனியத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்குக் கடிதம்'' (V.I. Lenin, *Collected Works*, Vol. 30, p. 296).

படைகளின் ஒற்றுமை கட்டாயத் தேவை, இந்த ஒற்றுமையிலிருந்து வழுவுதலை அனுமதிக்க முடியாது.''[1]

சோஷலிச சாதனைகளைப் பாதுகாப்பது என்ற சர்வ தேசக் கடமை சோஷலிச நாடுகளுக்கு இருப்பதால், உரியதான தேசியக் கடமைகள் பின்னணிக்குத் தள்ளப்பட்டு விடும் என்று அர்த்தமல்ல. இந்தத் துறையில் சோஷலிசத்தின் கீழ் தேசிய அம்சம் நிலவுகிறது இதற்குக் காரணம் உலக சோஷலிச அமைப்பின் மக்கள் தனி நாடுகள் என்ற கட்டுக்கோப்பில் தமது வளர்ச்சியில் நீண்ட காலம் கடத்தியுள்ளன மற்றும், ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தனிப்பட்ட அரசியல், பூகோள, சமூகப்-பொருளாதார நிலைமைகள் உண்டு என்பதாகும். சோஷலிச நாடுகளின் ராணுவக் கூட்டணி உலக சோஷலிச அமைப்பின் உருவாக்கத்தின் ஓர் அம்சமாகும். சோஷலிசத்தைப் பாதுகாப்பதிலான அவற்றின் கடமைகள் புதிய சமூக-பொருளாதார அமைப்பின் ஒரு சீர்மை கொண்ட தன்மையினையும், தனிப்பட்ட நாடுகளின் பொதுவும் சிறப்புமான தனி அம்சங்களையும் வெளிப்படுத்துகின்றன.

சோஷலிசத்தின் ராணுவப் பாதுகாப்பின் சமூகத் தன்மையைப் பொருத்தவரை, இது சர்வதேசத் தகராறுகளை ஆயுத பலம் மூலம் தீர்த்துக் கொள்ள ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் முயற்சிகளை எதிர்த்த விசேஷ வடிவிலான வர்க்கப் போராட்டமாகும். இதில் தமதும் சோஷலிசக் கூட்டமைப்பினதுமான பாதுகாப்பு ஆற்றலை வலுப்படுத்த சோஷலிச நாடுகள் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளும் உட்படும்.

சோஷலிச நாடுகளின் பிரதான அரசியல் அமைப்பு வார்ஸா உடன்படிக்கை அமைப்பாகும். இது ராணுவ மற்றும் அரசியல் துறைகளில் தமது செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் சோவியத் ஒன்றியம், போலந்து, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா மற்றும் பல்கேரியாவால்

---

[1] வி. இ. லெனின், ''அகில ருஷ்யாவின் மத்திய செயற்குழு, மக்கள் கமிசாரவை இரண்டின் வேலை பற்றிய அறிக்கை'', (V. I. Lenin, *Collected Works*, Vol. 30, pp. 325-26).

நிறுவப் பெற்றது. இந்தப் பாதுகாப்பு கூட்டணியின் உறுப்பு நாடுகள் அவற்றின் சமாதான உழைப்பைப் பாதுகாக்கவும், ஆக்கிரமிப்பு முயற்சிகளை எதிர்த்துக் காபந்து செய்யவும், தமது எல்லைகளின் மீறவொண்ணாத் தன்மையையும் தமது பிரதேச உரிமைகளையும் உத்தரவாதம் செய்யவும் வேண்டித் தமது பாதுகாப்பு ஆற்றலை வலுப்படுத்த ஒரு முகமான நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டவை.

வார்ஸா உடன்படிக்கை அமைப்பின் பிரதான அமைப்புகள், அரசியல் ஆலோசகக் குழு, தற்காப்புத் துறை அமைச்சர்களின் குழு, ஆயுதப் படைகளின் கூட்டுத் தலைமை, ராணுவ அவை, தலைமையகம், நிரந்தரக் கமிஷன், கூட்டுச் செயலாளர் குழு ஆகியவையாகும்.

உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ள நாடுகள் தமக்கிடையான உறவுகளில் எதிரிடும் அரசியல், ராணுவ, பொருளாதார இதரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அதிகாரம் அரசியல் ஆலோசகக் குழுவிடம் அளிக்கப் பெற்றுள்ளது. இந்தக் குழு ஒரு நிரந்தர அமைப்பல்லவாதலால் கலந்தாலோசனை நடத்தவும், பரஸ்பர நலனுக்கேற்ற பிரச்சினைகளிலும், தற்காப்பு ஆற்றலை வலுப்படுத்தல், சோஷலிச நாடுகளைக் கூட்டாகப் பாதுகாக்கும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் போன்ற முக்கியமான விஷயங்கள் குறித்து முடிவுகளை உருவாக்கவும் அவசியமேற்படும் பொழுது கூடும். பொதுவாக இது கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்கள் மட்டத்தில் கூடும். இதன் கூட்டங்களில் அயல்துறை மற்றும் தற்காப்புத் துறை அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள். வார்ஸா உடன்படிக்கை அமைப்பு அதன் அனைத்து உறுப்பு நாடுகளின் பூரண சமத்துவத்தையும் அரசுரிமையையும் உத்தரவாதம் செய்கிறது, உறுப்பு நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை என்ற கோட்பாட்டை அனுசரிக்கிறது. உறுப்பு நாடுகள் அவசியமான ஆயுதப் படைகளை (பொருத்தமான உடன்படிக்கை மூலம் அவற்றின் இருப்பிடமும் அளவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது) கூட்டுத் தலைமை, அதன் தலைமையகத்தின் பொறுப்பில் ஒப்படைத்துள்ளது.

உறுப்பு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் தமது தேசிய ராணுவங்கள் மற்றும் கூட்டு ஆயுதப் படைகள் குறித்து இடையறாத கவனம் செலுத்துகின்றன, இவற்றில் காலாட்படை, விமானப் படை, விமானப் பாதுகாப்புப் படை மற்றும் கடலோர நாடுகளின் கடற்படையும் உட்படும். சோஷலிச நாடுகளின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்வதில் சிறப்பாயும் முக்கியமான பங்கு வகிக்கும் சோவியத் ஒன்றியம் எப்போதுமே அதன் சர்வதேசியக் கடமைகளை நிறைவேற்றியுள்ளது.

1921-1922ஆம் ஆண்டுகளில் செமியோனவ் மற்றும் உன்கெர்னின் கும்பல்களை முறியடிக்க மங்கோலிய மக்களுக்கு உதவி புரிந்து அவர்கள், சுதந்திரமும் சுயாதீனமும் பெறச் செய்து தமது சர்வதேசியக் கடமைகளை நிறைவேற்றினர் சோவியத் படைவீரர்கள். 1939ல் ஜப்பானியப் படையெடுப்பாளர்களை எதிர்த்து ஹால்கின்-கோல் நதி அருகே சோவியத் மற்றும் மங்கோலியப் படைவீரர்கள் சேர்ந்து நின்று போர் புரிந்தார்கள்.

1924-1927லும் 1937-1941லும் சீனாவுக்குப் பெரிய கடனுதவி மற்றும் விமானங்கள், டாங்குகள், போர்த் தளவாடங்கள், எரிபொருள் இதர சாதனங்களை வழங்கி ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்த சீன மக்களின் தேசவிடுதலைப் போராட்டத்திற்கு சோவியத் ஒன்றியம் தீவிரமாக உதவி செய்தது. சோவியத் விமானித் தொண்டர்கள் சீன மக்களின் சுதந்திரத்திற்காகத் தீரமான போர் புரிந்தார்கள்.

இதேபோன்று 1938-1939ல் ஸ்பெயினில் சோவியத் படைவீரர்கள் தமது சர்வதேசியப் பற்றுறுதியைக் காட்டினார்கள்.

1939 செப்டம்பர் 1ந் தேதி போலந்தைத் தாக்கியது மூலம் பாசிச ஜெர்மனி இரண்டாம் உலகப் போரைத் துவங்கியது. ஜெர்மன் படைகள் போலந்தைப் பிடித்தடக்கி கீழ்த்திசை நோக்கி முன்னேறலாயின. நீண்டகாலமாக போலந்துப் பிரபுக்களால் ஒடுக்கப்பட்டுக் கிடந்து இப்போது பாசிச ஒடுக்கு முறையால் அச்சுறுத்தப் பெறும் தமது உக்ரேனிய மற்றும் பைலோருஷ்ய சகோதரர்களின் கதியைப் பற்றி சோவியத் மக்கள் அசட்டையாக

இருத்தல் முடியாது. சோவியத் அரசின் உத்தரவுப்படி செஞ்சேனை போலந்து எல்லையைக் கடந்து மேற்கு பைலோ ருஷ்ய மற்றும் மேற்கு உக்ரேனிய மக்களைப் பாதுகாத்தது. இப்பொழுது இவ்விரு மக்கள் இனங்கள் சோவியத் குடியர சுகளான உக்ரேனியா, பைலோருஷ்யாவில் சேர்ந்து இணைந் திருக்கின்றன.

இரண்டாம் உலகப் போரில் போராட்ட ஒத்துழைப்பு மற்றும் தொழிலாளர் சர்வதேசிய ஒருமைப்பாட்டின் மர புகள் தெளிவாக வெளியிடப்பட்டன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் பின்பற்றி வந்த சரியான சர்வதேசிய லெனினியக் கொள்கையானது மாபெரும் தேசபக்தப் போர் வெடித்ததுடன் சோவியத் பிரதேசத்தில் நிறுவப் பெற்ற போலந்து மற்றும் செக் கோஸ்லோவாக்கிய படைப்பிரிவுகள் பாசிசப் படையெடுப் பாளர்களை எதிர்த்துச் சமரில் இறங்குவதை சாத்தியமாக் கியது. மங்கோலிய மக்கள் குடியரசின் படைகளும், யூகோஸ்லாவிய மக்கள் விடுதலைப் படையின் பிரிவுகளும், போரின் இறுதி கட்டத்தில் பல்கேரிய மற்றும் ருமேனியப் படைகளும் சோவியத் ராணுவத்தோடு சேர்ந்து நின்று போராடின. ஹங்கேரி தேசபக்தர்கள் மற்றும் ஜெர்மன் பாசிச-எதிர்ப்பாளர்களும் சோவியத் ராணுவத்துடன் ஒத்துழைத்தனர். சோவியத் போராட்ட வீரர்களுக்கும் சோதர மக்களின் போராட்ட வீரர்களுக்கும் இடையிலான நட்புறவு பொது விரோதியை எதிர்த்த கூட்டு ராணுவ நடவடிக்கைகளில் வலுப்பெற்றது.

புதிய ராணுவங்களுக்கு ஆயுதங்கள், ராணுவ சாத னங்கள், போர்த் தளவாடங்கள், துணைக்கருவிகள், எரி பொருள் மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கியும் இராணுவ அதிகாரிகள் மற்றும் ராணுவ நிபுணர் களைப் பயிற்றுவித்தும் சோவியத் போர்க்கலையினை போதித் தும் அவற்றின் ஆயுதப்படைகளை ஒழுங்கமைத்தும் சோவி யத் ஒன்றியம் சோதர உதவி புரிந்தது. போலந்து, செக் கோஸ்லோவாக்கிய, ருமேனிய மற்றும் யூகோஸ்லாவியத் தொண்டர் படைப்பிரிவுகள் சோவியத் ஒன்றியத்தில் நிறுவப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு ஆயுதபாணிகளாக்கப் பட்டன. 1945 மே மாதத்திற்குள் சோவியத் ராணுவத்

தலைமை அவற்றுக்கு 960,000 துப்பாக்கிகளும் சிறு துப்பாக்கிகளும் சிறு யந்திரத்துப்பாக்கிகளும், 40,627 யந்திரத்துப்பாக்கிகள், 16,502 பீரங்கிகளும், சிறுபீரங்கிகளும், 1,124 டாங்குகளும் தானே இயங்கும் பீரங்கிகளும், மற்றும் 2,363 விமானங்களையும் வழங்கியிருந்தது[1].

பல்வேறு நாடுகளின் அரசுகள் மற்றும் ராணுவத் தலைமைகளின் வேண்டுகோளின்படி தேசிய ஊழியர் பற்றுக் குறையை நிரப்புவதற்காக சோவியத் ராணுவ அதிகாரிகளும் ஜெனரல்களும் நேசநாடுகளின் ராணுவங்களுக்கு ஆலோசகர்களாகவும் தலைமை மற்றும் உயர் அதிகாரிகளாயும் அனுப்பி வைக்கப்பட்டார்கள். 1943 மே மாதம் முதல் 1944 செப்டம்பர் வரையிலும் 18 ஜெனரல்களும் 5,000க்கு மேற்பட்ட அதிகாரிகளும் போலந்து ராணுவத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். செக்கோஸ்லோவாக்கிய ராணுவப் பிரிவில் 350 சோவியத் அதிகாரிகளும் வீரர்களும் இருந்தார்கள். போர் முடியும் தறுவாயில் போலந்து ராணுவத்தில் 16,396 சோவியத் படைவீரர்களும் செக்கோஸ்லோவாக்கிய ராணுவத்தில் 531 பேரும் இருந்தார்கள்[2].

பின்னணி வீரர்கள் இயக்கத்தை வளர்ப்பதில் சோதர மக்கள் இனங்களுக்கு சோவியத் ஒன்றியம் மிகப்பெரும் உதவிகள் வழங்கியது. சோதரக் கட்சிகளின் தலைமை தேர்வு செய்யப்பட்ட கம்யூனிஸ்டுகள் மற்றும் பாசிச-எதிர்ப்பு தேசபக்தர்களை சோவியத் ஒன்றியத்திற்கு அனுப்பி வைத்தது, அங்கே சோவியத் ஒன்றியத்தின் எல்லையோரமுள்ள நாடுகளில் பாசிசப் படையெடுப்பாளர்களை எதிர்த்துப் பின்னணிப் போர் நடத்த ராணுவ மற்றும் இதர நிபுணர்களாக அவர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பின்னணிப் படைகள் சோவியத் ஆயுதங்கள், தளவாடங்கள், மருந்துகள், சாதனங்கள் மற்றும் உணவுப் பொருட்களைப் பெற்றன.

சோஷலிச நாடுகளைப் பாதுகாப்பதற்கு ஏற்படும் செலவில் பெரும் பகுதியை சோவியத் ஒன்றியம் ஏற்றுக் கொள்

---

[1] கம்முனீஸ்டு, 1970, இதழ் 5, பக்கம் 93 (ருஷ்யன்).

[2] ராணுவு-வரலாற்று சஞ்சிகை, 1967, இதழ் 6, பக்கங்கள் 7 மற்றும் 12 (ருஷ்யன்).

கிறது. அது அவற்றுக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் ராணுவ சாதனங்களை வழங்குகிறது, இராணுவ நிபுணர்களைப் பயிற்றுவிக்க உதவுகிறது, ஆயுதப் படைகளை வளர்த்து அவ்வற்றுக்குத் தன் ராணுவ அனுபவத்தை அளிக்கிறது.

ஐரோப்பியப் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யவும், உலக சமாதானத்தைப் பேணிக் காக்கவும் வார்ஸா உடன்படிக்கை நாடுகளின் அயல்துறைக் கொள்கைச் செயல்பாடுகள் ஒருமுகப்படுத்தப் பெறுகின்றன. இந்த அமைப்பின் ஆக உயர்ந்த அங்கமான அரசியல் ஆலோசகக் குழுவின் கூட்டங்களில் சமாதானத்தைப் பேணிக்காத்தல், மக்கள் இனங்களிடையே ஒத்துழைப்பைக் கட்டி வளர்த்தல், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையை எதிர்த்தல் போன்ற அவசரமான பல சர்வதேசப் பிரச்சினைகள் விவாதிக்கப்படும். ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சோஷலிச நாடுகள் சேர்ந்து நடத்தி வரும் போராட்டம் அவை சர்வதேச சோஷலிச நிலைமைகளை வலுப்படுத்தவும் ஐரோப்பாவிலும் உலகம் முழுவதிலும் சமாதான லட்சியத்திற்கு உதவவும் வகை செய்யும் மாபெரும் வெற்றிகளை அடையத் துணை புரிகின்றன.

வார்ஸா உடன்படிக்கையின் 8ஆவது விதி உடன்படிக்கை மேற்கொண்ட தரப்புகளின் பொருளாதார மற்றும் கலாசாரப் பந்தங்கள் வளர்ச்சியடைய வகை செய்துள்ளது. இது சோஷலிச நாடுகளில் விரிவான பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சிக்கு ஒரு சட்ட அடிப்படையாக இருக்கிறது, இது அவற்றின் அரசியல் ஒற்றுமை வலுப்பட உதவுகிறது. ஐ. நா. சாசனத்தின் விதி 1 (3)க்கு முற்றிலும் பொருத்தமான வகையில் உறுப்பு நாடுகள் தமது பொருளாதார மற்றும் கலாசாரப் பந்தங்களை வளர்த்து வருகின்றன. இந்த விதி ''பொருளாதார, சமூக, கலாசார அல்லது மனிதாபிமானத் தன்மையுள்ள சர்வதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் சர்வதேச ஒத்துழைப்பை அடையவும், மனித உரிமைகள் மற்றும் இனம், பால், மொழி அல்லது சமயம் என்று எவ்வித பேதமும் இன்றி எல்லோருடைய அடிப்படை சுதந்திரங்களுக்கும் மதிப்பளிப்பதை மேம்படுத்தி ஊக்குவிக்கவும்'' ஐ. நா. உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துகிறது.

எனவே வார்ஸா உடன்படிக்கை அமைப்பு சோஷலிச நாடுகளிடையிலான ஒரு தற்காப்புக் கூட்டணி மட்டு மன்று. அது ஐரோப்பாவிலும், உலகமுழுவதிலும் பாது காப்பை உத்தரவாதம் செய்கிறது, அதன் உறுப்பு நாடு களிடையே பொருளாதார மற்றும் கலாசாரப் பந்தங்களை வலுப்படுத்தி வளர்க்கிறது, எல்லா நாடுகளிடையிலும் ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.

1972 ஜனவரியில் பிராகில் நடைபெற்ற அரசியல் ஆலோசகக் குழுவின் மாநாடு, சோஷலிசக் கூட்டமைப் பின் இணைவையும், சமாதானம், சர்வதேச ஒத்துழைப்பு, சுதந்திரம், சுயாதீனம் மற்றும் சமூக முன்னேற்றத்திற் கான மக்கள் போராட்டம் ஆகியவற்றுக்கு ஆதரவாக ஒருமுகமான நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள் வதற்கான முடிவையும் எடுத்துக் காட்டியது. அந்த மாநாட் டில் அங்கீகரிக்கப்பட்ட தஸ்தாவேஜுகள் ஐரோப்பாவை நிரந்தர சமாதானத்திற்கும், சர்வசுதந்திர சமத்துவ நாடுகளிடையே பயனுள்ள ஒத்துழைப்புக்கும், சர்வதே சிய இணக்கத்திற்கும் உரிய நிலையான மண்டலமாக மாற் றுவது என்ற சோஷலிச நாடுகளின் உன்னத நோக்கங்களை ஊர்ஜிதம் செய்தன. ஐரோப்பிய நாடுகளினிடையிலான உறவுகளை பிரதேச உரிமை, வன்முறை பயன்படுத்தப்படு வதைக் கைவிடுதல், சமாதான சகவாழ்வு, ஆயுத ஒழிப்பு, ஐக்கிய நாடுகளுக்கு ஆதரவு, நாடுகளிடையே பரஸ்பரம் அனுகூலமான பந்தங்கள், நல்ல அண்டை நாட்டு உறவுகள் மற்றும் சமாதானத்தின் நலன்களுக்கான ஒத்துழைப்பு என்ற கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்டு உருவாக் குவதற்கான யோசனைகள் இந்த தஸ்தாவேஜில் உள்ளன. சமாதான சகவாழ்வுக் கொள்கையானது அனைத்து நாடு களின் அரசுரிமை மற்றும் சமத்துவம் என்ற கோட்பாடு களை அனுசரிக்க வேண்டும் எனவும் எல்லா சர்வதேசப் பிரச்சினைகளுக்கும் பேச்சுகள் மூலம் தீர்வு காண வேண்டும் எனவும் கோருகிறது. அதே பொழுது இது ஏகாதிபத் திய மற்றும் பிற்போக்கு சக்திகளின் ஆக்கிரமிப்பு முயற்சி களையும் இந்த சக்திகள் இதர நாடுகளின் உள் விவகாரங் களில் தலையீடு செய்யும் முயற்சிகளையும் எதிர்ப்புரட்சியை ஏற்றுமதி செய்வதையும் எதிர்த்து மக்கள் இனங்கள்

தாமே சுதந்திரமான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சிக்குரிய பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதற்கான நீண்ட காலப் போராட்டம் ஆகும். சமா தான சகவாழ்வானது வர்க்கத் தன்மையுள்ள கொள்கையே, இந்தக் கொள்கையைப் பின்பற்றல் சோஷலிச நாடுகளின் அரசுரிமையின் வர்க்கத் தன்மையையும் உள்ளடக்கத்தையும் தெளிவாகக் காட்டுகிறது.

ஒரு புதிய சமூக அமைப்பை நிலைநாட்டுவது என்பது ஒரு நீண்ட கடினமான நிகழ்ச்சிப் போக்கு. புதிய சமுதாய அமைப்பின் சாதகங்களையும், சோஷலிசக் கூட்டமைப்பின் வலிமையையும் ஒற்றுமையையும் திறம்படப் பயன்படுத்து வது என்பது அரசுகளின் தலைமையிலுள்ள கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளை, சமூக வளர்ச்சிப் பிரச் சினைகளை மார்க்சிய-லெனினிய போதனையின் அடிப்படையில் தீர்வு காண்பதற்குரிய அவற்றின் ஆற்றலைச் சார்ந்து இருக் கும்.

## அத்தியாயம் 10

# அரசுரிமையும் சோஷலிசப் பொருளாதார இணைப்பாக்கமும்

இன்று சோஷலிச நாடுகளின் பொருளாதாரம், அரசியல், மற்றும் கலாசாரம் சர்வதேசியமயமாக்கப்பட்டு வருகிறது, அவற்றின் தேசியப் பொருளாதாரங்கள் ஒருமுகப் படுத்தப்பட்டு வருகின்றன. இது சோஷலிசப் பொருளாதார இணைப்பாக்கத்தில் வெளிப்படுத்தப் பெற்றுள்ளது, கூட்டாக வகுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளின் சோதரக் கட்சிகளாலும் அரசுகளாலும் முறைப்படுத்தப் படுகிறது. சமூக உற்பத்தி வளர்ச்சியின் தொழில்நுட்ப மற்றும் சமூக-பொருளாதாரக் கூறுகள் சோஷலிச நாடுகள் பொருளாதார முறையில் இணைப்பாக்கம் பெறுவதற்கான ஒரு புறநிலை அவசியத்தைத் தோற்றுவித்துள்ளன.

உற்பத்தி மற்றும் உற்பத்தி நடைமுறைகள் சர்வதேசியமயமாக்கப்பட்டதைப் பொருளாதார இணைப்பாக்கத்தோடு சமப்படுத்தக் கூடாது, காரணம் பிந்தியது திட்ட வட்டமான சமூக உறவுகளால் கட்டுப்படுத்தப் பெற்று, திட்டவட்டமான வர்க்கங்களின் நலன்களுக்குக் கீழ்ப்பட்டு, அவற்றின் நோக்கங்கள் மற்றும் சமூக நிலைமைகளுக்குப் பொருத்தமான வடிவங்கள் முறைகளின் உதவியுடன் அவற்றால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இணைப்பாக்கம், உற்பத்தி மேலதிகமாக சர்வதேசியமயமாக்கப்படுவதை எதார்த்தத்தில் அடிப்படையாக்கியதாகும்.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள துரிதமான முன்னேற்றம் உற்பத்தி சர்வதேசியமயமாக்கப்படும் போக்கைப் பெருமளவுக்கு அதிகரிக்கிறது. இன்று விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி தக்கதான நிலைமைகள் நிறுவப்படுவதைச் சார்ந்ததாக உள்ளது,

எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்தி ஆற்றல்கள், உற்பத்தியின் அளவு, பண்டங்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றைச் சார்ந்ததாக உள்ளது. பெரும்பாலான நாடுகள் இந்த நிலைமைகளைத் தாமாகவே உருவாக்கிக் கொள்ள முடியாது. சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையை அபிவிருத்தி செய்வது மட்டுமே, ஒரு நாட்டின் மூலவளங்கள் மற்றும் உள்நாட்டுச் சந்தையின் பற்றாக் குறையைச் சமாளிப்பதற்கான ஒரே வழியாகும். எனவே பொருளாதார இணைப்பாக்கம் பொருளாதார வளர்ச்சியை முனைப்பாக்குவதில் ஒரு கேந்திரமான பங்கு வகிக்கிறது. சோஷலிச நாடுகளின் உற்பத்தி சக்திகளை, அவற்றின் பொருளாதாரப் பரஸ்பர சார்பை அதிகரிப்பது மூலம் அபிவிருத்தி செய்ய முடியும், இதற்கு சர்வதேச உற்பத்தி மற்றும் நுகர்வு பற்றிய திட்டவட்டமான வீதங்களை நிலை நாட்ட வேண்டுவது அவசியம். இணைப்பாக்க நடவடிக்கைகள் ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரத்திலுமான தனித் துறையாக்கம், கூட்டமைப்பு அளவில் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவுதல் என்பவற்றோடு பிரதானமாக சம்பந்தப்பட்டவை.

சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளைப் படிப்படியாக ஒன்று சேர்ப்பதும் பொருளாதார முறையில் சமப்படுத்துவதும், உலக சோஷலிச அமைப்பின் வளர்ச்சியின் ஓர் அடிப்படைப் போக்காகும். பொருளாதார இணைப்பாக்கத்திற்கான அவசியம், சோஷலிசத்தின் கீழ் முற்றிலும் பொருளாதாரக் காரணங்களுக்காக உழைக்கும் மக்கள் தனிமைப்படுவதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்ற லெனினது கருத்தை முழுமையாக ஊர்ஜிதம் செய்கிறது[1]. சோஷலிச வளர்ச்சியில் அதிகமான வெற்றிகள் அடையுந்தோறும், பொருளாதார இணைப்பாக்கம், பொதுவான பொருளாதார மற்றும் அரசியல் வாழ்வு ஆகிய இரண்டுக்கும், மேலதிகமான முன்தேவைகள் உருவாக்கப்படுகின்றன. பொருளாதார

---

1 வி. இ. லெனின், ''சுயநிர்ணயத்தைப் பற்றிய விவாதத்தின் விளைவுகள்'' (வி. இ. லெனின், **தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும்: சில பிரச்சினைகள்,** மாஸ்கோ, பக்கம் 225).

வளர்ச்சியின் மட்டம் உயர உயர இணைப்பாக்க நடவடிக்கைகளின் வீச்சும் பயன் திறனும் மேலும் மேலும் அதிகரிக்கின்றன.

இரு உலக அமைப்புகளிடையிலான போட்டியினாலும் சோஷலிச இணைப்பாக்கம் ஓரளவுக்கு நிர்ணயிக்கப்படுகிறது, அதில் இது மிகவும் முக்கியமான பங்கு வகிக்கிறது. பிரதான முதலாளித்துவ நாடுகள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இணைக்கப் பெற்ற சர்வதேச முதலாளித்துவப் பொருளாதாரம் வழங்கும் சாதகங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்த முயன்று ஒரே அணியாக சோஷலிச நாடுகளை எதிர்த்துச் செயல்படுகின்றன. முதலாளித்துவக் கூட்டணியின் ஒன்றிணைந்த பொருளாதார வலிமையினை எதிர்த்து சேர்ந்து திட்டமிட்ட போராட்டம் மூலம் சோஷலிச நாடுகளும் சோதரக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தமது சர்வதேசியக் கடமையினை நிறைவேற்றுகின்றன.

1949 துவக்கத்தில் சோஷலிச சர்வதேசியத்தின் அடிப்படையிலும், தேசிய அம்சங்கள் மற்றும் நலன்கள், உலக சோஷலிச அமைப்பின் பொது நலன்கள் குறித்து உரிய கவனம் செலுத்தியும் சோஷலிச நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை ஒருமுகப்படுத்தப் பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நிறுவப்பட்டது.[1] உலக முதலாளித்துவ அமைப்பை விட்டு வெளியேறிய நாடுகள் ஒரு புதிய சமூக அமைப்பினை நிர்மாணிப்பதற்கான கடமைகளை எதிரிட்ட சமயத்தில் இந்தப் பொருளாதார அவை நிறுவப்பட்டது. உலக ஏகாதிபத்தியம், குறிப்பாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளிடமிருந்து (மார்ஷல் திட்டம்

---

[1] 1949ல் மாஸ்கோவில் நடைபெற்ற ஒரு பொருளாதார மாநாட்டில் செக்கோஸ்லோவாக்கியா, சோவியத் ஒன்றியம், பல்கேரியா, போலந்து, ருமேனியா, ஹங்கேரியின் பிரதிநிதிகள் பரஸ்பரப் பொருளாதார உதவி அவையை நிறுவுவது என்ற முடிவை எடுத்தார்கள். பின்னுல் அல்பேனியாவும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும், 1962ல் மங்கோலிய மக்கள் குடியரசும் அவையில் சேர்ந்தன. 1961 இறுதிக்குப் பிறகு அல்பேனியா அவையின் வேலைகளில் உண்மையில் பங்கு பற்றவில்லை.

மற்றும் பொருளாதார முற்றுகை) மக்கள் ஜனநாயக நாடுகளின் அரசுரிமையையும் புரட்சி சாதனைகளையும் பாதுகாப்பதற்காகவும் இது நிறுவப்பட்டது.

கம்யூனிச வெற்றிக்கான பொருளாயத முன்தேவைகள் ஒவ்வொரு நாட்டின் மக்களின் உழைப்பாலும், சோஷலிச அமைப்பை வலுப்படுத்துவது என்ற பொது நோக்கத்திற்கு இவை இடையருது ஆற்றி வரும் பங்குப் பணியினாலும் உருவாக்கப்படுகின்றன. அதன் பரப்பு அல்லது பொருளாதார வளர்ச்சி மட்டம் எதுவாக இருந்த பொழுதிலும் ஒவ்வொரு சோஷலிச நாடும், தனது உள்நாட்டு மூலவளங்கள் மற்றும் வாய்ப்புக்களை முழுமையாகவும் சீராகவும் பயன்படுத்தியும், வளர்ந்து வரும் சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினை மற்றும் இதர சோஷலிச நாடுகளுடனான பொருளாதார ஒருங்கிணைப்பில் உரிய கவனம் செலுத்தியும் இந்த லட்சியத்திற்குப் பங்குப்பணி ஆற்றுகிறது. தனிப்பட்ட சோஷலிச நாட்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைந்திருப்பதும், சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையின் சாதகங்களை முழுமையாகப் பயன்படுத்தத் தவறுவதும் உலக சோஷலிச அமைப்பு முழுவதன் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பாதிக்கும். ஒவ்வொரு சோஷலிச நாடும் அதன் பொருளாதார உள்ளாற்றலை அதிகரித்துக் கொள்வது மூலம் தனது சர்வதேசியக் கடமையை நிறைவேற்றுகிறது, அதோடு உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சிக்குத் தனது பங்குப்பணியை ஆற்றுகிறது.

சோஷலிச சர்வதேசியத்தில் மெய்ப்பற்றுடைய ஒரு நாடு சர்வதேச உழைப்புப் பிரிவினையைப் பயன்படுத்தி சோஷலிச நாடுகளின் பொதுவான கடமைகள் மற்றும் நலன்களுக்கு எதிராகச் செல்லும் ஒரு நிலைமையினை மேற்கொள்ள முடியாது. சோஷலிச நாடுகளுக்கிடையிலான உறவுகளில் பரஸ்பர நன்மை பரஸ்பர உதவியுடன் உள்ளார்ந்து இணைக்கப்பட்டுள்ளது. உலக சோஷலிச அமைப்பின் வளர்ச்சியிலான இயக்கவியல் முரண்பாடு, உற்பத்தி சக்திகளை சர்வதேசியமயமாக்க வேண்டிய எதார்த்தத் தேவைக்கும், தமது சொந்த அரசுத்துவம், பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தை வளர்த்துக் கொள்வதிலான

சோஷலிச நாடுகளின் இயல்பான முயற்சிகளுக்கும் இடையிலான தொடர்பாட்டில் வெளியாகிறது. இந்த முரண்பாடு உலக சோஷலிச அமைப்பில் வெளிப்பாடாகியுள்ள இரு புறநிலைப் போக்குகளின் செயலை வெளியிடுகிறது: (1) தேசியப் பொருளாதாரங்கள், தேசிய அரசுத்துவம் மற்றும் கலாசாரத்தின் வளர்ச்சி; (2) நாடுகளும் மக்கள் இனங்களும் மேலதிகமாக இசைவிணக்கம் பெறுதல், தேசியத் தனிப்போக்கினை அகற்றுதல், நாடுகளிடையான உறவுகள் விரிவடைதல்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவியை வளர்ப்பதற்கான பொது முயற்சிகளுடன் கூடவே ஒவ்வொரு சோஷலிச நாட்டின் தேசியப் பொருளாதாரத்தை வளர்க்கும் முயற்சிகளை இணைப்பது மூலம் உலக சோஷலிசப் பொருளாதாரம் வலுப்படுத்தப் பெறும். ஒவ்வொரு வரலாற்று கட்டத்திலும் சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினை ஒவ்வொரு சோஷலிச நாட்டின் மற்றும் உலக சோஷலிச அமைப்பு முழுவதன் முன்னுள்ள பிரதானக் கடமைகளை நிறைவேற்ற உதவுகிறது.

சோஷலிச நாடுகளின் பொருளாதாரக் கூட்டமைப்பு நிறுவப் பெற்றதானது உலக சோஷலிசப் பொருளாதாரத்தின் உருவாக்கத்தில் ஒரு முக்கியமான ஆரம்ப கட்டத்தினைக் குறிக்கிறது. இந்தக் கட்டத்தில் தேசியப் பொருளாதாரங்கள் இடையே உறவுகளின் ஓர் அமைப்பை நிறுவுவது மூலம் சோஷலிசப் பொருளாதாரம் இணைப்பாக்கம் பெறுகிறது, இந்தப் பொருளாதாரங்கள் அரசின் சுதந்திரம் மற்றும் முழு உரிமை அடிப்படையில் வளர்ச்சியடைகின்றன.

சர்வதேச சோஷலிசப் பொருளாதார உறவுகள், பிரதானமாயும் உற்பத்தி சாதனங்களிலான தேசிய அரசுடைமை உறவுகளேயாகும். ஒவ்வொரு சோஷலிச நாட்டின் பொருளாதாரமும் உற்பத்தி சாதனங்களில் பொதுவுடைமையைக் கொண்ட தனி அமைப்பை அடிப்படையாக்கியதாகும். ஆனால் மறுபுறம் உலக சோஷலிச அமைப்பின் பொருளாதாரம் பொதுவுடைமையின் தனி ஒரு அமைப்பையல்ல, மாறாக தனிப்பட்ட நாடுகளின் உருவில் உற்பத்தி சாதனங்களின் சுதந்திர உடைமையாளர்களின் சோஷலிச உடைமையினை அடிப்படையாக்கியதாகும்.

1964ல் பிராகில் நடைபெற்ற உலக சோஷலிசப் பொருளாதார அமைப்புப் பற்றிய ஒரு சர்வதேச மார்க்சிய மாநாட்டில், தனிப்பட்ட சோஷலிச நாடுகளின் உருவில் நவீன உற்பத்தி சாதனங்களின் பல சுதந்திரமான கூட்டு உடைமையாளர்கள் இருப்பது சர்வதேச சோஷலிச உற்பத்தி உறவுகளின் அம்சமும் அடிப்படை நிபந்தனையுமாகும், ஒவ்வொரு நாட்டிலும் ஒரே மாதிரியான உடைமை இருந்த பொழுதிலும் சோஷலிச நாடுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகளில் தனி ஒரு பொது உடைமை இல்லாததால், தனி ஒரு கூட்டு உடைமையாளர் இருக்க முடியாது என்று சோவியத் பொருளாதார நிபுணரான அ.ம. ரும்யாந்த்செவ் கூறினர். உலக சோஷலிசப் பொருளாதார அமைப்பின் கட்டுக்கோப்பில் உடைமை ஒரு வரையறைக்கு உட்பட்ட அளவில் சமூகத் தன்மை கொண்டது. அதாவது அது சோஷலிசத்தைக் கட்டத் தொடங்கியுள்ள மக்களுக்கு வரலாற்று வழி தேவைப்படுகிற தேசிய, பிரதேச மற்றும் அரசு எல்லைகளை இன்னும் தாண்டிக் கடந்து விடவில்லை. இதற்கு நீண்ட காலம் பிடிக்கலாம் என்ற பொருளில் இதைப் பார்க்க வேண்டும். உண்மையில் இதன் பொருள் உலக சோஷலிச அமைப்புக்கு இன்று பொருளாயதச் செல்வத்தை உற்பத்தி செய்யவும் மற்றும் வினியோகிக்கவுமான தனி ஒரு வழிமுறை இல்லை என்பதாகும். விரிவுபடுத்தப் பெற்ற சோஷலிச மறு உற்பத்தி இன்னும் பிரதானமாயும் தேசியக் கட்டுக்கோப்புக்குள்ளேயே இருக்கிறது.

மேலே குறிப்பிடப்பட்ட மாநாட்டில் போலந்து அறிஞர் யூஸஃப் பயேஸ்த்கா பொருளாதார உதவி அவைக்குத் தனிப்பட்ட பங்காளிகளின் பொருளாதார வளர்ச்சியினை நிர்வாகம் செய்யும் ஆட்சி அதிகாரம் இல்லை எனவும் இந்த உரிமையைக் கொண்ட தேச அதீத அதிகாரம் இல்லை என்றும் கூறினர். உற்பத்தி சாதனங்கள் விஷயத்திலும் தேசத்திற்கு அப்பாற்பட்ட உடைமை எதுவும் இல்லை. எல்லா நாடுகளும் தமது அரசுரிமையையும் அவற்றின் அரசியல்-பொருளாதாரக் கடமைகளையும் தொடர்ந்து வைத்திருக்கும்.

சோஷலிச நாடுகளின் பொருளாதார மற்றும் அரசு சுதந்திரம் போன்ற புறநிலை அம்சங்கள் தேசிய மற்றும்

பொது நலன்களில் ஓரளவு வேறுபாட்டை எழுப்புகின்றன. பொருளாதாரப் பின்தங்கிய நிலையை வென்று தேசியப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நவீனத் தொழில்களை நிறுவும் திசையிலான போக்கும், பொது நலன்களின் அடிப் படையில் நாடுகளிடையான பொருளாதார உறவுகளை முனைப்பாக வளர்ப்பதை நோக்கிய போக்கும் உலக சோஷலிசப் பொருளாதாரத்தில் தனிப்பட்ட தேசிய உறுப்புகள் இருக்கும் வரையில் எதார்த்தத்தில் நிலவும். எனவே இன்று உலக சோஷலிசப் பொருளாதாரம் அரசு சுதந்திரத்தின் அடிப்படையில் வளர்ந்து வரும் இடைத் தொடர்பு கொண்ட தேசியப் பொருளாதாரங்களின் ஒரு பன்முக அமைப்பேயாகும். சம்பந்தப்பட்ட சோஷலிச அரசுகள் இணைப்பாக்கத்தைப் பயனுள்ள முறையில் வழிகாட்டி முறைப்படுத்தி வருகின்றன.

சர்வதேச சோஷலிச இணைப்பாக்கம் ஒத்துழைப்பின் வளர்ச்சியில் ஓர் ஆழமான விஞ்ஞான அணுகு முறையை யும், அதன் நிறைவேற்றத்தில் முரணற்ற போக்கையும் கோருகிறது. பொருளாதார உதவி அவை நாடுகளைப் பொருளாதார மற்றும் அரசியல் வழியில் மேலும் நெருக் கமாகக் கொண்டுவரக் கூடிய வடிவங்களையும் முறைகளை யும், உலக சோஷலிச சக்திகளை வலுப்படுத்தும் நடவடிக் கைகளையும் தொடர்ந்து மேம்படுத்துவதற்கு இது ஏற்பாடு செய்கிறது.

இந்தக் கூட்டமைப்பு தனது வளர்ச்சியில் பல கட்டங் களைத் தாண்டி விட்டது. நிறுவப்பட்ட பொழுது பரஸ் பரப் பொருளாதார உதவி அவை அமைப்பானது, அயல் துறை வர்த்தகம், தொழில்நுட்ப உதவி மற்றும் விஞ்ஞான-தொழில்நுட்ப ஒத்துழைப்பில் உறுப்பு நாடுகளின் நடவ டிக்கைகளை ஒருமுகப்படுத்துவதை வலியுறுத்தியது. அந்த சமயம் பல இருதரப்பு (ஓராண்டு பின்னர் நீண்ட காலத் திற்கான) வர்த்தக உடன்படிக்கைகள் செய்து கொள்ளப் பட்டன. எனினும் காலம் செல்லச் செல்ல இந்த உடன் படிக்கைகள் சம்பந்தப்பட்ட நாடுகளிடையான பொரு ளாதார ஒத்துழைப்பை முழுமையாக உறுதி செய்யும் நிலையில் இருக்கவில்லை, பலதரப்பு ஒத்துழைப்பின் அடிப் படையில் இடைத்தொடர்புடைய தொழில்களுக்கான திட்

டங்களை ஒருமுகப்படுத்துவது ஆரம்பமாயிற்று. தொழில் மயமாக்குதல் மற்றும் இதர சமூக-பொருளாதார மாற்றங்களின் விளைவாக தனிப்பட்ட நாடுகளில் உரிய உள்நாட்டுப் பொருளாதார முன்தேவைகள் உருவாக்கப்பட்டிருந்தன. வெவ்வேறு துறைகளிலான புதிய நிரந்தரக் கமிஷன்கள் நிறுவப்பட்டன, மற்றும் தேசியப் பொருளாதாரத் திட்டங்களை ஒருமுகப்படுத்தும் வேலை தொடங்கிற்று. திட்டங்களை ஒருமுகப்படுத்துவதே படிப்படியாகப் பரஸ்பரப் பொருளாதார உதவி அவையின் பிரதான செயல் வடிவமாகவும் சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையை முறைப்படுத்தும் பிரதான சாதனமாகவும் இருந்தது. உற்பத்தியில் திட்டமிட்ட தனித்தேர்ச்சியும் ஒத்துழைப்பும், சர்வதேச முக்கியத்துவம் உடைய பல பெரிய பொருளாதார நிர்மாணப் பணிகளில் கூட்டு முதலீடுகளும் வளர்ச்சி பெறலாயின.

சோஷலிச நாடுகளினிடையிலான இந்த ஒத்துழைப்பு மிகவும் பயனுறுதியுடையதாகும். பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகள் பரஸ்பர வர்த்தகமூலம் தமது இறக்குமதிப் பண்டங்கள் தேவையில் பெரும் பகுதியை நிறைவு செய்து கொள்கின்றன. இவ்வாறாக அவை எரிபொருள், மின்சாரம், அணு சக்தி மூலப் பொருட்கள், தேனிரும்பு, அலுமினியம், வெட்டுமரம், உருட்டு இரும்பு மற்றும் உருக்குத் தேவைகள் ஆகியவற்றில் அவசியமானவற்றை ஏறத்தாழ முற்றிலும் நிறைவு செய்து கொள்கின்றன; இரும்பல்லாத உலோகங்கள் பெரும்பாலானவற்றில், இரும்பு தாது, கனி உரங்கள் மற்றும் செல்லுலாயிட்டில் 80 முதல் 90 சத விகிதத்தையும் யந்திரம் மற்றும் சாதனங்கள் தேவையில் 95 சதவிகிதத்திற்கு மேலும் நிறைவு செய்து கொள்கின்றன.

செக்கோஸ்லோவாக்கிய கம்யூனிஸ்டுக் கட்சியின் 14ஆவது காங்கிரசில் சமர்ப்பித்த தமது அறிக்கையில் லுபமீர் ஷ்ட்ருகல் (செக்கோஸ்லோவாக்கிய அரசாங்கத்தின் தலைவர்) கூறினார்: ''எமது இயற்கை மற்றும் பொருளாதார நிலைமைகளில், சக்தி மற்றும் மூலப் பொருள்களில் கூடுதல் மூலவளங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளின் குறைவும் ஓரளவுக்குக் குறுகிய மார்க்கெட்டும் உள்ள நிலை

யில் சோவியத் பொருளாதாரத்துடன் மேலதிகமான இணைப்பாக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல், இதர சோஷலிச நாடுகளின் ஜீவாதார முக்கியத்துவமுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் சோவியத் ஒன்றியத்தின் சர்வதேசிய அணுகுமுறை இல்லாமல், உரிய திட்டங்களை நிறைவேற்றுவது சாத்தியம் அல்ல; உலகின் கச்சாப் பொருள் வளங்களை அடைவதற்கு முதலாளித்துவ ஏகபோகங்கள் சகல முயற்சிகளையும் புரிந்து வரும் சமயத்தில் சோவியத் ஒன்றியம் செக்கோஸ்லோவாக்கியாவும் இதர பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளும் சோவியத் இயற்கை வளங்களை வளர்ப்பதில் ஈடுபடுவதைச் சாத்தியமாக்கியுள்ளது, நமக்கு ஜீவாதாரமான முக்கியத்துவம் உள்ள மூலப் பொருட்களை நீண்ட காலத்திற்குத் தந்து உதவுவதை உத்தரவாதம் செய்கிறது. சோவியத் ஒன்றியத்தோடான ஒத்துழைப்பு, எமது செய்பொருள் தொழில் துறையைத் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் உற்பத்திச் செறிவின் ஒருமுகப்படுத்தல் ஆகிய அடிப்படையில் மேலும் பயன்திறனுடையதாக்குவதற்கான நிலைமைகளையும் ஊக்குவிப்புகளையும் உருவாக்குகிறது. சோவியத் உதவி இல்லாமல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சியில் பிறந்த பிரச்சினைகளுக்குத் திறம்படத் தீர்வு காண முடியாது, மற்றும் அணுசக்தித் தொழில், கணக்கீடு யந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் உற்பத்தியை விரிவாக்குதல், பிராகில் பாதாள ரயில் நிர்மாணம் போன்ற முதலீட்டுத் திட்டங்களை நிறைவேற்ற முடியாது''.

பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பு நிலைநாட்டப்பட்ட பிறகு, அவற்றின் எரிபொருள் மற்றும் மின்சார அடிப்படையினை வளர்த்து வலுப்படுத்தல், இதர நாடுகளை சோவியத் மின்சாரக் கோப்புடன் இணைத்தல், உலோகத் தொழில்களுக்கான மூலப்பொருட்களுக்கு வகை செய்தல் போன்ற முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது. உற்பத்தியில் தனித்தேர்ச்சியும் கூட்டமைவும் ஒரே தரமான யந்திரங்கள் மற்றும் சாதனங்களை உற்பத்தி செய்ய உதவி, பரஸ்பரப் பண்ட வழங்குதலில் அவற்றின் பங்கை அதி

கரித்தது, தனிப்பட்ட நாடுகளில் இரசாயனத் தொழிலை வளர்த்தது, மென் தொழில் மற்றும் உணவுப்பண்டத் தொழில்கள், விவசாயம், போக்குவரத்து ஆகியவற்றின் வளர்ச்சியில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவியது.

1969 ஏப்ரல் மாதம் நடைபெற்ற பரஸ்பரப் பொருளாதார உதவி அவையின் 23ஆவது (விசேஷ) கூட்டத்தில் அங்கீகரித்த முடிவுகளும் 1971 ஆகஸ்டில் நடந்த அதன் 25ஆவது கூட்டத்தில் ஏற்கப்பட்ட பன்முக வேலைத்திட்டமும் உறுதியான ஓர் அடித்தளத்தை உருவாக்கி, சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையின் வளர்ச்சி மற்றும் அவற்றுக்கிடையிலான பொருளாதார உறவுகளால் உருவாக்கப் பெற்ற புதிய உயர்ந்த கட்டத்தில் சோதர நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பின் திசையினை நிர்ணயம் செய்கின்றன.

பொருளாதார மற்றும் அரசியல் காரணிகள் பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தி, சோஷலிசப் பொருளாதார இணைப்பாக்கத்தை வளர்க்க வேண்டுவதன் புறநிலைத் தேவையைத் தோற்றுவித்துள்ளன.

விஞ்ஞானத்திலும் மற்றும் தொழில்நுட்பத்திலுமான புரட்சி வளர்ந்து வரும் சமயத்தில் உழைப்புப் பிரிவினையை ஆழமாக்குவதும், தனித்தேர்ச்சி தன்மையுடைய ஒரே தரமான வகையிலான பெருவீத உற்பத்தியை அபிவிருத்தி செய்வது மூலமும் உழைப்பு உற்பத்தித் திறனின் பயனை உயர்த்த முடியும்.

இதற்கு உதாரணங்களாக சோவியத் ஒன்றியம் மற்றும் இதர நாடுகளிலும் உற்பத்தியான பகுதிகள் மற்றும் பாகங்களைப் பயன்படுத்திப் பேருந்துகள் உற்பத்தியில் ஹங்கேரி மோட்டார் தொழிலின் தனித் தேர்ச்சியும், யந்திரப் பகுதிகளில் தனித்தேர்ச்சிக்கு அடிப்படையாக போலந்து மற்றும் செக்கோஸ்லோவாக்கிய டிராக்டர்கள் உற்பத்தியையும் சுட்டிக் காட்டலாம். ஆனால் இன்றைய உற்பத்தியிலான சர்வதேசத் தனித்தேர்ச்சி மற்றும் கூட்டமைவு பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளைத் திருப்தி செய்யும் அளவுக்குச் செல்லவில்லை. சோஷலிசப் பொருளாதார இணைப்பாக்கத்தின் இந்த முற்போக்கான வடிவம்

இப்போது மேலும் வளர்க்கப்பட வேண்டும். சர்வதேச தனித்தேர்ச்சி மற்றும் கூட்டமைவு மேலும் அதிகமாக வளர்ச்சியடைய வேண்டுமானால், உலக சோஷலிசப் பொருளாதாரத்தின் உற்பத்தி நடைமுறையில் அவை ஒவ்வொன்றும் உரிய பங்கு வகிக்கும் நோக்கத்துடன் எல்லா தேசிய உற்பத்திக் கட்டமைப்புகளையும் மேம்படுத்த வேண்டுவது அவசியம்.

எல்லா வகையான இயற்கை மூலவளங்களிலும் செழுமையுடன் விளங்கும் பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடு சோவியத் ஒன்றியம் மட்டுமே. எனவே இயற்கை மூலவளங்களைக் கொண்ட நாடுகள், தமது உள்நாட்டுத் தேவைகளையும் இதர உறுப்பு நாடுகளின் தேவைகளையும் நிறைவேற்றும் நோக்கத்துடன் எரிபொருள் மற்றும் மூலப் பொருள்கள் துறைகளை வளர்க்க வேண்டும். பரஸ்பர நன்மைக்கான பல்வேறு வடிவிலான பலதரப்பு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நாடுகள் இந்தத் துறைகளை அபிவிருத்தி செய்யக் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று பன்முக வேலைத்திட்டம் எதிர்நோக்குகிறது. பல உறுப்பு நாடுகள் தமது முயற்சிகளை ஒன்றுதிரட்டி கூட்டுமுறையில் சுரங்கத் திட்டங்களைத் தொடங்கியுள்ளன. இவற்றில் கிங்கிசேஃப் (சோவியத் ஒன்றியம்) பாஸ்போரைட் சுரங்கம், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலும் சோவியத் ஒன்றியத்திலுமான பொட்டாசியம் நைட்ரேட் சுரங்கங்கள் உட்படும். 'துருஷ்பா' எண்ணெய்க் குழாய்ப் பாதை கூட்டு முறையில் சோவியத் ஒன்றியம், போலந்து, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லோவாக்கிய மற்றும் ஹங்கேரியால் நிறுவப்பட்டதாகும். 'மீர்' மின்சாரத் திட்டம் (அல்பேனியா தவிர்த்த) ஐரோப்பிய சோஷலிச நாடுகளின் மின்சாரக் கோப்புகளை இணைக்கிறது. எரிபொருள் மற்றும் மூலப் பொருட்களைத் தோண்டி எடுக்கவும் மின்சக்தி உற்பத்திக்குமான மேலதிகமான நிறுவனங்கள் விரைவில் கட்டப்படும்.

பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளிடையே ஒத்துழைப்பும் மற்றும் சோஷலிசப் பொருளாதார இணைப்பாக்கமும் சோஷலிச சர்வதேசியம், சுதந்திரம், தேசிய நலன்கள், பூரண சமத்துவம், பரஸ்பர நன்மை, நட்பு

முறை பரஸ்பர உதவி, நாட்டின் அரசுரிமையை மதித்தல் கருராகக் கடைப்பிடித்தல் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் தொடர்ந்து வளர்க்கப்படும். நாடுகளிடையிலான புது வடிவிலான உறவுகளில் இந்த மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளின் ஜீவசக்தியை வரலாற்று அனுபவம் காட்டியுள்ளது. இவை ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிச நிர்மாணத்தின் மூலமும் உலக சோஷலிச அமைப்பின் வளர்ச்சியாலும் எழும் எதார்த்தத் தேவைகளைப் பூரணமாக நிறைவேற்றுகிறது. இந்த உறவுகள் உறுதியான அடிப்படையில் விரிவான பயனுள்ள சர்வதேச ஒத்துழைப்பை வளர்க்க உதவுகின்றன.

பன்முக வேலைத்திட்டம் எதிர்நோக்கியுள்ள நடவடிக்கைகள் உற்பத்தி சக்திகளை வளர்க்கவும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும், வாழ்க்கைத் தரங்களை உயர்த்தவும், தற்காப்பு ஆற்றலை வலுப்படுத்தவும் திட்டமிடப்பட்டவையாகும். இது முதலும் முக்கியமுமாக பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளின் முன் உள்ள பிரதான அரசியல் மற்றும் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வைக் கோருகிறது. செக்கோஸ்லோவாக்கிய கம்யூனிஸ்டுக் கட்சியின் 14ஆவது காங்கிரசுக்குச் சமர்ப்பித்த தமது அறிக்கையில் குஸ்தவ் ஹூசக் கூறினார்: ''எமது பொருளாதாரத்தின் வர்க்க மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை, அதன் சோஷலிச வாய்ப்புகள் என்ற நிலையிலிருந்து பார்க்கும் போது சர்வதேச சோஷலிச இணைப்பாக்கம் எமக்கும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்''.

இன்று, பன்முக வேலைத்திட்டம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உறுப்பு நாடுகளுக்கு உதவி புரியும் தீவிர அமைப்பாளன் என்ற முறையில் பரஸ்பரப் பொருளாதார உதவி அவையின் முக்கியத்துவம் பெருகி வருகிறது. ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பணிகளை எல்லாம் அது ஒருமுகப்படுத்துகிறது, இந்தத் திட்டத்தைப் பயனுறுதியுடன் செயலாக்குவதற்கான நெளிவு சுளிவான வடிவங்களை நாடுகிறது.

பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளின் மத்தியத் திட்ட அமைப்புகள் திட்டமிடுதலிலான ஒத்து

ழைப்பை மேம்படுத்துவதில் கேந்திரமான பங்கு வகிக்கின்றன. 1971 ஆகஸ்டில் நடைபெற்ற அதன் 25ஆவது கூட்டத்தில் பரஸ்பரப் பொருளாதார உதவி அவை இந்த அமைப்புக்களின் பங்கையும் பொறுப்பையும் உயர்த்துவதற்காகத் திட்டமிடலிலான ஒத்துழைப்புக் குழுவினை நிறுவியது. சோஷலிச இணைப்பாக்கத்தை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் பிரதான முறை தேசியப் பொருளாதாரத் திட்டங்களை ஒருமுகப்படுத்துவதே, இதைச் செயல்படுத்தும் பிரதான சாதனம் பண்ட-பண உறவுகளே. பன்முக வேலைத்திட்டமானது உறுப்பு நாடுகளிடையிலான வர்த்தக வளர்ச்சிக்கும், உலக சோஷலிச மார்க்கெட்டில் விலை நிர்ணயம், பணம், நிதி மற்றும் கடன் வசதி ஆகிய உறவுகள் பற்றிய பிரச்சினைகளுக்கும் மாபெரும் முக்கியத்துவம் அளிக்கிறது.

சர்வதேச சோஷலிச நாணயம் என்ற முறையில் தனது பங்கை மேலும் முழுமையாக வகிப்பதனை சாத்தியமாக்கும் நோக்கத்துடன் கூட்டு நாணயத்தின் (மாற்றத்தக்க ரூபிள்) பங்கை அதிகரிப்பதற்கான அவசியமான பொருளாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகளை பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகள் விரித்துரைத்து நிறைவேற்றி வருகின்றன. சர்வதேச வங்கி தனது செயல்பாடுகளை விரிவாக்கியுள்ளது.

உறுப்பு நாடுகளின் அமைச்சுகள், அரசாங்க இலாகாக்கள் இதர அரசு அமைப்புகள் இடையிலும், பொருளாதார, ஆராய்ச்சி மற்றும் வரை வடிவமைப்பு நிறுவனங்கள் இடையிலும் உருவாகும் நேரடி பந்தங்கள் வெளித்துறைப் பொருளாதார உறவுகள் அமைப்பின் இன்றியமையாத பகுதியாகும். 1976-1980ஆம் ஆண்டுகளுக்கான தேசியப் பொருளாதாரத் திட்டங்களை ஒருமுகப் படுத்துவதில் ஏறத்தாழ எல்லா தொழில்துறை அமைச்சுகளும் பல பெரிய பொருளாதார அமைப்புகளும் கலந்து கொண்டன. இதன் விளைவாக சோவியத் ஒன்றியம் மற்றும் இதர உறுப்பு நாடுகளின் அமைச்சுகளிடையே ஐந்தாண்டு காலத்திற்கான உற்பத்தியில் தனித்தேர்ச்சி மற்றும் கூட்டமைவு மீதான பல உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. இந்த உடன்படிக்கைகள் பிரதானமாயும் ஆராய்ச்சி, வரை வடிவமைத்

தல், தொழில் மற்றும் நுகர்வுப் பண்டங்கள் உற்பத்தி சம்பந்தப்பட்டவையாகும்.

பன்முக வேலைத்திட்டம் தற்போது நிலவும், மற்றும் எதிர்காலத்தில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேசப் பொருளாதார அமைப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் பல நடவடிக்கைகளை விரிவுபடுத்திச் செயல்படுத்துவதை எதிர்நோக்குகிறது. சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினை மற்றும் சோஷலிச நாடுகளிடையான ஒத்துழைப்பின் பொதுக் கோட்பாடுகளை அடிப்படையாக்கி நிறுவப்பெற்ற இந்த அமைப்புகள் இணைப்பாக்கத்தைப் பெருமளவுக்கு ஊக்குவிக்கின்றன. அவற்றில் ரயில்பாதை, உலோகத் தொழில், பால்பேரிங் மற்றும் இரசாயன துறைகளிலான அமைப்புகள் உட்படும். போக்குவரத்து யந்திர நிர்மாணம் மற்றும் விவசாய யந்திர நிர்மாணம் ஆகியவற்றில் இருதரப்பு மற்றும் முத்தரப்பு அமைப்புகள் பல தரப்பு சர்வதேச அமைப்புகளுக்கும் கூடுதலாக நிறுவப் பட்டுள்ளன.

சோஷலிச இணைப்பாக்கத்தை வளர்ப்பதன் வாயிலாக, பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகள் தனிப் பட்டுப் பிரிந்த ஒரு பொருளாதாரக் கூட்டமைப்பை நிறுவ உத்தேசிக்கவில்லை. இதில் சேர்ந்திராத எந்த நாடும் பன்முக வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஓரளவுக்கோ அல்லது முழுமையாகவோ பங்கு கொள்ளலாம். இது பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகள் கடைப்பிடித்து வரும் சமாதான சகவாழ்வுக் கொள்கைக்கு முற்றிலும் பொருத்தமானது, சமூக முன்னேற்றத்தின் நலன்களுக்காக அந்த நாடுகள் சமத்துவம், பரஸ்பர நன்மை, சமாதானம், அரசுரிமையை மதித்தல் என்ற அடிப்படையில் இதர நாடுகளுடன், அவற்றின் சமூக மற்றும் அரசியல் அமைப்பு எதுவாக இருந்த போதிலும், தொடர்ந்து பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப உறவுகளை வளர்த்துக் கொள்ளும்.

சோஷலிச நாடுகளின் பொருளாதார வளர்ச்சியிலான புதிய கட்டங்களும் மேலதிகமான பொருளாதாரத் தனித் தேர்ச்சியும் கூட்டமைவும் அரசியலில் தக்கதான முற்போக்கு மாற்றங்களை ஏற்படுத்துகின்றன, அவற்றின் அரசு

ரிமையின் வளர்ச்சி பற்றிய பல பிரச்சினைகளைப் புதிய வழியில் எழுப்புகின்றன. இதனுல் அரசியல் இணைப்பாக்கம் தற்பொழுது நடைபெறுகிறது என்று பொருள் அல்ல; அதாவது இணைப்பாக்கம் செய்துள்ள நாடுகளின் அரசியல் கட்டமைப்புகள் அழிக்கப்படுகின்றன என்ருே, தேசிய சுதந்திரத்தின் பிரதான அம்சங்கள் மறைந்து வருகின்றன என்ருே, தேசிய அரசாங்க மற்றும் கண்காணிப்பு அமைப்புகளும் அகற்றப்பட்டு அவற்றின் இடத்தில் தேசாதீத அமைப்புகள் நிறுவப்படுகின்றன என்ருே அர்த்தமல்ல. இணைப்பாக்கம் செய்யும் நாடுகளின் அரசுரிமைக்கு மதிப்பளிப்பது சோஷலிசப் பொருளாதார இணைப்பாக்கத்தின் மிகவும் முக்கியமான அரசியல்-சட்ட அம்சமாகும். இது சோஷலிச இணைப்பாக்கத்தை முதலாளித்துவ இணைப்பாக்கத்திடமிருந்து வேறுபடுத்துகிறது.

லெனின் எழுதினுர்: ''சோஷலிச இயக்கம் தந்தையர் நாட்டின் பழைய கட்டுக்கோப்புக்குள் வெற்றி காண முடியாது. அது புதிய மேன்மையான வடிவங்களிலான மனித சமுதாயத்தை உருவாக்குகிறது. இதன் கீழ் ஒவ்வொரு தேசிய இனத்தினையும் சேர்ந்த உழைக்கும் வெகுஜனங்களின் நியாயமான தேவைகளும் மற்றும் முற்போக்கான அபிலாஷைகளும், நிலவும் தேசியப் பிரிவினைகள் அகற்றப்படும் பட்சத்தில், முதல் தடவையாக சர்வதேச ஒற்றுமை மூலம் நிறைவேற்றப்படும்''[1].

பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளின் அரசுரிமையை வலுப்படுத்தும் நோக்கம் கொண்டதான சோஷலிசப் பொருளாதார இணைப்பாக்கம் அவற்றின் சர்வசுதந்திர சமத்துவத்திற்குத் தேவையான எதார்த்த நிலைமைகளைப் படைக்கிறது மற்றும் அதற்கு உத்தரவாதமும் அளிக்கிறது. பரஸ்பரப் பொருளாதார உதவி அவை சாசனத்தின் விதி 1, பாரா 2 கூறுவதாவது: ''பரஸ்பரப் பொருளாதார உதவி அவை உறுப்பு நாடுகளின் சர்வசுதந்திர சமத்துவத்தை அடிப்படையாக்கியதாகும். உறுப்பு

---

[1] வி. இ. லெனின், ''சோஷலிச அகிலத்தின் நிலை மற்றும் கடமைகள்'', (V. I. Lenin, *Collected Works*, Vol. 21, pp. 38-39).

நாடுகளிடையிலான பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, பூரண சமத்துவம், அரசுரிமைக்கும் தேசிய நலன்களுக்கும் மதிப்பு, பரஸ்பர நன்மை மற்றும் நட்புமுறை பரஸ்பர உதவி என்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்''.

பரஸ்பரப் பொருளாதார உதவி அவையில் சேர்ந்த உறுப்பு நாடுகளின் சர்வசுதந்திர சமத்துவக் கோட்பாடு இதன் அமைப்புகளில் அவற்றுக்குச் சம பிரதிநிதித்துவம் இருப்பதாலும் சமமான உரிமைகள் கடமைகள் இருப்பதாலும் முரணின்றிக் கடைப்பிடிக்கப்படுகிறது. பரஸ்பரம் அனுகூலமான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் நட்புமுறை பரஸ்பர உதவி என்ற கோட்பாடுகள் அவற்றின் சுதந்திரம், சமத்துவம், அவற்றின் உறவுகளில் பரஸ்பர அனுகூலம் ஆகியவற்றை உத்தரவாதம் செய்கின்றன, இவை ஒருதரப்பான சாதகங்களுக்கோ அனுகூலங்களுக்கோ இடமளிப்பதில்லை. இவ்வாறாக ஒவ்வொரு உறுப்பு நாட்டுக்கும் இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகளின் அடிப்படையில் அவை வழங்கும் பொருட்களுக்கு சமமதிப்புள்ள ஈடு செலுத்துவது உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

பரஸ்பரப் பொருளாதார உதவி அவை அதீத தேசிய அல்லது ஒரு நிர்வாக அமைப்பு அல்ல. சர்வதேச மற்றும் சட்டத் துறை இயல்பில் இது இணக்கத் தன்மை கொண்ட அமைப்பாகும். அதன் சாசனத்தின் விதி 4 பாரா 3, சம்பந்தப்பட்ட உறுப்பு நாடுகளின் ஒப்புதலுடன் மட்டுமே அவையின் முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் அங்கீகரிக்கப்படலாம் என்பதற்கு வகை செய்கிறது. இந்த அவை பரிசீலனை செய்யும் ஒவ்வொரு பிரச்சினையிலும் எந்த ஒரு உறுப்பு நாடும் கட்சியாக முன்வரலாம்.

இதன் ஒருமனம் பற்றிய கோட்பாடும் மிகவும் முக்கியமானது, இது உறுப்பு நாடுகளின் சமத்துவத்தை உத்தரவாதம் செய்கிறது மற்றும் ஒருமுகப்படுத்தப் பெற்ற முடிவுகளை எடுக்க உதவுகிறது. இவை அவற்றின் உரிமைகள் மற்றும் நலன்களின் எவ்விதச் சேதத்திற்கும் இடந்தருவதில்லை. இது உறுப்பு நாடுகள் தமது நலன்களுக்கு நேர்மாறான முடிவுகளையோ ஆலோசனைகளையோ அங்கீகரிப்

பதிலிருந்து பாதுகாப்பளிக்கிறது, உண்மையில் இதில் அக்கரை கொண்டுள்ள நாடுகளுக்கு ''ரத்து'' உரிமையை வழங்குகிறது.

பரஸ்பரப் பொருளாதார உதவி அவை பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு சம்பந்த மான சில நடவடிக்கைகள் எடுக்கும்படி ஒரு நாட்டை கேட்டுக் கொள்ளும் ஆலோசனைகளை அங்கீகரிக்கிறது[1]. இவை உறுப்பு நாடுகளின் சர்வசுதந்திர சித்தத்தைக் கட்டுப் படுத்துவதில்லை, ஏனெனில் அவை சம்பந்தப்பட்ட நாட்டி ஞல் அங்கீகரிக்கப்பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே அவற்றுக்குக் கட்டாயமாக இருக்கும்[2]. ஒரு நாடு ஒரு ஆலோசனையை ஏற்றுக் கொள்ளுமாஞல் அது பின்ஞல் ஒரு விதியாகி சம்பந்தப்பட்ட நாட்டுக்கும் அவை முழுவதற்கும் ஒரு சில உரிமைகளும் கடமைகளும் எழுகின் றன. பரஸ்பரப் பொருளாதார உதவி அவையின் சாச னத்தின் கீழ் கவுன்சிலின் ஆலோசனையை ஏற்றுக் கொண்ட ஒரு நாடு அதன்படி நடந்து கொள்ள வேண்டும், அது எவ் வாறு நிறைவேற்றப்படுகிறது என்பது குறித்து அவைக்குத் தெரிவிக்க வேண்டும்; பரஸ்பரப் பொருளாதார உதவி அவை செய்த ஆலோசனைகள் உறுப்பு நாடுகளிடையான உடன்படிக்கைகளுக்கு சட்ட அடிப்படையாகும்.

பரஸ்பரப் பொருளாதார உதவி அவை நாடுகளிடை யான பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் வளர்ச்சியைத் தொடர்ந்து தேசிய சட்ட நியதிகளில் ஒழுங்குபடுத்தலும் ஒருமுகப்படுத்தலும் நடை

---

[1] ஒழுங்கமைப்பு மற்றும் செயல்முறைப் பிரச்சினைகள் பற்றி இது, உறுப்பு நாடுகள் கட்டாயம் அனுசரிக்க வேண் டிய நியம விதிகளை மேற்கொள்ளும்.

[2] பரஸ்பரப் பொருளாதார உதவி அவை செய்யும் ஆலோசனைகள் உறுப்பு நாடுகளின் பரிசீலனைக்காக அவற் றுக்கு அறிவிக்கப்படுகின்றன. ஆலோசனை எந்த நாட்டுக்குச் செய்யப்பட்டுள்ளதோ அது தனது அரசாங்கமோ அல்லது அதிகாரத் தகமையுள்ள இதர அமைப்புகளோ நடத்திய பரிசீலனையின் விளைவுகள் பற்றி அவையின் செயலாளர் அல்லது செயற்குழுவின் தக்கதான இலாகாவுக்கு 60 தினங் களுக்குள் அறிக்கை செய்தல் வேண்டும்.

பெறுகிறது. ஆனால் இந்த நடைமுறை அரசுரிமைக் கோட்பாட்டுக்குக் கரூராக ஒத்த வகையில் செயல்படுகிறது. இந்த விஷயத்தில் பிரதான நடவடிக்கை நாடுகளின் சர்வ சுதந்திர சித்தத்தை ஒருமுகப்படுத்தி உள்நாட்டுச் சட்டத்தில் இணைக்கப் பெற்ற ஒரேதரமான சட்டநியதிகளை உருவாக்கும் திசையிலும், தேசிய சட்டநியதிகளை ஒருமுகப்படுத்தும் திசையிலும் நெறியாக்கம் செய்யப்படுகிறது.

முதலாளித்துவ உலகின் பல்வேறு பகுதிகளில் முதலாளித்துவ இணைப்பாக்கம் இப்போது விரிவாக வளர்ந்து வருகிறது. இது முதலாளித்துவ வளர்ச்சியின் முக்கியமான கூறு, இது முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரம் மற்றும் அரசியல் மீது பலமான செல்வாக்குச் செலுத்துகிறது.

முதலாளித்துவம் வளர்ச்சியடைவதால் முதலாளி வர்க்கம் நாடுகளைப் பொருளாதார அடிப்படையிலும் அரசியல் ரீதியாகவும் இணைக்க விழைகிறது. இது முதலாளித்துவத்தின் வளர்ச்சியிலான அரசு-ஏகபோக கட்டத்தில் விசேஷமாயும் காணக் கிடக்கிறது. இந்த விழைவு பொருளாதாரத்தையும் மூலதனத்தையும் சர்வதேச உடைமையாக்கி, தேசிய எல்லைகளை அகற்றி, தேசிய மார்க்கெட்டுகளைத் திறந்து சர்வதேச முதலாளித்துவ ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கான போக்கின் எதார்த்த விளைவாகும்.

1969 ஜூன் மாதம் மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு அங்கீகரித்த பிரதான தஸ்தாவேஜு கூறுவதாவது: ''இரு அமைப்புகளுக்கு இடையிலான போராட்ட நிலைமைகளுக்கும், விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் கோரிக்கைகளுக்கும் தன்னைத் தானே சரிப்படுத்திக் கொள்ள முயலும் இன்றைய ஏகாதிபத்தியத்திற்குச் சில புதிய அம்சங்கள் உள்ளன. அதன் அரசு-ஏகபோகத் தன்மை மேலும் எடுப்பாகக் காட்சி தருகிறது. அது உற்பத்தி, மூலதனம் விஷயத்தில் அரசுத் தூண்டுதலுடனான ஏகபோகக் குவிதல், நாடுதழுவிய அளவில் பொருளாதார வளர்ச்சி வேலைத்திட்டங்களை வரைதல், ஏகாதிபத்திய இணைப்பாக்கக் கொள்கையையும் புது வடிவிலான மூலதன ஏற்றுமதியையும்

கையாளுதல் போன்ற நடவடிக்கைகளை மிகவும் பரவலாகவும் அதிகமாகவும் கையாளுகிறது.[1]

முதலாளித்துவ நாடுகள் பல தனிமைப்பட்ட பொருளாதாரக் கோஷ்டிகளை நிறுவியது இந்த நிகழ்ச்சிப் போக்குகளின் விளைவேயாகும். இந்தக் கோஷ்டிகளில் மேற்கு ஐரோப்பாவிலான ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு (EEC), இது ''பொது மார்க்கெட்'' என்று அறியப்படுவது, ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்குக் கூட்டமைப்பு (ECSC), ஐரோப்பிய அணுசக்திக் கூட்டமைப்பு (Euratom), ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கம் (EFTA) மற்றும் லத்தின் அமெரிக்க சுதந்திர வர்த்தக சங்கம் (LAFTA) உட்படும்.

ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஆளும் வட்டங்கள் பொது மார்க்கெட்டைத் தனிமைப்பட்டதான அரசியல்-பொருளாதார சங்கமாக நிறுவியிருந்தன. ஆனால் பொது மார்க்கெட் நடத்தி வரும் செயல்பாடுகள் இணைப் பாக்கத்தின் உதவியுடன் ஆளும் ஏகபோக வட்டங்கள் நிறைவேற்ற விரும்பிய கடமைகளின் கட்டுக்கோப்பை விஞ்சி விட்டன. இதற்குக் காரணம் முதலாளித்துவ இணைப் பாக்கத்தின் உள்ளார்ந்த முரண்பாடுகளே, இவை இணைப் பாக்கம் வளர்ச்சியடையுந்தோறும் அதிகரிக்கின்றன. இந்த முரண்பாடுகளில் முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடான—உழைப்புக்கும் மூலதனத்திற்கும் இடையிலானதும்—இணைந்து வரும் நாடுகளிடையான (இவற்றை அகற்ற இணைப்பாக்கம் எதையும் செய்யவில்லை) பொருளாதார, அரசியல், கலாசார வித்தியாசங்களும் உட்படும்.

ஏகாதிபத்தியத்தின் கீழ் ஏகபோகங்கள் இணைப்பாக்கத்தின் அடிப்படைக் கூறுகளாகி விடுகின்றன. எனினும் அதே சமயம் உள்ளார்ந்து பொருளாதார மற்றும் அரசியல் ஆதிக்கத்தோடு கூடிய ஏகபோகம் (ஒரு சமூக-பொருளாதார வகையினம் என்ற முறையில்) இணைப்பாக்கத்தை எதிர்த்து வேலை செய்யும் பிரிவினை சக்திகள் இயங்குவதற்

---

[1] *International Meeting of Communist and Workers' Parties, Moscow, 1969*, Prague, 1969, p. 18.

கான நிலைமைகளை உருவாக்குகிறது. ஏகபோக முதலாளித்துவத்தின் நலன்களைப் பேணவும் உள்நாட்டிலும் மற்றும் உலக அரங்கிலும் அதன் நிலைமைகளை வலுப்படுத்தவும் உதவும் வரை இணைப்பாக்கத்தை முதலாளித்துவ அரசு ஊக்குவிக்கிறது. ஏகபோகங்கள் நிலவும் வரை பல்வேறு நாடுகளின் ஏகபோகக் கோஷ்டிகள் தொடர்ந்து ஒன்றுக்கொன்று போட்டியிடும். ஏகாதிபத்திய முரண்பாடுகள், முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான போட்டி மற்றும் பிரிவினை நோக்கிய போக்குகள் ஆகியவை, தனிப்பட்ட ஏகாதிபத்திய நாடுகளின் தேசியத் தனித்தன்மைகள், ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தில் மற்றும் கொள்கையில் அவற்றின் சமத்துவமற்ற நிலைமை, அவற்றின் அரசு-ஏகபோகக் கட்டமைப்பில் தேசிய தனிப்பண்புகள் தொடர்ந்து நிலவும் வரை நீடித்து நிலவும். இதுவே அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் இயக்கவியல் போக்கு.

உற்பத்தி சக்திகளையும் சர்வதேச உழைப்புப் பிரிவினையையும் அபிவிருத்தி செய்ய வேண்டுவதன் தேவையிலிருந்து பிறந்ததான இணைப்பாக்கம், முதலாளித்துவ உற்பத்தி வளர்ச்சியில் ஒரு முன்னேற்றப் படியாகும். ஆனால் இணைப்பாக்கம் முதலாளித்துவத்தில் உள்ளார்ந்து கிடக்கும் முரண்பாடுகளைத் தீர்க்க முடியாது, சமமாக வளர்வதற்கு அனுமதிக்க முடியாது, உற்பத்தியில் அராஜகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாது, முதலாளித்துவப் போட்டி, நெருக்கடிகள், வீழ்ச்சிகள், வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் சமுதாய அசமத்துவங்களை அகற்ற முடியாது.

ஜனநாயக மக்கட்பகுதிகளும் தொழிலாளர்களும் ஏகபோகங்களின் சூழ்ச்சிகளைப் பலமாக எதிர்த்து வருகிறார்கள். முதலாளித்துவ ஏகபோகங்கள் இணைப்பாக்கத்தைப் பயன்படுத்தி உழைக்கும் மக்களை மேலும் கடுமையாகச் சுரண்ட முயல்கின்றன, ஆனால் தொழிலாளர்கள் தமது ஜீவாதார உரிமைகளுக்கும் நலன்களுக்குமான வர்க்கப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள். உழைக்கும் மக்களும் அவர்களது வர்க்க அமைப்புகளும், முதலாளித்துவ இணைப்பாக்கத்திற்கு ஒரு ஜனநாயக மாற்றுத் திட்டத்தை முன்வைத்து, தமது ஜீவாதாரத் தேவைகளை

நிறைவு செய்து கொள்வதற்காக உறுதியான போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

முதலாளித்துவ அரசுரிமையைக் கட்டுப்படுத்தும் போக்கு, முதலாளித்துவ உலகில் பொருளாதார மற்றும் அரசியல் இணைப்பாக்கத்தோடு கைகோர்த்துச் செல்கிறது. இது யுத்தப் பிற்கால கட்டத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுக் கொள்கையின் பிரதான வளர்ச்சிப் போக்குகளில் ஒன்ருகி விட்டது. இது எல்லாவற்றுக்கும் மேலாக உலகில் தமது சக்திகளை ஒன்றுசேர்க்க ஆளும் ஏகாதிபத்திய வட்டங்கள் செய்யும் முயற்சியை வெளிப்படுத்துகிறது. அரசுரிமையைக் கட்டுப்படுத்த ஆளும் ஏகபோக வட்டங்கள் நடத்தும் முயற்சிகளும் முதலாளித்துவப் பொருளாதாரத்திலான எதார்த்த மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன. இந்த மாற்றங்கள் பொருளாதாரப் பந்தங்கள், உற்பத்தி, மூலதனம் ஆகியவற்றின் சர்வதேசத் தன்மை அதிகரிப்பாலும் சர்வதேச ஏகபோகங்களின் பெருக்கத்தாலும் தோன்றியவை, இந்த ஏகபோகங்கள் தமது செயல்பாடுகளைத் தமது சொந்த நாடுகளோடு நிறுத்திக் கொள்வதில்லை.

உலகத்தை அரசியல் அடிப்படையில் மறு அமைப்புச் செய்வது என்ற ஒருலகவாதக் கருத்தை முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் இப்போது முன்வைக்கிருர்கள், இது ''தேசியாதீத இணைப்பாக்கத்திற்கு'' இட்டுச் செல்லலாம் என்று வாதாடுகிருர்கள். இருபதாம் நூற்ருண்டில் தேசிய அரசுகளும் அரசுரிமைக் கருத்தமைப்புகளும் காலாவதியாகி விட்டதாயும் அவற்றை விட்டுவிட வேண்டும் என்றும் அவர்கள் கருதுகிருர்கள்.

தேசிய அரசு எல்லைகளை அகற்றி ஒரு சர்வதேச மார்க்கெட்டை நிறுவ வேண்டும் என்ற பொருளாதாரத் தேவை முதலாளித்துவத்தின் ஆக உயர்ந்த கட்டம் என்ற முறையில் ஏகாதிபத்தியத்தின் ஓர் உள்ளார்ந்த அம்சமாகும். ஏகாதிபத்திய நாடுகளின் அசமத்துவ வளர்ச்சியும் காலனி ஆட்சியை நிறுவுவதற்கான, பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கான, உலகினை மறுபிரிவினை செய்வதற்கான, காலனி மற்றும் சார்பு நாட்டு மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தடைசெய்வதற்கான முயற்சி

களுக்கு இடம் அளிக்கின்றது. நிதி முதலாளித்துவம் தேசிய சுதந்திரம் என்ற கோட்பாட்டை மறுக்க விரும்பியது ஏனெனில் அது சார்பு நாடுகளைச் சுரண்டி லாபம் திரட்டுவதை சாத்தியமாக்கும் என்று லெனின் கூறினர். இயல்பாகவே அரசுரிமை ஏகாதிபத்திய வட்டங்களுக்கு ஒரு தடையாகி விட்டது. பாட்டாளி வர்க்க மற்றும் தேசவிடுதலை இயக்கங்களுக்கு எதிரான தனது வர்க்க ''ஒருமைப்பாடு'' காரணமாகவும் ''கம்யூனிஸ அபாயத்தை'' எதிர்த்து உலகப் பிற்போக்கு சக்திகளை ஒன்றுசேர்க்க முயற்சி செய்வதாலும் முதலாளித்துவ வர்க்கம் அரசுரிமையின் பால் பகைமைக் கண்ணோட்டம் கொண்டிருக்கிறது. மேற்கு ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவம் எதிரிட நேர்ந்த இடர்ப்பாடுகள் காரணமாக அரசுரிமை என்ற கருத்து நெருக்கடியைக் கண்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா அளித்த ''உதவி'' நிபந்தனைகளைக் கொண்டதாக இருந்தது. போர் முடிந்த உடனேயே பெரும்பாலான அமெரிக்க உதவி அரசாங்கக் கடன்கள், பண்டங்கள் மற்றும் ராணுவ சாதனங்கள் வழங்கல் என்ற வடிவிலேயே அளிக்கப்பட்டது. எனவே இது நேரடி முதலீடாக இருக்கவில்லை. மேலும் இது முக்கியமான பொருளாதார மற்றும் அரசியல் சலுகைகள் கொண்டதாக இருந்தது. ஐரோப்பிய நாடுகள் தற்காப்பு சுங்கவரிகளை குறைக்கவும் அகற்றவுமான கட்டாயம் ஏற்பட்டது. மேலும் அவை அமெரிக்காவுடன் இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் செய்து கொண்டன. அதனுல் அமெரிக்க குடிமக்கள் ஐரோப்பிய நாடுகளில் தொழிற்துறை வர்த்தக நிறுவனங்களை நிறுவுவதற்கான பல்வேறு உரிமைகளையும் தனிச் சலுகைகளையும் பெற்றிருந்தார்கள், விற்கவும் வாங்கவும், உடைமைகளை வாடகைக்குப் பெறவும், நிர்மாணப் பணிகள் செய்யவும் உரிமை பெற்றிருந்தார்கள். உலக மேலாதிக்க எண்ணங்களை வளர்த்திருந்த அமெரிக்க ஆளும் வட்டங்கள் ஐரோப்பிய நாடுகளின் உள்விவகாரங்களில் நேரடித் தலையிடும் உரிமை பெறத் தந்திரங்கள் மேற்கொண்டன. ''உலக அரசு'' என்ற கருத்தின் பகிரங்க ஆதரவாளரான ஜான் ஃபாஸ்டர் டல்லஸ் எழுதினர்:

''(அந்த) நிர்ப்பந்தத்தைப் பிரயோகிக்க அமெரிக்கா (அந்த) வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும், பயன்படுத்த முடியும். அதைச் செய்ய எமக்கு உரிமை உண்டு, காரணம் மேற்கு ஐரோப்பாவில் நாம் பிரம்மாண்டமான முதலீடு செய்துள்ளோம்''[1].

கடன் தொகைகள் எவ்வாறு செலவிடப்பட வேண்டும் என்று அமெரிக்க அரசு நிபந்தனைகளை ஆணையிட்டது, அமெரிக்க தூதர்கள் மேற்கு ஐரோப்பிய அரசுகளின் ஆலோசகர்களாயினர். தேசிய ஆயுதப்படைகள் அமெரிக்க ராணுவ ஆலோசகர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. சமாதான காலத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அந்நியப் படைகள் நிறுத்தப்பட்டன, அந்நிய ராணுவத் தளங்கள் நிறுவப்பட்டன. அரசுரிமைப் பிரச்சினை பற்றிய பொருளாதார நோக்கத்திற்கும் அதற்கு இணையான முதலாளி வர்க்கத்தின் நடத்தைக்கும் ஓர் அரசியல் அர்த்தம் இருந்தது. அந்த நாடுகளின் அரசாங்கங்கள், ''தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் மக்கள்-ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்வதை விட தமது தேசிய சுதந்திரம் மறுக்கப்படுவதைக் குறைந்த தீம்பாகக்'' கருதின என்று ஜான் பெர்னல் எழுதினார்[2].

அமெரிக்க நிர்ப்பந்தத்தின் கீழ் செயல்பட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஆளும் வட்டங்கள், அரசுரிமையைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கும் தேசிய அரசுகளின் சர்வ சுதந்திர உரிமைகளை விசேஷ தேசாதீத அமைப்புகளுக்கு மாற்றியளிக்கவுமான சட்டக் கோட்பாடுகளை நிறுவின.

ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இணைப்பாக்க நிகழ்ச்சிப் போக்கு (இது 1950களில் தொடங்கியது) காரணமாக அரசுரிமையை நிலைநாட்டிய அரசியல் அமைப்புச் சட்ட நியதிகள் திருத்தப்பட்டன. இந்தத் திருத்தலின் பின்னால் இருந்த பிரதான நோக்கம் பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் நாடு அனுபவித்த பலமுக்கியமான சர்வ

---

1 J.F. Dulles, *War or Peace*, N. Y., 1950, pp. 214-215.
2 J. Bernal, M. Cornforth, *Science for Peace and Socialism*, London, 1949, p. 28.

சுதந்திர அதிகாரங்களை தேசாதீத அமைப்புகளுக்கு மாற்றி யளித்ததேயாகும்[1].

தேசாதீத மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு அரசுரிமையை மாற்றுவதை எதிர்நோக்கும் வடக்கு அட்லாண்டிக் உடன்படிக்கை ஷரத்துகள் (நேட்டோ) நிறுவனம் ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்குக் கூட்டமைப்பு, இதர தனிமைப் பட்ட இராணுவ மற்றும் பொருளாதாரக் கோஷ்டிகளின் உறுப்பு நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

முதலாளித்துவ இணைப்பாக்கத்தின் ''தேவைகள்'' இந்த இணைப்பாக்கத்தில் கலந்து கொண்ட நாடுகளின் அரசுரிமையைக் கட்டுப்படுத்துவதில் இரண்டு பிரதான சட்ட வடிவங்களைத் தோற்றுவித்தன: (1) சுயாட்சிக் கட்டமைப் பும் அதிகாரங்களும் கொண்ட தேசாதீத அமைப்புகளை நிறுவுதல், (2) தேசிய அதிகாரங்களை சர்வதேச ஆட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்தல், இதற்கு இணையான முறை யில் தேசிய அதிகார வட்டமும் தேசிய நாடாளுமன்றத்தின் அதிகாரங்களும் கட்டுப்படுத்தப்படல். தேசாதீத அமைப்பு கள் முறை நிறுவப்படுவதானது ஐரோப்பியக் கூட்டமைப் புகளின் பிரதான அம்சமாக விளங்கும்.

பொது மார்க்கெட் நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சி களின் (1963 மார்ச்) பிரசல்ஸ் மாநாட்டுப் பிரகடனம், இந்த நாடுகளின் ஏகாதிபத்திய ஆளும் வட்டங்கள் சர்வ தேச நிதிக் கோஷ்டிக்கும் பெரிய ராட்சச டிரஸ்டுகளுக்கும் சார்பாகச் செயல்பட்டு சர்வாதிகார ஆட்சியை நிறுவும் திசையில் அபாயகரமான நடவடிக்கைகள் எடுத்து வரு கின்றன என்று கூறியது. அது மேலும் கூறியதாவது: தேசங் களின் அரசுரிமையின் வெளிப்பாடாக விளங்க வேண்டிய

---

1 நாடுகள் தமது அரசுரிமையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும் எனவும் அவை ''உண்மையான சர்வதேச ஆட்சியதிகாரத்துக்கு'' கீழடங்கியதாக இருக்க முடியும் எனவும் பல முதலாளித்துவ தத்துவ இயலாளர் பெரு முயற்சிகள் செய்து நிரூபிக்கப் பாடுபடுகிறார்கள். *Revue Générale de Droit International Public*, No. 4, 1953, pp. 529-531 என்பதில் G. Burdeau, "Régimes politiques et communauté internationale".

தேசிய நாடாளுமன்றங்கள் தமது உரிமைகளை மென்மேலும் இழந்து வருகின்றன.... தேசாதீத அமைப்புகள் ஏகபோகங்களின் கரங்களில் உள்ளன. இந்த மத்தியப்படுத்தப் பெற்ற அதிகார வர்க்க அமைப்புகள் ஆறு நாடுகளின் நிர்வாக அதிகாரங்களைச் சார்ந்து நிற்கின்றன, இன்றுள்ள கட்டமைப்பின் காரணமாக உறுப்பு நாடுகளின் பிரதிநிதித்துவ அமைப்புகள் எதுவும் உண்மையில் தலையிடவோ, உறுதியாகக் கட்டுப்படுத்தவோ இடமளிப்பதில்லை.

சர்வதேசியமயமாக்கலை நோக்கிய போக்கு என்பதால் இயல்பாகவே தனிப்பட்ட நாடுகளின் முதலாளி வர்க்கம் முழுமையாகவும் நிபந்தனை இன்றியும் தனது தேசிய அரசுத்துவத்தைக் கைவிட்டு விடும் என்று பொருளல்ல: உண்மையில் பின்னதன் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. ஏகபோகங்கள் தங்கள் நலன்களை முன்னிட்டு அரசுத்துவத்தைப் பயன்படுத்த மேலும் அதிகமாக முயன்று வருகின்றன. உலக முதலாளித்துவ மார்க்கெட்டிலான தனது போட்டிப் போராட்டத்தில் ஏகபோக மூலதனம் தனது சொந்த அரசின் ஆதரவையே மேலும் மேலும் சார்ந்து நிற்கிறது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையே முனைப்பான போராட்டம் நடைபெறும் சூழலில் சர்வதேசியமயமாக்கலும் இணைப்பாக்கமும் ஏற்படுகின்றன. சில தேசிய ஏகபோகங்களின் அல்லது சர்வதேச கோஷ்டிகளின் நலன்கள் வேறு ஏகபோக கோஷ்டிகளின் நலன்களிலிருந்து ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் வேறுபடலாம். இதை தனிப்பட்ட ஏகபோகங்களிடையே போராட்டம் முனைப்படைவதில் தெளிவாகக் காணலாம்.

மார்க்கெட் போட்டியின் ஒரு அரங்கம் என்ற முறையில் பொது மார்க்கெட்டானது மெலியாரான உறுப்பினர் மீது வலியார் உறுப்பினரின் ஆதிக்கத்தை ஊக்குவிக்கிறது, போட்டிப் போராட்டத்தில் ''சம வாய்ப்புகளின்'' விதி இந்த லட்சணத்தில் உள்ளது.

முதலாளித்துவத்தின் கீழ் இணைப்பாக்கம் சிறிய நாடுகளின் அரசுரிமைக்கு மாபெரும் அச்சுறுத்தலை முன்வைக்கிறது. பிரதான ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோகங்கள் தமது சொந்த இடர்ப்பாடுகளை இந்த நாடுகளுக்குப் பிரதிகூலம் விளைப்பது மூலம் சமாளித்துக் கொள்ள முயல்

கின்றன; தமக்கு புது மார்க்கெட்டுகள், மூலப் பொருள் ஆதாரங்கள், மனித சக்தி, கொழுத்த லாபம் ஆகியவற்றை குறைந்த வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பிரதேசங்களிலிருந்தும் பெற உத்தரவாதம் செய்து கொள் கின்றன.

பொது மார்க்கெட்டின் ஆதரவாளர்கள் விலைக் குறைப்பு, மனித சக்திப் பெருக்கத்தை முறைப்படுத்தல், மார்க்கெட்டுகளை விரிவாக்குதல் போன்ற இணைப்பாக்கத் தின் பொருளாதார அம்சங்களை வலியுறுத்துகின்றனர். ஆனால் இப்பிரச்சினையின் அரசியல் அம்சமான, அதாவது அரசியல் மற்றும் அரசு சுதந்திரத்தை இழப்பது பற்றிய பிரச்சினையைக் கண்டும் காணாதது போல விட்டு விடு கின்றனர்.

பொது மார்க்கெட் உள்நாட்டுக் கொள்கையின் பிர தான திசைவழிகளை நிர்ணயிக்கும் உரிமை தேசிய நாடாளு மன்றங்களிலிருந்து சுதந்திரமாக உள்ள கூட்டமைப்பு உறுப்புகளுக்கு மாற்றப்படுவதைக் குறிப்பாக உணர்த்து கிறது. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பின் தலைமையகம் பட்ஜெட், பொருளாதாரத் திட்டமிடல், வரிகள், ''விலைகள் மற்றும் வருவாய்கள் கொள்கை'', விவசாயத்தை முறைப்படுத்தல் மற்றும் தனிப்பட்ட உறுப்பு நாடுகள் முன் உள்ள இதர முக்கியமான பிரச்சினை சம்பந்த மான முக்கியமான முடிவுகளை எடுக்கிறது. இந்த விஷயத்தில் ''வருங்காலத்தில் சில சர்வசுதந்திர உரிமைகளை (மார்க் கெட் கொள்கை போன்ற) ஒருமுகப்படுத்தல் அல்லது தேசாதீத அமைப்புகளுக்கு, குறிப்பாக ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பின் கமிஷனுக்கு அளித்து விடுதல் என்ற நிலையிலிருந்து செயல்படுவது ஒருவேளை அவசி யம்'' என்று முதலாளித்துவ ஆராய்ச்சியாளர்கள் கருது கிறார்கள்[1].

அரசியல் துறையில் உறுப்பு நாடுகளின் அரசுரிமையை மீறும் முயற்சிகளைச் செய்வதோடு மட்டுமன்றி பொது மார்க்கெட்டானது பொருளாதாரத் துறையிலும் அவற்றின்

---

[1] B. Heise, *Sozialpolitik in der europäischen Wirtschafts-gemeinschaft*, Göttingen, 1966, S. 293.

அரசுரிமையைக் கட்டுப்படுத்துகிறது. தனிப்பட்ட நாடுகளின் பொருளாதாரக் கட்டுப்பாட்டின் நெம்புகோல்கள் தேசாதீத அமைப்புகளால் மேலும் அதிகமாக எடுத்துக் கொள்ளப்படுவதைப் பொது மார்க்கெட்டின் பரிணமம் காட்டுகிறது.

* * *

தேசியப் பிரச்சினை பற்றிய மார்க்சிய-லெனினியப் போதனை காலத்தின் சோதனையை வென்று அருமையான விளைவுகளை உருவாக்கியுள்ளது.

லியனீத் பிரேஷ்னெவ் கூறினார்: ''கடந்த அரை நூற்றாண்டின் வீரஞ்செறிந்த சாதனைகளைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது, கடந்த காலத்திடமிருந்து நமக்கு வழி வந்த தேசியப் பிரச்சினைக்கு முழுமையாகவும், இறுதியாகவும், என்றென்றைக்குமாகவும் தீர்வு காணப்பட்டுவிட்டது என்று நாம் நியாயமாகவே கூற முடியும். இந்த வெற்றி சாதனை சோவியத் ஒன்றியத்தில் புதிய சமூக அமைப்பைக் கட்டுவதில் தொழில்மயமாக்கல், விவசாயக் கூட்டுமையாக்கல், மற்றும் கலாசாரப் புரட்சியின் வெற்றிகளுக்குச் சமமாக அணி செய்யும் உரிமை கொண்டதாகும்''[1].

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சோஷலிசப் பாதை உலகின் பாராட்டைப் பெற்றிருக்கிறது, இந்த விஷயத்தில் அடைந்த அனுபவம் சோஷலிசம் மற்றும் தேசவிடுதலையின் ஆதரவாளர்களுக்குப் பெருமளவு உதவுகிறது.

அறுபதாம் ஆண்டு விழாவின் (1977) பொழுது சோவியத் ஒன்றியம் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதில் ஈடுபட்டுள்ள ஒரு சமூக அமைப்பாக விளங்குகிறது. அது ஒரு சர்வதேச நட்புறவின் கோட்டை, உலகப் புரட்சிகர விடுதலை இயக்கத்தின் கொத்தளமாகும். உலக சோஷலிசக் குடும்பத்தில் அது சோஷலிச சர்வதேசியக் கோட்பாடுகளையும் ஒரு புது வகையான சர்வதேச உறவுகளையும் முரணின்றி நிலைநாட்டியது, அனைத்து மக்களினங்களிடையிலும் சமாதா

---

[1] L.I. Brezhnev, *The Fiftieth Anniversary of the Union of Soviet Socialist Republics*, Moscow, 1972, p. 17.

னம் மற்றும் ஒத்துழைப்பு என்ற முரணற்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது.

கட்சியின் வேலைத்திட்டத்திலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25ஆவது காங்கிரஸ் முடிவுகளிலும் வகுத்தளிக்கப் பெற்ற கம்யூனிச நிர்மாணத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் சோவியத் மக்களின் முயற்சிகளை வழி நடத்தும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி சோஷலிசம் கம்யூனிசமாக வளரும் என்ற மார்க்சிய-லெனினியக் கொள்கையை பின்பற்றிச் செயல்படுகிறது.

கம்யூனிச நிர்மாணம், மற்றும் சமாதானம், இதர சோஷலிச நாடுகளுடன் சோதர ஒத்துழைப்பு வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வு, உலகில் தொழிலாளர்களின் புரட்சிப் போராட்டங்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் காலனி நுகத்தடியைத் தூக்கி எறிந்து விட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்கும் ஆதரவு என்ற கொள்கையை முரணின்றி பின்பற்றல் இவையாவும் சோவியத் சோஷலிச அரசை வலுப்படுத்தக் கோருகின்றன. சோவியத் அரசின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அடித்தளம் உறுதியாக வலுப்பெற்றுள்ளதாலும், முக்கியமான வர்க்க மற்றும் சமூக பேதங்கள் படிப்படியாக அகற்றப்பட்டு விட்டதாலும், தேசங்கள் தேசியக் குழுக்கள் மலர்ச்சியடைந்து நெருக்கமாகச் சேர்ந்து வருவதாலும், சோஷலிச ஜனநாயகம் வளர்ந்து வருவதாலும், அதன் அடிப்படையில் சோவியத் மக்களின் தார்மிக, அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமையும் ஒருமைப்பாடும் வலுப்பட்டு வருவதாலும் அது வலுவடைந்து வருவது உண்மை.

சோவியத் சோஷலிச சமுதாய அமைப்பின் சமூக மற்றும் அரசு வாழ்க்கை ஜனநாயகப்படுத்தப் பெறுவதானது கம்யூனிஸ்டுக் கட்சியின் வழிகாட்டும் பாத்திரத்தின் வளர்ச்சியுடன் இரண்டறக் கலந்து இணைந்துள்ளது. இதுவே தேசங்கள் மற்றும் சோவியத் மக்கள் முழுவதன் அரசுரிமையை வலுப்படுத்துவதையும், சோவியத் ஒன்றிய அரசின் செல்வாக்கும் மதிப்பும் இடையறாது பெருகி வருவதையும் சாத்தியமாக்கியுள்ளது.

...EMARA PUBLIC LIB...

**வாசக நேயர்களுக்கு**

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.


**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

6, Nallathambi Chetty Street, *Madras*-600002

**ஷோ-ரூம்**

6/30, Mount Road, Madras-600002

**கிளைகள்**

80, West Tower St., *Madurai*-1
87/89, Oppanakara St., Coimbatore-1
Singarathope, *Tiruchirapalli-8*
Cherry Road, Salem-1



– 5 MAR 1985
MADRAS